ஆண்டறிக்கை
2019

இலங்கை மகாவலி அதிகார சபை

இலங்கை மகாவலி அதிகார சபையின் ஆண்டறிக்கை – 2019

உள்ளடக்கம்		**பக்கம்**
நோக்கம் மற்றும் குறிக்கோள்		4
வரலாற்றுப் பின்னணி		5-11
2019 ஆண்டில் பணிப்பாளர் சபையின் விபரம்		12
சிரேஷ்ட முகாமைத்துவம்		13-16
2019 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் மதிப்புரை		17-18
பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு		19
2019 ஆண்டின் கணக்காய்வுக் குழு அறிக்கை		20-21
கடந்த 07 ஆண்டுகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்		22-25
இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களின் பணிப்பாளர் சபை - 2019		25
01 ஆம் பாகம்	**நிர்வாக அறிக்கை**	
முதலாவது அத்தியாயம்	**இலங்கை மகாவலி அதிகார சபையை நிறுவுதல்**	**(26-43)**
	இலங்கை மகாவலி அதிகார சபையின் அமைப்பு மற்றும் பணி வினைகள்	26-29
	இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாக கட்டமைப்பு	30
	மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிர்வாகம்	31-51
	திட்டமிடல் மற்றும் இயக்கற் பிரிவு	52
	உள்ளக கணக்காய்வுப் பிரிவு	52-53
இரண்டாம் அத்தியாயம்	**தொழில்நுட்ப சேவைப் பிரிவு**	**(54-95)**
	வகிபாகங்கள்	54
	செயற்திட்ட திட்டமிடல் மற்றும் செயல்படுத்துதல்	54-55
	கீழ் பள்ளத்தாக்கு வளர்ச்சி	55-60
	பொறியியல் வடிவமைப்பு வடிவமைப்பு	60-62
	ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம்	62-65
	அடிப்படைப் பணி நிர்வாக இயக்கல் மற்றும் தாபரிப்புப் பிரிவு	66-74
	நீரியல் முகாமைத்துவச் செயலகம்	75-79

காணி உபயோக திட்டமிடல் பிரிவு 80-85

வன மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு 85-95

மூன்றாம் அத்தியாயம் அபிவிருத்திப் பிரிவு (96 – 148)

காணிப் பிரிவு 96-98

விவசாய அபிவிருத்திப் பிரிவு 99-106

மீன்பிடி மற்றும் கால்நடை அபிவிருத்திப் பிரிவு 107-119

தாபன அபிவிருத்திப் பிரிவு 120-126

வியாபார அபிவிருத்திப் பிரிவு 127-135

மனித வள அபிவிருத்திப் பிரிவு 137-146

ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு. 147-148

நான்காம் அத்தியாயம் மனித வள மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு (149 – 176)

பணியாளர் மேலாண்மை பிரிவு 149-154

சட்டப் பிரிவு 154-155

நிதிப் பிரிவு 155-157

மகாவலி பாதுகாப்புப் படையணி 158 - 163

மகாவலி கேந்திர மையம் 164 - 169

போக்குவரத்துப் பிரிவு 170 - 176

ஐந்தாம் அத்தியாயம்

I பகுதி இ.ம.அ.சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள் 177-178

II பகுதி வருடாந்த கணக்குகள் 179-202

III பகுதி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 203-223

IV பகுதி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 224-239

தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் வாதுரை

V பகுதி இ.ம.அ.சபையின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் 240-260

முதலீட்டுத் திட்டம் – 2019

நோக்கம்

நிலைபெறுதகு விவசாயம், புதுப்பிக்கத்தகு வலு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் மகாவலி அதிகார பிரதேசங்களில் வசிக்கின்ற பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நிலத்தை மற்றும் நீரை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இலங்கையின் அதி சிறந்த தாபனமாக மாறுதல்.

குறிக்கோள்

மகாவலி சமூகம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக புதுப்பிக்கத்தகு வலுவை தோற்றுவித்தல், பசுமைச் சூழல் மற்றும் சூழற் தோழமையுடைய சுற்றுலா தொழில்துறையை உதவியாகக் கொண்டு நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்க மற்றும் நிலைபெறுதகு விவசாய உற்பத்தித் திறனிற்காக நிலம் மற்றும் நீர் வளத்தை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக நெறிப்படுத்துதல்.

வரலாற்றுப் பின்னணி

மகாவலி அபிவிருத்தித் திட்டமானது இலங்கையில் இதுவரையில் செயற்படுத்தப்பட்டுள்ள மாபெரும் பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாகும். அடிப்படையாக உலர் வலயங்களில் கிராமிய அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட இச்செயற்திட்டமானது 1968 ஆம் ஆண்டு அக்காலத்தில் ஆட்சியில் இருந்த அரசாங்கத்தால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்/ உணவு மற்றும் விவசாயத் தாபனத்தின் (UNDP/FAO) மூலம் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளுடன் திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய மலைநாட்டில் காணப்படுகின்ற இயற்கை நீர் வளத்தை உலர் வலயங்களின் விவசாயத்திற்காக மற்றும் குடியிறுப்பு அபிவிருத்திகளுக்காக பயன்படுத்தும் செயல்பாட்டில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பாரிய வகிபாகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் சனத்தொகை அதிகரிப்பானது சடுதியாக அதிகரித்தமையால் எழுந்த இடைப் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடும் பொழுது உற்பத்தி வேகத்தை அதிகரிப்பது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டி ஏற்பட்டது. 1969 ஆம் ஆண்டு இலங்கையின் சனத்தொகை 11.8 மில்லியனாக காணப்பட்டது. இது 1940 ஆம் ஆண்டு காணப்பட்ட சனத்தொகையின் இரு மடங்காகுவதுடன் வருடாந்த சனத்தொகை விருத்தி அதிகரிப்பு 3.1% ஆக காணப்பட்டது. இவ்வாறு சனத்தொகை அதிகரித்தமையால் உணவிற்காக 1980 ஆம் ஆண்டாகும் போது அரிசி 1.8 மில்லியன் மெட்ரிக் தொன் தேவைப்படும் என ஊகிக்கப்பட்டது. எனினும், 1969 ஆம் ஆண்டில் அரிசி 0.7 மில்லியன் மெட்ரிக் தொன் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டது. அதைப் போலவே, தொழிற்சாலை மேம்பாட்டிற்கு மற்றும் வீட்டுப் பயன்பாட்டிற்காக மின்சாரமானது மணித்தியாலத்திற்கு 2000 கிகா வொட் தேவைப்பட்டது. எனினும், 1969 ஆம் ஆண்டாகும் போது மின் உற்பத்தியானது வருடத்திற்கு 470 கிகா வொட்டாக மாத்திரமே காணப்பட்டது. அதில் 388 மணித்தியால கிகா வொட்டானது நீர் மின் உற்பத்தியின் மூலமாகவும், எஞ்சிய தொகை பெற்றோலிய தகனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அனல் மின் உற்பத்தியாகும். மேலும், 1960 – 1967 கால எல்லையில் அரிசி 466,000 மெட்ரிக் தொன் வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்டதுடன், அதற்காக ஆண்டொன்றிற்கு 200 மில்லியன் ரூபாய் வீதம் வெளிப்பாய்ச்சல் இடம்பெற்றுள்ளது. இதைத் தவிர, உப உணவுப் பயிர்களுக்காக 139 மில்லியன் ரூபாயும் வருடாந்தம் செலவாகி உள்ளது. அச்செலவானது மிக அதிகமான பெறுமதியாகும்.

இலங்கையில் ஈர வலயத்தின் பக்கம் மக்கள் ஒன்றுதிரள்வது காணக்கூடிதாக இருந்தது. ஈர வலயத்தில் சனத்தொகையானது சதுர கிலோமீட்டரிற்கு 465 ஆக காணப்பட்டதுடன் உலர் வலயத்தில் சதுர கிலோமீட்டரிற்கு 80 ஆக மாத்திரமே காணப்பட்டது. நாட்டில் முழு நிலப் பரப்பில் 66% உலர் வலயத்திற்கு உட்படுவதுடன் சனத்தொகையில் 70% மக்கள் ஈர வலயத்திலேயே வாழ்ந்தனர். இதற்கமைய, உலர் வலயத்தில் பாரிய நிலப் பரப்பில் மிகக் குறைந்த சனத்தொகைப் பரவலே காணக்கூடியதாக இருந்தது. அதற்கமைய, இலங்கையில் ஏனைய ஆறுகளுடன் ஒப்பிடும் பொழுது ஈர வலயத்தில் மத்திய மலைநாட்டில் ஊற்றெடுக்கும் மகாவலி கங்கையானது நாட்டின் முழு நிலப் பரப்பில் 6 இல் 1 இற்குக் கிடைக்கின்ற மழை நீரை தனது பிடிக்குள் கொண்டு உலர் வலயத்தின் ஊடாக கடலை நோக்கி வழிந்தோடுகின்ற

மகாவலி கங்கையானது வருடத்தின் அனைத்து காலங்களிலும் வளம்பொருந்திய நதியாகும். இதற்கமைய, மகாவலி கங்கையை உலர் வலயத்திற்குத் திசை திருப்புவதன் மூலம் கிடைக்கப் பெறுகின்ற நீரின் மூலம் உலர் வலயத்தின் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும், மேல் மகாவலி அதிகார பிரதேசத்தை அண்மித்து நீர்மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதன் மூலம் இலங்கையின் எதிர்கால தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என உணரப்பட்டது. இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் பெறுபேறாக அரசாங்கம் மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைய இலங்கைக்கு வருகை தந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் தூதுக் குழுவொன்று உலர் வலயத்தில் காணி அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கென 1956 ஆம் ஆண்டு இயலுமை ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது. அத்துடன் இலங்கையில் நீர்ப்பாசன மற்றும் நில அளவீட்டுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கனேடிய அரசின் தொழில்நுட்ப உதவியுடன் கனேடியன் ஹன்டின் சேர்வே கோர்பரேஷன் நிறுவனமும் இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைய மகாவலி கங்கை தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. இந்நிறுவனம் அவ்வாய்வு தொடர்பாக சுயாதீன அறிக்கைகள் இரண்டை 1961 ஆம் ஆண்டு முன்வைத்துள்ளது. இவ்வறிக்கையானது அங்கீகாரத்திற்காக 1962 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

ஒட்டுமொத்த மகாவலி வடிநிலத்தினதும் நீர் வளம் தொடர்பாக முழுமையான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளாமல் மகாவலி நீரின் ஒரு பகுதியை திசை திருப்புவதானது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால், இலங்கை நிபுணர்களின் அபிப்பிராயம் காரணமாக பாராளுமன்றம் இப்பிரேரணையை அங்கீகரிக்கவில்லை. அதன் பின்னர், மகாவலி கங்கை உட்பட ஏனைய நதிகளை அண்மித்த காணிகள் மற்றும் நீர் வளங்கள் தொடர்பாக ஒட்டுமொத்த ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அபிவிருத்தி தொடர்பாக முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செயற்திட்டங்களைத் தெரிவு செய்து சுயாதீன பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு 1962 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு கோரிக்கை முன்வைக்க வேண்டி ஏற்பட்டது. அதன் பெறுபேறாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மூலம் உணவு மற்றும் விவசாய அமைப்பின் விசேட நிபுணர்கள் உள்ளடங்கிய குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அதற்கு மேலதிகமாக, அக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இலங்கையைச் சேர்ந்த விசேட நிபுணர்கள் குழு மற்றும் பதவியணியும் நியமிக்கப்பட்டது.

நான்கு வருடங்கள் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வின் பின்னர் 1968 ஆம் ஆண்டு 14 புறம்பான விசேட அறிக்கைகளை உள்ளடக்கிய 03 தொகுதிகளைக் கொண்ட ஆய்வு அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமானது 1968 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

வட மத்திய மாகாண மற்றும் கிழக்கு மாகாணத்தை அண்டிய அனுகூலங்களைப் பெறுகின்ற பிரதேசங்கள் 13 வலயங்களாக பிரிக்கப்பட்டதுடன், அதனை ஆங்கில அரிச்சுவடிப்படி A இல் இருந்து M வரை பெயரிடப்பட்டது. பொருளாதார ரீதியில் அதிகூடிய விளைத்திறனான மற்றும் குறைந்த முதலீட்டின் ஊடாக அதிகூடிய பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ள முடியுமான செயற்திட்டங்கள் முதலாம் கட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டன.

மகாவலி பெருந்திட்டம்.

மகாவலி பெருந்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது யாதெனில், மகாவலி கங்கையின் நீர் வளத்தின் மூலம் சுமார் 6,900 மில்லியன் கன அடி நீரை நீர் மின் உற்பத்தி மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக விநியோகிப்பதாகும். 15 நீர்த் தேக்கங்களை அமைத்து அதில் 11 ஐ பிரதானமாக மின் உற்பத்திக்காக பயன்படுத்துவது இரண்டாவது நோக்கமாக காணப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் உணவு மற்றும் விவசாய அமைப்பால் முன்வைக்கப்பட்ட மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய மகாவலி கங்கை வடிநிலத்தில் மற்றும் உலர் வலயத்தினுள் காணப்படுகின்ற ஏனைய நதிகளின் வடிநிலங்களில் அமைந்திருந்த நிலப்பரப்பு, 364,372 ஹெக்டயர் இற்காக சிறுபோகம் மற்றும் பெரும் போகம் ஆகிய இரு பருவங்களின் போதும் நீர்ப்பாசன நீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த மொத்த நிலப்பரப்பில் 264,777 ஹெக்டயார் நிலப்பரப்பானது விவசாயத்திற்கு திறந்துவிடப்படவிருக்கும் புதிய நிலங்களாக காணப்பட்டன. எஞ்சிய 110,404 ஹெக்டயார் நிலப்பரப்பில் ஏற்கனவே ஒரு பருவத்தின் போது மாத்திரம் சாகுபடி செய்யப்பட்டிருந்து. திட்டமிடப்பட்டிருக்கும் நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் என்பவற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி மணித்தியாலத்திற்கு 2037 கிகா வொட் அலகு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்ற விடயமும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் 30 வருட காலப் பிரிவின் போது இவ்வபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. நிதிகளின் உபயோகம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றின் வசதியைக் கருத்திற் கொண்டு, குறிப்பாக அபிவிருத்தியின் பயனானது அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்ற விடயத்தைக் கருத்திற் கொண்டு இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பணிகள் 03 கட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தன;

முதலாவது கட்டம்

முதலாவது கட்டமானது 1969 – 1980 காலப்பரிவின் போது அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டு இருந்தது. இக்கட்டத்தின் போது 74,494 ஹெக்டயார் புதிய நிலங்களுக்கும், 58,300 ஹெக்டயார் பழைய நிலங்களுக்கும் நீர்ப்பாசன நீரை விநியோகிப்பதற்கு வருடாந்தம் மணித்தியாலத்திற்கு 820 கிகா வொட் நிலையான மின் வலுவை உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்தது. இக்கட்டத்தின் நடவடிக்கைகள் 03 செயற்திட்டங்களாக மேற்கொள்வதற்குப் பிரிக்கப்பட்டு இருந்தன;

- பொல்கொல்ல திசை திருப்பல் (1969 – 1973)
- விக்டோரியா/ மினிப்பே திசை திருப்பல் (1973 – 1977)
- மொரகஹகந்த பல்நோக்கு அலகு

இரண்டாவது கட்டம்

இவ் இரண்டாவது கட்டத்தின் போது மாதுறு ஓயா நீர்த்தேக்கம், பல்நோக்குக் கட்டிடத் தொகுதி, கந்தகாடு அணைக்கட்டு போன்ற முதன்மைப் பணிப் பிரிவுகளில் மகாவலி மற்றும் மாதுறு ஓயா வடிநிலங்களில் அமைந்திருக்கும் 93,117 ஹெக்டயார் நிலப்பரப்பிற்கு விவசாயம் செய்வதற்காக நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கப் பெறுவதுடன், இதில் 8502 ஹெக்டயார் நிலப்பரப்பானது ஏற்கனவே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலப்பரப்பாக கணக்கில் கொள்ளப்பட்டிருந்தது. 15 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட நீர் மின் உற்பத்தி நிலையத்தை தல்தெனியவில் நிர்மாணிப்பதற்கும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தை வளப்படுத்துவதற்காக உல்ஹிடிய ரத்கிந்த நீர்த்தேக்கத்தில் இருந்து சுரங்கப் பாதை ஒன்றை அமைப்பதற்கும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்திற்கு அருகில் 4.9 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிப்பது இதன் பிரதான பணிகளாகும்.

மூன்றாவது கட்டம்

இதன் மூலம் நாட்டின் வட மத்திய மாகாணத்தில் 105,668 ஹெக்டயார் புதிய நிலப்பரப்புகள் அபிவிருத்தி செய்யப்படும். நீர் மின் உற்பத்தியின் இறுதித் திட்டத்தைச் செயற்படுத்தி 293 மெகா வொட் அலகு நிறுவப்பட்ட ஆற்றல் உடைய மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்படுவதுடன், அதன் மூலம் வருடாந்தம் மணித்தியாலத்திற்கு 1169 கிகா வொட் அலகு நிலையான மின் உற்பத்தி செய்யப்படும். பழைய மினிபே இடது கரைக் கால்வாயை அபிவிருத்தி செய்தல், 164 கிலோ மீட்டர் நீளமான வட மத்திய கால்வாயை நிர்மாணித்தல், ரொடலாவல, உமா ஓயா, றண்தம்பே, கொத்மலை மற்றும் களு கங்கை ஆகிய நீர்த் தேக்கங்களை நிர்மாணத்தில் இக்கட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.
எனினும், நடப்புத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி மகாவலி பெருந்திட்ட அபிவிருத்தியானது 03 கட்டங்களின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

<u>மகாவலி பெருந்திட்டத்தைச் செயற்படுத்துதல் (01 ஆவது அபிவிருத்திக் கட்டம்)</u>

மகாவலி பெருந்திட்டதின் கீழ் முதலாவது செயற்திட்டமாக பொல்கொல்ல மற்றும் போவதென்ன திட்டமானது 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், 1976 ஆம் ஆண்டாகும் பொழுது கட்டுமானப் பணிகளை பூர்த்தி செய்ய முடியுமாக இருந்தது. இதன் மூலம், முன்பு ஏற்கனவே காணப்பட்ட 16,000 ஹெக்டயார் நிலப்பரப்பிற்கு மற்றும் 23,000 ஹெக்டயார் புதிய நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன நீரை விநியோகிப்பதற்கும், 40 மெகா வொட் நிறுவப்பட்ட ஆற்றலைக் கொண்ட நீர் மின்னை உற்பத்தி செய்தற்கும் முடியுமாக இருந்தது. இத் திட்டத்தின் கீழ் மகாவலி எச் வலயத்திற்குரிய கலா ஓயா பள்ளத்தாக்கில் 23,000 விவசாய குடும்பங்கள் 1977 ஆம் ஆண்டாகும் பொழுது குடியேற்றப்பட்டன. தற்பொழுது மகாவலி திட்டத்தின் கீழ் எச் வலயத்தில் சகல குடியேற்ற நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு குடியேற்றப்பட்டுள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 39,500 ஆகும்.

1977 ஆம் ஆண்டாகும் பொழுது இலங்கைப் பொருளாதாரம் பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்தது. அரிசி உட்பட விவசாய உற்பத்தி இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தமை பிரதான பிரச்சினையாக காணப்பட்டது. பயன்பாட்டிற்கு அவசியமாகின்ற அரிசியில் 69% மாத்திரமே நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுடன், 31% இறக்குமதியிலேயே தங்கி இருந்தது. அதற்கு மேலதிகமாக அவசியமான பிற விவசாய உற்பத்திகள் பலவும் இறக்குமதி செய்யப்பட்டன.

1977 ஆம் ஆண்டாகும் பொழுது மின்சார சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட மின் கொள்ளளவானது சுமார் 408 மெகா வொட் அலகாக இருந்து வந்ததுடன், அது அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் நிலவி வந்த கேள்வியை நிறைவேற்றி வைப்பதற்குப் போதியதாக இருக்கவில்லை. மின் துண்டிப்பானது சாதாரண விடயமாக மாறி இருந்து வந்ததுடன், ஒரு வருடத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்து இருந்தது.

இலங்கையில் வேலையின்மையானது 17% வரை அதிகரித்துக் காணப்பட்டது. வேலையின்மையைக் குறைக்க வேண்டியது அத்தியாவசிய அம்சமாகக் காணப்பட்டது. இப்பிரச்சினைக்கு துரிதமாக தீர்வு வழங்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு இருந்தது.

இப்பிரச்சினையைத் இயன்றளவு அவசரமாக தீர்க்கும் ஒரு படிமுறையாக மகாவலி அபிவிருத்திப் பெருந்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் என 1977.10.12 ஆம் திகதி அப்போதைய அரசாங்கம் தீர்மானித்தது.

துரிதப்படுத்தப்பட மகாவலி நிகழ்ச்சித் திட்டம் (இரண்டாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி பெருந்திட்டத்திற்குரிய தெரிவு செய்யப்பட்ட செயற்திட்டங்கள் பலவற்றை ஒரே தடவையில் ஆரம்பித்து சுமார் 06 வருட குறுகிய காலப் பிரிவில் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு 1977 இல் அரசாங்கம் தீர்மானித்தது. அதனைச் செயற்படுத்துவதற்காக புறம்பாக ஒரு அமைச்சும் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, கொத்மலை, விக்டோரியா, ரன்தெனிகலை மற்றும் மாதுறு ஓயா நீர்த் தேக்கங்களுக்காக முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டு அவற்றைச் செயற்படுத்துவதற்காக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இதற்கு றன்தம்பே செயற்திட்டமும் உள்ளடக்கப்பட்டது. இதில் மாதுறு ஓயாவைத் தவிர ஏனைய நீர்த்தேக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நீர் மின் உற்பத்தி செய்யப்பட்டதுடன், அதே நீரே நீர்ப்பாசனத் துறைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கமைய, மகாவலி சி மற்றும் பி வலயங்களை அபிவிருத்தி செய்து விவசாயிகளை குடியேற்றுவதும் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. அதற்கமைய பி வலயத்தில் 30,465 குடும்பங்களும், சி வலயத்தில் 45,488 குடும்பங்களும் குடியேற்றப்பட்டு உள்ளன.

இச்செயற்திட்டத்திற்காக முறையே சுவீடன், பெரிய பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகள், கீழ் பள்ளத்தாக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கி, EEC, ஜப்பான் மற்றும் குவைத் ஆகிய நாடுகள் நிதி உதவிகளை வழங்கி உள்ளன. இச்செயற்திட்டத்தை தொடங்குவதற்காக 1979 ஆம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகார சபை

நிறுவப்பட்டதுடன், பொறியியல் மற்றும் வடிவமைப்புப் பணிகளுக்காக மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையமும், மீள் குடியேற்றுதல்களை மேற்கொள்வதற்காக மகாவலி பொருளாதார முகவர் நிலையமும் நிருவப்பட்டன. அதைப் போலவே, துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தியின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட பாரிய நீர்த்தேக்கங்களை முகாமைத்துவம் செய்வதற்காக முதன்மைப் பணிகளை நிர்வாகித்தல், நிறைவேற்றுதல், மற்றும் இயக்கற் பிரிவானது 1986 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டாகும் பொழுது துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்திச் செயற்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டதுடன், அதன் மூலம் மின்சார துறை மற்றும் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக கணிசமான அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதன் காரணமாக விவசாயத் துறையில் நேரடி முதலீடுகளை மேற்கொள்வதில் அரசாங்கம் தயக்கம் காட்டியமையால் மகாவலி பெருந்திட்டத்திற்குரிய மொரகஹகந்தை நீர்த்தேக்க செயற்திட்டமானது இடைநிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், நீண்ட காலமாக சார்புரீதியாக கோப்புக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்திச் இச்செயற்திட்டமானது தற்பொழுது செயற்படுத்தப்படும் நிலைமைக்கு எட்டியுள்ளமை மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பிரதிபலன்களை மேலும் விரிவுபடுத்துவதற்கு காரணமாக அமையும்.

மகாவலி இயக்கத்தின் தற்போதைய வகிபாகம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள். (மூன்றாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நாட்டின் நாலா புறமும் விரிவுபடுத்தும் கட்டமாக மூன்றாவது அபிவிருத்திக் கட்டத்தைக் குறிப்பிடலாம். மொரகஹகந்தை களு கங்கை நீர்த்தேக்க முன்மொழிவின் ஊடாக வடக்கு, வட மத்திய, கிழக்கு, வட மேல், மத்திய மாகாணங்களில் சிறிய அளவான குளங்கள் 1200 இற்கு நீரை விநியோகிக்கும் நோக்கில் மொரகஹகந்தை மற்றும் களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டமானது செயற்படுத்தப்பட்டது. எலஹர பிரதேசத்தின் வயல்களுக்கு, பொலன்னறுவை பிரதேசத்தின் சகல நீர்த்தேக்கங்களுக்கும் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் சகல பிரதான நீர்த்தேக்கங்களுக்கும் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக நீர் விநியோகத்தை வழங்கி 81,000 ஹெக்டயார் புதிய பயிர்ச்செய்கை நிலப்பரப்பிற்காக நீரை விநியோகித்து விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டை தற்போசணை நாடாக மாற்றுவதற்கு பங்களிப்பு வழங்குவதும், மின் உற்பத்தி நிலையத்தின் மின் உற்பத்தி மூலம் தேசிய மின்சாரத் தொகுதிக்கு 25 மெகா வொட் அலகு கொள்ளளவை ஒன்று சேர்த்து தேசிய மின்சாரத் தேவைக்குப் பங்களிப்பு வழங்குவதும் இதன் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். அதைப் போலவே, செயற்திட்டத்தின் ஊடாக இடம்பெயர்ந்த மக்களுக்கு அவசியமான குடியேற்றங்களை அமைத்துக் கொடுப்பதுடன் மாத்திரம் நிறுத்தி விடாமல், சகல உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய லக்கல நகரத்தை புதிதாக நிர்மாணித்து மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கும் மாபெரும் பணியானது தற்பொழுது வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தை 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும் பொழுது

இலங்கை மகாவலி அதிகார சபைக்குக் கையகப்படுத்திக் கொண்டதன் பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபையின் மாபெரும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் மற்றுமொரு படிமுறையின் வெற்றிகரமான நிறைவைக் காணக் கூடியதாக இருக்கும்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையானது தமது பணிவினைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உமா ஓயா பல் நோக்கு அபிவிருத்திச் செயற்திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. இதன் மூலம் உமா ஓயா நதியின் வடிநில நீரை வெலிமடை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரு நீர்த்தேக்கங்களுக்கு ஒன்று சேர்த்து, நாட்டில் முதல் தடவையாக 15.6 கி.மீ. நீளமான சுரங்கப் பாதையின் ஊடாக கிரிந்தி ஓயா வடிநிலத்திற்கு திசை திருப்பி அனுப்பப்படுகின்றது. அதன் மூலம், ஆசியாக் கண்டத்தின் மாபெரும் நிலக்கீழ் மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக 120 மெகா வொட் அலகு கொள்ளளவை தேசிய மின்சாரத் தொகுதிக்கு ஒன்று சேர்த்து தேசிய மின்சாரத் தேவைக்கு பங்களிப்பு வழங்குவதற்கும், மிகவும் பின்தங்கிய வட மேல் மாகாணத்தின் விவசாய விளைத்திறனை மேம்படுத்துவதற்கும் மற்றும் மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றுவதல் போன்ற தனது அடிப்படை நோக்கங்களை நோக்கி இச்செயற்திட்டமானது வெற்றிகரமாக பயணித்துக் கொண்டிருக்கின்றது. இச்செயற்திட்டமானது 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் செயலூக்க நீர் முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு உட்படுத்தப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் மாபெரும் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர்த்தேக்கங்களைச் சுத்தம் செய்யும் செயற்திட்டத்தைப் போன்றே, நீர் வளம் பொருந்திய பிரதேசங்கள், நதிகளின் வடிநிலங்களைப் பாதுகாக்கும் செயற்திட்டமும் தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நிலைபெறுதகு வலு நிகழ்சித் திட்டத்தின் கீழ் மகாவலி நீர்த்தேக்கங்களில் மிதக்கக் கூடிய சூரிய மின் படலத் தொகுதிகளைப் பொருத்துதல் மற்றும் சிறிய அளவான நீர் மின் உற்பத்திச் செயற்திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் முலம் சுற்றாடல் தோழமையான விதத்தில் தேசிய மின்சார தேவைக்கு பங்களிப்புச் செய்வதற்கும், அதன் மூலம் பாரிய வருமான வழிகளை ஏற்படுத்துவதன் மூலம், இலங்கை மகாவலி அதிகார சபையானது புதிய மூலோபாய வருமான வழிகளை இனங்கண்டு வருகின்றது.

இதனுடன், மாதுறு ஓயா தெற்குக் கரையின் அபிவிருத்திச் செயற்திட்டம், வலவ வலயம், ரம்பகெண் ஓயா, மகாவலி பி வலயம், மகாவலி எச் வலயம் ஆகிய வலயங்களை அண்மித்து மேலும் மாபெரும் அபிவிருத்திச் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூன்றாவது கட்டத்தின் சகல அடிப்படை நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் போது நாட்டின் நாலா புறமும் பரவலடைந்து தேசியப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக விவசாய, நீர்ப்பாசன மற்றும் கால்நடை வளங்கள், மின்சக்தி உற்பத்தி, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற துறைகளினால் உயர்ந்தபட்ச பங்களிப்பை வழங்கும் கட்டத்தை நோக்கி படிப் படியாக முன்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

பணிப்பாளர் சபை தொடர்பான விபரம் – 2019

தொடர் இலக்கம்	பெயர் / பதவி	காலம்
01	கலாநிதி திரு. டி. எம். எஸ். திஸாநாயக்க பணிப்பாளர் நாயகம் இலங்கை மகாவலி அதிகார சபை	2018 நவம்பர் – 2019 டிசம்பர்
02	பொறியியலாளர் திரு. பி.ஏ. சுனில் எஸ். பெரேரா மேலதிக பணிப்பாளர் நாயகம் இலங்கை மகாவலி அதிகார சபை	2019 டிசம்பரில் இருந்து
03	திரு. எச். ஹேமால் கஸ்தூரிஆரச்சி பணிப்பாளர் நாயகம் நிதி அமைச்சு	2018 மார்ச் மாதம் தொடக்கம் 2019 டிசம்பர் மாதம் வரை
04	பொறியியலாளர் திரு. எஸ். மோஹன ராஜா பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசனத் திணைக்களம்	2018 ஜனவரி மாதம் தொடக்கம் 2019 டிசம்பர் மாதம் வரை
05	பொறியியலாளர் திருமதி. சி. எச். தேவேந்திரா மேலதிக செயலாளர் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	2018 ஜனவரி மாதம் தொடக்கம் 2019 ஜூன் மாதம் வரை
06	திரு. டி. ஜீவானந்தம் மேலதிக செயலாளர் 1 (நிர்வாகம்) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	2019 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 2019 டிசம்பர் மாதம் வரை
07	திரு. திலக் பண்டார மஹலேகம் - உறுப்பினர்	2018 ஜனவரி மாதம் தொடக்கம் 2019 டிசம்பர் மாதம் வரை

சிரேஷ்ட முகாமைத்துவம்

தொடர் இலக்கம்	பதவிப் பெயர்	பெயர்
01	பணிப்பாளர் நாயகம்	கலாநிதி திரு. டி. எம். எஸ். திஸாநாயக்க (2018.11.09 – 2019.12.02 ஆம் திகதி வரை)
02	மேலதிக பணிப்பாளர் நாயகம்	திரு. எம். எச். ஜி. பண்டார (2018.08.28 – 2019.01.14 ஆம் திகதி வரை)
03	பிரதி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி)	திரு. எம். எச். ஜி. பண்டார (ப.க.) (2018.11.15 – 2019.01.14 ஆம் திகதி வரை)
04	பிரதி பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை)	பொறியியலாளர் திரு. பீ. ஜி. குணபால (2019.04.19 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
05	பிரதி பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)	-
06	பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்)	திரு. எம். எச். ஜி. பண்டார (ப.க.) (2018.11.15 – 2019.01.14 ஆம் திகதி வரை)
		திரு. டீ.டி. பிரியந்த (பதில் கடமை) (2019.01.25 ஆம் திகதி தொடக்கம் 2019.03.31 ஆம் திகதி வரை)
		திருமதி. எச். கே. ஜி. நிரோஷணா (2019.04.01 – 2020.02.12 ஆம் திகதி வரை)
07	பணிப்பாளர் (நிதி)	திரு. டீ.டி. பிரியந்த
08	பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு)	திருமதி. கே. ஏ. எம். சி. எம். பீரிஸ்

		(2017.04.24 – 2018.12.31 ஆம் திகதி வரை (ப.க), 2019.01.01. ஆம் திகதி தொடக்கம் 2020.10.01 ஆம் திகதி வரை (நிரந்தரம்)
09	பணிப்பாளர் (மகாவலி கேந்திர மையம்)	திரு. அருண பிரபாத் லேகம்கே (2016.03.10 – 2019.03.10 ஆம் திகதி வரை – ஒப்பந்த அடிப்படையில்)
10	பணிப்பாளர் (விவசாயம்)	திரு. ஆர். எம். நெவில் ராஜபக்ஷ (2017.03.15 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
11	பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளம்)	திருமதி. எம். ஜி. டீ. பிரியதர்ஷனி (2018.12.20 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
12	பணிப்பாளர் (காணி)	திரு. டி. ஏ. ஏ. யூ. குணசேகர 2019.01.31 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை (வழிமொழிதலின் அடிப்படையில்)
13	பணிப்பாளர் (தாபன அபிவிருத்தி)	திரு. எம். எல்.டி.சி. அபேகுணவர்தன (பதில் கடமை)
14	பணிப்பாளர் (வணிக அபிவிருத்தி)	திருமதி. டி. கே. எச். டப்லியூ. எம். டப்லியூ. ஆர். செனவிரத்ன (2019.06.25 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
15	பணிப்பாளர் (பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்)	பொறியியலாளர் திருமதி. டீ.எம். அதபத்து (2016.05.18 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
16	பணிப்பாளர் (தாழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி)	பொறியியலாளர் திரு. பி. ஜீ. குணபால

		(2017.06.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
17	பணிப்பாளர் (அடிப்படைப் பணி நிர்வாக இயக்கல் மற்றும் தாபரிப்பு)	பொறியியலாளர் திரு. எஸ். ஆர். கே. அருப்பொல (2017.02.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
18	பணிப்பாளர் (ஆற்று வடிநில முகாமைத்துவம்)	பொறியியலாளர் செல்வி. சந்திரா செனரத்
19	பணிப்பாளர் (காணி உபயோக திட்டமிடல்)	திருமதி. ஜே.எம்.ஐ.எச். ஜயவர்தன (பதில் கடமை)
20	பணிப்பாளர் (வன மற்றும் சுற்றாடல்)	திரு. ஏ.எம்.கே.பி. அத்தநாயக்க
21	பணிப்பாளர் (நீரியல் முகாமைத்துவ செயலகம்)	பொறியியலாளர் செல்வி ஜீ.கே.டீ. சமரதுங்க
22	பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்)	திரு. பி. எல். பி. சேனாரத்ன (பதில் கடமை)
23	பணிப்பாளர் (ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டம்)	திருமதி. டி.கே.வி. விஜயவீர
24	பணிப்பாளர் (மின் மற்றும் பொறிமுறை)	திரு. ஜே. ஆர். போபிடிய (பதில் கடமை) (2019.11.15 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை)
25	பணிப்பாளர் (பாதுகாப்பு)	மேஜர் திரு. எல்.ஏ.பீ. ஜயவர்தன (2019.01.29 ஆம் திகதி வரை)
26	பணிப்பாளர் (சட்டம்)	திருமதி. ஆர். எல். ராஜபக்ஷ
27	வதிவிட வணிக முகாமையாளர் (பி வலயம்)	திரு. எஸ்.டீ. தன்தநாராயண (ப.க)
28	வதிவிட வணிக முகாமையாளர் (சி வலயம்)	திரு. கே.ஏ.சி.வி. மல் குமார (ப.க)

29	வதிவிட வணிக முகாமையாளர் (டி வலயம்)	திரு. ஜே.பீ. ஜயதிலக்க (பதில் கடமை)
30	வதிவிட வணிக முகாமையாளர் (எல் வலயம்)	திரு. எச்.கே.பீ. ஜயனாத (2019 ஏப்ரல் வரை) திரு. பீ.ஜீ.என். ஜயசிறி (பதில் கடமை) (2019.02.28 – 2020.02.10 ஆம் திகதி வரை)
31	வதிவிட வணிக முகாமையாளர் (ஜீ வலயம்)	திரு. ஏ.ஜீ.டீ. ஹேமந்த ஜயசிங்ஹ (பதில் கடமை)
32	வதிவிட வணிக முகாமையாளர் (எச் வலயம்)	திரு. ஐ.எம்.யூ.கே. குமார 2016.04.29 – 2018.06.04 ஆம் திகதி வரை (பதில் கடமையாற்றுதல்) 2018.06.05 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை (நிரந்தரம்)
33	வதிவிட வணிக முகாமையாளர் (விக்டோரியா வலயம்)	திரு. ஏ.எம்.ஏ.பீ.ஜீ. குணவர்தன ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை
34	வதிவிட வணிக முகாமையாளர் (ஹுருளுவெவ வலயம்)	திரு. ஈ.எச். ஜயரத்ன (கடமை நிறைவேற்றுகின்ற)
35	வதிவிட வணிக முகாமையாளர் (ரம்பகெண் ஓயா வலயம்)	திரு. எச்.எம். விஜேரத்ன (2018.11.01 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை
36	வதிவிட வணிக முகாமையாளர் (வலவ வலயம்)	திரு. ஏ.எல். ஒஸ்மன் டி சில்வா (2019.08.31 ஆம் திகதி வரை – பதில் கடமையாற்றுதல்) மற்றும் 2019.09.24 ஆம் திகதி தொடக்கம் தற்பொழுது வரை (நிரந்தரம்)

2019 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் நாயகத்தின் மதிப்புரை.

மகாவலி அபிவிருத்திப் பல்நோக்க அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கையின் நிலப்பரப்பில் சுமார் மூன்றிலொரு பாகத்தில் பரந்து விரிந்து காணப்படும் மகாவலி பிரதேசத்தின் குடித்தொகையானது கிட்டத்தட்ட பத்து இலட்சமாகும். மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப குறிக்கோள்களில் உலர் வலயத்தின் விவசாயம், மீன்பிடி, மின்சாரம் மற்றும் கால்நடை வளங்கள் ஆகிய துறைகளின் உற்பத்தி விளைத்திறனை அதிகரித்தல், வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல், புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் உட்பட செல்வச் செழிப்பாக நாட்டை செயலூக்கப்படுத்துதல் என்பன உள்ளடங்குகின்றன.

தற்பொழுது மகாவலி பிரதேசங்களில் நிலவுகின்ற விளைத்திறன்களை அதிகரிப்பதற்காக விவசாய, விவசாய வர்த்தக, நீர் முகாமைத்துவம், விலங்கு உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் நிலைபெறுதகு வலு உற்பத்திக்காக தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு செயற்படுத்துவது தொடர்பாக உரிய நிறுவனங்களின் தலையீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடயப் பொறுப்பு அமைச்சு மற்றும் ஏனைய அரச திணைக்களங்களுடன் கைகோர்த்து செயற்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இத் துறைகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுள்ள ஆய்வு நடவடிக்கைகளின் மூலம் வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டு அதன் மூலம் எதிர்வரும் காலங்களில் மகாவலி உற்பத்திகளின் விளைத்திறனை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய செயற்படுத்தப்பட்டுள்ள விஹிணியாகம, கொத்மலை இழைய வளர்ப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளின் வெற்றிகரமான பெறுபேறுகளும் இம்மகாவலி வலயங்களில் விவசாயம் போன்ற துறைகளில் விளைத்திறன்களை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படுகின்ற ஆய்வுகள் செயற்திட்டங்களில் உள்ளடங்குகின்றன. இளைஞர்களை விவசாயத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்காக ஊக்கப்படுத்தும் விதமாக எதிர்வரும் காலங்களில் விவசாயப் பிரச்சார அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்பொழுது மகாவலி திட்டத்தின் கீழ் நாட்டில் பாரிய விதைக்கும் பரவெல்லை உள்ளடங்கும் விதமாக நிறுவப்பட்டுள்ள நீர்ப்பாசனத் தொகுதியின் மூலம் நாட்டில் பாரிய பிரதேசத்திற்காக விவசாய நீர், குடிநீரைப் போலவே மின் உற்பத்திக்கும் பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது. எதிர்வரும் காலங்களில் நிலவக்கூடிய நீருக்கான பாரிய கேள்விக்கு மத்தியில் நீர் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய பிரதேசங்களுக்கு, விசேடமாக, அதி உலர் காலநிலை நிலவக்கூடிய நிலைமைகளில் தட்டுப்பாடு இன்றி நீர் விநியோகிக்கும் நோக்குடன் (களனி கங்கை) கெஹெல்கமு ஓயா மேல் நீரேந்து பிரதேசத்தில் இருந்து திசை திருப்பி மகாவலி கங்கையின் நீர் கொள்ளளவை அதிகரித்து உயர்ந்தபட்ச பலனைப் பெற்றுக் கொள்வதற்குள்ள இயலுமை தொடர்பான ஆரம்ப கட்ட ஆய்வு நடவடிக்கைகள் தற்பொழுது இலங்கை மகாவலி அதிகார சபையின் பொறியியலாளர்களால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இதன்

மூலம் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவை அதிகரிப்பதற்கு அவசியமான ஆரம்ப கட்ட திட்டங்கள்/ பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்பொழுது மாபெரும் செயற்திட்டமாக பாரிய நீர்த்தேக்கங்களை சுத்திகரிக்கும் செயற்திட்டம் மற்றும் நீர் வளம் பொருந்திய பிரதேச நதிகளின் வடிநிலங்களை பாதுகாக்கும் செயற்திட்டமும், சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தற்பொழுது இது இலங்கை மகாவலி அதிகார சபையின் மேல் மாகணத்தைத் தவிர நாட்டின் ஏனைய அனைத்து மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு மாபெரும் நிகழ்ச்சித் திட்டமாக செயற்படுத்தப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட பணிகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அவசியமான நோக்கு, வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்ற மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம், கிராமிய அபிவிருத்தி மற்றும் உள்ளக வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நல கௌரவ அமைச்சரான சமல் ராஜபக்ஷ அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்ற பக்கபலத்தை மிகவும் பாராட்டத்தக்க விடயமாக கருதுகின்றேன். அதைப்போலவே, கௌரவ மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர் உட்பட இராஜாங்க செயலாளரின் வழிகாட்டலுக்கு அமைய மேற்குறிப்பிட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்கு செயற்படுகின்ற மகாவலி அதிகார சபையின் சகல பதவியணிகளுக்கும் மற்றும் சகல செயற்திட்ட பதவியணிகளுக்கும் நன்றி செலுத்துவதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.



கீர்த்தி பி. கொட்டகம

பொது இயக்குனர்

இலங்கை மகாவலி அதிகாரசபை

பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு.

இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அறிக்கையை 2019-12-31 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட நிதிக் கூற்றுகளுடன் சமர்ப்பிக்கின்றோம்.

வருடம் தொடர்பான மீளாய்வு.

பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்புரையில் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் தொழிற்பாடுகள் தொடர்பான விவரமான கூற்று உள்ளடக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல், ஊழல், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் தொடர்பாக கண்டறிதல் மற்றும் இடர்நேர்வுகளைக் குறைக்கும் நோக்குடன் உள்ளக நிர்வாகம் தொடர்பாக சிறந்தொரு முகாமைத்துவத்துடன் செயற்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் சகல பதவியணிகளாலும் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதில் காட்டியுள்ள அளப்பரிய அர்ப்பணிப்பு தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் எமது பாராட்டுக்களை இத்தாள் தெரிவித்துக் கொள்கின்றோம்.



திரு. எச். ஹேமால் கஸ்தூரிஆரச்சி
பணிப்பாளர் நாயகம்
நிதி அமைச்சு



பொறியியலாளர் திரு. எஸ். மோகன்ராஜா
பணிப்பாளர் நாயகம்
நீர்ப்பாசனத் திணைக்களம்



திரு. டி. ஜீவனாதன்
மேலதிக செயலாளர் – 1 (நிருவாகம்)



திரு. திலக் பண்டார மஹலேகம் - உறுப்பினர்

2019 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் குழு அறிக்கை

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு :

மகாவலி அதிகார சபையின் விளைத்திறன் மிக்க செயலாற்றுகையை உறுதி செய்வதற்காக நிதிக் கணக்காய்வு, முறைமை பகுப்பாய்வு மற்றும் செயலாற்றுகை பகுப்பாய்வு மற்றும் விசேட விசாரணைகளை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையில் நிறுவப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுவின் ஆலோசனைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஒன்றின் ஊடாக அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை செயற்படுத்தியதுடன், வினைத்திறனற்ற செயன்முறைகளை இல்லாதொழித்து, உள்ளக நிர்வாகத்தை மேம்படுத்தி, ஊழல் மோசடிகள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களை இயன்றளவு குறைத்து, செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக இப்பிரிவின் ஊடாக முறைமை கணக்காய்வு முறையை செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்.

- உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் கீழ் வருடத்தினுள் கணக்காய்வு அறிக்கைகள் 22 வெளியிட்டமை.
- 03 புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கைகள் வழங்கியமை.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று கூடல்கள் 03 இடம்பெற்றமை.
- கணக்காய்வு விசாரணைகளுக்காக வழங்கப்பட்ட பதில்கள் பின் தொடரப்பட்டு பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டமை.

இலங்கை மகாவலி அதிகார சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுனர் அல்லாத பணிப்பாளர்கள் மூவரை உள்ளடக்கியதுடன், அதன் தவிசாளர் பதவிக்கு திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

வருடத்தின் போது கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் :

- திரு. ஹேமால் கஸ்தூரிஆரச்சி - குழுவின் தவிசாளர் – திறைசேரியின் பிரதிநிதி
- திரு. திலக் பண்டார மஹலேகம் - உறுப்பினர்
- பொறியி. திருமதி. சி.எம். தேவேந்திர - உறுப்பினர்

குழுவின் ஒன்றுகூடல்களில் பங்கேற்றவர்கள் :

- பணிப்பாளர் (நிதி)
- பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)
- கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் அரச கணக்காய்வு அத்தியட்சகர்
- அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர்

- தேவைக்கு அமைய அழைப்பு விடுக்கப்படுகின்ற ஏனைய உரிய உத்தியோகத்தர்கள்.

குழுவின் வகிபாகம் :

- உள்ளக நிர்வாக முறையின் மீளாய்வு மற்றும் அவசியமான சந்தர்ப்பங்களில் மறுசீரமைப்புகளுக்காக ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கு கவனத்தை ஆற்றுப்படுத்துதல்.
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை தொடர்பாக கவனத்தை ஆற்றுப்படுத்தி கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக அதிகார சபையில் நிலவுகின்ற பிரச்சினைகளை இனங்காணுதல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான வழிகாட்டல்களை வழங்குதல்.
- 1971 ஆம் ஆண்டின் 38 இலக்க நிதி தொடர்பான சட்டத்தின் 142 (இ) உப பிரிவிற்கு அமைய கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக விசேட கவனத்தை ஆற்றுப்படுத்தி அதிகார சபையின் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- தாபன செயலாற்றுகை அறிக்கையை காலாண்டு அடிப்படையில் மீளாய்வுக்கு உட்படுத்துதல்.

பரிந்துரைகள் :

மேற்குறிப்பிட்ட காரணங்களில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு ஆலோசனைகளை வழங்கி குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய முகாமைத்துவத்தினால் தாபனத்திற்கு அவசியமான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 07 வருடங்களுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்.

	2019	**2018**	**2017**	**2016**	**2015**	**2014**	**2013**
	Rs'000	**Rs'000**	**Rs'000**	**Rs'000**	**Rs'000**	**Rs'000**	**Rs'000**
சொத்துக்கள்							
நடைமுறை அல்லாத சொத்துக்கள்							
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	4,972,468	4,675,657	4,116,187	4,195,724	4,294,893	4,259,208	4,549,301
முதலீடுகள் (LT)	166,299	171,313	187,531	178,556	152,577	175,359	166,731
மூலதன செயன்முறையிலுள்ள பணிகள்	47,482	84,947	78,552	41,301	74,286	62,506	48,362
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்	**5,186,249**	**4,931,917**	**4,382,270**	**4,415,581**	**4,521,756**	**4,497,073**	**4,764,394**
உயிரியல் சொத்துக்கள் – மூலதனம்	219,777	167,027	134,578	101,940	-	-	-
முன்மொழியப்பட்ட தள்ளுபடி	-	-	859	859	-	-	-
நடைமுறை சொத்துக்கள்							
சரக்கு இருப்புகள்/ இருப்புகள்	170,983	180,342	184,815	168,173	157,428	180,900	174,028
உயிரியல் சொத்துக்கள் – வணிகம்	47,178	26,312	15,875	22,630	-	-	-
வணிகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள்	2,997,661	2,032,715	2,084,069	1,730,015	1,307,077	1,274,329	1,150,958

தொங்கல் கணக்கு	-	-	-	-	-	-	-
முற்கொடுப்பனவுகள்	-	4,767	3,896	8,754	5,172	-	38
வங்கி உத்தரவாதங்கள்	374	6,292	6,164	4,153	1,372	837	905
முகவருக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள்	-	-	-	-	-	-	-
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	258,877	312,702	343,312	312,750	429,588	190,391	140,950
மொத்த நடைமுறை சொத்துக்கள்	3,475,073	2,563,130	2,638,131	2,246,475	1,900,637	1,646,457	1,466,879
மொத்த சொத்துக்கள்	**8,881,100**	**7,662,074**	**7,155,838**	**6,764,855**	**6,422,393**	**6,143,530**	**6,231,273**
பொறுப்புக்கள்							
நடைமுறை பொறுப்புக்கள்							
கொடுப்பனவுகள்	968,185	651,986	879,967	376,737	341,286	491,622	528,482
குத்தகை – ஏலியன்ஸ் பினான்ஸ்	-	-	2,153	3,080			
அட்டுறுச் செலவுகள்	211,909	102,067	175,733	122,286	46,159	207,705	87,145
முகவருக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள்	-	-					
மொத்த நடைமுறை பொறுப்புக்கள்	**1,180,094**	**754,053**	**1,057,853**	**502,103**	**387,445**	**699,327**	**615,627**

நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்							
பணிக்கொடைக்கான ஒதுக்குகள்	1,371,814	1,379,494	1,388,101	1,489,288	1,551,379	1,311,876	1,157,688
வங்கிக் கடன்	-	-		2,455			
குத்தகை கட்டணங்கள்	-	219	271	2,653	11,247	14,329	6,243
பிற்போடப்பட்ட வரி	612	612	612	612	612	612	612
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்	**1,372,426**	**1,380,325**	**1,388,984**	**1,495,008**	**1,563,238**	**1,326,817**	**1,164,543**
மொத்த பொறுப்புக்கள்	**2,552,520**	**2,134,378**	**2,446,837**	**1,997,111**	**1,950,683**	**2,026,144**	**1,780,170**
மொத்த தேறிய சொத்துக்கள்	**6,328,579**	**5,527,696**	**4,709,001**	**4,767,744**	**4,471,710**	**4,117,386**	**4,451,103**
<u>தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை</u>							
நிதி கூட்டுத்தொகை	1,837,751	24,649,830	24,407,260	24,066,161	23,702,950	23,383,849	23,224,435
ஒதுக்குகள் – வருமான மற்றும் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதி	(657,528)	(24,040,551)	(23,755,208)	52,121	53,992	67,466	53,560
வருமான ஒதுக்குகள் - நிறுவனங்கள்	48,288	50,865	4,006,082	4,019,027	4,021,721	3,837,266	3,851,627

மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் –	5,100,069	4,867,551	50,865	(23,369,566)	(23,276,474)	(23,171,205)	(22,678,520)
மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையான்மை	**6,328,580**	**5,527,696**	**4,708,999**	**4,767,743**	**4,502,189**	**4,117,376**	**4,451,102**

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களின் பணிப்பாளர் சபை - 2019

தொடர் இலக்கம்	நிறுவனங்கள்	தவிசாளர்	பணிப்பாளர் சபை	பிரதான அலுவலக முகவரி
01	வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்		1. திரு. பராக்கிரம அபேவர்தண 2. திரு. எட்வர்ட் டி மெல் (பணிப்பாளர்) 3. திரு. ஒஸ்மன் டி சில்வா (பணிப்பாளர்)	இலக்கம் 260/20, பேஸ்லயின் வீதி, கொழும்பு 09
02	வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம்	வைத்தியர் திரு. ஹர்ஷ சமரவீர	1.திரு. கே.எல். சஹபந்து 2.பொறியியலாளர் திரு. எல்.ஆர்.எச். பெரேரா	இலக்கம் 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05
03	இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம்	பொறியியலாளர் திரு. ஏ.ஏ.வி. டயஸ்	1.பொறியியலாளர் திரு. பி.டப். என்.டப். செனவிரத்ன பண்டா 2.திரு. என்.எம்.கே.பி. அத்தநாயக்க 3.திரு. எல்.எம். தர்மசிறி திரு. எம். ஜீ. அபேரத்ன பண்டார (நிறுவனச் செயலாளர்)	வேல்ல பிரதேசம், பொல்கொல்ல, கண்டி

நிர்வாக அறிக்கை

பாகம் - 01

முதலாவது அத்தியாயம்.

1.1 இலங்கை மகாவலி அதிகார சபையை ஸ்தாபித்தல் மற்றும் அதன் அமைப்பு.

1979 ஆம் ஆண்டின் இலக்கம் 23 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், அச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் விசேட பிரதேசம் ஒன்று தொடர்பாக அதிகார சபையின் பணி வினைகள் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளன.

(அ) நீர்த் தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் என்பவற்றை நிர்மாணித்தல் மற்றும் விநியோகிப்பதற்கான இயந்திர உபகரணங்களை நிறுவுதல் மற்றும் இயக்குதல் உட்பட மகாவலி கங்கையின் அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டங்களை திட்டமிடுதல் மற்றும் செயற்பாட்டிற்குக் கொண்டு வருதல். அவ்வாறு இருப்பினும், மின்சாரத்தை விநியோகிப்பதற்குரிய பணி வினைகளை வேறு ஏதேனும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் உள்ள வேறு ஏதேனுமொரு அதிகார சபையினால் செயற்படுத்துவதற்கு முடியும்.

(ஆ) முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அபிவிருத்தியை போசித்து வளர்த்தல் மற்றும் அவ்வபிவிருத்தியைத் தக்க வைத்துக் கொள்ளுதல்.

(இ) விவசாய விளைத்திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு ஆற்றல்களை உயர்ந்த பட்ச நிலைமைக்கு கொண்டு வருதல் மற்றும் விவசாய பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளுதல்.

(ஈ) பௌதீக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

(உ) மக்களின் பொது நலன் மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை மேம்படுத்துதல் மற்றும் நிர்வாகித்தல்.

(ஊ) உள் மற்றம் வெளி பிரத்தியேக மூலதனத்தை விவசாய அபிவிருத்திகளில் பயன்படுத்துவதை முன்னேற்றுதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளல்.

(எ) மகாவலி கங்கை அபிவிருத்தி முன்மொழிவுத் திட்டத்தை திட்டமிடும் போது மற்றும் அதனைச் செயற்படுத்தும் போது அரச திணைக்களங்கள், அரச தாபனங்கள், உள்ளூராட்சி மன்ற தாபனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட தாபனங்கள்,

பிரத்தியேக அல்லது வேறு நபர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளுதல்.

1.2 இலங்கை மகாவலி அதிகார சபையின் பணி வினைகள்.

பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒவ்வொரு விடயத் துறைகளின் கீழ் நிறுவப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் துறைகளுக்குரிய அலுவலகங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலானது பிரதி பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர்கள், செயற்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் வதிவிட வணிக முகாமையாளர்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய பின்வரும் பணி வினைகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் நிறைவேற்றப்படுகின்றன.

- கூட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்திற்கு அமைய தாபனத்தின் முன்னேற்றத்தை மாதாந்தம் பரிசீலித்து அவசியமான தலையீடுகள் மூலம் உரிய இலக்கை எட்டுதல்.

- சொத்துக்களைத் தாபரித்தல் மற்றும் நிர்வாகித்தல் தொடர்பாக பொருத்தமான திட்டம் ஒன்றிற்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் சொத்துக்களை கையுதிர்த்தல்.

- கால வரையறைக்கு அமைய மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்கம் மற்றும் கிவுல் ஓயா நீர்த்தேக்கம் ஆகியவற்றை நிர்மாணித்தல்.

- பி வலயத்தின் வலது கரை மற்றும் எல் வலயத்தின் நீர்ப்பாசன நிலப்பரப்பை அதிகரித்துக் கொள்வதற்காக பிரதேசங்களை இனங்கண்டு அடிப்படைச் சூழல் ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுதல்.

- விவசாய உதவிச் சேவைகள் மேம்பாடு, விவசாய மேம்பாடு மற்றும் வருமான தோற்றுவிப்புச் செயற்திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் நாட்டில் பாதுகாப்பை ஏற்படுத்துதல்.

- நீர்ப்பாசனத் தொகுதிகளை தாபரித்தல் மற்றும் முகாமைத்துவத்தை விவசாய அமைப்புக்களுக்கு ஒப்படைப்பதற்கு இயன்ற வகையில் விவசாய அமைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் உழவர் பிரதிநிதிகளை பலப்படுத்துதல்.

- "செல்வச் செழிப்பு மிக்க தேசம் ஒன்றிற்கு மகாவலி கால்நடை உற்பத்திகள்" என்ற தொனிப் பொருளின் கீழ் மகாவலி குடியேற்ற சமூகத்தின் வாழ்வாதார அபிவிருத்திக்கு கால்நடை வளங்கள் துறையை பலப்படுத்துதல்.

- விவசாய நிலங்கள் வரையறுக்கப்பட்ட வளமாகி வருகின்றமையால் மகாவலி குடியேற்றவாசிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறைகளின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிக்கும் பொருட்டு பாரம்பரிய விவசாயத் துறைக்கு அப்பாற்பட்ட தொழில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் வழி காட்டுதல்.

- சகல மட்டங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பதவியணியின் தகவல்களை கணினி மயப்படுத்தி (இலத்திரனியல்) e - மனித வள முகாமைத்துவ தொகுதி ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.


- நேரியல் தாபனங்களுடன் கலந்துரையாடி சாகுபடி பருவ செயற்பாட்டுத் திட்ட செயல்முறைகள் மூலம் பிரதான நீர்த்தேக்கங்கள் மூலம் நீர்ப்பாசன குடியேற்ற செயற்திட்ட பிரதான நீர்மின் உற்பத்தி மற்றும் வீடுகளுக்கான நீர் மின் மற்றும் வீடுகளுக்கான நீர் வழங்கலுக்காக நீரை வேறு பிரித்துக் கொடுத்தல்.

- பி, சி, எச், எல், டி, மொரகஹகந்த, ஹுருளுவெவ, வலவ, விக்டோரியா மற்றும் புதிய வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ரம்புக்கன் ஓயா ஆகிய செயற்திட்டங்களில் பயிர் பன்முகப்படுத்தல், சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவிப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- நீர் முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, கால்நடை வள அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மண் மற்றும் நீர்ப் பாதுகாப்பு, நீர் பிரி நிலங்களின் முகாமைத்துவம், சூழல் மாசடைதல் மற்றும் நீர் மாசடைதல் தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.

- பிரதான நீர்த் தேக்கங்களில் திசை திருப்பல் அளவுகளை பாதுகாப்பான விதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பயனுறு தொழிற்பாட்டு தாபரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் அதன் மூலம் உழவர் அமைப்புக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

1.3 இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாக கட்டமைப்பு



1.4 மகாவலி வலயம் – கட்டமைப்பு, நிர்வாகம் மற்றும் தற்போதைய நிலைமை

மகாவலி கங்கை வடிநில அபிவிருத்திப் பெருந்திட்டத்திற்கு அமைய உருவாக்கப்பட்ட குடியேற்றங்களை நிர்வாகித்தல், நீர்ப்பாசனத் தொகுதியை இயக்குதல், தாபரித்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக மகாவலி அதிகார பிரதேச வலயம் என்ற அடிப்படையில் நிர்வாக அலகுகள் 10 நிறுவப்பட்டுள்ளன. மகாவலி கங்கைப் பள்ளத்தாக்கை அண்மித்து பி,சி,டி,எச், மொரகஹகந்தை, விக்டோரியா, ஹுரூளு வெவ ஆகிய வலயங்களும், உடவலவ, வெலி ஓயா (எல் வலயம்) மற்றும் ரம்புக்கன் ஓயா வலயம் ஆகிய விசேட வலயங்களும் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மகாவலி வலயங்களில் மற்றும் விசேட பிரதேசங்களில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பணி வினைகள் வதிவித வணிக முகாமையாளர்களின் அதிகாரங்களுக்குக் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வதிவிட வணிக முகாமையாளர்கள் நேரடியாக பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியதுடன், பிரதி பணிப்பாளர் நாயகங்களின் மேற்பார்வையின் கீழ் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக பிரதான அலுவலகத்தில் ஒவ்வொரு துறைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களின் ஒத்துழைப்பு கிடைகைப் பெறும்.


அவ்வாறே, அனைத்து வலயங்களுக்கும் பிரதம நிறைவேற்று அதிகாரி வதிவிட வணிக முகாமையாளராகுவதுடன், தொழில்நுட்ப, காணிகள், விவசாயம் மற்றும் அபிவிருத்தித் துறைகளுக்காக கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக பிரதி வதிவிட வணிக முகாமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். அலகுகள் பலவற்றிற்காக ஒரு தொகுதி முகாமைத்துவ அலுவலகமும், அவ்வலுவலகத்திலட ஒவ்வொரு விடயத் துறைகளுக்கும் தொகுதி முகாமையாளர்களின் நேரடி கண்காணிப்பின் கீழ் நீர்ப்பாசன பொறியியலாளர் ஒருவர், தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், கமநல உத்தியோகத்தர் மற்றும் காணிகள் உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வனைத்து உத்தியோகத்தர்களினதும் கண்காணிப்பின் கீழ் சகல விடயத் துறைகளினதும் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் ஒவ்வொரு அலகிற்கும் ஒவ்வொரு முகாமையாளர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு அலகானது பொதுவாக 250-300 அளவான காணி உரித்துடைய குடும்பங்களை குடியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மகாவலி வலயங்களில் காணி நிர்வாகம் மேற்கொள்ளப்படுவது காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் மற்றும் அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தை முதன்மையாகக் கொண்ட அரசாங்கத்தின் காணிகள் கொள்கைகளுக்கு அமையவாகும். அரசாங்கத்தின் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வெளியேற்றுவதில் இருந்து பிரதான பத்திரம் வெளியிடுவது வரை அடிப்படை நடவடிக்கைகள் அக்காணிகளுக்குரிய பின் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வணிக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்காக காணிகள் குத்தகை அடிப்படையில் வெளியேற்றுவதற்குரிய அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதும், ஆரம்ப குடியேற்றவாசிகளுக்கு


மேலதிகமாக இரண்டாவது, மூன்றாவது தலைமுறைகளுக்கு காணிகளை வழங்குவதும் வலய அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதைப் போலவே, நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம், தாபன அபிவிருத்தியின் ஊடாக நீர்ப்பாசனத் தொகுதியை தாபரித்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளும், விவசாய அபிவிருத்தின் கீழ் விதைகளை உற்பத்தி செய்தல், பண்ணை அபிவிருத்தி, பயிற்சி மற்றும் மாதிரி நடவடிக்கைகளும், கால்நடை வள, மீன்பிடி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைச் செயற்திட்ட அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தரமான கடன் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டு வருதல், வணிக, விவசாய வியாபாரத்தை இயக்குதல், விவசாயத்திடன் தொடர்புடைய சுய தொழில் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்பாட்டிற்குக் கொண்டு வருதலும் வலய நிர்வாகத்தின் கீழ் இடம்பெறும்.

மகாவலி வலயம் – வரைபடம்



பி (B) லவயம்



வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி பி வலயமானது மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ் பள்ளத்தாக்கின் 75,441.5 ஹெக்டாயர் பருமட்டான மொத்த நிலப்பரப்பில் பரந்து விரிந்து காணப்படுவதுடன், பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களின் கீழ் கொள்ளப்பட்டுள்ள மாபெரும் செயற்திட்டமாக இதனைக் குறிப்பிட முடியும். நீர்ப்பாசன முகாமைத்துவ நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்திட்ட பிரதேசங்களானது 08 நிர்வாக பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

மகாவலி "பி" வலயத்தின் 1983 இன் பின்னரான குடியேற்றங்கள்

இலக்கம்	விபரம்	1990	2007	2018
1	குடும்ப அலகுகள்	14,872	25,225	32,545
2	சனத்தொகை	68,411	130,130	149,125

மகாவலி "பி" வலயத்தின் மொத்த நிதிசார் முன்னேற்றம் – 2019 ஆம் ஆண்டு

தொடர் இலக்கம்	பிரிவு	2019 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் 2019.12.31 ஆம் திகதிக்கு
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	86.00	102.86
02	நிர்வாகப் பிரிவு	03.15	03.15
03	போக்குவரத்துப் பிரிவு	07	07.02

04	வணிக அபிவிருத்திப் பிரிவு	03.50	03.20
05	தாபன அபிவிருத்திப் பிரிவு	13	15.88
06	காணிப் பிரிவு	35.70	43.82
07	காணி உபயோக மற்றும் திட்டமிடல் பிரிவு	01	0.850
08	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	09	09.80
09	மகாவலி மையம்	06.65	06.66
கூட்டுத் தொகை		**165.00**	**193.221**
உற்பத்தி விளைத்திறனை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் 2018 செயற்திட்டத்திற்கான ஒதுக்கீடுகள்			
10	விவசாய அபிவிருத்திப் பிரிவு	29.00	29.52
11	கடற்றொழில் மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு	05.53	05.58
மொத்த கூட்டுத் தொகை		**199.53**	**228.32**

சி (C) வலயம்



வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய அபிவிருத்தி வலயமாக ஆரம்பிக்கப்பட்ட "சி" வலயமானது மேல் மாகாணத்தில் மகாவலி கங்கையிலும், கிழக்கில் உல்ஹிடிய நீர்த்தேக்க ஒதுக்கு மற்றும் மாதுறு ஓயா வனப் பூங்காவும், வடக்கில் மகாவலி பி வலயமும், தெற்கில் மஹியங்கனை பிரதேசத்தையும் எல்லையாகக் கொண்டு, பதுளை, அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய நிர்வாக மாவட்டங்கள் 03 ஐயும் உள்ளடக்கி அமைந்துள்ளது. இவ்வலயத்தின் பருமட்டான மொத்த நிலப்பரப்பு 30,760 ஹெக்டயார் ஆகும்.

வலயத்தின் அடிப்படைத் தகவல்கள்


- விவசாய காலநிலை வலயம் - $DL_1/DL_2/IL_2$
- பயிர் செய்யக்கூடிய நிலப்பரப்பு ஹெக்டயார் - 22,406
- அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுத் தோட்டங்கள் - 35,640
- வலயத்தின் சனத் தொகை - 185,356
- பயிர் செய்யப்படுகின்ற பிரதான பயிர் - நெல்
- அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுத் தோட்டங்கள் - 35,640
- வலயத்தின் சனத் தொகை - 185,356
- நீர் விநியோகிக்கக் கூடிய பிரதான நீர்த்தேக்கங்கள் - உல்ஹிடிய, ரத்கிந்த
- நீரைச் சேமிக்கின்ற நீர்த்தேக்கங்கள் - 56

மகாவலி "சி" வலயத்தின் மொத்த நிதிசார் முன்னேற்றம் – 2019 ஆம் ஆண்டு

தொடர் இலக்கம்	**பிரிவு**	**2019 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள (ரூ.மி.)**	**நிதிசார் முன்னேற்றம் 2019.12.31 ஆம் திகதிக்கு**	**மொத்த நிதிசார் முன்னேற்றம்**
			(ரூ.மி.)	**(%)**
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	**114.00**	**110.05**	**97%**
02	காணிப் பிரிவு	**18.00**	**16.39**	**91%**
03	காணி உபயோக மற்றும் திட்டமிடல் பிரிவு	**1.00**	**0.49**	**49%**
04	தாபன அபிவிருத்திப் பிரிவு	**16.30**	**11.26**	**69%**
05	வணிக அபிவிருத்திப் பிரிவு	**3.50**	**3.02**	**86%**
06	விளையாட்டுத் துறை மற்றும் கலாச்சரப்	**5.20**	**5.83**	**112%**
07	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	**5.50**	**9.26**	**168%**
08	நிர்வாகப் பிரிவு	**5.50**	**4.43**	**80%**
09	போக்குவரத்துப் பிரிவு	**7.00**	**7.27**	**104%**
உப கூட்டுத் தொகை – நிறுவன மூலதனம்		**176.00**	**167.99**	**95%**

10	விவசாய அபிவிருத்திப் பிரிவு	**13.00**	**13.32**	**102%**
11	கடற்றொழில் மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு	**4.50**	**4.18**	**93%**
12	பாரிய மற்றும் நடுத்தரமான நீர்ப்பாசன செயற்திட்டங்களை புனர்நிர்மாணம் செய்தல்	**10.00**	**6.93**	**69%**
உப கூட்டுத் தொகை - செயற்திட்டங்கள்		**27.50**	**24.43**	**89%**

டி (D) வலயம்



வலயம் தொடர்பான அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு மெதிரிகிரிய பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ள மகாவலி "டி" வலயமானது 02 தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. அவை யாதெனில் பிசோபுற மற்றும் சூரியபுற ஆகியவை ஆகும். பிசோபுற தொகுதியானது மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது குடியேற்றப் பெருநகர் ஆகும். பிசோபுற தொகுதியானது 04 அலகுகளை உள்ளடக்கியதாகும். வடக்கே திருகோணமலை மாவட்டத்தின் கந்தலைப் பிரதேசம் வரையிலும், கிழக்கே சேறுவில பிரதேசம் வரையிலும், தெற்கு மற்றும் மேற்கே பொலன்னறுவை மாவட்டத்தின் லங்காபுற, ஹிங்குரன்கொட பிரதேசம் வரையிலும் பரந்து விரிந்து காணப்படுகின்றது.

விசேட செயற்திட்டங்கள்.

தொழிற்சாலை (Mini Garment) ஒன்றை ஆரம்பித்தல், மகாவலி நாற்று மேடையை ஆரம்பிப்பத்தல் மற்றும் அலங்கார மீன் வளர்ப்புச் செயற்திட்டத்தை ஆரம்பித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன. வலயத்தின் மூலமாக முன்னெடுக்கப்படுகின்ற செயற்திட்டத்திற்கு அமைய ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியின் (UNDP) மூலம் நிதி ஏற்பாடுகள் இதற்காக வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வலயத்தில் தொழிலற்ற பெண்களுக்காக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முடியுமாக இருந்தமை, சுய தொழில் மட்டத்தில் இருந்த விவசாயிகளை சிறிய அளவான வியாபார மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு முடியுமாக இருந்தமை, அவர்களுடைய குடும்ப அலகின் வருமான நிலைமையை மேம்படுத்துவதற்கு முடியுமாக இருந்தமை மற்றும் நாட்டின பொருளாதார விருத்திக்கு இயன்றளவு தூரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு முடியுமாக இருந்தமை முக்கியமான அம்சங்களாகும்.

டி வலயத்தின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் – 2019.12.31 ஆம் திகதிக்கு

தொடர் இலக்கம்	**பிரிவு**	**நிதி ஒதுக்கீடுகள் (ரூ. மில்லியன்)**	**விடயம்**	**பௌதீக முன்னேற்றம் (நிகழ்ச்சித் திட்டங்கள்)**
01	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	31.440	குளங்களை மேம்படுத்துதல் – குளம் 01	100%
			அணைக்கட்டுக்களை புணரமைத்தல்.	100%
			பிசோபுற தொகுதி அலுவலகத்தின் சூரிய மின் தொகுதி ஒன்றை நிர்மாணித்தல்.	100%
			<u>கால்வாய்த் தொகுதியை மேம்படுத்துதல்.</u> விவசாய கால்வாய்த் தொகுதி – 5.5 கி.மீ பெட்டி மதகுகள் – 04 மதகுகள் – 02	100%
			<u>முகாம்களைத் தாபரித்தல்</u> வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகம், சுற்றுலா மாளிகைகள், வலய அலுவலகங்கள் 02	100%
			<u>கட்டிடங்கள்</u> சூரியபுற தொகுதியில் மலசலகூடத் தொகுதி – 01	100%

			சூரியபுற தொகுதியில் கட்டப்பட்ட வீடு – 01 சூரியபுற தொகுதியில் அலுவலகத்தை புணரமைத்தல்	
தொடர் இலக்கம்	**பிரிவு**	**நிதி ஒதுக்கீடுகள் (ரூ. மில்லியன்)**	**விடயம்**	**பௌதீக முன்னேற்றம்**
02.	தாபன அபிவிருத்திப் பிரிவு	5.00	தாபன அபிவிருத்தி உழவர் அமைப்புகளிற்காக ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், அனுபவங்களைப் பகிர்தல், பொருட்களை விநியோகித்தல், உழவர் அமைப்புக்களைப் பலப்படுத்துதல் மற்றும் கலாச்சார நிகழ்ச்சித் திட்டங்கள்	51
			சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நெறிமுறை மிக்க பிள்ளைகள், சுகாதார சிகிச்சைகள், பரிட்சை கருத்தரங்குகள், சர்வதேச தின கொண்டாட்டங்கள்	22
			மகளிர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் உணவுத் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், வீட்டுப் பொருளாதார முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள், மகளிர் சிறு குழுக்களை விழிப்புணர்வூட்டுதல்	10
			குடியேற்ற பயிற்சிப் பட்டறைகள்	06

			ஈர்க்கு மாருகள், தும்புத்தடிகள், ஆடைகள், பைகள் மற்றும் கலணிகள் பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல்	
03.	வியாபார அபிவிருத்திப் பிரிவு	2.06	சிறிய அளவிலான வியாபாரிகளை நடுத்தர அளவு வியாபாரிகளாக முன்னேற்றுதல் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல்	03
			50% ஒத்துழைப்பின் அடிப்படையில் உபகரணங்களை வழங்குதல், மலசல கூடங்கள், இயந்திரங்கள், நடமாடும் விற்பனை நிலையங்கள்	05

ஈ (E)வலயம்

குறிக்கோள்

சுற்றாடல் தோழமைமிக்க புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்திய விவசாய மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் மூலம் பொருளாதார, சமூக ரீதியில் நிலைபெறுதகு செழுமை மிக்க வலயமான மாற்றியமைத்தல்.

பிரதான நோக்கங்கள்


மகாவலி ஈ வலயமானது 2019 ஆம் ஆண்டின் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கொத்மலை – பொல்கொல்லை – வேல்ல – விக்டோரியா – ரண்தெனிகல – ரன்தெம்ப நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மகாவலி வலயங்களில் குடியமர்த்துதல், வேறு வலயங்களுக்குச் செல்வதற்கு விருப்பம் தெரிவிக்காத குடும்பங்களை இப்பிரதேசத்தில் மீள் குடியேற்றுதல், அவர்களுக்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மற்றும் மகாவலி மேல் நீரேந்தை பாதுகாப்பதன் ஊடாக நீர் பாதுகாப்பை ஏற்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகும்.

ஈ வலயத்திற்குரிய பிரதேச செயலகங்களாக மினிப்பே மற்றும் வில்கமுவ என்பன காணப்படுகின்றன. மினிப்பே தொகுதியானது 61,548 சதுர ஏக்கராக காணப்படுவதுடன் அங்கு 17,829 குடும்பங்கள் வசிக்கின்றன. வில்கமுவ தொகுதியானது 24,131 சதுர ஏக்கராக காணப்படுவதுடன் அங்கு 14,098 குடும்பங்கள் வசிக்கின்றன.

ரண்தெனிகல வன ஜீவராசிகள் வலயம் பிரகடனப்படுத்தப்படும் போது அப்பிரதேசங்களில் வசித்த குடும்பங்கள் மற்றும் துணைக் குடும்பங்கள் 5000 இற்கான காணி உரித்தை சட்டபூர்வமாக்குதல். பிரதேசத்தில் வசிக்கின்ற மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகள் அற்ற குடும்பங்களுக்கு உரிய முறையில் காணிகளை வழங்குதல். மிகவும் பின்தங்கிய இவ்வலயத்தை ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து விரைந்த சமூக

பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். பிழைப்பாதார விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயக் குடும்பங்களை வணிக விவசாயத்திற்கு ஆற்றுப்படுத்துதல். 10000 மில்லியன் ரூபாய் முதலீட்டுத் திட்டமாக உள்ளமை.

ஜீ வலயம்



வலயம் தொடர்பான அறிமுகம்

மகாவலி ஜீ வலயமானது எலஹர கால்வாயால் போசிக்கப்படுகின்ற பழமையான நீர்ப்பாசன நாகரிகத்திற்கு மரபுரிமை பெற்ற நிலப்பரப்பாகும்.

மக்கள் இல்லாததால் பயன்படுத்தப்படாமல் காடாக மாறியிருந்த எலஹர கால்வாயை மீண்டும் கௌரவ பிரதமர் டி. எஸ் சேனாநாயக்க அவர்களால் 1947 ஆம் ஆண்டு காணி உரித்தாளர்களை குடியமர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் மூலம் புதிய குடியேற்றங்களின் தொடக்கம் ஆரம்பமானது. 2001 ஆம் ஆண்டில் மகாவலி பி வலயத்தின் கீழ் தொகுதி முகாமைத்துவ பிரதேசத்துடன் இப்பிரதேசம் நிர்வாகிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டின் ஆரம்ப பாதியில் மொகஹகந்த களு கங்கை நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டதுடன், அந்நீர்த்தேக்கங்களால் அடிப்படுகின்ற காணிகளில் வசிக்கின்ற குடும்பங்களை அங்கிருந்து அகற்றி மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்து குருவெல மற்றும் வெல்லேவெல ஆகிய பெயர்களில் தொகுதி முகாமைத்துவ அலுவலகங்கள் இரண்டு ஆரம்பிக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் இவ்விரு தொகுதிகளிலும் உழவர் குடும்பங்களை குடியமர்த்துவதுடன் தொகுதி முகாமையாளர்கள் 04 பேரின் கீழ் பகமூண, அத்தனகடவல, குருவெல, வெல்லேவெல ஆகிய பெயர்களில் நான்கு தொகுதிகள் மூலம் நிர்வாகப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை


தொகுதி	**2019 ஆம் ஆண்டில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை**		
	உழவர் குடும்பங்கள்	**உழவர் அல்லாத குடும்பங்கள்**	**ஏனையவை**
பகமூண	-	50	-
வெல்லேவெல	147	-	-

குருவெல	-	69	இவர்களுக்காக நீர்ப்பாசன காணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள என்றாலும் காணிகள் கையுதிர்க்கப்படவில்லை

2019 ஆம் ஆண்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை

தொகுதி	**2019 ஆம் ஆண்டில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை**		
	நிரந்தரமான	**அரை நிரந்தரமான**	**தற்காலிகமான**
பகமூண	50	-	-
அத்தனகடவல	5	4	-
வெல்லேவெல	09	22	37
குருவெல	-	38	21

<u>எச் வலயம்</u>



வலயம் தொடர்பான அறிமுகம்

கலா ஓயாவை மையமாகக் கொண்டு 1977 – 1978 காலப் பகுதியில் 31,500 குடும்பங்களுக்கு ஈர நிலத்தில் 2 ½ ஏக்கர்களும் (01 ஹெக்டயார்), உலர் நிலத்தில் ½ ஏக்கர்களும் பிரித்து வழங்கப்பட்ட மகாவலி முன்மொழிவுத் திட்டத்தின் அதி விசேட வலயமாக மகாவலி "எச்" வலயம் கருதப்படுகின்றது. இதில் விவசாய நிலங்கள் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர்களும் (நீர்ப்பாசன மற்றும் உலர்நில) காணப்படுகின்றது.

மேற்கே, அநுராதபுரம் – புத்தளம் பிரதான வீதியும், வடக்கே தெற்குக் ஆற்றங்கரைக் கால்வாயும், தெற்கே பலலுவெவ ஆற்றங்கரை – உஸ்கல சியபலன்கமுவ ஊடாக ராஜாங்கன ராஜாங்கன ஆற்றங்கரைக் கால்வாயை எல்லையாகக் கொண்டுள்ளதுடன் மேலதிகமாக காகம

கடியாவ மற்றும் உஸ்கல சியபலன்கமுவ ஆகிய பழமையான குடியேற்ற பிரதேசங்களையும் உள்ளடக்குகின்றது.


விவசாய பயிர்கள் அபிவிருத்திப் பிரிவின் மகாவலி எச் வலயத்தின் பங்களிப்பு

பயிர்	**தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு**	**விசேட காரணிகள்/ வெற்றிகள்**
நெல் பயிர்ச்செய்கை	4 – 7%	இலங்கையில் அதிகளவான பொதுவான நெல் உற்பத்தி பெற்றுக் கொள்ளப்படும் பிரதேசங்கள் 02 இல் உள்ளடங்குகின்றமை. (6400 mt/ha இற்கும் அதிகமான)
சோயா அவரைப் பயிர்ச்செய்கை	80%	இலங்கையில் அதிகளவு சோயா அவரை உற்பத்தி மற்றும் அதிகளவு பொதுவான உற்பத்திப் பிரதேசம் (2.7 – 3 mt/ha)
பெரிய வெங்காயம்	5 – 10%	
மிளகாய் மற்றும் ஏனைய மேலதிக பயிர்கள்	3 – 5%	
மரக்கறிகள் (நாட்டு மரக்கறி)	7 – 10%	
சாம்பல் வாழை	35 – 40%	தேசிய உற்பத்தியில் 1/3 பகுதி மகாவலி எச் வலயத்தைச் சேர்ந்ததாகும்
கொய்யா	20 – 22%	தேசிய உற்பத்தியில் 1/5 பகுதி மகாவலி எச் வலயத்தைச் சேர்ந்ததாகும்
வாழை	2 – 4%	
பப்பாளி	2%	

கடற்றொழில் மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு – 2019

இலக்கம்	செயற்பாடுகள்	ஏற்பாடுகள் ஒதுக்குதல் (ரூ.மி)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி)
1	பசு மாடுகள் வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்	2490	2430.49
2	கோழி வளர்ப்பு	830	827.75
3	மிரிதிய கடற்றொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	345	195.44
4	ஆடு வளர்ப்பு	80	80.00
5	ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்	115	33.74
6	முகாமைத்துவ செயற்பாடுகள்	147	126.00
7	நீராவிய பண்ணை (2018)	693	693.00
8	சிறந்த பால் உற்பத்தியாளரைத் தெரிவு செய்யும் போட்டி	200	200.00
9	அலங்கார மீன் வளர்ப்பு மத்திய நிலையம்	100	100.00
	மொத்தம்	5000	4686.43

எல் வலயம்



வலயம் தொடர்பான அறிமுகம்

1984 ஆம் ஆண்டில் காணி ஆணையாளர் திணைக்களத்தினால் குடியேற்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பிரதேசமானது 1988 ஆம் ஆண்டில் 562 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 163,000 ஹெக்டயார் ஆக இருக்கின்ற இவ்வலயத்தின் நிலப்பரப்பானது வடக்கே முல்லைதீவு – வவுனியா பிரதான வீதியும், கிழக்கே முல்லைதீவு கடற்கரையும், தெற்கே புல்மோட்டை கெபிதிகொல்லாவ பிரதான வீதியும், மேற்கே சிங்ஹயா உல்பதஹின்ன திரிகோண ஸ்தளத்தின் ஊடாக மகஹெட்டியாவஹின்ன மலைத்தொடரின் ஊடாக கோடானது புலியன்குளம் வவுனியா வீதியின் ஊடாக எல்லையைக் கொண்ட பிரதேசம் பூராக பரந்து காணப்படுகின்றது.


நிதிசார் முன்னேற்றம் – 2019

நிதி ஒதிக்கீடு – 220 மில்லியன் ரூபாய் நிதிசார் முன்னேற்றம் – 179 மில்லியன் ரூபாய்

பிரிவு	**இலக்கு**	**முன்னேற்றம்** **ரூ.மி**	**சதவீத அடிப்படையில்**
தொழில்நுட்ப சேவை	131.34	107.15	82%
விவசாயம்	28.97	23.42	8%
சுற்றாடல் பிரிவு	13.08	11.21	8%
அபிவிருத்தி	9.10	9.01	9%
காணி	12.20	10.24	84%
காணி உபயோக திட்டமிடல்	1.00	1.00	100%

போக்குவரத்து	15.40	10.65	69%
நிர்வாகம்	8.90	6.33	71%
மொத்தம்	220	179	81%

ஹுருளுவெவ வலயம்



வலயம் தொடர்பான அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1997.07.16 ஆம் திகதிக்குரிய இலக்கம் 984/5 உடைய அறிவித்தல் மூலம் ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் நீர் முகாமைத்துவத்தை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் 1998.05.09 ஆம் திகதி ஹுருளுவெவ வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகமானது தம்புள்ளை பெல்வெஹரவில் நிறுவப்பட்டது.

அதற்கமைய அநுராதபுர மாவட்டத்தில் கெகிராவை, பலாகல மற்றும் கலென்பிதுனுவெவ ஆகிய பிரதேச செயலாளர் தொகுதிகளுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 49 உம், மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளை மற்றும் நாவுல பிரதேச செயலாளர் தொகுதிகளுக்குரிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 32 உம், கல்கிரியாகம, மடாடுகம, பளுகஸ்வெவ, களுந்தேவ மற்றும் சீகிரியா ஆகிய தொகுதிகள் 05 இற்கும் உட்படுகின்றன.

செயற்திட்டத்தின் பிரதான நோக்கங்கள்.


- பொல்கொல்லையில் இருந்து போவதென்னவிற்கு திசை திருப்பப்படுகின்ற மகாவலி நீரானது லெனதொர சுரங்கப் பாதை வெளியேற்றத்தில் இருந்து 33 கிலோ மீட்டர் நீளமான ஹுருளு நீர் வழங்கும் கால்வாய் மற்றும் யான் ஓயாவின் ஊடாக தடைகள் எதுவும் இன்றி ஹுருளுவெவவிற்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடுதல்.
- ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் இரு புறமும் பாரியளவில் மேற்கொள்ளப்படுகின்ற மேலதிக பயிர்ச்செய்கை வேளாண்மைக்காக முறையான
- ஹுருளு நீர் வழங்கும் கால்வாயின் அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பயிர்ச்செய்கைகளை முறையாக மற்றும் உயர்ந்தபட்ச விளைத்திறனைப் பெற்றுக் கொள்ளும் விதமாக விவசாயம் மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கண்டலம நீர்த்தேக்கத்தால் மற்றும் தம்புளுஓயா நீர்த்தேக்கத்தால் மடாடுகம மற்றும் கல்கிரியாகம தொகுதிக்கு விநியோகிக்கின்ற நீரின் மூலம் உயர்ந்தபட்ச விளைத்திறனை

நோக்கி விவசாயிகளை ஆற்றுப்படுத்தி அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு நீர்ப்பாசன, காணிகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் சமூக அபிவிருத்தியைப் போலவே சுற்றாடல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

2019.12.31 ஆம் திகதிக்கு வலயத்தின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் – ஹுருளுவெவ வலயம்

தொடர் இலக்கம்	பிரிவு	2019 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாதீடு (ரூ.மில்)	2019.12.31 ஆம் திகதிக்கு நிதிச் செலவுகள் (ரூ.மில்)	நிதிசார் முன்னேற்றம்	பௌதீக முன்னேற்றம் சதவீத அடிப்படையில் (%)
1	தொழில்நுட்ப சேவைப் பிரிவு	40.811	35.26	85%	91%
2	நிர்வாகப் பிரிவு	0.55	0.4	83%	95%
3	போக்குவரத்துப் பிரிவு	3	2.2	73%	80%
4	விவசாயப் பிரிவு	6	5.16	91%	95%
5	மிருக கட்டுப்பாட்டுப் பிரிவு	2.3	1.64	83%	90%
6	வணிக அபிவிருத்திப் பிரிவு	1	0.99	99%	100%
7	தாபன அபிவிருத்திப் பிரிவு	5.6	5.26	99%	100%
8	காணிப் பிரிவு	3.01	1.68	56%	80%
9	காணி உபயோக மற்றும் திட்டமிடல் பிரிவு	1.27	1.23	97%	100%
10	வன மற்றும் சுற்றாடல் பிரிவு	4.548	3.99	88%	90%
11	மகாவலி மையம்	3.911	3.68	94%	95%
12	RMMIS	14.95	14.95	100%	100%
	மொத்தம்	86.95	76.44	87%	93%

ரம்பகெண்ஓயா வலயம்




வலயம் தொடர்பான அறிமுகம்

1979 இலக்கம் 23 ஐ உடைய மகாவலி அதகார சபைச் சட்டத்தின் 3/1 ஆம் பிரிவின் கீழ் விசேட செயற்திட்ட பிரதேசமாக 2000.05.07 ஆம் திகதிக்குரிய இலக்கம் 1130 (13) ஐ உடைய இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வலயமாகும். அதற்கமைய 2010.09.01 ஆம் திகதியில் இருந்து மகஓயா மற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதிகளில் நிலவுகின்ற நீர் மற்றும் ஏனைய இயற்கை வளங்களை உபயோகித்து பிரதேசத்தின் நிலைபெறுதகு அபிவிருத்தியை இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் முன்னெடுக்கப்படுவதாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் நிலவுகின்ற வறுமையைப் போக்குவதல் மற்றும் மொத்த தேசிய உற்பத்திக்கு வழங்க வேண்டிய பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ள இவ்வபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் நேரியல் தாபனங்களுடன் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமாக செயற்படுத்தப்படும். இதற்கமைய ரம்பகெண்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் நீர்ப்பாசன காணி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பணிகள்

- காணி கச்சேரி நடாத்துதல்.
- அரசாங்கத்தின் காணி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் கீழ் உரிமையைக் கையளித்தல்.
- அரசாங்கத்தின் காணி தொடர்பான கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்ட கால குத்தகைக்கு வழங்குதல்.
- காணிகளை அளவிட்டு எல்லைக் கற்களை நடுதல்.
- ரம்பகெண்ஓயா நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்ட காரணத்தால் காணிகளை இழந்தவர்களுக்காக நஷ்யீடு மற்றும் வட்டி செலுத்துதல்.
- அரச நிறுவனங்களால் உபயோகிக்கப்படுகின்ற காணிகளை அத்திணைக்களத்திற்காக கையுதிர்த்தல்கள் 07.
- அரசாங்கத்தின் காணிகளை சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ளமை தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

வலவ வலயம்



வலயம் தொடர்பான அறிமுகம்

உடவலவ பல்நோக்கு முன்மொழிவுத் திட்டம் 1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உடவலவ நீர்த்தேக்கம் நிர்மாணிக்கப்பட்டதும், அதற்கு இணக்கமாக குடியமர்த்தல்கள் மற்றும் விவசாய நிலங்களின் அபிவிருத்தி என்பன 1981 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்டது ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையின் மூலமாகும்.

1979 ஆம் ஆண்டு இலக்கம் 23 ஐ உடைய இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 1981/04/06 ஆம் திகதிக்குரிய இலக்கம் 137 ஐ உடைய வர்த்தமானி பத்திரிகை மூலம் கௌரவ காணி அபிவிருத்தி மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த காமிணி திஸாநாயக்க அவர்களால் வலவ வலயமானது வலவ விசேட அதிகார பிரதேசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 1982.01.01 ஆம் திகதியில் இருந்து வலவ வலயத்தில் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்றன.

வலவ வலயத்தின் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டு தற்பொழுது 34 வருடங்கள் கடந்துள்ளதுடன், இக்காலத்தினுள் வலயமானது விரைவான முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அங்குனுகொளபெலெஸ்ஸ, முரவெசிஹேன, சூரியவெவ, மயுரபுற, சந்திரிகா வெவ மற்றும் கிரிஇப்பன்வெவ ஆகிய 06 தொகுதிகளைக் கொண்டுள்ளதுடன், 39 அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

உடவலவ நீர்த்தேக்கத்தால் போசிக்கப்படுகின்ற மொத்த நிலப்பரப்பு மற்றும் கால்வாய்த் தொகுதிகள் தொடர்பான தகவல்கள்

வலது கரையின் கீழ்,

- வலது பிரதான கால்வாயின் நீளம் - கி.மீ 40.874
- கிளைக் கால்வாய்களின் மொத்த நீளம் - கி.மீ 75.74
- பிரிப்புக் கால்வாய்களின் மொத்த நீளம் - கி.மீ 197.582
- களக் கால்வாய்களின் மொத்த நீளம் - கி.மீ 617.114
- பயிர் செய்யப்படுகின்ற நிலப்பரப்பு - ஹெக்டயார் 11,547.83

இடது கரையின் கீழ்,

- இடது பிரதான கால்வாயின் நீளம் - கி.மீ 49.993
- கிளைக் கால்வாய்களின் மொத்த நீளம் - கி.மீ 46.133
- பிரிப்புக் கால்வாய்களின் மொத்த நீளம் - கி.மீ 216.00
- களக் கால்வாய்களின் மொத்த நீளம் - கி.மீ 657.00
- பயிர் செய்யப்படுகின்ற நிலப்பரப்பு - ஹெக்டயார் 11,952.00

2019.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் – வலய அடிப்படையில்

தொடர் இலக்கம்	வலயம்	2019 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மில்)	2019-12-31 ஆம் திகதிக்கு செலவு செய்யப்பட்ட தொகை (ரூ.மில்)	நிதிசார் முன்னேற்றம் %
1	பி	474.53	344.48	73%
2	சி	203.50	192.43	95%
3	டி	79.30	76.63	97%
4	ஈ	60.50	61.23	101%
5	ஜி	82.85	76.74	93%
6	எச்	227.90	213.82	94%
7	ஹுருலுவெவ	86.95	76.44	88%
8	ஹுருலுவெவ	230.85	223.45	97%
9	ரம்பகென் ஓயா	170.00	128.96	76%
	எல்	220.00	179.00	81%
	Total	**1,836.38**	**1,573.16**	**86%**

பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற பிரிவுகள்

1. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு
2. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

01. திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

வகிபாகங்கள்

- தாபனத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோளிற்கு அமைய ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தல் மற்றும் வருடாந்த திட்டத்திற்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விசேட செயற்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் பொருளாதார சமூக கணிப்பீடுகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.
- செயற்பாட்டுத் திட்டத்தில் மற்றும் செயற்திட்ட அறிக்கைகளில் உள்ள முன்னேற்றத்தை மாதாந்தம், காலாண்டிற்கு ஒரு முறை மற்றும் வருடாந்தம் மீளாய்வுக்கு உட்படுத்துதல். செயற்திட்ட மதிப்பீட்டு ஒருங்கிணைப்பு மற்றும் இயக்க ஒருங்கிணைப்புத் தொகுதி ஒன்றை சான்றுப்படுத்துதல்.
- தொழில்நுட்ப அறிக்கைகள், இயல்வாய்ப்பு அறிக்கை இயக்கல்கள் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பாதுகாத்தல் மற்றும் பயன்பாட்டிற்கு வழங்குதல்.
- மகாவலி கணினி வலையமைப்பை இயக்குதல், தாபரித்தல் மற்றும் உத்தியோகபூர்வ வலைத் தளத்தை நிறுவுதல். இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ஆதிக்கத்திற்கு உட்படுகின்ற துறைகள் தொடர்பான ஆயவுகளை ஒருங்கிணைத்தல்.

02. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

மகாவலி அதிகார சபையின் விளைத்திறன் மிக்க செயலாற்றுகையை உறுதி செய்வதற்காக நிதிசார் கணக்காய்வு, தொகுதி மீளாய்வு, செயலாற்றுகை மீளாய்வு மற்றும் விசேட விசாரணைகளை மேற்கொள்வதை நோக்காகக் கொண்டு நிறுவப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வுப் பிரிவானது 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு மேலாண்மைக் குழு ஆலோசனைகள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்ற உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின் ஊடாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுவதுடன்

வினைத்திறனற்ற செயற்பாடுகளை இல்லாதொழித்து, உள்ள நிர்வாகத்தை பலப்படுத்தி ஊழல், மோசடி மற்றும் குற்றங்கள் இடம்பெறக் கூடிய வாய்ப்புக்களை இயன்றளவு குறைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொகுதிக் கணக்காய்வு செயல்முறைகளை செயற்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வகிபாகங்கள்

- இலங்கை கணக்காய்வுத் தர நியமங்கள், நல்லாட்சிக்கான பொது வியாபார கொள்கைகள் தொடர்பான சுற்றறிக்கைகள், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிசார் ஏற்பாடுகள் மற்றும் நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சின் உள்ளக கணக்காய்வுக் கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்கள், நியதிச் சட்டம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்கியதாக உள்ளக கணக்காய்வு செயற்பரப்பைத் தயாரித்தல்.
- தொழில்நுட்ப அல்லது கணக்கியல் அவதானத்தைப் போலவே முகாமைத்துவ அவதானத்துடனும் தாபனத்தின் இயக்கல் செயற்பாடுகளை உற்று நோக்குதல். கணக்காய்வு மற்றும் அறிக்கையிடுதல்.
- பணி முன்மொழிவுத் திட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை உரிய கால வரையறையில் பூர்த்தி செய்வதை சான்றளிப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என அடிக்கடி மதிப்பீடு செய்தல்.
- உரிய கால எல்லையில் மேற்கொள்ள வேண்டிய பணிகளை செயற்படுத்தில் தாமதத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக உள்ள சிக்கல்களைக் கொண்ட துறைகள் தொடர்பாக இற்றைப்படுத்தப்பட்ட ஸ்தளப் பரிசீலனையை முன்னெடுத்தல்.
- இயக்கல் செயற்பாடுகளை கண்காணிப்பதில் பயன்படுத்தப்பட்டு வரும் கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வுக்கு உட்படுத்துதல்.

இரண்டாவது அத்தியாயம்

2.1 தொழில்நுட்ப சேவைப் பிரிவு

வகிபாங்கள் :

1. நிறுவனத் திட்டம்/ வருடாந்த திட்டத்திற்கு அமைய புதிய உருப்படியில் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உத்திகளுடன் கூடிய திட்டங்களைத் தயாரித்தல்.
2. தொழில்நுட்ப திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக வழிகாட்டுதல் மற்றும் இயக்குதல்.
3. பிரதான அணைகள் மற்றும் நீர் திசை திருப்பு வழிகள் மற்றும் கீழ் பள்ளத்தாக்குப் பிரதேசத்தின் நீர்ப்பாசனத் முறைமை உட்பட பௌதீக வளங்களை உரிய முறையில் தாபரித்து பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உகந்த செயற்பாடு ஒன்றைத் தயாரித்தல்.
4. நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளின் ஊடாக விவசாய நடவடிக்கைகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக உள்ள நீரின் அளவை உரிய விதத்தில் விநியோகிப்பதற்காக முறையான திட்டங்களைத் தயாரித்தல்.
5. செயற்திட்ட திட்டமிடல், இயலுமையை மதிப்பிடுதல், இயக்குதல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்விற்கு உட்படுத்துதல்.

அடிப்படையாக மேற்குறிப்பிட்ட பிரதான செயற்பாடுகளை இலக்காகக் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவானது தனது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதற்கமைய 2021 ஆம் ஆண்டில் இப்பிரிவின் மூலம் மேற்குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செயற்திட்ட வடிவமைப்பு மற்றும் செயற்படுத்துதல்

புதிதாக முன்வைக்கப்படுகின்ற செயற்திட்டப் பிரேரணைகள்

- ஒருங்கிணைக்கப்பட்ட ஆற்று வடிநிலங்கள் மற்றும் நீர் வள முகாமைத்துவச் செயற்திட்டம் (IWWRM).
- மஹகம்பிலியாவ வாவி மற்றும் மற்றும் வெலி ஓயா நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்திச் செயற்திட்டம். (2020, L வலயம்).
- கிவுல் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் (2020, L வலயம்).
- மாதுறு ஓயா வலது கரை (RB) அபிவிருத்திச் செயற்திட்டம் (2020, B வலயம்).
- ரம்பகெண் ஓயா நீர்ப்பாசன முறைமை அபிவிருத்திச் செயற்திட்டம்.

- மெதிரிகிரிய நீர்ப்பாசனத்தை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டம்.
- மகாவலி வலயங்களில் 3000 விவசாயிகளுக்காக சூரிய மின் சக்திப் பரம்பல் நீர் வழங்கல் செயற்திட்டம்.
- மிதக்கும் சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையம் மற்றும் வெற்றுக் காணிகளில் சூரிய மின் உற்பத்தி நிலையம்.

வருமான வழிகளை மேம்படுத்துதல்.

- வணிக விநியோகங்களுக்காக பணம் அறவிடுதல்.
- நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களின் மண்டி/ மணல்களுக்காக பணம் அறவிடுதல்.

2.1.1 கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பிரிவு

மகாவலி அதிகார பிரதேசங்களில் உள்ள நீர்ப்பாசனத் தொகுதிகளை இயக்குதல் மற்றும் தாபரித்தல், கட்டிட வளாகங்களைத் தாபரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், வீதி அபிவிருத்தி மற்றும் அதற்கு உரிய கட்டுமானங்கள், மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல், கட்டுமான நிலைமைகளை நிர்வகித்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு என்பன அப்பிரிவின் பிரதான பணிகளாகும்.

2019 ஆம் ஆண்டிற்காக திறைசேரியால் அந்தந்த வலயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டுகள் செலவு செய்யப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.

வருடாந்த நிதி செலவின அறிக்கை (முன்னேற்றம்)

I. செயற்திட்டத்தின் கீழ்

தொடர் இலக்கம்	செயற்திட்டம்	2019 ஆண்டில் தொ. சே. பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி.	2019 ஆண்டில் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி.	நிதிசார் முன்னேற்றம் %	2019 ஆண்டில் பௌதீக முன்னேற்றம் ரூ.மி.	பௌதீக முன்னேற்றம் %
1	ரிதிமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம்	55.01	37.75	69		93
2	ரம்பகெண் ஓயா அபிவிருத்திச் செயற்திட்டம்	51.37	36.35	71		94
3	வெலி ஓயா ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டம்	131.34	107.15	82		90

4	ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டம் – பி வலயம்	209.40	106.11	51		95
5	மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டம் – பி வலயம்	43.70	43.25	99		70
6	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசனத் தொகுதி மறுசீரமைக்கும் செயற்திட்டம்	100.00	82.46	82		90
	உப கூட்டுத்தொகை 1	**590.82**	**413.07**	**70**		**89**

II. தாபன மூலதனத்தின் கீழ்

தொடர் இலக்கம்	**செயற்திட்டம்**	**2019 ஆண்டில் தொ. சே. பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை மூ.மி.**	**2019 ஆண்டில் நிதிசார் முன்னேற்றம் மூ.மி.**	**நிதிசார் முன்னேற்றம் %**	**2019 ஆண்டில் பௌதீக முன்னேற்றம் மூ.மி.**	**பௌதீக முன்னேற்றம் %**
1	பி வலயம்	85.75	77.78	91		92
2	சி வலயம்	114.00	108.67	95		98
3	டி வலயம்	31.44	29.88	95		98
4	ஜீ வலயம்	31.50	31.50	100		100
5	எச் வலயம்	103.46	103.38	100		100
6	எல் வலயம்	-	-	-	-	-
7	வலவ வலயம்	103.95	104.70	101		100
8	ஹுருளுவெவ வலயம்	40.81	35.26	86		90
9	ரம்பகெண் ஓயா வலயம்	0.47	0.56	119		100
10	விக்டோரியா வலயம்	34.88	37.92	109		100
11	பிரதான அலுவலகம் (தொ. சேவை)	17.00	7.21	42		50
12	இயந்திர வேலைத்தளம்	3.50	3.91	112		100
13	ஆற்று வடிநில முகாமைத்துவப் பிரிவு	0.92	0.99	108		100
14	பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கப் பிரிவு	256.00	254.97	100		100
	உப கூட்டுத்தொகை 1	**823.68**	**796.73**	**97**		**100**
	மொத்த கூட்டுத் தொகை (உப கூட்டுத்தொகை 1 + 2)	**1,414.50**	**1,209.80**	**86**		**95**

2.1.2 நிர்மாணித்துக் கொண்டிருக்கின்ற சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களின் முன்னேற்ற அறிக்கை (2019/12/31 ஆம் திகதிக்கு)

மகாவலி கங்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய கிளை ஆறுகளின் நீரைப் பயன்படுத்தி சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையம் செயற்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் தோற்றுவிக்கப்படுகின்ற மின்சாரமானது இலங்கை மின்சார சபையின் கீழ் உள்ள தேசிய மின்சாரத் தொகுதிக்கு (National Grid) விநியோகிக்கப்படுகின்றது. மாதம் தோறும் விநியோகிக்கப்படுகின்ற இம்மின் அலகுகளின் எண்ணிக்கைக்கு அமைய இலங்கை மின்சார சபையினால் அவ்வாறு விநியோகிக்கப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கைக்கான கொடுப்பனவானது அச்சிறிய அளவிலான நீர் மின் உற்பத்திச் செயற்திட்டத்தின் முதலீட்டாளரிற்கு செலுத்தப்படுவதுடன் முதலீட்டாளர் மூலம் குறிப்பிட்டொரு சதவீதம் மகாவலி கங்கையின் நீரைப் பயன்படுத்தியமைக்காக இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் செலுத்தப்படுகின்றது.

இதுவரை சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் 12 இன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதில் சுமார் 39.85 மெகா வொட் அளவு தேசிய மின்சாரத் தொகுதிக்கு தனது பங்களிப்பை வழங்குகின்றது. அதன் மூலம் மகாவலி அதிகார சபைக்கு நீர் திசை திருப்பும் உரிமைக்காக செலுத்தப்படுகின்ற வரியாக குறிப்பிட்டளவு சதவீதம் கிடைக்கப் பெறுகின்றது.

இதற்கு மேலதிகமாக இலங்கை மகாவலி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் 09 நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இலங்கை மகாவலி அதிகார சபையின் அனுமதி இன்றி நிர்மாணிக்கப்பட்ட சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் 46 தற்பொழுது அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் மேலும் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

தொடர் இலக்கம்	செயற் திட்டத்தின் பெயர்	முதலீட்டாளரின் பெயர்	ஆற்றல் / MW	எதிர்பார்க்கப்பட்டுள்ள நீரேந்து முகாமைத்துவக் கட்டணம் %	முன்னேற்றம்
1	உகுவெல	ஒகின்ஸ் ஹைட்ரோ பவர் (தனியார்) நிறுவனம்	2.2	16.2	இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் மின் பிறப்பாக்க உரிமப் பத்திரம் (Generation License) பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுருக்கின்றனதற்பொழுது . மின்சாரத்தை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம்(Power Purchase Agreement) கைச்சாத்திடுவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுஅதனைப் . கு அவசியமான பெற்றுக் கொள்வதற் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுருக்கின்றன.
2	டிக்கல	எஸ்கஸ் டிக்கல பவர் (தனியார்) நிறுவனம்	4.4	10	ஆரம்பகட்ட கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுருக்கின்றன.
3	கியுல	எஸ்கஸ் கியுல பவர் (தனியார்) நிறுவனம்	2.8	10	திட்டத்தை மாற்றியமையினால் புதிய சூழலியல் தாக்க மதிப்பீடு (EIA) முன்னெடுக்கப்பட்டுக் கொண்டுருக்கின்றன.
4	நயக்கும்புற	ரெலிக் ஹைட்ரோ பவர் ஜெனரேஷன் (தனியார்) / .நிறுவனம் என் .பீ.ஜி. பண்டிதரத்ன	0.5	10	இச்செயற்திட்டத்திற்காக முதலீட்டாளர்கள் இருவர் முன்வந்துள்ளமையால் அச்சிக்கலை நிவர்த்தி செய்வதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டது . ரெலிக் ஹைட்ரோ பவர் ஜெனரேசன்

தொடர் இலக்கம்	செயற் திட்டத்தின் பெயர்	முதலீட்டாளரின் பெயர்	ஆற்றல் / MW	எதிர்பார்க்கப்பட்டுள்ள நீரேந்து முகாமைத்துவக் கட்டணம் %	முன்னேற்றம்
					தனியார் நிறுவனத்திற்கு இச்செயற்திட்டத்தை வழங்குவது பொருத்தமானது என பரிந்துரைக்கப்பட்டுள்ளதுஇலங்கை . நிலைபெறுதகு வலு அதிகார னால்சபையி(SLSEA) தற்காலிக அங்கீகாரத்தின் (Provisional Approval) காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
5	சந்திக்கா வாவி	மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம்	0.63	10	சூழலியல் தாக்க மதிப்பீடு (EIA) நிறைவு செய்யப்பட்டுள்ளது இந்நிறுனத்தை . ஏலமிடுவதற்கு ஆராயப்பட்டு ஆகையால் .வருகின்றது செயற்திட்டத்தின் வருங்காலம் .நிச்சயமற்றது
6	குபலொலுவ I	நோர்வூட் ஹைட்ரோ பவர் (தனியார்) நிறுவனம்	2.4	10	இச்செயற்திட்டங்கள் இரண்டும் சுது கங்கைக்கு அருகில் அமைந்துள்ளமையால் செயற்திட்டங்கள் இரண்டையும் ஒரே தடவையில் செயற்படுத்திக் கொள்வதில் சிக்கல்கள் நிலவுகின்றனசெயற்திட்டங்கள் . இரண்டினதும் இயலுமையை ஆய்வு செய்வதற்காக நில அளவீடு(Survey) மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஊர் மக்களின் எதிர்ப்பு காரணமாக அதனை நிறுத்த வேண்டி ஏற்பட்டதுஇந்நிலப்பரப்பை . விடுவது தொடர்பாக அள கலந்துரையாடல்கள்
7	குபலொலுவ II	குபலொலுவ ஹைட்ரோ பவர் (தனியார்) நிறுவனம்	1	10	

தொடர் இலக்கம்	செயற் திட்டத்தின் பெயர்	முதலீட்டாளரின் பெயர்	ஆற்றல் / MW	எதிர்பார்க்கப்பட்டுள்ள நீரேந்து முகாமைத்துவக் கட்டணம் %	முன்னேற்றம்
					முன்னெடுக்கப்பட்டுக் .கொண்டிருக்கின்றன
8	LBL3 இன் மாதுறு ஓயா நீர் வழி	நிப்போன் நிட் (தனியார்) நிறுவனம்	0.15	10	சூழலியல் தாக்க மதிப்பீடு (EIA) முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதுஇலங்கை மின்சார . சபையின் தீர்மானத்திற்கான கடிதம் (Letter of Intent) எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதுதற்பொழ .ுது இக்கடிதம் வெளியிடுவது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.
9	மொரகொல்லை சிறு நீர் மின் உற்பத்திச் செயற்திட்டம்	தீஜியாங் யன்ங் எனர்ஜி கூட்டுத் தாபன (தனியார்) .நிறுவனம்	2.1	10	சூழலியல் தாக்க மதிப்பீடு (EIA) முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதுஇலங்கை மின்சார . சபையின் தீர்மானத்திற்கான கடிதம் (Letter of Intent) எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது தற்பொழுது . இக்கடிதம் வெளியிடுவது தற்காலிகமாக .இடை நிறுத்தப்பட்டுள்ளது

2.1.3 பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவு

பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அபிவிருத்தி செய்யப்பட்ட, செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற மற்றும் முன்மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களின் பொறியியல் வடிவமைப்புக்கள் மற்றும் திட்டங்களை தயாரித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

பின்வரும் வகிபாகங்கள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

- மாகவலி நீர் வளத் திட்டத்தை இற்றைப்படுத்துதல்.
- அரச மற்றும் தனியார் தொழில் முயற்சியாளர்களால் முன்வைக்கப்படுகின்ற சிறிய அளவிலான நீர் செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் திட்டங்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல்.
- செயற்பாட்டில் உள்ள நீர் வளங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பகுப்பாய்வுக்கு உட்படுத்துதல்.
- வடிவமைப்பு மற்றும் திட்டமிடலுக்குரிய பொறியியல் மதிப்பீடுகள் மற்றும் அளவுகளுக்கான கட்டணப் பட்டியலை கொள்முதல் செயற்பாடுகளுக்காக தயாரித்தல்.
- இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தர நியமங்களுக்கு அமைய பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் தொடர்பாக பயிலுனர் பொறியியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

2.1.4 பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவின் கீழ் 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள்.

1. வனப் பாதுகாப்பு அலுவலகக் கட்டிடம் – அம்பண.
2. கலாச்சார மத்திய நிலையக் கட்டிடம் – லக்கல.
3. ஒன்றுகூடல் மண்டபம் – லக்கல பாடசாலை.
4. நூலக கட்டிடம் – அம்பண.
5. கூம்பியன்கஹ கால்வாய் பாடசாலைக் கட்டிடம்.
6. பிசோபுற – பேருந்து தரிப்பிடம்.
7. தொகுதி முகாமைத்துவ அலுவலகம் – பகமூண.
8. தொகுதி முகாமைத்துவ அலுவலகம் – மீகலேவ.
9. அம்பண குடிநீர் விநியோகத் திட்டம்.
    a) காற்றூட்டி (Aerator)
    b) மணல் வடிப்பான் (Slow Sand Filter)
    c) சுத்தமான நிலக்கீழ் நீர்த் தாங்கி (Clear Water Sump)
    d) விநியோகிக்கும் குழாய்த் தொகுதி (Distribution Pipe Network)
    e) நீர் உட்செல்லும் புனைவு (Raw Water Intake)
    f) பம்பு நிலையம் (Pump House)
    g) வண்டற் படிவத் தாங்கி (Sedimentation Tank)
    h) உத்தியோகபூர்வ இல்லங்கள் – தரம் II (Grade II Quarters)
    i) உலர்த்து கிடை (Drying Bed)
    j) அடையாளமிடும் திட்டம் (Setting Out Plan)

10. மெதிரிகிரிய – கந்தளை வீதயின் பேரமடுவ ஓயாவின் ஊடான பாலம்.
11. கூம்பியன்கஹ கால்வாய் பாடசாலைக்கு களுகல்ல கால்வாயின் ஊடான பாலம்.
12. LC 03 கால்வாயின் வான் கதவு – களுகங்கை வலது கரை.
13. LC 04 கால்வாயின் வான் கதவு – களுகங்கை வலது கரை.
14. வலவ வலது கரைக் கால்வாயை புணரமைக்கும் செயற்திட்டத்தின் மீளாய்வு.
15. மெதிரிகிரிய நீர்ப்பாசனத் தொகுதியை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் இயல்வாய்ப்பு அறிக்கை.

2.2 ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம்

அறிமுகம்

ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகமானது, மடாடுகம மகாவலி வளாகத்தில் அமைந்துள்ளதுடன் பணிப்பாளர் (ஆற்று வடிநில முகாமைத்துவம்) இன் கீழ் செயற்படுகின்றது. ஆற்று வடிநில முகாமைத்துவ எண்ணக்கருவிற்கு இணங்கியதாக சூழல்சார் மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்திற்கு உரியதான பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமானங்கள் மற்றும் தாபரிப்புச் செயற்பாடுகளின் தரத்தைப் பரிசீலித்தல் இவ்வலுவலகத்தின் அடிப்படைப் பொறுப்பாகும்.

அதற்கமைய இவ்வலுவலகத்தின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்ற நீரின் தரத்தை ஆராயும் ஆய்வு கூடத்தின் மூலம் மகாவலி கங்கை மற்றும் மகாவலித் தொகுதி மற்றும் அதனுடன் தொடர்புள்ள ஆற்று வடிநிலங்களில் அமைந்துள்ள நீர் மூலங்களிலுள்ள நீரின் தன்மையை பரிசோதித்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அத்தரவுகளுக்கு அமைய நீரின் தன்மையானது இடத்திற்கு ஏற்றவாறு மற்றும் காலத்திற்கு ஏற்ப மாறுகின்ற விதத்தை ஆய்வு செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதன் கீழ்,

- கலா வாவி, கண்டலம, தம்புளு ஓயா, போவதென்ன, உடவலவ மற்றும் சந்திரிகா வாவி ஆகிய மகாவலி நீர்த்தேக்கங்களின் நீரின் தன்மை தொடர்பாக மாதாந்தம் பரிசீலித்தல்.
- மகாவலி வலயங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட சிறு குளங்களின் நீரின் தன்மையை மாதந்தம் பரிசீலித்தல்.
- மகாவலி கங்கை மற்றும் மாகவலித் தொகுதியுடன் தொடர்புபட்ட தெரிவு செய்யப்பட்ட நீர்த் தாரைகளின் தன்மை தொடர்பாக பரசீலனைகளை மேற்கொள்ளல்.





- அதைப் போலவே மகாவலி வலயம் மற்றும் அதன் வெளிப் பிரதேசங்களில் பயன்படுத்துகின்ற குடிநீர் மூலங்களின் நீர் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்துவதுடன் குடிநீரின் தன்மை தொடர்பாக சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- இதற்கு மேலதிகமாக நீரின் தன்மை தொடர்பாக மற்றும் அதற்குரிய தர நியமங்களை அளவிடுவது தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடைமுறைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் செயற்படுத்தப்படுகின்றன.
- எமது பிரிவுக்குச் சொந்தமான நீரின் தரத்தை ஆராயும் ஆய்வு கூடமானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்ற ஆய்வு கூடம் என்பதால் தொழிற்சாலைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கும் போது அந்நிறுவனத்தின் ஊடாக சூழலிற்கு விடுவிக்கப்படும் கழிவு நீரின் நிலைமை பரிசீலிக்கப்பட்டு பரிந்துரை வழங்குவதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதில் அந்நிறுவன உரிமையாளர்கள் விடுக்கின்ற கோரிக்கைகளுக்கு அமைய பரிசீலனைகள் முன்னெடுக்கப்பட்டு கழிவு நீரின் அமைப்பு தொடர்பாக அறிக்கை வழங்கப்படுவதுடன் அதற்காக கட்டணமும் அறவிடப்படும்.
- இதற்கு மேலதிகமாக வெளி நிறுவனங்கள் மூலம் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு அமைய நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்படுவதுடன் அதன் கீழ் விசேடமாக மேல் எலஹர கால்வாய் செயற்திட்டத்தின் கோரிக்கைக்கு அமைய அச்செயற்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட நீர் மூலங்களில் நீரின் தன்மை பரிசீலிக்கப்படும்.
- அதற்கமைய, 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை மூலம் ரூ. 927,999.00 தொகை சம்பாதிக்கப்பட்டது.
- தரக் கட்டுப்பாட்டு ஆய்வு கூடம் மூலம் மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற கட்டுமானங்களின் தரத்தை உயர் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதில் மகாவலி வலயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கட்டுமானங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற பொருட்களின் பொருத்தமுடைமையை பரீட்சிப்பதற்காக ஆய்வு கூட பரிசோதனைகள் மேற்கொள்வதும், அக்கட்டுமானங்களின் தரத்தைப் பரிசீலிப்பதற்காக களப் பரிசீலனை மேற்கொள்வதும் வலய அலுவலகங்களால் விடுக்கப்படுகின்ற கோரிக்கைகளுக்கு

அமைய மேற்கொள்ளப்படும். அக்கட்டுமானங்கள் ஒப்பந்தக்காரர்கள் மூலம் முன்னெடுக்கப்படுமாயின் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக கட்டணம் அறவிடப்படும். அவ்வாறு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகள் மூலம் 2019 ஆம் ஆண்டில் ரூ. 359,760.00 தொகை சம்பாதிக்கப்பட்டது.






- அதைப் போலவே, பிரதி பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை) இனால் விசேடமாக அறிவிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மகாவலி வலய அலுவலகத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற கட்டுமானங்களின் தரம் பரிசோதிக்கப்படுவது மேற்கொள்ளப்படுகின்றது.

2.2.1 மேற்குறிப்பிட்ட கடமைகளுக்குரிய 2019 ஆம் ஆண்டின் முன்னேற்றம் பின்வருமாறு.

நிதிசார் முன்னேற்றம்

தொடர் இலக்கம்	**விபரம்**	**ஒதுக்கீடுகள்**	**முன்னேற்றம் (ரூ. மி)**
1	மூலதன செவினங்கள்	3.300	3.300
2	செவினங்கள்	25.864	19.878

2019 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம்.



2.2.2 தேசிய பொருளாதாரத்திற்கு மற்றும் சமூகத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்புக்கள்

- ஆற்று வடிநில முகாமைத்துவ அலுவலகம் மூலம் கணிசமான நிதிசார் உழைப்பை நேரடியாக மேற்கொள்ள முடியும் என்றாலும், தேசிய அபிவிருத்தி மற்றும் சமூக விருத்தி தொடர்பாக மறைமுகமான பங்களிப்பை வழங்குகின்றது.

- நீரின் தரம் தொடர்பான ஆய்வு கூடத்தின் செயற்பாடுகள் மூலம் சூழல்சார் ரீதியில் நீரில் ஏற்படுகின்ற தன்மை மாற்றத்தை இலகுவாக இனங்காணும் இயல்பு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இம்மாற்றங்களின் நீண்ட கால இயல்புகளை ஆய்வு செய்வதன் மூலம் சூழலிற்கு அடிப்படையாக ஒன்று சேர்ந்துள்ள சூழல் மாசுகளை உய்த்தறியும் இயலுமை கிடைக்கின்றது. அதனை மிகவும் சரியான முறையில் இனங்காண்பதன் மூலம் அதற்கு உகந்த நடவடிக்கைகளுக்கு எட்டும் இயலுமை கிடைக்கப் பெறுவதுடன் அதனை எதிர்கால சந்ததிகளுக்கான சூழல்சார் முதலீடும் ஆகும்.

- ஆரோக்கியம் பொருந்திய சமூகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக நீரின் தன்மையை பேண வேண்டிய தேவைப்பாடு, நீர் மாசடைவை தடுக்க வேண்டிய அதி முக்கியத்துவம் மற்றும் அதற்காக எடுக்க முடியுமான நடவடிக்கைகள் தொடர்பாக சமூகத்தை மற்றும் விசேடமாக பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக மனப்பாங்கு

மாற்றத்தின் ஊடாக நீர் மூலங்களின் சுத்தத்தைப் பேணுவதற்கு பங்களிப்புக் கிடைக்கும். இவ் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை அனேகமாக கிராமிய மற்றும் சிறுநீரக நோய்களால் அவதியுறுகின்ற பிரதேசங்களில் தொடங்குவதன் மூலம் அப்பிரதேச மக்களின் சுகாதார நிலைமையை கட்டியெழுப்புவதற்கு கடும் உதவிகளும் வழங்கப்படுகின்றன.

- தரக் கட்டுப்பாட்டுப் பரிசோதனையை மேற்கொள்வதன் மூலம் தர நியமம் உரிய மட்டத்தில் அற்ற கட்டுமானங்களை இனங்காண்பதற்கு முடியுமாக இருப்பதுடன் அவற்றை சீராக்குவதற்காக அச்சந்தர்ப்பத்திலேயே மாற்றுத் தீர்வுகளைப் பயன்படுத்துவதற்கு முடியுமானதாக இருக்கும். அதன் மூலம் கட்டமைப்புக்களின் ஆயுட்காலத்தை திட்டமிட்டபடி பராமரிப்பதற்கு முடியுமாக இருப்பதுடன் அடிக்கடி பழுதுபார்க்கும் தேவைப்பாட்டை இயன்றளவு குறைக்கும். அதனால் அவற்றின் பிரதிபலன்கள் மக்களுக்கு தொடர்ந்தும் வழங்குவதற்கு முடியுமாக இருப்பதுடன் புணரமைப்புப் பணிகளுக்காக ஏற்க வேண்டிய செலவினங்களை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்கும் முடியுமாக இருக்கும். அது நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

- மூங்கில் கன்றுகளை நட்டு கரைகளைப் பாதுகாப்பதன் மூலம் நீர் தாரைகளின் பயணப் பாதையை உரிய முறையில் பராமரிப்பதற்கு முடியுமாக இருப்பதுடன் பயிர்ச் செய்கை நிலங்கள் உட்பட அண்டியுள்ள நிலப்பரப்புக்கள் அரிப்புக்கு உள்ளாகுவதை இயன்றளவு குறைக்க முடியுமாக இருக்கும். அதைப் போலவே, கரைகளின் பாதுகாப்பிற்காக கட்டமைக்கப்பட்ட கட்டுமானங்களை இயன்றளவு குறைத்து அதற்காக ஒதுக்கப்படுகின்ற நிதிசார் ஏற்பாடுகளை சேமித்துக் கொள்வதற்கு இதன் மூலம் வாய்ப்புக் கிடைக்கும். இதற்காக சமூகத்தின், பாடசாலை மாணவர்களின் மற்றும் சிவில் அமைப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதன் ஊடாக அவர்களுக்கு மத்தியில் சூழலைப் பாதுகாக்கும் கடமை தொடர்பாக நேர்மறையான உணர்வைத் தோற்றுவிப்பதற்கு முடியுமாக இருக்கும்.

2.3 அடிப்படைப் பணி நிர்வாக செயற்பாடுகள் மற்றும் தாபரிப்புப் பிரிவு

அறிமுகம்

மகாவலி அபிவிருத்திச் செயற்திட்டம் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பிரதான நீர்த் தேக்கங்கள், அணை மற்றும் அணைக்கட்டுக்களை மேம்படுத்துதல், செயற்படுத்துதல் மற்றும் தாபரிக்கும் நோக்கில் இலங்கை மகாவலி அதிகார சபையில் 1985 இல் உருவாக்கப்பட்டு நிறுவப்பட்ட பிரிவானது ஆரம்ப கட்ட பணிகளின் நிர்வாக செயற்பாடுகள், இயக்குதல் மற்றும் தாபரிப்புப் பிரிவு என்ற பெயரில் அழைக்கப்பட்டது. பொது மக்கள் இனங்கண்டு கொள்வதற்கு இலகுவான விதத்தில்

2019 ஆம் ஆண்டில் இருந்து இப்பிரிவானது **"பிரதான அணை மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவு"** என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

2.3.1 இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான பணிகள்.

நிர்வாகம்- அணை மற்றும் நீர்த்தேக்கங்களின் நீர்க் கபாலம் , தாங்கல் வலயம் (100m Buffer zone) மற்றும் அதற்குச் சொந்தமான ஒதுக்குகளை பாதுகாக்கும் நோக்குடனான பிரமாணங்களைச் செயற்படுத்தி நீர்த்தேக்கங்கள் மற்றும் ஒதுக்குகளுக்குச் சொந்தமான அதிகார பிரதேச நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

செயற்படுத்துதல் - நீர் முகாமைத்துவச் செயலகத்தினால் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களைச் செயற்படுத்துவதற்காக நீர்த்தேக்கங்கள் மற்றும் இடைப் பள்ளத்தாக்குக் கால்வாய் மட்டத்தின் மடைப் படலைகளை தொழிற்படச் செய்தல் மற்றும் நீர்த்தேக்கங்களின் மேல் மற்றும் கீழ் பள்ளத்தாக்குகளில் வெள்ள நீரை இயன்றளவு குறைக்கும் பொருட்டு வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற்காக படலைகளைச் செயற்படுத்துதல்.

தாபரிப்பு - நீர்த்தேக்கங்கள் மற்றும் இந் நீர்த்தேக்கங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அணை, படலைகள், நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் மற்றும் நீர்த்தேக்கத்துடன் இணைந்துள்ள சகல கட்டமைப்புக்களும் சர்வதேச தர நிர்ணயங்களுக்கு அமைய (ICOLD) தாபரிப்பதைப் போன்றே அவற்றை மேம்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

2.3.2 பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவினால் நிர்வாகிக்கப்படுகின்ற நீர்த்தேக்கங்கள்.

நீர்த்தேக்கங்கள்	தாபரிக்கப்படுகின்ற பகுதிகள்
கொத்மலை	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
பொல்கொல்ல திசை திருப்பி	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் சுரங்கப் பாதை

போவதென்ன	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
தம்புளு ஓயா	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
கண்டலம	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
கலா வாவி	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
விக்டோரியா	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
ரன்தெனிகல	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
ரன்தம்பே	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
மினிப்பே அணைக்கட்டு	மடைப் படலைகள், , வான் தகவுகள், இடைப் பள்ளத்தாக்குக் கால்வாய், பதுலு ஓயா நீர்ப் பாலம், சுரங்க வழி, மற்றும் நீர்த் தோரணங்களின் கட்டமைப்புக்கள்.
லொக்கல் ஓயா, ஹேபோல ஓயா மற்றும் திஹபான ஓயா மட்டத் தோரணங்கள்	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
உல்ஹிடிய – ரத்கிந்த	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.

மாதுறு ஓயா	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
உடவலவ	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
சந்திரிகா வாவி	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
மொகஹகந்த	அணைகள், வான் தகவுகள், சகல மடைப் படலைகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சுற்றியுள்ள பிரதேசங்கள்.
புஹுல்பொல	செயற்திட்டத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு இல்லை என்பதுடன் தாபரிப்புப் பணிகள் கையேற்கப்பட்டு இல்லை. எமது பிரிவின் பதவியணியைச் சேர்ந்த சிலர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.
டயரபா	

2.3.3 நீர்த்தேக்கங்களை அண்டிய சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

தொடர் இலக்கம்	விபரம்	பௌதீக முன்னேற்றம்	நிதிசார் முன்னேற்றம் ரூபாய்
01	டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்ச்சித் திட்டங்கள் - திகன, நிலகம மற்றும் அலுவலக வளாகம்.	06	33,697.00
02	விக்டோரியா மற்றும் பொல்கொல்ல நீர்த்தேக்க ஒதுக்குகளில் உள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன்களை அகற்றும் சிரமதான நிகழ்ச்சித் திட்டங்கள்.	02	10,348.00
03	விக்டோரியா நீர்த்தேக்க ஒதுக்குகளில் உள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன்களை அகற்றும் மாதாந்த நிகழ்ச்சித் திட்டங்கள்.	12	180,000.00
04	நீர்த்தேக்க ஒதுக்குகளில் மூங்கில் கன்றுகள் நடுதல்.	1500	50,000.00

05	நீர்த்தேக்க ஒதுக்குகளில் காடு வளர்ப்புக் கன்றுகள் நடுதல்.	4645	389,350.00
06	அலுவலக வளாகங்களில் தோட்டச் செய்கை மேற்கொள்ளுதல்.	1000	206,050.00
07	தொழிற்சாலை மற்றும் சுற்றாடல் மாசுபடுத்தல் நிறுவனங்கள் மற்றும் தளங்கள் தொடர்பாக வெளிக்களப் பிரிசீலனை.	100	69,745.00
08	டெங்குக் குழு, சுற்றாடல் குழு மற்றும் ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றிற்காக செயலூக்க பங்களிப்பு வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.	50	35,000.00
09	கழிவு நீர் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணம்.		23,075.00
மொத்தம்			**997,265.00**

2.3.4 நீர்த்தேக்க ஒதுக்கல்களின் பாதுகாப்பிற்காக சட்ட நடவடிக்கைளை எடுத்தல்.

தொடர் இலக்கம்	விபரம்	இலக்கு	முன்னேற்றம்
01	100/60 மீட்டர் ஒதுக்குகளின் அனுமதியற்ற அகற்றல்கள் – நீதவான் நீதிமன்ற வழக்கு	55	50
	நீதவான் நீதிமன்ற வழக்கு		36
	மேல்முறையீட்டு வழக்கு		04
	மாவட்ட நீதிமன்ற வழக்கு		03
	வெளியேற்றம் நடைமுறைப்படுத்தப்படாத நிறைவேற்றாணையை மீள நடைமுறைப்படுத்துதல்.		25
02	வழக்குத் தாக்கல் செய்வதற்ககாக நீக்கல் அறிவிப்பு அனுப்புதல்.	100	40
03	நீக்கல் அறிவிப்பு அனுப்புவதற்குரிய முதலாவது கட்ட நடவடிக்கையை செயற்படுத்துதல்.	100	40

04	நிலகம வளாத்தின் வழக்குத் தாக்கல் (வீட்டு உடைமையை மீளப் பெற்றுக் கொள்ளல்)		6
05	சட்ட விரோத ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான முறைப்பாடுகள்		10
06	ஆரம்பத்திலேயே சட்ட விரோதமான கட்டுமானங்களைத் தடுத்தல்		12
07	கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல் மற்றும் சட்ட விரோத ஆக்கிரமிப்புக்களைத் தடுப்பதற்காக சங்கங்கள், அமைப்புக்கள் மற்றும் மதஸ்தளங்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.	06	04
08	சட்ட விரோத மணல் அகழ்வுகளைத் தடை செய்தல்		04
09	ஒழுங்கற்ற கட்டுமானங்களை நிறுத்துதல்.		03
10	சட்ட விரோதமாக மரங்களை வெட்டுவதை நிறுத்துதல்.		05
11	முறையான கட்டுமானங்களுக்காக உள்ளூராட்சி மன்ற தாபனங்களுக்கு பரிந்துரைகளை வழங்குதல்.		46
12	ஆபத்தான நிலைமையில் காணப்படுகின்ற மரங்களை வெட்டுவதற்காக பரிந்துரைகளை வழங்குதல்.		03

2.3.5 2019 ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட விசேட முன்னேற்றம் மற்றும் அதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு.

தொடர் இலக்கம்	நீர்த்தேக்கம்	மின் உற்பத்திக்காக நீர் விநியோகித்தல்	மின் உற்பத்தி ஆற்றல்	தேசிய வருமானம் (ரூ. மில்லியன்)
01	விக்டோரியா kwh இற்கு ரூ. 18.50	1170.58	463.95×10^6	7,543.83
02	ரன்தெனிகல kwh இற்கு ரூ. 18.50	1118.66	236.82×10^6	4,059.16
03	ரண்டெம்பே kwh இற்கு ரூ. 18.50	651.07	124.61×10^6	2,135.81

04	கொத்மலை kwh இற்கு ரூ. 18.50	701.58	378.96 x 10^6	7,010.83
05	போவதென்ன kwh இற்கு ரூ. 18.50	468.38	57.42 x 10^6	1,062.18
06	மாதுறு ஓயா kwh இற்கு ரூ. 18.50	444.85	13.77 x 10^6	162.11
07	பொல்கொல்ல kwh இற்கு ரூ. 18.50	900.48	161.63 x 10^6	2,909.38
08	மொரகஹகந்த kwh இற்கு ரூ. 18.50	681.50	56.82 x 10^6	992.10
மொத்தம்				**25,875.40**

2.3.6 விவசாயம் சார்ந்த விவகாரங்களுக்காக நீரை விநியோகித்தல்

தொடர் இலக்கம்	**நீர்த்தேக்கம்**		**விநியோகிக்கப்பட்ட நீரின் கொள்ளளவு மில்லியன் கன மீட்டர்**
01	பொல்கொல்ல திசை திருப்பி (போவதென்ன நீர்த்தேக்கத்திற்கு)		899.809
02	மினிப்பே கால்வாய்	இடது கரை	296.700
		வலது கரை	784.527
03	மொரகஹகந்த நீர்த்தேக்கம்		87.370
04	உடவலவ	இடது கரை	372.160
		வலது கரை	386.437
மொத்தம்			**2827.003**

2019 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட முன்னேற்றம் (நிதிசார் மற்றும் பௌதீக)

கட்டுமான மற்றும் தொழில்நுட்ப பிரிவு

தொடர் இலக்கம்	விபரம்	பௌதீக		நிதி மில்லியன் ரூபாய்	
		இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	முன்னேற்றம்
01	அலுவலக மற்றும் வீட்டுக் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்துதல்	கட்டிடங்களின் எண்ணிக்கை 55	கட்டிடங்களின் எண்ணிக்கை 55	35.699	35.653
02	நீர் விநியோக முன்மொழிவுத் திட்டத்தை தாபரித்தல் மற்றும் இயக்குதல் (கொத்மலை, போவதென்ன, மாதுறு ஓயா, ரன்தெனிகல, உடவல)	முன்மொழிவுத் திட்டங்கள் 04	முன்மொழிவுத் திட்டங்கள் 04	9.620	9.621
03	உத்தியோகபூர்வ இல்லங்கள், முகாம்களைத் தாபரித்தல் மற்றும் சிறு பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (விடயப் பொறுப்புப் பொறியியலாளர் அலுவலகங்களுக்குச் சொந்தமான முகாம்கள் உட்பட)	பணிகள் 240	பணிகள் 240	33.280	33.272
04	நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைகளின் தாபரிப்பு நடவடிக்கைகள் (அணை வளாகம்)	ஹெக். 400	ஹெக். 400	56.189	55.241

	இரண்டாவது தடவை வளர்ந்த காடுகளை வெட்டி சுத்தம் செய்தல்				
05	அணைப் பாதுகாப்பு நடவடிக்கைகள், படலைகளின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள்	படலைகள் 64	படலைகள் 64	88.357	88.345
06	பிரதான நீர்த்தேக்கங்களுக்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகளை புணரமைத்தல்	பணிகள் 140	பணிகள் 140	41.000	35.358
07	தொழிற்சாலை இயந்திராதிகள் மற்றும் இயந்திரங்கள்	இயந்திரங்கள் 10	இயந்திரங்கள் 10	13.898	13.900
08	வாகன பழுதுபார்த்தல் நடவடிக்கைகள்	வாகனங்கள் 25	வாகனங்கள் 25	14.502	14.500
09	அலுவலக உபகரணங்கள் மற்றும் வேலைத்தள உபகரணங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள்	உபகரணங்கள் 50	உபகரணங்கள் 50	4.455	4.424
மொத்தம்				**297,000**	**290,314**

2.4 நீரியல் முகாமைத்துவ செயலகம்


நீரியல் முகாமைத்துவ செயலகம் மூலம் வருடாந்த சிறு போகம் மற்றும் பெரும் போகங்களுக்காக இயக்கற் கொள்கைகளை பரிந்துரைத்து மகாவலி தொகுதிக்காக இயக்கற் திட்டங்களை தயாரித்தல் முன்னெடுக்கப்படுவதுடன் இது அடிப்படையாக நீர்ப்பாசன மற்றும் மின்வலுத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு பிரதானமாக நெல் மற்றும் மேலதிக பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திக்காக விரிவான பங்களிப்பை வழங்குகின்ற தேசிய நிகழ்ச்சித் திட்டமாகும். இதற்கு அவசியமான தொழில்நுட்ப வல்லுனர்களின் ஆலோசனைகளை வழங்குகின்ற அலகாக நீரியல் நிர்வாக செயலகத்தின் மூலம் நீரியல் நிர்வாக குழுவிற்குச் சொந்தமான உறுப்பு நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் சகல இயக்கற் திட்டங்களை வாரா வாரம் மேற்பார்வையிட்டு அதன் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் எதிர் வருகின்ற வாரங்களுக்கான நீரியல் இயக்கற் திட்டங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவது முன்னெடுக்கப்படுவதுடன் அதனை விவசாய, மின்சார மற்றும் குடிநீர் தேவைகளை கருத்திற் கொண்டு மொத்தத் தொகுதியிலும் பரிந்துரைக்கப்பட்ட நீர்த் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கின்றது.

2.4.1 2018/19 பெரும் போகம் (2018 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் – 2019 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரை)

2018 / 2019 பெரும் போகத்திற்கான மகாவலி நீரியல் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடலானது 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. அப்பொழுது தொகுதியில் எதிர்பார்க்கப்பட்ட சகல நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது கொத்மலை 87.2%, விக்டோரியா 83.1%, மொகஹகந்த 42.9%, வலவ 55.2%, ஹுரூலுவெவ 23.5%, மாதுறு ஓயா 38.9% ஆக காணப்பட்டது.


அப்பொழுது கிடைக்கப் பெற்றிருந்த இரண்டாவது இடைப் பருவக்காற்று மற்றும் வடகீழ் பருவக்காற்று மழை எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களுக்கு கிடைக்கப் பெற்றமையைக் கருத்திற் கொண்டு நீரை விநியோகிக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் அதற்கமைய நீரை விநியோகித்தல், 2018 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத நடுப் பகுதியாகும் பொழுது ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருந்தது. அதற்கமைய 2018/19 பெரும் போகத்தின் முழு பயிர் விதைக்கும் பரவெல்லை 191,561 ஹெக்டயாராக இருந்ததுடன் அது மொத்தமாக 100% ஆக இருந்தது.

இச்சாகுபடியில் மகாவலித் தொகுதியில் மணித்தியாலத்திற்கு 1472 கிகா வொட் மின்சாரம் தோற்றுவிக்கப்பட்டது. மொத்த மின்சாரத் தோற்றுவிப்பானது 2018/ 19 பெரும் போகத்தில் காணப்பட்ட விதமானது முதலாவது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



முதலாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2018/ 19 பெரும் போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன இரண்டாவது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




இரண்டாவது வரைபடம்

2.4.2 2019 ஆம் ஆண்டின் சிறு போகம் – (2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் – 2019 ஆம் ஆண்டின் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை)

2019 ஆம் ஆண்டு சிறு போகத்திற்கான மகாவலி நீர் நிர்வாக குழு ஒன்றுகூடலானது 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. அப்பொழுது கொத்மலை நீர்த்தேக்கத்தின் செயற்படு நீர் மட்டமானது 31.9%, விக்டோரியா 37.5%, மொகஹகந்த 83.3%, வலவ 88.8%, ஹுரூலுவெவ 75.2%, மாதுறு ஓயா 80.5% ஆக காணப்பட்டதுடன் பராக்கிரம சமுத்திரத்தின் நீர் மட்டமானது 94.3% ஆக உயர்ந்த பட்ச நீர் மட்டத்தை அண்மித்துக் காணப்பட்டது..


அப்பொழுது கிடைக்கப் பெற்றிருந்த இரண்டாவது இடைப் பருவக்காற்று மற்றும் வடகீழ் பருவக்காற்று மழை எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களுக்கு கிடைக்கப் பெற்றமையைக் கருத்திற் கொண்டு நீரை விநியோகிக்குமாறு அறிவிக்கப்பட்டதுடன் அதற்மைய நீரை விநியோகித்தல், 2018 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத நடுப் பகுதியாகும் பொழுது ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருந்தது. அதற்கமைய 2019 சிறு போகத்தின் முழு பயிர் விதைக்கும் பரவெல்லை 162,224 ஹெக்டயாராக இருந்ததுடன் அது மொத்தமாக கிட்டத்தட்ட 84% ஆக இருந்தது.

இச்சாகுபடியில் மாகவலித் தொகுதியில் மணித்தியாலத்திற்கு 631 கிகா வொட் மின்சாரம் தோற்றுவிக்கப்பட்டது. மொத்த மின்சாரத் தோற்றுவிப்பானது 2019 சிறு போகத்தில் காணப்பட்ட விதமானது மூன்றாவது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது



மூன்றாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2019 சிறு போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன நான்காவது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.




நான்காவது வரைபடம்

2.4.3 2019/20 பெரும் போகம் (2019 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் – 2019 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை)

2019/ 20 பெரும் போகத்திற்கான மகாவலி நீரியல் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடலானது 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி பேராதெனிய கன்னொருவ தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. அப்பொழுது தொகுதியில் எதிர்பார்க்கப்பட்ட சகல நீர்த்தேக்கங்களினதும் செயற்படு நீர் மட்டமானது கொத்மலை 91.7%, விக்டோரியா 70.5%, மொகஹகந்த 35.3%, வலவ 49.7%, ஹுருலுவெவ 10.1%, மாதுறு ஓயா 12.3% ஆக காணப்பட்டது.


அப்பொழுது வடகீழ் பருவக்காற்று மழை தொடங்கி இருந்த காரணத்தால் நீர் விநியோகமானது 2019 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாத நடுப் பகுதியாகும் பொழுது ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருந்தது. அதற்கமைய 2019/ 20 பெரும் போகத்திற்காக 187,285 ஹெக்டயார் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு இருந்ததுடன் அதன் முழு பயிர் விதைக்கும் பரவெல்லை 100% ஆக இருந்தது.

இக்காலப் பகுதியில் மாகவலித் தொகுதியில் மணித்தியாலத்திற்கு 807 கிகா வொட் மின்சாரம் தோற்றுவிக்கப்பட்டது. மொத்த மின்சாரத் தோற்றுவிப்பானது 2019/ 20 பெரும் போகத்தில் காணப்பட்ட விதமானது ஐந்தாவது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஐந்தாவது வரைபடம்

நீர் நிர்வாகக் குழுவின் கீழ் உள்ள வலயங்களில் 2019/ 20 பெரும் போகத்தின் பயிர்ச் செய்கைத் திட்டமானது ஆறாவது வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஆறாவது வரைபடம்

2.5 காணி உபயோக திட்டமிடல் பிரிவு

அறிமுகம்

மகாவலி அதிகார பிரதேசத்தில் நிலைபெறுதகு அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பௌதீக, பொருளாதார, சமூகவியல் அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் முகாமைத்துவத்தை இலக்குகளின் ஊடாக ஒருங்கிணைக்கப்பட்ட திட்டமிடலானது காணி உபயோக திட்டமிடல் பிரிவின் வகிபாகமாகும். மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய அபிவிருத்திப் பிரதேசங்களின் தன்மையை ஆய்வு செய்து எதிர்கால அபிவிருத்தி இலக்குகளுக்காக எதிர்வுகூறல்களை மேற்கொண்டு கட்டமைக்கப்பட்ட திட்டங்கள், வலயத் திட்டங்கள், மீள் குடியேற்றத் திட்டங்கள், நகர மற்றும் கிராமிய மத்திய நிலைய திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.5.1 காணி உபயோக திட்டமிடல் பிரிவின் அடிப்படைப் பணிகள்


- அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக காணிகளை இனங்காணுதல்.
- அபிவிருத்திச் செயற்திட்டப் பிரதேசங்களின் அடிப்படைத் தரவுகளைச் சேகரித்தல், பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல்களை மேற்கொள்ளுதல்.
- செயற்திட்டப் பிரதேசங்களுக்குரிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்.
- மகாவலி அதிகார பிரதேசங்களின் திட்டங்களை இற்றைப்படுத்துதல்.
- நிலைபெறுதகு நிலப் பயன்பாட்டை உறுதி செய்து காணிகளை கையுதிர்ப்பதற்காக பௌதீக திட்டப் பரிந்துரைகளை வழங்குதல்.
- சட்ட விரோதமாக காணிகளை ஆக்கிரமிப்பதை கட்டுப்படுத்துதல் மற்றும் உணர்ச்சி மிக்க சுற்றாடல் தொகுதி மற்றும் ஒதுக்கல் பிரதேசங்களை பாதுகாப்பதற்கு அவசியமான திட்டங்களைத் தயாரித்தல்.

2.5.2 2019 ஆம் ஆண்டின் இலக்குகள் மற்றும் முன்னேற்றங்கள்.

செயற்பாடு	வருடாந்த நிதி ஒதுக்கீடு (ரூ. மி)	2019.12.31 ஆம் திகதி வரையான இலக்குகள்		2019.12.31 ஆம் திகதி வரையான முன்னேற்றம்	
		நிதி (ரூ. மி)	பௌதீக	நிதி (ரூ. மி)	பௌதீக
மகாவலி வலயங்களின் திட்டங்களை நுணுகி நோக்கல், திட்டங்களை இற்றைப்படுத்துதல்	0.5	0.5	உத்திகளுடன் கூடிய திட்டங்கள் 05	0.48	உத்திகளுடன் கூடிய திட்டங்கள் 05

மற்றும் அதற்கமைய உத்திகளுடன் கூடிய திட்டங்களைத் தயாரித்தல்.					
மகாவலி கங்கை ஒதுக்கல் எல்லையை ஒதுக்குதல். (50 கி.மீ.)	1.0	1.0	மகாவலி கங்கை (50 கி.மீ.)	0.71	50 கி.மீ. இற்கான அளவீட்டு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
கூட்டுத் தொகை	1.5	1.5		1.19	

2.5.3 மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டத்திற்குரிய ஆனையிறவில் வசிக்கின்ற மக்கள் தொடர்பாக கணிப்பீட்டை மேற்கொள்ளுதல்.



1979.06.15 ஆம் திகதிக்குரிய இலக்கம் 41 ஐ உடைய அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகை மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் விசேட அதிகார பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ள விசேட செயற்திட்டமான மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது சூழலியல் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்பட வேண்டி இருந்த காணி உபயோக தரவுகளின் ஆய்வு அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு வழங்கப்பட்டதுடன் அதற்காக காணிப் பயன்பாடு தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளுதல்.

அவ்வாறே முன்மொழியப்பட்டுள்ள ஆனையிறவை நிறுவுவியமையினால் செயற்திட்ட அதிகார பிரதேசத்திற்கு வெளியே நிர்மாணிக்கப்பட்டு இருந்த வீடுகள் தொடர்பான தகவல்கள் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரதேசங்களில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டு இருந்த வீதிகள் தொடர்பான தகவல்கள் களப் பரிசோதனை மூலம் கணிப்பீடு செய்தல்.


பௌதீக திட்டமிடல் குழு அறிக்கை/ ஆற்றோர நிலையியற் குழு அறிக்கை பெறுகைகளுக்குரிய முன்னேற்றத்தைக் குறிப்படுகின்ற சாராம்சம் (2019.01.01 ஆம் திகதி முதல் 2019.12.31 ஆம் திகதி வரை)

வலயம் / ஓதுக்கல் பிரதேசம்		ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள கடிதங்களின் எண்ணிக்கை	ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள மொத்த இடங்களின் எண்ணிக்கை	பரிந்துரை செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை	பரிந்துரை செய்யப்படாத எண்ணிக்கை	மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை
பி வலயம்		53	376	343	14	12
சி வலயம்		34	3293	3266	8 (03 இற்காக பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.)	16
டி வலயம்		25	45	41	-	4
ஜீ வலயம்		35	83	58	6	7
எச் வலயம்		63	112	106	(06 இற்காக பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.)	-
எல் வலயம்		12	22	20	(02 இற்காக பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.)	-
வலவ வலயம்	பௌதீக தி. குழு அறிக்கை	45	213	196	10	5
	தேர்வு அறிக்கைகள்	9	537	492	45 பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.	

ரம்பகென் ஓயா வலயம்		70	145	144		1
விக்டோரியா வலயம்		17	19	12	1	3
ஹுருளு வாவி வலயம்		15	32	31	1	-
போவதென்ன		11	11	11	-	-
ஆறுகள் மற்றும் ஆற்றோரங்களை அண்மித்தவை		16	24	8	8	8
கூட்டுத் தொகை		**405**	**4936**	**4728**	**104**	**56**


2.5.4 2019 ஆம் ஆண்டின் திட்டங்கள்.

- வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு நேரடி காடுகளை ஒப்படைக்கும் ஒழுங்கு முறைகளின் கீழ் கொத்மலை அதிகார பிரதேசத்திற்குச் சொந்தமான வனத் தொகைகளுடன் கூடிய இடங்கள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு கையளிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு ஆற்றுப்படுத்துதல்.





- மகாவலி எல் வலயத்தின் வனப் பாதுகாப்புத் திணைக்கள ஒதுக்கல் பிரதேசங்களில் தற்பொழுது வதிவிடத்தைக் கொண்ட மற்றும் கிராமியக் குளத் தொகுதிகளை உள்ளடக்கிய நிலப்பரப்பு மற்றும் உழவுப் பிரதேசங்களை ஒதுக்கலில் இருந்து விடுவித்துக் கொள்வதற்காக திட்டமிடுதல்.
- ஒவ்வொரு மகாவலி வலயத்திலும் காணப்படுகின்ற பண்ணைக் காணிகளின் திட்டங்களைத்த தயாரிப்பதன் கீழ் பண்ணைக் காணிகளுக்காக காணி உபயோக திட்டங்களைத் தயாரித்தல்.


வலயம்	பண்ணை
வலவ	கந்தகெடிய பண்ணை கச்சிகல் ஆர பண்ணை சூரியவெவ மஹகம கட்டகடுவ சேத பண்ணை குருகொடவெல
பி	அரலகங்வில – விதைப் பண்ணை (Seed Farm)
சி	நவமெதகம விவசாயப் பண்ணை
எச்	கலன்குட்டிய




- மகாவலி அதிகார பிரதேசத்தில் முதலீட்டு செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக வழங்க முடியுமான காணிகளை இனங்காணுதல்.







- மகாவலி பி வலாகத்தில் சிங்ஹபுற தொகுதியில் முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக வழங்க முடியுமான காணிகளை இனங்காணுதல் மற்றும் வரைபடத்திற்கு உட்படுத்துதல்.
- மெதிரிகிரிய புதிய அபிவிருத்தி வலயத்தில் முதலீட்டு முன்மொழிவுத் திட்டங்களுக்காக காணிகளை ஒதுக்குதல்.



2.6 வன மற்றும் சுற்றாடல் பிரிவு

அறிமுகம்

இலங்கைக்கு சமூக பொருளாதார பிரதிபலன்கள் பலவற்றை பெற்றுக் கொடுத்து செயற்படுத்தப்பட்ட மகாவலி பெருந் திட்டமானது நிலைபெறுதகு சுற்றாடல் பாதுகாப்பு ஒழுங்குமுறையின் கீழ் முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அடிப்படைத் திட்டங்கள் தீட்டப்பட்டதுடன் அதன் மூலம் முன்மொழியப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் சகல கட்டங்களிலும் இடம்பெற முடியுமான சூழலியல் தாக்கங்கள் மற்றும் மாற்றங்களை இயன்றளவு குறைந்த மட்டத்தில் பேணுவது பிரதான நோக்கமாகும்.

அதற்கமைய அபிவிருத்தி செய்யப்பட்ட கீழ் மகாவலி பள்ளத்தாக்கு வலயத்தைப் போலவே மேல் நீரேந்து பிரதேசத்தின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்துவதற்காக அதன் இயற்கை வளங்களை சிறந்த முறையில் திட்டமிடுதல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் நடாத்திச் செல்லல் என்பன சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை வகிபாகம் ஆகும்.

நோக்கம் :-

நிலைபெறுதகு அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு மகாவலி கங்கை வடிநிலத்தை ஆரோக்கியமாக மற்றும் வலுவான முறையில் பராமறித்தல்.

(Healthy Mahaweli River Basin for Sustainable Development)

2.6.1 2019 நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல் மற்றும் முன்னேற்றம்.

இலக்கம்	பிரிவு/ வலயம்	நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல் (ரூ. மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)	2020 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கு ஆற்றுப்படுத்திய கட்டணப் பட்டியல்கள் (ரூ.மி.)	மொத்தம் (ரூ.மி.)	சதவீதம்
01	சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு – கொத்மலை	30.00	29.80	2.32	32.15	107.1%
02	பி, சி, டி, ஜீ, எச், வலவ, ஹுரூலுவெவ, விக்டோரியா, ரம்பகெண் ஓயா (மகாவலி வலயம்)	54.78	53.83	0	53.83	98%
03	விசேட செயற்திட்டங்கள் (1) வெலி ஓயா ஒருங்கிணைந்த செயற்திட்டம்	13.08	11.21	0	11.21	86%
	(2) ரம்பகெண் ஓயா செயற்திட்டம்	3.6	2.164	1.6	3.764	105%
	(3) ரிதிமாலியத்த செயற்திட்டம்	3	1.554	1.4	2.954	98%
கூட்டுத் தொகை		**104.46**	**98.56**	**5.32**	**103.88**	**99%**

2.6.2 2019 பௌதீக முன்னேற்றம் :

தொடர் இலக்கம்	நிகழ்ச்சித் திட்டம்	இலக்குகள்	முன்னேற்றம்
01	வன மூடுதல்களை 30% இனால் அதிகரித்தல் (50 இலட்சம் மரக் கன்றுகளை உருவாக்குதல் மற்றும் நடும் நிகழ்ச்சித் திட்டம்)	மரக் கன்றுகள் 5,000,000	மரக் கன்றுகளின் உருவாக்கம் 4,181,427 (84%) களத்தில் நடுதல் – 2,019,045 (40%)
02	மண் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்	6000 மீட்டர் / 240 கன மீட்டர்	7350 மீட்டர் (மேல் மகாவலி நீரேந்தின் பிரதேச செயலாளர் தொகுதிகள் 04, களங்கள் 42)

03	**மகாவலி சுத்தமான கங்கை நிகழ்ச்சித் திட்டம்**		
3.1	நீரின் நிலைமையை அளவிடும் நிகழ்ச்சித் திட்டம்	19 இடங்கள்	மேல் நீரேந்தில் 19 இடங்களில் நீரின் தன்மை அளவீடானது மாதத்திற்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
3.2	நீரியல் விஞ்ஞான ஆய்வு	07 இடங்கள்	மகாவலி கங்கை மற்றும் மகாவலி உப நீரேந்து கங்கைகள் 07 இற்காக நாளாந்தம் நீரியல் விஞ்ஞான அளவீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.
3.3	கழிவு முகாமைத்துவத்திற்காக வலையிலான வேலிகளை நிர்மாணித்தல்.	225 மீட்டர்	வேலிகளை அமைத்தலானது 124 மீட்டர்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
3.4	சுத்தமான கங்கை நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல்.	நிகழ்ச்சித் திட்டங்கள் - 10	பிங்கா ஓயாவின் பாதுகாப்பு தொடர்பாக இயக்கற் குழு ஒன்று கூடல்கள் 02 நடாத்தப்பட்டன. கம்பளை கழிவுப் பொருள் பிரச்சினை தொடர்பாக உடநலாத பிரதேச செயலகம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இயக்கற் குழு ஒன்றுகூடல் ஒன்று நடாத்துவதற்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் 11 நடாத்தப்பட்டுள்ளன.
3.5		குளங்கள் 16	குளங்கள் 15

	ஆக்கிரமிப்பு மிக்க உயிரினங்களின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக குளங்களில் உள்ள ஆக்கிரமிப்பு மிக்க நீர்த் தாவரங்களை அகற்றுதல்.	(பி வலயம் -10, சி வலயம் – 03, எச் வலயம் – 01, மெதிரிகிரிய – 02)	சி வலயம் – 04 குளங்கள் (ஹெங்கும வாவி, விஜயபுற வாவி, வீரலந்த வாவி, தொளகந்த வாவி)
			எச் வலயம் – 07 குளங்கள் (தம்மென்னாகம வாவி, ஜோசப் வாவி, பொத்தேகம வாவி, மீகலேவ வாவி, மெதின்னொறுவ வாவி, மரதன்கல்ல வாவி)
			ரம்பகெண் ஓயா – 01 (மக ஓயா நீர்த்தேக்கம்)
			எல் வலயம் – 03 குளங்கள்
3.6	ஒதுக்கல்களில் உள்ள இராட்சத தொட்டாற் சுருங்கிகளை அகற்றுதல்.	04 ஹெக்டயார் (ரம்பகெண் ஓயா – 04 ஹெக்டயார்)	ரம்பகெண் ஓயா பொல்லேபெத்த தொகுதி – 01 ஹெக்டயார்
04	**யானைகள் – மனிதர்களுக்கு இடையிலான மோதல்களை முகாமைத்துவம் செய்தல்.**		
4.1	மின் வேலிகளை தாபரித்தல்	93.8 கி.மீ.	93.8 கி.மீ.
		(பி – 24 கி.மீ, எச் – 11 கி.மீ, ரம்பகெண் ஓயா – 10 கி.மீ, எல் – 48.8	பி வலயத்தில் மகவெலிதென்ன (16) மற்றும் மகசேன்புற (8) மின் வேலிகள் 24 கி.மீ.
			ரம்கெண் ஓயா வலயத்தில் மின் வேலிகள் 10 கி.மீ.
			எல் வலயத்தில் வெலி ஓயா பாலம் – கஜபாபுற – 20 கி.மீ, கஜபாபுற – நெளும்வெவ – 18.8 கி.மீ, ஹெலபவெவ – 10. கி.மீ

			எச் வலயத்தில் நிராவிய பண்ணையைச் சுற்றி மின் வேலி 11 கி.மீ. இற்கு.
	மின் வேலிகளை அமைத்தல்	08 கி.மீ.	23.7 கி.மீ.
		(எல் வலயம் – ஜனகபுற – இரண்டாம் கட்டம்)	பி வலயத்தில் செவனபிடிய அலகில் 08 கி.மீ. மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது. வெலிகந்த நாற்று மேடையைச் சுற்றி 1.6 கி.மீ இற்கு மின் வேலி மற்றும் ருஹுணுகெத சுற்றுலா பங்களாவைச் சுற்றி 1.2 கி.மீ. இற்கு மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது.
			எல் வலயத்தில் ஜனகபுற மின் வேலி 7.9 கி.மீ. இற்கு அமைப்பது இடம்பெற்றுள்ளது.
			சி வலயத்தில் நவமெதகம விவசாயப் பயிற்சி மத்திய நிலையத்தைச் சுற்றி 5 கி.மீ. இற்கு மின் வேலி அமைக்கப்பட்டுள்ளது. (மேலதிக ஏற்பாடுகள் கிடைக்கப் பெற்ற அடிப்படையில்)
4.2	உயிர் வேலிகளை அமைத்தல்/ தாபரிப்பு	12 கி.மீ.	12 கி.மீ.
		(சி வலயம் – 1 கி.மீ, ஜீ வலயம் – 3 கி.மீ, வலவ – 6 கி.மீ,	பி வலயம், மஹிந்தாகம அலகில் உயிர் வேலிகள் 05 கி.மீட்டர்கள் தாபரிக்கப்பட்டு உள்ளன.
			சி வலயத்தில் 03 இடங்களில் கூட்டுத்தொகை 01 கி.மீ

		மெதிரிகிரிய – 2 கி.மீ)	ஆகும் வரை உயிர் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. (வெஹெரகல -கணிச்சிகல – 500 மீட்டர் சிறிபுற நாமல்கம – 300 மீட்டர் மெதகம – வெவ் மெதகம – 200 மீட்டர்)
			மெதிரிகிரிய வலயம், பிசோபுற பண்ணையைச் சுற்றி 2 கி.மீ. இற்கு நேரடி வேலி அமைக்கப்பட்டுள்ளது.
			வலவ வலயத்தில் மயுரபுற தொகுதியில் சமரகோன் விவசாய அமைப்புடன் 04 கி.மீ. இற்கு நெரடி வேலி அமைக்கப்பட்டுள்ளது.
5	சுற்றாடல் ஆய்வு, பயிற்சி மற்றும் மேம்பாடு	125 நிகழ்ச்சித் திட்டங்கள்	176 நிகழ்ச்சித் திட்டங்கள் (உலக நீர் தினம், புது வருட நன்னேரத்திற்கு மரக் கன்றுகளை நடுவது தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல், உயிரியல் பல்வகைமை தினம் – மே மாதம் 22 ஆம் திகதிக்கு உலக சுற்றாடல் தினம் மற்றும் தேசிய சுற்றாடல் வாரம், மகாவலி விளையாட்டுத் துறைக்கு உரியதாக மற்றும் பசுமையான பாடசாலைகள் போன்றவை தொடர்பாக

			விழிப்புணர்வூட்டுதல் மற்றும் செயலமர்வுகளை நடாத்துதல்)
5.1	மகாவலி மரங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டம்	பிரதான நிகழ்ச்சித் திட்டங்கள் 10 (வலயங்கள் – 9, சுற்றாடல் பிரிவு)	10 நிகழ்ச்சித் திட்டங்கள், மரங்களைப் பாதுகாப்பது தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் சுமார் 39 நடாத்தப்பட்டன. மரக் கன்றுகளை உருவாக்குதல் – 41823 கணக்குகளின் எண்ணிக்கை – 291
6	மகாவலி பசுமையான நகரம்/ கிராமம்/ பாடசாலை நிகழ்ச்சித் திட்டம்	நிகழ்ச்சித் திட்டங்கள் – வலயங்கள் 6	நிகழ்ச்சித் திட்டங்கள் – வலயங்கள் 08
			பி வலயம் – நிகழ்ச்சித் திட்டங்கள் 06 விஜேபாபுற தொகுதி அலுவலகம், சிங்ஹபுற தொகுதி அலுவலகம், வதிவிட வணிக அலுவலகம், திம்புலாகல காசியப்ப வித்தியாலயம், மொணரதென்ன விகாரை பூமி, மனம்பிடிய வாலுகாராமய
			சி வலயம் – நிகழ்ச்சித் திட்டங்கள் 03 நுவரகல, வெஹெரகல தொகுதி அலுவலகங்களில்

			பசுமையான அலுவலகங்கள் நிகழ்ச்சித் திட்டம் – விவசாய முகாமைத்துவப் பயிற்சி மத்திய நிலையம்
			மொரகஹகந்த வலயம் – நிகழ்ச்சித் திட்டம் 01 அலகு அலுவலகங்களில் நில அலங்கரிப்பு நிகழ்ச்சித் திட்டம்
			எல் வலயத்தில் – நிகழ்ச்சித் திட்டம் 01 பசுமையான கிராமம் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
			வலவ வலயம் – நிகழ்ச்சித் திட்டங்கள் 02 • சூரியவெவ பசுமையான பாடசாலைக்காக உபகரணங்களை வழங்குதல். • பசுமையான அலுவலக நிகழ்ச்சித் திட்டங்கள் – வதிவிட வணிக அலுவலகம், மத்திய நாற்று மேடைகள், முரவெசிசேனை, மயுரபுற, சந்திரிக்கா வாவி தொகுதி அலுவலகங்கள்.
			பசுமையான பாடசாலைகளை விழிப்புணர்வூட்டுதல்

			• ஹுருளு வாவி வலயத்தின் பாடசாலைகள் – 03 • ரம்பகெண் ஓயா – பாடசாலைகள் 04 • எச் வலயத்தில் பசுமையான பாடசாலைகள் 07 ஐ தெரிவு செய்து விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பாடசாலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.6.3 மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள்.

- சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு – கொத்மலை

2019 ஆம் ஆண்டின் பிரதான செயற்பாடுகளுக்கான நிதிசார் முன்னேற்றம்.

வருடாந்த வருமானம் :

வருமான விபரங்கள்	வருமான இலக்குகள் (ரூ.மி.)	வருமான முன்னேற்றம் (ரூ.மி.)	வருமான வீதம்
மரக் கன்று விற்பனை மற்றும் பண்னை வருமானம்	4.085	4.001	97%
கடன் வட்டி மற்றும் வீட்டு	0.933	1.247	133%

வாடகைகளின் வருமானம்			
கூட்டுத் தொகை	5.018	5.248	104%

2019 ஆம் ஆண்டின் வருடாந்த மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவின முன்னேற்றம்.

நிதியின் விபரம்	நிதிசார் இலக்குகள்	வருடாந்த நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	செலுத்துவதற்குள்ள	கூட்டுத் தொகை	நிதிசார் முன்னேற்றத்தின் வீதம்
மூலதன செலவினங்கள்	30.00	29.79	2.32	32.11	107.1%
மீண்டுவரும் செலவினங்கள்	44.08	45.28	0	45.28	102.7%

2.6.4 மகாவலி வலயத்தினுள் செயற்படுகின்ற சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்.

அறிமுகம்

மகாவலி துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளின் காரணமாக தாக்கத்திற்கு உள்ளான இயற்கைச் சூழல் தொகுதிகளைப் பாதுகாப்பது விசேடமாக அவ்வலயங்களில் அதிகரித்து வருகின்ற சனத்தொகை காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக சூழலியல் மற்றும் சமூக ரீதியில் ஏற்படுகின்ற தாக்கங்களை இயன்றளவு குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதானது சுற்றாடல் பிரிவின் வழிகாட்டலின் கீழ் இடம்பெறுகின்றது.

அதன் கீழ் அடிப்படையாக பின்வரும் சுற்றாடல் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

- மரங்களின் தொகையை அதிகரிப்பதற்கு அவசியமான மரக் கன்று நாற்று மேடைகளை ஆரம்பித்தல், தாபரித்தல்.
- நுண் நீரேந்து பிரதேசங்கள், நீர்த்தேக்க ஒதுக்குகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் காடுகளின் தொகையை அதிகரிப்பதற்காக மரம் நடுதல் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட முழு சமூகத்திற்குமாக சுற்றாடல் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

- யானைகள் – மனிதர்கள் மோதல்களை இயன்றளவு குறைப்பதற்காக மின் வேலிகள் அமைத்தல், உயிர் வேலிகள் அமைத்தல் மற்றும் தாபரித்தல்.
- இடம்மாறிப் பிறந்த ஆக்கிரமிப்பு மிக்க உயிரினங்களின் விசேட கட்டுப்பாட்டிற்கான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.
- பசுமையான நகரம்/ பசுமையான கிராமம்/ பசுமையான அலுவலகம்/ பசுமையான பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள்.

2.6.5 வன மற்றும் சுற்றாடல் பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற விசேட பணிகள்.

- சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவின் களச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற பாரிய அளவிலான செயற்திட்டங்களில் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் சுற்றாடல் அங்கீகாரத்தின் நிபந்தனைகளை செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை இயக்குதல் மற்றும் பின் தொடர்தல் மற்றும் மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களின் தொழில்நுட்ப குழு, இயக்கற் குழு மற்றும் நிலையியற் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தல் என்பன முன்னெடுக்கப்படும்.

- இதற்கு மேலதிகமாக சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவானது ஏனைய அரச நிறுவனங்கள் முலம் செயற்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்காக தொழில்நுட்பக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தல் முன்னெடுக்கப்படும்.

- தேசிய சூழலியல் சட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அங்கீகரிக்கும் நிறுவனம் என்ற ரீதியில் சூழலியல் தாக்கங்களை மதிப்பிடும் செயற்பாடுகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் பின் தொடர்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

மூன்றாவது அத்தியாயம்

3.0 அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவானது பிரதானமாக 07 பிரிவுகளைக் கொண்டுள்ளது. அப்பிரிவுகள் பின்வருமாறு,

01. காணிப் பிரிவு
02. விவசாய அபிவிருத்திப் பிரிவு
03. கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவு
04. தாபன அபிவிருத்திப் பிரிவு
05. வியாபார அபிவிருத்திப் பிரிவு
06. மனித வள முகாமைத்துவப் பிரிவு
07. ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு

3.1 காணிப் பிரிவு

அறிமுகம்

மட்டுப்படுத்தப்பட்ட வளமான காணி நல முகாமைத்துவ ஒழுங்களுகள் மூலம் மகாவலி அதிகார பிரதேசத்தினுள் வசிக்கின்ற நலன் பெறும் மக்களின் காணி உரிமையை உறுதி செய்வதன் ஊடாக அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக பங்களிப்பு வழங்குதல்.

3.1.1 காணிப் பிரிவின் வகிபாகம்

01. காணிப் அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் தனி நபர்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் அதன் பிந்திய நடவடிக்கைகள்.

02. அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் அதன் பிந்திய நடவடிக்கைகள்.

அனுமதிப் பத்திரம் வழங்குதல்

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் – 2019

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
பி	4,700	4,044
சி	4,530	4,155
டி	900	775
எச்	1,900	704
எல்	1,600	1,243
விக்டோரியா	300	42
ஹுருளுவெவ	360	300
மொரகஹகந்த	910	628
வலவ	3,150	2,075
ரம்பகெண் ஓயா	1,550	1,401
கூட்டுத் தொகை	**19,900**	**15,364**

ஏற்பாடுகளை வழங்குதல்

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் – 2019

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
பி	2,100	780
சி	4,690	4,146
டி	650	455
எச்	3,800	1,039
எல்	1,660	1,360
விக்டோரியா	90	-
ஹுருளுவெவ	530	249
மொரகஹகந்த	500	333
வலவ	2,470	1,486
ரம்பகெண் ஓயா	110	-
கூட்டுத் தொகை	**16,590**	**9,848**

நீண்ட கால குத்தகைக்கு வழங்குதல்

அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டம் – 2019

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
பி	235	6
சி	25	5
டி	-	-
எச்	220	107
எல்	45	-
விக்டோரியா	35	5
ஹுருளுவெவ	25	7
மொரகஹகந்த	25	4
வலவ	70	9
ரம்பகெண் ஓயா	5	1
கூட்டுத் தொகை	**685**	**144**

அரச நிறுவனங்களுக்காக காணிகளை வழங்குதல் – 2019

வலயம்	கையளிப்புக் கட்டளை		காணிகளைக் கையளித்தல்	
	இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	முன்னேற்றம்
பி	30	26	5	4
சி	30	18	10	8
டி	-	-	-	-
எச்	10	-	10	-
எல்	5	8	4	-
விக்டோரியா	5	-	5	-
ஹுருளுவெவ	5	4	5	-
மொரகஹகந்த	4	2	2	-
வலவ	10	5	10	6
ரம்பகெண் ஓயா	-	-	8	7
கூட்டுத் தொகை	**99**	**63**	**59**	**25**

விகாரைகளுக்காக கொடைப் பத்திரம் வழங்குதல் – 2019

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
பி	30	8
சி	35	13
டி	-	-
எச்	10	3
எல்	6	-
விக்டோரியா	5	1
ஹுருளுவெவ	10	6
மொரகஹகந்த	4	-
வலவ	10	3
ரம்பகெண் ஓயா	2	2
கூட்டுத் தொகை	**112**	**36**

உரிமைப் பத்திரம் (வீடுகளுக்கு) வழங்குதல் - 2019

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
பி	15	-
சி	10	-
டி	-	-
எச்	250	31
எல்	40	-
விக்டோரியா	80	5
ஹுருளுவெவ	25	-
மொரகஹகந்த	15	3
வலவ	150	55
ரம்பகெண் ஓயா	5	-
கூட்டுத் தொகை	**590**	**94**

3.2 விவசாய அபிவிருத்திப் பிரிவு

வகிபாகம்

- உணவு உற்பத்திக்கான தேசிய இலக்குகளுக்கு அமைய மகாவலி நீர்ப்பாசன மற்றும் நீர்ப்பாசனம் அல்லாத காணிகளில் பயிர்ச் செய்கை, கால்நடை உற்பத்தி மற்றும் விவசாய வணிகத்தை உருவாக்குவதற்காக வருடாந்த இலக்குகளைத் தயாரித்துக் கொள்ளுதல்.
- வருடாந்த பயிர் உற்பத்தி இலக்கை அணிமித்துக் கொள்வதற்காக வழங்கப்படுகின்ற வருடாந்த ஏற்பாடுகளுக்கு இணங்க பரம்பிய இலக்குகள் மற்றும் உத்தித் திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை வலய மட்டத்தில் ஏற்பாடு செய்தல், செயற்படுத்துதல், பின் தொடர்வை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல்.
- விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, விவசாய, கிராமிய விவகாரங்கள், கால்நடை வளங்கள், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு, கமநலத் திணைக்களம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் சகல வெளி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.

3.2.1 2019 ஆண்டின் பாதீட்டின் மூலம் விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதிசார் ஏற்பாடுகளை வழங்குதல்.

2019 ஆம் ஆண்டிற்காக விவசாய உற்பத்தி விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் 151 மில்லியன் ரூபாய் ஏற்பாடு அங்கீகரிப்பட்டதுடன், அவை பின்வரும் விதமாக மகாவலி வலயங்களுக்காக ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டன.

வலயம்	**அங்கீகரிக்கப்பட்ட தொகை ரூ.மி.**
பி	29.00
சி	13.00
டி	3.00
ஜீ	15.00
எச்	42.00
ஹுருளுவெவ	6.00
வலவ	39.00
விக்டோரியா/ கொத்மலை	2.00
பிரதான அலுவலகம்	2.00
கூட்டுத் தொகை	151.0

	செயற்பாடுகள்	ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி.
1	நெல் உற்பத்தி விளைத்திறன் மேம்பாடு	2.8
2	பயிர்களை பன்முகப்படுத்தல்	12.4
3	பழப் பயிர்களின் அபிவிருத்தி	1.8
4	வீட்டுப் பொருளாதார அபிவிருத்தி	5.6
5	சேதனப் பொருட் பாவனை மேம்பாடு	0.3
6	விவசாய பரம்பல் நடவடிக்கைகள்	4.5
7	உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்	2.7
8	பண்ணை அபிவிருத்தி	96.8
9	நாற்று மேடைகள் மற்றும் இழைய வளர்ப்பு மரக் கன்றுகளை உற்பத்தி செய்தல்	10.3
10	காலநிலை மாற்றத்திற்காக நெகிழ்வடையும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்	8.0
11	வறுமையைப் இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்	2.1
12	முகாமைத்துவச் செலவினங்கள்	3.7
கூட்டுத் தொகை		**151**

மேற்குறிப்பிட்ட விதமாக விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வலயத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை அந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படைத் திட்டங்களுக்கு அமைய செலவு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்தது.

செயற்பாடுகள்	அலகு	இலக்கு	முன்னேற்றம்
நெற் பயிர்ச்செய்கை மேம்பாடு			
வயல்வெளி நிகழ்ச்சித் திட்டங்கள்	எண்ணிக்கை	100	75
களப் பாடசாலைகள்	எண்ணிக்கை	110	113
அறுவடைக் கணிப்பீடு	கணிப்பீடுகள்	400	359
பரக்குடை முறையில் நெற் பயிர்ச்செய்கை பரம்பல்	ஹெக்டயார்	20	23
இலை வர்ண அட்டைப் பயன்பாடு	ஹெக்டயார்	2,000	2,000
சுய வித்து நெல் உற்பத்தி	ஹெக்டயார்	100	100
ஏனைய துறைகளின் போகங்கள்			
பயிர்ச் செய்கை படிம அமைப்பு (சோளம், சோயா, பி. வெங்காயம், மிளகாய், பயறு, நிலக்கடலை, உழுந்து, கவ்பி, குரக்கன்)	எண்ணிக்கை	45	40

சலுகை அடிப்படையில் வித்துக்களை பகிர்ந்தளித்தல். (சோளம், சோயா, பி. வெங்காயம், மிளகாய், பயறு, நிலக்கடலை, உழுந்து, கவ்பி, குரக்கன்)		7,954	14,311
பி. வெங்காய தாய்க் குமிழ்களை வசந்தப்படுத்துதல்.		10,000	6,000
விவசாய கிணறுகளை வழங்குதல்.	எண்ணிக்கை	25	27
நீர் பம்பிகளை வழங்குதல்	எண்ணிக்கை	4	7
நுண் நீர் வளத் தொகுதிகளை வழங்குதல்	எண்ணிக்கை	76	122
பழப் பயிர்களின் அபிவிருத்தி			
மா மர புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்கள்	எண்ணிக்கை	55	51
பழ ஈக்களை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்	எண்ணிக்கை	20	16
புதிய பழ பயிர்ச் செய்கை		30	27
வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்			
வருடாந்த மற்றும் பல்லாண்டு பயிர்ச் செய்கை மேம்பாடு		6,000	6,135
தேன் உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் தேனீ பெட்டிகள் வழங்குதல்		400	396
காளான் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்	எண்ணிக்கை	60	62
விவசாயப் பரம்பல் நிகழ்ச்சித் திட்டங்கள்			
விவசாயப் பயிற்சிகள்	எண்ணிக்கை	1,249	1,250
உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள்			
விவசாய ஆராய்ச்சி மற்றும் பரம்பல் தொடர்பான உரையாடல்கள்			
பயிர் சிகிச்சைகள்			

3.2.2 2019 ஆம் ஆண்டின் விவசாய விளைத்திறன் நிகழ்ச்சித் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம்

வித்து உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

வித்து வகை	**அளவு மெ.தொ.**
வித்து நெல்	4,543
பெரிய வெங்காய நிஜ வித்து	1.7
சோயா	356
நிலக்கடலை	19.5
கவ்பி	8
சோளம்	42
மிளகாய்	1.2
மரக்கறிகள்	23

மரக் கன்றுகள் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

மரக் கன்று வகை	**அளவு**
பழக் கன்றுகள்	4,543
வீட்டுத் தோட்ட மரக் கன்றுகள்	1.7
காட்டு மரக் கன்றுகள்	356
மரக்கறிக் கன்றுகள்	19.5
அலங்கார மரக் கன்றுகள்	8

சகல வலங்களிலும் 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பௌதீக செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு பதவியணியானது மிகவும் அக்கறையுடன் இப்பௌதீக முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்காகச் செயற்பட்டுள்ளது.

3.2.3 பயிர் உற்பத்தியின் முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு – 2018/19 பெரும் போகம் மற்றும் 2019 சிறு போகம்.

பயிர்	**விதைக்கும் பரவெல்லை (ஹெக்.)**	**மகாவலி உற்பத்தி (மெ.தொ.)**	**தேசிய உற்பத்தி (மெ.தொ)**	**மகாவலி பங்களிப்பு (%)**
நெல்	156,696	889,774	4,592,000	19%
சோளம்	2,823	12,659	245,600	5%
பயறு	292	511	7,400	7%

கவ்பி	321	409	8,100	5%
சோயா	496	1,139	2,200	52%
பச்சை மிளகாய்	636	5,052	76,867	7%
நிலக்கடலை	577	1,146	26,900	4%
உழுந்து	160	240	4,900	5%
எள்ளு	108	89	6,100	1%
குரக்கன்	335	784	5,500	14%
பெரிய வெங்காயம்	448	8,957	18,600	48%
மரக்கறி	6,460	76,571		

பயிர்	**விதைக்கும் பரவெல்லை (ஹெக்.)**	**உற்பத்தி (மெ.தொ.)**
வாழை	9,761	146,411
பப்பாளி	722.6	13,007
மா	2,222	9,330

பழப் பயிர்ச் செய்கை

(தேசிய உற்பத்தித் தரவுகளானது கமநலத் திணைக்களத்தின் சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் மத்திய நிலையம் மூலம் வெளியிடப்படுகின்ற 2018/19 பெரும் போகம் மற்றும் 2019 சிறு போக விளைச்சல் எதிர்வுகூறல் அறிக்கைகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டன)

தேசிய உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக இலங்கை மகாவலி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்ட விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தேசிய உணவு உற்பத்திக்கு பங்களிப்புச் செலுத்தி அல்லது பொருளாதாரத்தை வளமாக்குதல் மற்றும் உற்பத்தி விளைத்திறனை அதிகரிப்பதனை மிக வெற்றிகரமாக நிறைவேற்றி உள்ளது.

நாற்று நடும் இயந்திரப் பயன்பாடு



பரக்குடை முறையில் நாற்றுக்களை விசுறுதல்



நெற் பயிர்ச்செய்கையில் களைக் கட்டுப்பாட்டு பயிற்சிப் பட்டறை



வித்து நெல் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்



குரக்கன் வித்து உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்



எள்ளு வித்து உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்



கலப்பினமிளகாய்வித்துஉற்பத்தி



சோளப் பயிர்ச்செய்கையில் சேனா மயிர்கொட்டிக் கட்டுப்பாட்டுப் பொறிகளை வழங்குதல்





பாதுகாப்பு இல்லங்களுக்குள் பயிர்ச்செய்கை



மரக்கறி பயிர்ச்செய்கைக்காக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்



மா மரங்களுக்கான கவ்வாத்து நிகழ்ச்சித் திட்டம்



பழப் பயிர்ச்செய்கை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்




சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாடு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்





வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/ வீட்டுத் தோட்டத்தை அண்டிய தேனீ வளர்ப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள்/ வீட்டுத் தோட்டத்தை அண்டிய காளான் வளர்ப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்/ விவசாய கண்காட்சிகள்




3.3 மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு

நோக்கம்

கால்நடை உற்பத்தி மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் குடும்பங்களின் வருமான மட்டத்தை மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்தின் போசணை நிலைமையை மேம்படுத்துதல்.

குறிக்கோள்

கால்நடை உற்பத்தி விளைத்திறன் மற்றும் இலாபப் பெறுகைகளை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குவதற்கான நிலைபெறுதகு உற்பத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

2019 ஆம் ஆண்டிற்கான இலக்குகள்

- வருடாந்த பால் உற்பத்தியை 25 மில்லியன் லீட்டராக அதிகரித்தல் மற்றும் தேசிய பால் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பங்களிப்பை அதிகரித்தல். (தேசிய பங்களிப்பு 6%)
- வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தியை 8000 மெட்ரிக் தொன் வரை அதிகரிக்கச் செய்தல் மற்றும் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பை 27% அதிகரித்தல்.
- வருடாந்த முட்டை உற்பத்தியை 35 மில்லியன் வரை அதிகரித்தல்.
- வருடாந்த அலங்கார மீன் உற்பத்தயை 35 மில்லியன் சோடிகள் வரை அதிகரித்தல்.
- பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகத்தின் மத்தியில் தூய பால் உபயோகத்தை மேம்படுத்துதல்.
- கால்நடை மரபணு வளத்தை சிறப்பான முறையில் பயன்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் விளைத்திறனை அதிகரித்தல்.
- வினைத்திறன் மிக்க மற்றும் விளைத்திறன் மிக்க தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல்.
- உரிய கால்நடை வைத்திய சேவைகளை வழங்குவதன் மூலம் கால்நடைச் சுகாதாரத்தை பாதுகாப்பதற்கு உறுதியளித்தல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்தியை மேம்பாடடையச் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்பை பலப்படுத்துதல்.
- சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல் மற்றும் குடியிருப்பாளர்களின் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல்.
- கால்நடை உற்பத்திகள் மூலம் குடியிருப்பாளர்களின் மற்றும் விவசாயிகளின் போசணை நிலைமையை உறுதி செய்தல் மற்றும் உழவர் சமூகத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- பயிற்சிச் செயல்முறைகள் மற்றும் ஆராய்ச்சிக்காக மகாவலி பண்ணைகளைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை வழங்குதல்.

3.3.1 மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திப் பிரிவின் செயற்பாடுகள் பின்வருமாறு செயற்படுத்தப்படும்.

1. பாற்பசு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.
2. கோழி வளர்ப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.
3. நன்னீர் மீன் உற்பத்தி.
4. அலங்கார மீன் உற்பத்தி.
5. மகாவலி மாதிரிப் பண்ணைகள் அபிவிருத்தி.
6. ஆடு வளர்ப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்.
7. விசேட செயற்திட்டங்களின் மீன்பிடி மற்றும் கால்நடை வள அபிவிருத்திச் செயற்பாடுகள்.

1. பாற்பசு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

மகாவலி பிரதேசங்களில் செயற்படுத்தப்பட்டுள்ள பால் பண்ணைகள் பிரதானமாக 2 – 5 மிருகங்களை உள்ளடக்கிய சிறிய அளவிலான அலகுகளைக் கொண்டதாகும். குடிமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல்களுக்கு அமைய நாட்டின் மிகப் பெரிய மாடுகள் மற்றும் எருமை மாடுகளின் தொகையானது உலர் வலயத்திலும், மற்றும் இடைநிலை வலயத்திலும் அறிக்கையிடப்படுகின்றன. ஆகையால், பால் உற்பத்தித் தொழிலை தரமுயர்த்துவதற்காக மகாவலி பிரதேசங்களுக்கு பாரிய அழுத்தம் உள்ளது. வளங்களைப் பெற்றுக் கொள்ளும் இயலுமையை அடிப்படையாகக் கொண்டு, விவசாயிகள் நுண் மற்றும் அரை நுண் மற்றும் சுயாதீன மாட்டு முகாமைத்துவ முறைகளைப் பின்பற்றுகின்றது. மாடுகளின் தொகைகள் ஜர்சி மற்றும் ஜர்சி – சஹிவால் கலப்புப் பிறப்பை போலவே தேசிய பேதங்களைக் கொண்டதாகும்.

இதற்கு மேலதிகமாக, இப்பிரதேசத்தில் முக்கியமான எருமை மாட்டு பேதமாக முரா, நிலிரவி மற்றும் அவற்றின் கலப்புப் பிறப்பு பேதமாகும். தேசிய பேதத்தைத் தவிர கலப்புப் பிறப்பு ஆரவல பசுக்களின் வழமையான நாளாந்த பால் உற்பத்தியானது 3 – 7 லீட்டர் வரை மாறுபடும். எருமை மாடுகளின் உற்பத்திகளின் உயர்ந்தபட்ச கொள்ளளவு நாள் ஒன்றிற்கு 4 இல் இருந்து 5 லீட்டர்களாகும். பால் உற்பத்தியில் உரிய விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்காக கால்நடைகளின் போசணை மிக முக்கியமான விடயமாகும். அதற்கமைய விவசாயிகள் கால்நடைகளின் உணவுத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக புற்கள் மற்றும் செறிந்த ஊண் ஆகிய இரண்டும் பயன்படுத்தப்படுகின்றன. பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்ட புல்லின வேற்றுமைகளுக்கு CO_3, நெருப்பு மற்றும் பக்டீரியா என்பன உள்ளடங்குகின்றன. பிரதேசங்களின் பசுமையான புல்லினங்கள் மட்டுப்படுத்தப்படும் போது உலர் காலங்களுக்காக பயன்படுத்துகின்ற ஏனைய உணவுப் பாதுகாப்பு முறையாக இருப்பது யாதெனில், உலர் புல்லினம் மற்றும் இரைபேணி உற்பத்தியாகும். மகாவலி பிரதேசத்தில் பால் சேகரிப்பதற்காக பிரதானமாக பங்களிப்பு வழங்குவது மில்கோ, நெஸ்லே, கொத்மலை மற்றும் பெலவத்த ஆகிய நிறுவனங்களாகும். ஏனையவை குழுக்களாக பால் சேகரிப்பவர்களின்





கூட்டுறவுச் சங்கம், ரிச்லயிப், கடுவெல, சிஐசி, செலோ மற்றும் மகாவலி பண்ணை மற்றும் பிரத்தியேக சேகரிப்பாளர்களும் இச்செயற்பாட்டுடன் தொடர்புபட்டு பால் சேகரிக்கும் வலையமைப்பை பலப்படுத்துகின்றனர்.

2019 ஆம் ஆண்டு திரவப் பால் உற்பத்தியானது 25.5 மில்லியன் லீட்டராகும். நாளாந்தம் திரவப் பால் சுமார் 75,000 உற்பத்தி செய்யப்படுவதுடன் மேற்குறிப்பிட்ட சங்கங்களின் பிரதான நோக்கம் சந்தைப்படுத்தலாகும். இதற்கு மேலதிகமாக சிறு அளவு திரவப் பால் நுகர்விற்காக பயன்பாட்டுத்தப்படுகின்றது. பொதுவாக ஒரு லீட்டர் பாலானது ரூ. 65 ஆக இருப்பதுடன் 2019 ஆம் ஆண்டில் மகாவலி விவசாயிகள் பால் உற்பத்தி மூலம் பெற்றுக் கொண்ட வருமானம் 1,658 மில்லியன் ரூபாயாகும்.

- **பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான உத்திகள்.**

1. உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி, வளங்களை நிலைபெறுதகு விதமாக பயன்படுத்துவதன் மூலம் அரை நுண் மற்றும் நுண் மாட்டு வேளாண்மை முறையை மேம்படுத்துதல்.
2. மேம்படுத்தப்பட்ட கால்நடைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் கால்நடை இனவிருத்தியை அதிகரிப்பதன் மூலம் பசு மாடுகளின்/ எருமை மாடுகளின் மரபணு வலிமையை மேம்படுத்துதல்.
3. உரிய போசணைத் திட்டங்கள், உணவுப் பாதுகாப்பு முறைகள், புற் தரைகளை நிறுவுதல் மற்றும் வினைத்திறன் மிக்க மிருக வைத்திய சேவையை வழங்குவதை ஒருங்கிணைப்பதன் மூலம் கால்நடைகளின் போசணையை மேம்படுத்துதல் மற்றும் கால்நடைகளின் தொகையை முகாமைத்துவம் செய்தல்.
4. பால் சங்கங்கள் மற்றும் சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் பால் சங்கங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் வலையமைப்பை உறுதிப்படுத்துதல்.

பாற்பசுச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்.

புல் நடுகை அலகை நிறுவுதல்.





பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.

புற்களை துண்டாக்கும் இயந்திரம்





பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்தி நடமாடும் பால் கறக்கும் இயந்திரம் வழங்குதல்.

2. கோழி வளர்ப்பை விருத்தி செய்தல்.

கோழி வளர்ப்பானது பிரதானமாக முட்டை மற்றும் இறைச்சி உற்பத்திக்காகவும் மகாவலி குடியேற்றவாசிகளின் குடும்பங்களின் போசணைத் தேவையை நிறைவேற்றுவதற்காகவும் செயற்படுகின்றது. அவ்வாறே, இத்தொழிலானது கிராமிய பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான வருமான தோற்றுவிப்புக் காரணியாகும். மகாவலி வலயங்களில் கோழி வளர்ப்பானது பிரதானமாக போசாக் குறைவை இயன்றளவு குறைப்பதற்கும், கிராமியப் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கும் விசேடமாக வீட்டுப் பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கும் உதவியாக இருக்கும். கிராம மக்களின் புரதத் தேவையை பூர்த்தி செய்வதுடன் நாட்டிலுள்ள 35% ஆன போசாக் குறைவு நிலைமையை இயன்றளவு குறைப்பதற்காக வீட்டை அண்டிய கோழி வளர்ப்பானது ஒரு தீர்வாகும்.

அடிப்படையாக சுமார் 17,950 விவசாயிகள் வீட்டை அண்டிய கோழி வளர்ப்பு மற்றும் வணிக ரீதியான முட்டை மற்றும் பொயிலர் உற்பத்திகளில் ஈடுபட்டு வருகின்றனர். 2019 ஆம் ஆண்டில்

முட்டை உற்பத்தியானது 35 மில்லியனாக இருந்ததுடன், இறைச்சி உற்பத்தியானது 9,000 மெட்ரிக் தொன் ஆகும். நாட்டு முட்டை ஒன்றின் விலையானது ரூ. 20.00 ஆகும் என்பதுடன், சாதாரண முட்டை ஒன்றின் விலை ரூ. 18.00 ஆகும். 2019 ஆம் அண்டில் முட்டை உற்பத்தியால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த தொகை 630 மில்லியன் ரூபாயாகும். கோழி இறைச்சி ஒரு கிலோவின் விலை சாதாரண விலை ரூ. 310.00 ஆகும் என்பதுடன் இதன் மூலம் 2019 ஆம் ஆண்டில் 2790 மில்லியன் ரூபாய் தொகையானது மகாவலி வலயத்தின் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மத்தியில் ஈட்டப்பட்டுள்ளது.

கோழி வளர்ப்பை விருத்தி செய்யும் உத்திகள்.

1. கோழிக் கூடுகளை அமைப்பதன் மூலம் இறைச்சி மற்றும் முட்டைக்காக காணப்படுகின்ற கோழி வளர்ப்புத் தொழிலை மேம்படுத்துதல்.
2. வீட்டை அண்டிய கோழி வளர்ப்பின் மேம்பாட்டிற்காக ஒரு மாதம் மற்றும் ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை பகிர்ந்தளித்தல்.
3. உயர் தரத்தைச் சேர்ந்த கோழிக் குஞ்சுகளை விநியோகிப்பதை உறுதி செய்வதற்காக பெற்றோர் பரம்பரையை தாபரித்தல்.
4. கால்நடைகளின் போசணைத் தேவையை பூர்த்தி செய்வதன் ஊடாக உற்பத்திகளை வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக மேற்கொள்ளுதல்.
5. தடுப்பூசியேற்றல் மற்றும் உரிய துப்புறவேற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் கால்நடைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல்.



வீட்டை அண்டிய கோழிக் குஞ்சுகளை வழங்குதல்.



முட்டை உற்பத்திக்காக மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தக ரீதியான கோழி வளர்ப்பு

3. நன்னீர் மீன் உற்பத்தி.

நன்னீர் மீன்பிடித் தொழிலின் இருப்பிற்காக மகாவலி பிரதேசங்களில் பிரதான நீர்த்தேக்கங்கள் 10 உட்பட நடுத்தர மற்றும் சிறிய அளவிலான நீர்த்தேக்கங்கள் 324 பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம், மீன்பிடித் தொழிலை விவசாய குடும்பங்களின் போசணைத் தேவைகள் மற்றும் நாட்டின் உணவுப் பாதுகாப்பை பூர்த்திசெய்வதற்காக

உதவுகின்றது. திலாபியா, கெட்லா மற்றும் மிரிகால் நன்னீர் மீன் உற்பத்தியின் முக்கியமான மீன் வகையாக இருப்பதுடன் அவ்வகைகள் மொத்த உற்பத்திக்கு 90% பங்களிப்பை வழங்கி உள்ளது.

இதற்கு மேலதிகமாக ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்ட நன்னீர் இறால் வளர்ப்பு முன்னெடுக்கப்படுகின்றது. நீர்த்தேக்கங்களில் தொடர்ச்சியான மீன் குஞ்சுகளை வைப்புச் செய்வதன் மூலம் மீன்பிடித் தொழிலில் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அதிகளவான குளங்களில் வலைக் கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்ப்பு மேற்கொள்ளப்படும். இதன் மூலம் உற்பத்திச் செலவினங்களை இயன்றளவு குறைத்து இத்துறை மூலம் கிடைக்கின்ற இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நன்னீர் மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மொத்த மீனவர்களின் எண்ணிக்கை 5450 ஆகும். 2019 ஆம் ஆண்டில் நன்னீர் மீன் உற்பத்தி 7364 மெட்ரிக் தொன் ஆக இருந்ததுடன் அதன் பெறுமதி 1841 மில்லியன் ரூபாயாகும். இவ்வாறு பாரிய மற்றும் நடுத்தர அளவான நீர்த்தேக்கங்களைப் போலவே நீரோட்ட நீர்த்தேக்கங்களின் மின் உற்பத்தி உட்பட 2019 ஆம் ஆண்டின் தேசிய மீன் உற்பத்திக்கு மகாவலியின் பங்களிப்பு 27% ஆகும்.

- **நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் உத்திகள்.**

1. நீர்த்தேக்கங்களில் குஞ்சுகளை வைப்புச் செய்தல் மற்றும் உற்பத்தி ஆற்றலை அதிகரித்தல்.
2. பிரதேசத்தில் மீன் குஞ்சுகளின் தேவைப்பாடுகளை உறுதி செய்வதற்காக மீன் இனவிருத்தி மத்திய நிலையங்களை நடாத்துதல்.
3. மீன்பிடி கருவிகள், வலைகள் மற்றும் படகுகள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்குவன் மூலம் மீன்பிடி சங்கங்களை ஊக்கப்படுத்துதல்.
4. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை உற்பத்தி செய்தல் மற்றும் மீன் உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் வலையமைப்பை பலப்படுத்துதல்.
5. மீனவர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த அறிவுகளை வழங்குவதற்காக ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
6. நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்காக நன்னீர் மீன் உற்பத்தி விளைச்சலை பெற்றுக் கொள்ளுதல்.





4. அலங்கார மீன் உற்பத்தியை மேம்படுத்துதல்.

மகாவலி பி, சி, டி, எச் மற்றும் உடவலவ வலயங்களில் அலங்கார மீன் உற்பத்தி அதிகளவில் காணப்படுவதுடன் நிகழ்காலத்தில் அலங்கார மீன் வளர்ப்பில் ஈடுபடுகின்ற விவசாயிகளின் எண்ணிக்கை சுமார் 840 ஆகும். குடியேற்றவாசிகளாக காணிகளை உரித்துடைய சமூகத்தின் இரண்டாம், மூன்றாம் தலைமுறைகளின் பிள்ளைகளுக்கு மத்தியில் விவசாய நடவடிக்கைகளுக்காக காணிகள் மட்டுப்படுத்தப்பட்டமையால் சிறு இடப் பரப்பில் அதிக வருமானம் ஈட்டக் கூடிய தொழிலாக அலங்கார மின் வளர்ப்பு பிரசித்தி பெற்று காணப்படுகின்றது. இத்தொழிலில் அலங்கார மீன் வளர்ப்பாளர்கள், குஞ்சுகளை உற்பத்தியில் ஈடுபடுகின்ற இனவிருத்தியாளர்கள், மீன் உற்பத்திகளை சந்தைகளுக்காக சேகரிப்பவர்கள் மற்றும் மொத்த மற்றும் சில்லறை அளவிலான விற்பனையாளர்கள் என்ற அடிப்படையில் பாரிய தொகையினர் வலையமைப்பாக ஒன்றிணைந்த உற்பத்திச் செயன்முறையை இத்துறையில் காணக்கூடியதாக இருக்கும். அவ்வாறே, 800 குடும்பங்களும் அதிகமானோருக்காக தமது வாழ்வாதாரத்தை தக்க வைத்துக் கொள்ள உதவுகின்ற உற்பத்திப் பிரிவாகவும் கருத்திற் கொள்ள முடியும். அதைப்போலவே, பிரதேச மட்டத்தில் கொள்வனவாளர்களால் தரம் வாய்ந்த உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஆற்றுப்படுத்துவதுடன், அதிகளவான உற்பத்திகள் தற்பொழுது ஆற்றுப்படுத்தப்படுவது உள்நாட்டுச் சந்தைகளுக்காகும். அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு முக்கியமாக இவ் உற்பத்தி ஏற்றுமதி செய்யப்படும். இதற்கு மேலதிகமாக வெளிநாட்டுச் சந்தைகளில் அதிக கேள்வி உள்ள தாய் மீன்கள் தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு உற்பத்திச் செயற்பாடுகளுக்காக ஒப்பந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உள்நாட்டுச் சந்தையில் அதிக கேள்வியுடைய மீனாக பொன் மீன்கள் வர்க்கம் இருப்பதுடன் சர்வதேச சந்தைகளுக்காக கப்பி, ஸ்வட்டேல், ப்ளேடி, மோலி ஆகிய வர்க்கங்களுக்காக அதிக கேள்வி உள்ளது. 2019 ஆம் ஆண்டாகும் போது அலங்கார மீன் சோடிகள் 29 மில்லியன்கள் தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளுக்காக விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி 725 மில்லியன் ரூபாயாகும்.

- **அலங்கார மீன் வளர்ப்பை விருத்தி செய்யும் உத்திகள்.**

1. அலங்கார மீன் உற்பத்திக்காக சேற்றுக் குளங்களை அமைத்தல்.
2. மீன் விசேடங்களின் நிற அபிவிருத்தி மற்றும் தரத்தை உறுதி செய்வதற்காக தனிமைப்படுத்தலுடன் கூடிய தாங்கிகளை நிறுவுதல்.
3. விவசாயிகளுக்கு மீன் குஞ்சுகளை விநியோகிப்பதற்காக இனவிருத்தி மத்திய நிலையங்களைத் தாபரித்தல்.
4. தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் விவசாய சங்கங்களை பலப்படுத்துதல்.
5. சிறு அளவிலான தொழில் முயற்சியாளர்களின் செயற்பாடுகளை பலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
6. சந்தைப்படுத்தல் வலையமைப்பை விருத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகள் தொடர்பாக கவனத்தைச் ஆற்றுப்படுத்தி உற்பத்தியின் தரத்தை தக்க வைத்தல்.



அலங்கார மீன் வளர்ப்பிற்காக தனிமைப்படுத்தப்பட்ட தாங்கிகள் நிறுவுதல்



அலங்கார மீன்களை விற்பனைக்காக வகை பிரித்தல்.

5. மகாவலி பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் முகாமைத்துவத்தின் கீழ் பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நிகழ்காலத்தில் 13 பண்ணைகள் மகாவலி வலயங்களில் பரவிக் காணப்படுகின்றன. அடிப்படை விவசாயப் பயிர்கள் உற்பத்தி அலகுகள் நடாத்தப்பட்டாலும் சீரற்ற மற்றும் நிச்சயமற்ற காலநிலை காரணமாக பயிர்ச் செய்கை முகங்கொடுத்துள்ள ஆபத்தான நிலைமைக்கு தீர்வாக விவசாய பயிர்களுக்கு மேலதிகமாக கால்நடை வளங்கள் மற்றும் மீன்பிடி உற்பத்தி நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒன்றிணைந்த பண்ணையாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பண்ணை அபிவிருத்திச் செயற்பாடுகளின் அடிப்படை நோக்கமாக இருப்பது யாதெனில்,

- பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்காக விவசாய மற்றும் கால்நடை வளங்கள் குறித்து தொழில்நுட்ப அறிவை வழங்கும் பயிற்சிகள் மற்றும் மாதிரி அலகுகளாக பண்ணைகளைச் செயற்படுத்துதல்.

- விவசாய மற்றும் கால்நடை வளத் துறைகளின் உற்பத்திகளின் விளைத்திறனை அதிகரிப்பதற்காக பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளும் அலகாக இருத்தல்.
- மாடுகளின் இனவிருத்தி மத்திய நிலையமாக வலயத்திற்கு அவசியமான ஆட்சியான பரம்பரை இயல்புகள் மற்றும், ஆட்சியான பாற்பசுக் கன்றுகளை வழங்குதல், முட்டைகளை அடைகாக்கும் இயந்திரங்கள் மூலம் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்குதல் மற்றும் பால் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட துணை உற்பத்திகளை மேற்கொள்ளுதல் மற்றும் சந்தைப்படுத்தல் அலகாகக் காணப்படுதல்.

இவ்வாறு, மகாவலி பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக பிரதேச விவசாயிகளுக்கு பரந்து விரிந்த சேவை கிடைக்கப்பெறும்.



பாற்பசு அபிவிருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.



விவசாயிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

3.3.2 நிதிசார் முன்னேற்றம்

அதற்கமைய, 2019 ஆம் ஆண்டிற்காக மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவிற்குரிய நிதிசார் முன்னேற்றங்களானது வலயங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட விதமானது பின்வரும் அட்டவணைப் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொ. இல.	வலயம்	2019 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்	2019 ஆம் ஆண்டிற்காக மறு சீரமைக்கப்பட்ட நிதிகளை ஒதுக்குதல்	2019.12.15 ஆம் திகதிக்கு செலவு செய்யப்பட்ட மொத்த தொகை	நிதிசார் முன்னேற்றம்
01	பி வலயம்	6.25	5.53	5.42	98
02	சி வலயம்	4.15	4.45	4.23	95

03	டி வலயம்	3.5	3.3	3.2	96
04	ஜீ வலயம்	2.5	2	1.98	99
05	எச் வலயம்	5.25	5	4.68	94
06	ஹுருளுவெவ வலயம்	2.5	2.3	1.91	83
07	வலவ வலயம்	5	4.3	4.3	100
08	மினிப்பே வலயம்	1.5	1	0.96	96
09	பிரதான அலுவலகம்	1.35	1.07	0.9	84
உப கூட்டுத் தொகை		**32**	**29**	**27.58**	**95**
செயற்திட்டங்களுக்காக ஒதுக்குதல்.					
01	எல் வலயம்	9.25	7.76	7.22	93
02	ரிதிமாலியத்த	4.48	2.82	2.83	100
03	ரம்பகெண் ஓயா வலயம்	2.39	0.85	0.69	81
மொத்த கூட்டுத் தொகை		**48.12**	**40.43**	**38.32**	95

3.3.3 பௌதீக முன்னேற்றம் – 2019

தொ. இல.	செயற்பாடுகள்	அலகு	இலக்கு	முன்னேற்றம்
01	மாட்டுத் தொழுவங்களை அமைத்தல்	எண்ணிக்கை	78	76
02	நடமாடும் பால் கறக்கும் இயந்திரங்களை விநியோகித்தல்	எண்ணிக்கை	19	19
03	பால் சேகரிக்கும் உபகரணங்களை வழங்குதல்.	எண்ணிக்கை	62	62
04	உயிர் வாயு உற்பத்தி அலகுகளை நிறுவுதல்	எண்ணிக்கை	04	04
05	புற்தரை அலகுகளை நிறுவுதல்	அலகுக் கணக்குகள்	19	18
06	புற்களை துண்டாக்கும் இயந்திரங்களை வழங்குதல்	எண்ணிக்கை	11	13
07	புல் வெட்டும் இயந்திரங்களை வழங்குதல்	எண்ணிக்கை	10	20
08	மிருக சிகிச்சைகளை நடாத்துதல்	எண்ணிக்கை	47	50
09	கால்நடைகளை காப்புறுதி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள்	எண்ணிக்கை	10	08
10	இரைபேணி பீப்பாய்கள்/ தேயிலை களஞ்சியப்படுத்தும் மத்திய நிலையம்	எண்ணிக்கை	358	334
11	கோழிக் கூடுகள் அமைத்தல்	எண்ணிக்கை	127	122

12	ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை விநியோகித்தல்	எண்ணிக்கை	36,890	34,765
13	நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகள் வைப்புச் செய்தல்	எண்ணிக்கை (மில்லியன்)	1.43	0.60
14	விற்பனைக்காக மீன்களை சேகரிக்கும் மத்திய நிலையம்	எண்ணிக்கை	1	1
15	மீன் குஞ்சுத் திரள்கள் வைப்புச் செய்தல்.	எண்ணிக்கை	3500	2900
16	நன்னீர் இறால் வளர்ப்பு	எண்ணிக்கை	600,000	600,000
17	ஆட்சியான பரம்பரை இயல்புகளை உடைய பாற்பசுக்களை வழங்குதல்	எண்ணிக்கை	21	22
18	செயற்கைக் கருவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்	எண்ணிக்கை	216	274
19	மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல் (வலைகள்)	எண்ணிக்கை	175	261
20	மாடுகளுக்கான இனவிருத்தி மத்திய நிலையங்களை நிறுவுதல்.	எண்ணிக்கை	1	1
21	பால் வாரம் நிகழ்சித் திட்டங்களை நடாத்துதல்.	எண்ணிக்கை	49	54
22	மீன்களுக்கான இனவிருத்தி மத்திய நிலையங்களை நிறுவுதல்.	எண்ணிக்கை	3	2
23	சேற்றுக் குளங்களை அமைத்தல்.	எண்ணிக்கை	19	19
24	தனிமைப்படுத்தப்பட்ட தாங்கிகளை அமைத்தல்.	எண்ணிக்கை	20	20

25	ஆட்டுக் கூடுகளை அமைத்தல்.	எண்ணிக்கை	11	20
26	ஆடுகளுக்கான இனவிருத்தி மத்திய நிலையங்களை நிறுவுதல்.	எண்ணிக்கை	3	2
27	உத்தியோகத்தர்கள்/ விவசாயிகளுக்கான பயிற்சிகள்.	எண்ணிக்கை	164	196

3.4 தாபன அபிவிருத்திப் பிரிவு

3.4.1 சமூக அபிவிருத்தி

மகாவலி வலயத்தினுள் போதைப் பொருட்கள் அற்ற, துன்புறுத்தல்கள் அற்ற, துஷ்பிரயோகங்கள் அற்ற, ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த ஆரோக்கியமான விவசாய சமூகம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்காக வழிகாட்டல்களை உருவாக்குதல் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளின் அடிப்படை நோக்கமாகும்.

இதன் கீழ்,

- போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்காக கிராமிய மட்டத்தில் சுயேட்சைத் தலைவர், தலைவிகளை பயிற்றுவித்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்கள், மகளிர் துன்புறுத்தல்கள், வீட்டு வன்முறைகள், குறைந்த வயது திருமணங்கள் மற்றும் குறைந்த வயதில் கர்ப்பம் தரித்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுகள்.
- தொற்றா நோய்கள் தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் சுகாதார சிகிச்சைகள் நடாத்துதல். (விசேடமாக துரிதமாக பரவி வருகின்ற சிறுநீரக நோயில் இருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் இனங்காணப்பட்ட நோயாளர்களை சிகிச்சைக்காக ஆற்றுப்படுத்துதல்)
- கல்விக் கருத்தரங்குகள் நடாத்துதல் (ஐம்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தர பரீட்சை, கா.பொ.த. உயர்தரப் பரீட்சைகளுக்காக)
- மகாவலி நிதியத்தால் புலமைப்பரிசில்களை வழங்குதல். (பெற்றோர்கள் மிகவும் வறிய, அங்கவீனமான அல்லது காலம் சென்ற, சாதாரண தரத்தில் சித்திபெற்ற மாணவர்களுக்காக வழங்கப்படும்).

2019 ஆம் ஆண்டின் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய இலக்குகளைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 596 ஆகும். அதில் 672 நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னேற்றத்தைப்

பெற்றுள்ளதுடன் நிதிசார் இலக்கு 31.28 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன் நிதிசார் முன்னேற்றம் 30 மில்லியன் ரூபாயாகும்.

வலயம்	**பயிற்றுவிக்கப்பட்ட கிராமிய சுயேட்சைத் தலைவர் தலைவிகளின் எண்ணிக்கை**	**விழிப்புணர்வூட்டப்பட்ட பாடசாலை மாணவ மாணவிகளின் எண்ணிக்கை**	**விழிப்புணர்வூட்டப்பட்ட கிராமத்து பிரஜைகளின் எண்ணிக்கை**
பி வலயம்	23	1318	1360
சி வலயம்	45	1129	2937
ஈ வலயம்	42	885	300
எச் வலயம்	40	878	2356
எல் வலயம்	40	-	842
மெதிரிகிரிய வலயம்	-	75	1207
மொரகஹகந்த வலயம்	-	200	525
ஹுருளுவெவ வலயம்	42	1250	1200
ரம்பகெண்ஓயா வலயம்	48	2100	188
வலவ வலயம்	40	440	1253
கூட்டுத் தொகை	**280**	**8275**	**12168**

(நெறிமுறைமிக்க பிள்ளைகள் போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் – 2019)

நெறிமுறைமிக்க பிள்ளைகள் போதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் – இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் சில)


මහවැලි ජනපදවල දරුවන්ට
මත්ද්‍රව්‍ය පිළිබඳ සම්මන්ත්‍රණයක


හෙල්දෙණියේ මත්ද්‍රව්‍ය නිවාරණ වැඩසටහනක්

මැදමහනුවර - ඉන්දික බණ්ඩාර

මත්ද්‍රව්‍ය නිවාරණ ජාතික වැඩසටහනට සමගාමීව ශ්‍රී ලංකා මහවැලි අධිකාරියේ වික්ටෝරියා කලාපයේ සුජාත දරුවෝ සංසදය අන්තරායකර ඖෂධ පාලක ජාතික මණ්ඩලයේ හා හෙල්දෙණිය පොලිසියේ අනුග්‍රහය ඇතිව මත්ද්‍රව්‍ය නිවාරණ සම්බන්ධයෙන් අත් පත්‍රිකා බෙදිදීමක් හෙල්දෙණිය නගරයේදී පැවැත්විණි.



நெறிமுறைமிக்க பிள்ளைகள் கிராமிய சுயேட்சை தலைவர் தலைவிகளினால் சுவரொட்டிகள் மூலம் மற்றும் வியாபார நிலையங்களுக்குச் சென்று பிரஜைகளுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

3.4.2 குடியேற்ற திறமைகள் மற்றும் தொழிற் பயிற்சிகள்

- மகாவலி குடியேற்றவாசிகளின் பொருளாதார மட்டத்தை 30,000.00 ரூபாயை விட அதிகரிக்கும் நோக்குடன் தொழிற் பயிற்சிகள் வழங்குதல் மற்றும் அதன் ஊடாக அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது அடிப்படை எதிர்பார்ப்பாகும்.
- விவசாய அமைப்புக்களின் உத்தியோகத்தர்களுக்காக கணக்கியல் பயிற்சிகள் வழங்குதல் மற்றும் பொல்பொல்ல தேசியக் கல்வி கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் மகாவலி வலயங்களில் உயர் தரத்தில் சித்தி பெற்ற இளைஞர் யுவதிகளுக்கு கணக்காய்விற்கு அவசியமான பயிற்சிகளை வழங்கி விவசாய அமைப்புக்களின் கணக்காய்விற்காக அதிகாரத்தை வழங்குதல் மற்றும் வலயத்தின் விவசாய அமைப்புக்களை வருடாந்தம் கணக்காய்விற்கு உட்படுத்துதல் என்பன அவர்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

2019 ஆம் ஆண்டில் இதன் கீழ் 90 நிகழ்ச்சித் திட்டங்கள் இலக்காகக் கொள்ளப்பட்டதுடன் அதில் 76 நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 7.685 மில்லியன் ரூபாய் இலக்கு மற்றும் 7.685 மில்லியன் ரூபாய் நிதிசார் முன்னேற்றம் பெற்றுக் கொள்ளப்பட்டது. மேலும், வறுமையைப் இல்லாதொழிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டின் மாதாந்த வருமானம் 30,000.00 ரூபாய்க்கும் அதிகமாக சம்பாதிப்பதற்காக 844 குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

தொடர் இலக்கம்	**வலயம்**	**தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை**
01	பி வலயம்	22
02	சி வலயம்	175
03	ஈ வலயம்	57
04	எச் வலயம்	88
05	எல் வலயம்	48
06	மெதிரிகிரிய வலயம்	132
07	மொரகஹகந்த வலயம்	30
08	ஹுருளுவெவ வலயம்	73
09	ரம்பகெண் ஓயா வலயம்	53
10	வலவ வலயம்	166
கூட்டுத் தொகை		**844**

3.4.3 மகளிர் அபிவிருத்தி

- கட்டுமானங்களை மேம்படுத்துதல் மற்றும் வீட்டு நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக வழிகாட்டுதல் என்பன இதன் பிரதான நோக்கமாகும்.
- மகாவலி வலயத்தினுள் உள்ள பெண்களை ஊக்கப்படுத்துவதற்காக இதன் கீழ் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.
- தனது வீட்டில் இருந்தே வருமானத்தை ஈட்டுவதற்காக அவர்களுக்கு செயற்பட முடியுமான விதத்தில் சுய தொழில்கள் மற்றும் பல்வேறு தொழிற் பயிற்சிகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு அவசியமான உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகளும் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

2019 ஆம் ஆண்டில் இதன் நிகழ்ச்சித் திட்ட இலக்கு 149 ஆக இருந்ததுடன் முன்னேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் 118 ஆகும். நிதிசார் செலவு 4.2 மில்லியன் ரூபாயாகும்.

3.4.4 விவசாய அமைப்புக்களின் முன்னேற்றம்

விவசாய அமைப்புக்களின் தேர்வுகளை நடாத்துதல் மற்றும் விவசாய அமைப்புக்களுக்காக உரிய கட்டளைச் சட்டங்கள், விதிகளும் ஒழுங்குமுறைகளும், நீர் முகாமைத்துவம் ஆகியவை தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்படும். அவ்வாறே, விவசாயிகளின் மனப்பாங்கு விருத்தி மற்றும் ஆற்றல் விருத்திக்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதுடன் முகாமைத்துவக் குழுவின் கீழ் விவசாயிகளின் பிரச்சினைகளுக்காக தீர்வுகள் வழங்கப்படுவதும் மேற்கொள்ளப்படும்.

2019 ஆம் ஆண்டில் விவசாய அமைப்புக்களை பலப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 2018 – 2019 வலயங்களுக்கு இடையே சிறந்த விவசாய அமைப்பை தெரிவு செய்யும் போட்டி நிகழ்த்தப்பட்டதுடன் அதில் விவசாய அமைப்புக்கள் தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.



வலயங்களுக்கு இடையே சிறந்த விவசாய அமைப்பை தெரிவு செய்தல் – 2018 – 2019 பரசளிப்பு விழா – சி வலயம்

3.4.5 சமூக பங்களிப்புடன் கூடிய நீர்ப்பாசனத் தொகுதிகளின் முகாமைத்துவம்.

- கால்வாயத் தொகுதிகளை தாபரித்தல் மற்றும் இயக்கல் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குவதன் மூலம் கெத் கால்வாயை நவீன மயப்படுத்தும் சமூக பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டம்.
- புணரமைப்புச் செய்ய வேண்டிய மட்டத்தில் உள்ள கெத் கால்வாயை சமூக பங்களிப்புடன் மற்றும் ஊழிய ஒத்துழைப்புடன் மூலப் பொருட்களுக்கான செலவினங்களை மாத்திரம் ஏற்று புணரமைத்தல்.

(வினைத்திறனான நீர் பயன்பாட்டிற்காக விவசாயிகளை பழக்கப்படுத்துதல் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை நடைமுறையாகவே இதன் மூலம் ஏற்படுத்தப்படுவதுடன் பாரிய செவலினங்களை ஏற்க வேண்டிய செயற்பாடுகளை சமூகத்தின் உழைப்புடன் மிகவும் விளைத்திறனாக மேற்கொள்ளப்படும்.)

2019 ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித் திட்டமானது மகாவலி பி, சி, எச், மொரகஹகந்த, எல், வலவ, ஹுருளுவெவ ஆகிய வலயங்களில் செயற்படுத்தப்பட்டன. உயர்ந்த பட்சம் ஐந்து (05) இலட்சத்தின் கீழ் கால்வாய்களை புணரமைப்பதற்காக நிதி வழங்கப்படுவதுடன் அதன் நிறைவுப் பெறுமதி 15 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. அதற்கமைய, சுமார் மீ. 18922 நீளமான நீர்ப்பாசனத் தொகுதிகள் 8.47 மில்லியன் ரூபாய் சேமிப்புடன் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

வலயம்	புணரமைக்கப்பட்ட பிரிப்புக் கால்வாய்களின் அளவு	புணரமைக்கப்பட்ட கால்வாய்களின் நீளம் (மீட்டர்)	மதிப்பீடு செய்யப்பட்ட தொகை	உழைப்பின் பெறுமதி (மில்லியன் ரூபாய்)	முழுமையான நிறைவுகளின் பெறுமதி
பி வலயம்	10	1118	4.865	0.73	5.6
சி வலயம்	23	8187	9.85	3.25	13.1
எச் வலயம்	9	820	4.97	1.37	6.34
எல் வலயம்	1	200	0.49	0.19	0.68
வலவ வலயம்	19	2038	7.02	1.26	8.28

ஹுருளுவெவ வலயம்	1	5406	0.49	0.35	0.84
மொரகஹகந்த வலயம்	4	1153	1.99	1.32	3.31
கூட்டுத்தொகை	**67**	**18,922**	**29.675**	**8.47**	**38.15**



முந்திய நிலைமை



பிந்திய நிலைமை



முந்திய நிலைமை



புணரமைப்பின் பின்னர் பி வலயம்

3.5 வியாபார அபிவிருத்திப் பிரிவு

<u>பின் புலம் –</u>

வியாபார அபிவிருத்திப் பிரிவானது, இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான முதன்மையான வகிபாகத்தை நிறைவேற்றுகின்ற பிரிவாகும். மகாவலி வலயத்தினுள் ஒவ்வொரு வலயங்களுக்கும் தனித்துவமான மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை உயர்ந்த பட்ச விளைத்திறனாக பயன்படுத்தி தொழில் முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக பொறுப்புக்களை ஏற்று செயற்படுகின்றது.

அதற்கமைய மகாவலி வலயங்களில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுற்றுலா போன்ற உரிய பல்வேறு துறைகளில் சிறிய, நடுத்தரமான மற்றும் பாரியளவிலான பல்வேறுபட்ட தொழில் முயற்சியாளர்களை தோற்றுவிப்பதற்காக செயற்திட்டங்களை திட்டமிடுதல், செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மூலோபாயங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பிடுதல், தனியார் பிரிவின் வியாபாரங்களை அபிவிருத்திக்காக ஆற்றுப்படுத்துதல், சந்தைப்படுத்தலுக்காக வியாபார நிலைய இணைப்புக்களை ஏற்படுத்துதல், வியாபார மேம்பாட்டிற்காக கடன் திட்டங்களை விரிவுபடுத்தி தொழில் முயற்சியாளர்களின் மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல், அவர்களுக்கு அவசியமான வழிகாட்டல்கள் என்பன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும்.

<u>வியாபார அபிவிருத்திப் பிரிவின் நோக்கங்கள் –</u>

01. அதிகார சபையின் வருடாந்த வருமான நிலைமையை அதிகரித்தல்.
02. மகாவலி அதிகார பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களைத் தோற்றுவித்தல்.
03. முதலீடுகள் மூலமான பிரதேச அபிவிருத்தி.
04. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களைத் உருவாக்குதல்.
05. சுய தொழில் பயிற்சிகள் மூலம் சிறிய அளவிலான உற்பத்தித் துறைக்கு ஒத்துழைப்பை வழங்குதல்.
06. மூலதன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு அவசியமான மத்தியஸ்தராக இருத்தல்.
07. வியாபார நிலைய ஒருங்கிணைப்புகள் மூலம் மகாவலி அதிகார பிரதேசங்களின் உற்பத்திகளுக்கு அதிகூடிய பெறுமதியைப் பெற்றுக் கொடுத்தல்.
08. தொழில் முயற்சி ஆற்றல் விருத்தி மற்றும் தொழில்நுட்ப திறமைகளை வழங்குதல்.
09. தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு.
10. வியாபார ஆலோசனைகள்/ வியாபார திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவிகளைச் செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
11. தேசிய மின் உற்பத்திக்காக புதுப்பிக்கத்தகு மின்சார உற்பத்திக்கு பங்களிப்பு வழங்குதல்.

வியாபார அபிவிருத்திப் பிரிவின் வகிபாகங்கள் –

- கால்நடை வளர்ப்பு, அலங்கார மீன்கள், தேங்காய்ப் பயிர்ச்செய்கை, ஏனைய பயிர்கள் மற்றும் பழப் பயிர்ச் செய்கை ஆகிய முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக காணிகளை வழங்குவதன் அடிப்படையில் குத்தகை வருமானம் பெற்றுக் கொள்ளுதல்.
- சுற்றாடல் தோழமையுடைய சுற்றுலா வாய்ப்புக்களை விரிவடையச் செய்வதற்காக நீர்த்தேக்க சுற்றுலாப் படகுச் சேவைகளுக்காக அனுமதி வழங்கி வருடாந்த குத்தகைத் தொகையைப் பெற்றுக் கொள்ளுதல்.
- மகாவலி அதிகார பிரதேசங்களில் கவர்ச்சி மிக்க இடங்களில் அமைந்துள்ள சுற்றுலா மாளிகைகளை நவீன மயப்படுத்தி உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைப்பதன் ஊடாக வருமானத்தை ஈட்டுதல்.
- சூரிய மின் சக்தி, உயிர்த் திரள் மின் சக்தி, நீர் மின் சக்தி ஆகிய மின்சாரச் செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட காணிகளின் குத்தகை வருமானம்/ மகாவலி அதிகார சபையுடன் பங்கு வியாபாரமாக ஆரம்பிப்பதன் மூலம் இலாபத்தை ஈட்டுதல்.
- நீர்த்தேக்கங்களின் மேற்பரப்பில் மிதக்கும் சூரிய சக்தி மின் செயற்திட்டத்திற்காக மகாவலி நீர்த்தேக்கங்களின் மேற்பரப்பில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குதல்.
- தேசிய சீனித் தேவைப்பாட்டை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்காக சீனித் தொழிற்சாலைகள் போன்ற செயற்திட்ட காணிகள் மற்றும் பிரதேசத்தின் விவசாயிகளுக்கு மத்தியில் காணிகளை பிரித்து வழங்குவதன் மூலம் குத்தகை வருமானத்தைப் போன்றே ஆக்கியோன் பங்கையும் பெற்றுக் கொள்ளுதல்.
- கைத்தொழில் பூங்காக்களை நடாத்திச் செல்வதன் ஊடாக பிரதேச மட்டத்தில் பொருளாதாரத்தைப் பலப்படுத்துதல்.
- விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு செயற்திட்டத்தின் ஊடாக அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல்.
- கிராமிய ரீதியில் வியாபார அபிவிருத்தி மூலோபாயங்களை விருத்தி செய்வதற்காக சிறிய அளவிலான வியாபாரிகளுக்காக உபகரணங்கள் மற்றும் கருவிகளை வழங்குவதற்காக 50% மகாவலியின் நிதிசார் பங்களிப்பை வழங்குதல்.
- பாரம்பரிய தேசிய உணவுகளை பிரபலமாக்குதல் மற்றும் மகளிர் தொழில் முயற்சி விருத்திக்காக மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல்.
- எற்றுக் கொள்ளப்பட்ட தொழிற் பயிற்சிச் சான்றிதழ்களை உடையவர்களாக மகாவலி வலயத்தைச் சேர்ந்த பிள்ளைகளை மாற்றியமைத்து தொழில் வாய்ப்புக்களை எற்படுத்திக் கொடுத்தல்.

2019 ஆம் ஆண்டில் வியாபார அபிவிருத்திப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்.

- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சுற்றுலா மாளிகைகளை நவீன மயப்படுத்தும் செயற்திட்டம்.
- "மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலைய" செயற்திட்டம்.
- தனியார் பிரிவிற்காக மகாவலி வலயங்களில் முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- மகாவலி நீர்த்தேக்கங்களில்/ குளங்களில் சுற்றாடல் தோழமையுடைய படகுகளைப் போலவே மிதக்கும் விமான சேவையை ஆரம்பித்தல்.
- மகாவலி தொழில் முயற்சி விருது விழா.
- மகாவலி வலயங்களில் தொழில் அற்ற இளைஞர் யுவதிகளுக்காக தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி புலமைப் பரிசில்களை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை பலப்படுத்துதல், ஒத்துழைப்புகளை வழங்குதல் மற்றும் சுய தொழில் பயிற்சிக்கு அவசியமான தொழில்நுட்ப அறிவை வழங்குதல்.
- புதிய தொழில் முயற்சியாளர்களை இனங்காணுதல் மற்றும் பயிற்சிக்காக தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- ஆற்றல் விருத்தி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- முதலீட்டு மேம்பாடு மற்றும் வியாபார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சுற்றுலா மாளிகைகளை நவீன மயப்படுத்தும் செயற்திட்டம்.

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சகல சுற்றுலா மாளிகைகளினதும் வருமான தோற்றுவிப்புச் செயற்திட்டமாக மாற்றியமைக்கும் நோக்கில் பணிப்பாளர் (வியாபார அபிவிருத்தி) நியமிக்கப்பட்டுள்ளதுடன், வியாபார அபிவிருத்திப் பிரிவினுள் நிறுவப்பட்டுள்ள இயக்கல் அலகானது உதவிப் பணிப்பாளர் ஒருவரின் (வியாபார அபிவிருத்தி) இன் கீழ் செயற்படுத்தப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டில் நவீன மயப்படுத்தப்பட்ட சுற்றுலா மாளிகைகள்.

உல்ஹிடிய, ரத்கிந்த சுற்றுலா மாளிகையின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளின் பின்னர் நடாத்திச் செல்லப்படுவதுடன், கொத்மலை கட்டிடத்தை பழுதுபார்த்தல், நொச்சியாகம கட்டிடத்தை பழுதுபார்த்தல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. கலா வாவி, நுவரெலியா,

தொ. இல.	வலயம்	சுற்றுலா மாளிகையின் பெயர்		சுற்றுலா மாளிகைகளின் எண்ணிக்கை	அண்மித்த நகரம்	அறைகளின் எண்ணிக்கை
1	பி	ருஹுணுகெத		1	வெலிகந்த	10
		பிம்புரத்தேவ		2	அரலகங்வில	4
2	சி	தெஹிஅத்தகண்டிய i		3	தெஹி அத்தகண்டிய	10
		தெஹிஅத்தகண்டிய ii		4	தெஹி அத்தகண்டிய	5
		தெஹிஅத்தகண்டிய iii		5	தெஹி அத்தகண்டிய	3
		கிந்துரு கோட்டை பயிற்சி நிலையம்	VIP	6	கிந்துரு கோட்டை	1
			சாதாரண		கிந்துரு கோட்டை	3
			A தரம்		கிந்துரு கோட்டை	20
			B தரம்	7	கிந்துரு கோட்டை	8
		உல்ஹிடிய / ரத்கிந்த	I		மெதகம	2
			II		மெதகம	3
3	டி	சூரியவெவ		8	கந்தளாய்	6
		பிசோபுற (புதிய)		9	மெதிரிகிரிய	6
4	ஜீ	மொரகஹகந்த விசேட செயற்திட்டம்		10	மொரகஹ கந்த	4
		பகமூண		11	பகமூண	6
5	எச்	கலா வாவி	VIP	12	கலா வாவி	2

			சாதாரண		கலா வாவி	3
		தம்புத்தேகம		13	தம்புத்தேகம	4
		நொச்சியாகம		14	ஏவிடியாகம	6
		நிராவிய		15	தம்புத்தேகம	4
6	எல்	வெலிஓயா		16	சம்பத் நுவர	4
7	விக்டோரியா	222 வதிவிட வியாபார அலுவலக சுற்றுலா மாளிகை		17	திகனை	4
		நுவரெலியா		18	நுவரெலியா	6
		கொத்மல ை 119	2	19	கொத்மலை	3
		பூவெலகடை		20	கண்டி	3
8	வலவ	உடவலவ		21	எம்பிலிபிடிய	4
		எம்பிலிபிடிய		22	எம்பிலிபிடிய	8
		மயுரபுற		23	சூரியவெவ	5
9	ரம்பகெண் ஓயா	மகஓயா		24	மகஓயா	4
		பதுளை		25	பதுளை	6
10	அடிப்படை பணி நிர்வாக செயற்படுத்துகைகள் மற்றும் தாபரிப்பு	பொல்கொல்ல		26	கண்டி	4
		கொத்மல ை 119	1	27	கொத்மலை	4
		ரன்தெனிக ல	VIP 1	28	மஹியங்கனை	3
		போவதென்ன		29	நாவுல	3
		மாதுறு ஓயா		30	அரலகங்வில	4
11	இரத்மலானை	இரத்மலானை		31	இரத்மலானை	8


பகமூண மற்றும் நொச்சியாகம சுற்றுலா மாளிகைகளின் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

2018 வழங்கப்பட்டமையைக் காரணமாகக் கொண்டு அவ்வருடத்துடன் ஒப்பிடும் போது வருமான தோற்றுவிப்பானது குறைவடைந்துள்ளது.





ஆண்டு	வருமானம் (ரூ.)
2016	1,661,000.00
2017	5,260,450.00
2018	11,145,605.00
2019	6,027,172.92



<u>சுற்றுலா மாளிகைகள் தொடர்பான தற்கால நிலைமைகள் –</u>

இணையத்தளம் மூலம் ஒதுக்கீடு செய்யும் வசதிகள் ஏற்படத்திக் கொடுக்கப்பட்டுள்ள சுற்றுலா மாளிகைகளின் எண்ணிக்கை - 13

இணையத்தளம் மூலம் ஒதுக்கீடு செய்யும் வசதிகள் ஏற்படத்திக் கொடுக்கப்படாத சுற்றுலா மாளிகைகளின் எண்ணிக்கை - 10

கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்ற சுற்றுலா மாளிகைகளின் எண்ணிக்கை - 03

2019 ஆம் ஆண்டின் வருமான தோற்றுவிப்பு 6.6 மில்லியன் ரூபாயாகும்.

<u>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்காக கடன் வழங்குல்.</u>

இலங்கை மகாவலி அதிகார சபையுடன் ஒன்றிணைந்து பிரதேச அபிவிருத்தி வங்கியானது இக்கடன் திட்டத்தை செயற்படுத்துகின்றது. 2019 ஆம் ஆண்டில் 02 கடன் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அதில்,

- "மகாவலி சவிய" கடன் திட்டம் (2019 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் வரை)

2019 ஆம் ஆண்டில் மகாவலி அதிகார சபையானது பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒன்றிணைந்து 14.6 மில்லியன் ரூபாய் கடன் தொகையை 78 தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கி உள்ளது.

- "மொரகஹகந்த அத்வெல" கடன் நிகழ்ச்சித் திட்டம்

  மொரகஹகந்த வலயத்தினுள் மீள் குடியேற்றப்பட்ட குடியேற்றவாசிகளுக்கு மத்தியில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் 11 தொழில் முயற்சியாளர்களுக்கு 5.9 மில்லியன் ரூபாய் பெறுமதியான கடன் வசதிகளை வழங்கி உள்ளது.

மகாவலி தொழில் முயற்சி ஜனாதிபதி விருது – 2019

இலங்கை மகாவலி அதிகார சபையின் வியாபார அபிவிருத்திப் பிரிவின் மூலம் முதல் தடவையாக மகாவலி தொழில் முயற்சியாளர்களுக்கு 09 பிரிவுகளின் கீழ் 34 தொழில் முயற்சியாளர்கள் பாராட்டுக்கு உட்படுத்தப்பட்டனர்.





மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலைய செயற்திட்டம்.

பாரம்பரிய தேசிய உணவை பிரபலப்படுத்துதல் மற்றும் மகளிர் தொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் மூலம் இல்லத்தார்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், தேசிய உணவுகளை குறைந்த விலையின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு மற்றும் வலய ரீதியில் நேரடியாக மற்றும் மறைமுகமான தொழில்களைத் தோற்றுவித்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய செயற்திட்டமாக மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை மகாவலி வலயங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெலிகந்த, தெஹிஅத்தகண்டிய மற்றும் மொரகஹகந்த ஆகிய பிரதேசங்களில் சாதாரணமான விதத்தில் ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் 03 நிறுவப்பட்டன. அவ்வாறே, புதிய விற்பனை நிலையங்கள் இரண்டின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், புதிய விற்பனை நிலையம் ஒன்றின் கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஹெல போஜுன் விற்பனை நிலையங்களை நிறுவுவதன் மூலம் நச்சுப் பொருட்கள் அற்ற தேசிய உணவுகளை ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள் மூலம் பொது மக்களுக்கு

வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மகாவலி வலயங்களில் நேரடியான மற்றும் மறைமுகமான தொழில் வாய்ப்புக்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன.





சுற்றாடல் தோழமைமிக்க சுற்றுலா படகுச் சேவையை செயற்படுத்துதல்.

01. சுற்றாடல் தோழமை மிக்க படகுகள்/ வள்ளங்களின் சேவை

சுற்றாடல் தோழமை மிக்க படகுச் சேவையானது வியாபார அபிவிருத்திப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வருமான தோற்றுவிப்புச் செயற்திட்டமாகும். இதில் விக்டோரியா பொல்கொல்ல, தம்புளு ஓயா மற்றும் லொக்கல ஓயா என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இச்சுற்றாடல் தோழமை மிக்க செயற்திட்டம் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் 2019 ஆம் ஆண்டில் 0.7 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டது.



02. மிதக்கும் விமான சேவை –

விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த மிதக்கும் விமானங்களை தரையிறக்குவதற்காக புதிய ஒப்பந்தம் ஒன்றின் கீழ் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் 0.5 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன் அது வருடத்தின் மூன்றாவது காலாண்டில் இருந்து நான்காவது காலாண்டு வரையான காலப் பகுதியிலாகும்.

மகாவலி பிரதேசங்களில் தனியார் பிரிவுகளுக்கான முதலீட்டு வாய்ப்புக்கள்.

தனியார் பிரிவுகளுக்காக 34 காணிப் பரப்புக்கள் 2019 ஆம் ஆண்டினுள் உகந்த முதலீட்டுச் செயற்திட்டங்களுக்காக வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விவசாய செயற்திட்டங்கள்	40
கால்நடை வளச் செயற்திட்டங்கள்	01
விவசாய மற்றும் கால்நடை வளச் செயற்திட்டங்கள்	05
சுற்றுலாச் செயற்திட்டங்கள்	13
தொழில்நுட்பச் செயற்திட்டங்கள்	22

தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் –

- தகைமை விருத்தி மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் 56 மகாவலி வலயங்களினுள் 2019 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது.
- புதிய தொழில் முயற்சியார்களை உருவாக்குவதற்காக முதலீட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 39 மகாவலி வலயங்களினுள் 2019 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டன.

விற்பனை நிலைய மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் 30 மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் 40 உம் 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன், இதன் மூலம் தொழில் வாய்ப்புக்கள் 500 ஐத் தோற்றுவித்தல்.





3.6 மனித வள அபிவிருத்திப் பிரிவு

அறிமுகம் –

இலங்கை மகாவலி அதிகார சபையில் உள்ள சகல உத்தியோகத்தர்களினதும் வினைத்திறன் மற்றும் விளைத்திறனை விருத்தி செய்யும் நோக்கில் அறிவு, மனப்பான்மை மற்றும் திறமைகளை விருத்தி செய்யும் நோக்கத்தில் மனித வள அபிவிருத்திப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவானது அண்மைக் காலத்தில் நிறுவப்பட்ட பிரிவாக இருந்தாலும் இதுவரை காலமும் அளப்பரிய வகிபாகங்களை மேற்கொண்ட பிரிவாக அறிமுகப்படுத்த முடியும்.

வகிபாகங்கள் மற்றும் நோக்கங்கள் –

- தேசிய பயிற்சி மற்றும் உயர் கல்விப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக நிறுவன உத்தியோகத்தர்களின் பிரத்தியேகமான அறிவு, மனப்பான்மை, திறமைகளை விருத்தி செய்தல்.
- சர்வதேச பயிற்சி மற்றும் உயர் கல்விப் பயிற்சி வாய்ப்புக்களுக்காக ஆற்றுப்படுத்துவதன் ஊடாக அறிவு, மனப்பான்மை, திறமைகள் விருத்தி மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- பொறியியல் சேவைகள், பௌதீக திட்டமிடல் சேவைகள், விவசாய விளைத்திறன் அபிவிருத்திக்காக முதலிடம் வழங்கி தொழில்நுட்ப அறிவை இற்றைப்படுத்துவதற்குரிய பயற்சிகளை நடாத்துதல்.
- நவீன தகவல் தொழில்நுட்ப வேலை உலகதிற்கு ஏற்ற வகையில் உத்தியோகத்தர்களின் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடுதல்.

3.5.1 2019 ஆம் ஆண்டின் முன்னேற்ற மீளாய்வு.

i. 2019 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் பிரதான அலுவலகத்தில் மற்றும் ஏனைய வலயங்கள் மற்றும் பிரிவுகள் உட்படும் விதமாக பயிற்சிப் பட்டறைகள் நடாத்துதல் மற்றும் வெளி நிறுவனங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்ற செயலமர்வுகளுக்காக உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளச் செய்தலானது எமது பிரிவின் மூலம் முன்னெடுக்கப்படும்.

மனித வள அபிவிருத்திப் பிரிவு மேற்கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விபரம் (மார்ச் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரை)

தொ.இ.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	நாட்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய எண்ணிக்கை	பயிற்சி மணித்தியாலங்கள்	திகதி	முதலீடு (ரூ.)
01	தீர்ப்பீடு தொடர்பான கருத்தரங்கு அனுபவங்கள் (வழக்குக் கற்கைகள்)	01	07	08	2019/03/07	28,000.00
02	போக்குவரத்து முகாமைத்துவம்	02	13	20	14/03/2019 மற்றும் 15	91,000.00
03	MSO உறுப்பினர்களுக்கான பயிற்சிப் பட்டறை	02	50	20	14/03/2019 மற்றும் 15	73,250.00
04	கட்டிட நிர்மாணத்திற்காக அலுமினியப் பயன்பாடு தொடர்பான பயிற்சி	01	07	08	26/03/2019	28,000.00
05	மனித வள முகாமையாளர் ஒருவருடைய வகிபாகம் தொடர்பான பயிற்சி	01	01	08	26/03/2019	8,000.00
06	கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில்களை வழங்குவது தொடர்பான பயிற்சி	03	10	26	27/03/2019 இருந்து 29 வரை	80,000.00
07	அரச உத்தியோகத்தர்களுக்காக நிர்வாக திறன்கள் தொடர்பான செயலமர்வு	02	15	16	08/04/2019 மற்றும் 09	187,500.00
08	தொகுதி முகாமையாளர்களுக்காக ஆற்றல் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.	03	47	26	25/04/2019 இருந்து 27 வரை	145,220.00
09	செயற்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.	02	11	16	06/05/2019 மற்றும் 07	77,000.00

தொ.இ.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	நாட்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய எண்ணிக்கை	பயிற்சி மனித்தியாலங்கள்	திகதி	முதலீடு (ரூ.)
10	பொதுச் சேவைகளுக்காக மூலோபாயங்களைத் தயாரித்தல்.	01	03	08	10/05/2019	-
11	HEC – RAS 2D இனைப் பயன்படுத்தி நீர் இயக்கியல் மாதிரிப்படுத்தல் முறை	01	02	08	31/05/2019	5,000.00
12	பிரத்தியேக சீர்படுத்தல் மற்றும் சமூக ஆசாரம்.	01	60	08	31/05/2019	45,000.00
13	வதிவிட வணிக முகாமையாளர்கள் மற்றும் விடயப் பொறுப்பு பொறியியலாளர்களுக்காக ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.	02	22	20	07/06/2019 மற்றும் 08	418,800.00
14	ஊடக செயலமர்வு	1	60	08	18/06/2019	66.,900.00
15	படகோட்டிகளுக்கான பயிற்சிப் பட்டறை	3	20	30	24/06/2019 இருந்து 26 வரை	51,013.00
16	2019/21/05 ஆம் திகதி புது நியமனம் பெற்ற உத்தியோகத்தர்களை நிறுவனப்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை	1	180	08	28/06/2019	167.,050.00
17	அரச தாபனங்களுக்காக தாபன விதிக்கோவை தொடர்பான பயிற்சிப் பட்டறை	01	03	16	11/07/2019 மற்றும் 12	21,000.00.
18	பொறியியலாளர்களுக்கான தொழில்நுட்ப செயலமர்வு	01	07	08	12/07/2019	10,000.00.

தொ.இ.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	நாட்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய எண்ணிக்கை	பயிற்சி மணித்தியாலங்கள்	திகதி	முதலீடு (ரூ.)
19	மகாவலி அதிகார சபையின் சாரதிகளுக்கான பயிற்சிப் பட்டறை	02	50	30	18/07/2019 மற்றும் 19	405,551.18
20	புதிய முகாமைத்துவ உதவியாளர்களுக்கான தொழில்சார் அபிவிருத்திச் செயலமர்வு.	04	01	32	18/07/2019 மற்றும் ,19 25 மற்றும் 26	10,000.00
21	பிரஜைகள் கவனக்குவிப்பு தொடர்பான இடையறா விழிப்புடைமை நிகழ்ச்சித் திட்டம்	01	02	08	22/07/2019	-
22	அமைச்சரவை மகஜர்கள் முன்வைப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறை.	01	05	08	23/07/2019	19,500.00
23	மகாவலி பாதுகாப்புப் படையணியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக ஆயுத பயிற்சி மற்றும் முறைப்பட்ட படைப் பயிற்சிப் பட்டறை.	02	50	16	29/07/2019 மற்றும் 30	89,050.00
24	மகாவலி பாதுகாப்புப் படையணிக்கான பயிற்சிப் பட்டறை	02	65	20	30/07/2019 மற்றும் 31	254,200.00
25	மகாவலி அதிகார சபையின் நிதிப் பிரிவின் மற்றும் கணக்காய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை.	03	30	27	,05/08/2019 06 மற்றும் 07	212,502.00
26	நூலகம் தொடர்பான பயிற்சிப் பட்டறை	01	03	08	07/08/2019	24,000.00
27	முன்னேற்ற நிர்வாக உத்தியோகத்தர்களின்	02	50	33	22/08/2019 மற்றும் 23	329,593.60

தொ.இ.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	நாட்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய எண்ணிக்கை	பயிற்சி மணித்தியாலங்கள்	திகதி	முதலீடு (ரூ.)
	செயலாற்றுகையை விருத்தி செய்வதற்கான செயலமர்வு.					
28	சமூக காப்புறுதிச் சட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை.	01	03	08	27/08/2017	25,500.00
29	உழைப்பு விளைத்திறன் விருத்திக்காக அலுவலக முகாமைத்துவம்.	03	01	8	12,19/09/2019 மற்றும் 26	8,000.00
30	புது நியமனம் பெற்ற மகாவலி பாதுகாப்புப் படையின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை.	40	65	330	2019/09/27 இருந்து 05/11/2019 வரை	3,323,985.00
31	ஒலி நிர்வாகம் தொடர்பான பயிற்சிப் பட்டறை.	02	01	16	19/09/2019 மற்றும் 20	12,000.00
32	தகவல் தொழில்நுட்ப செயலமர்வு.	03	07	24	08/10/2019, 09 மற்றும் 10	185,000.00
33	மின் பிறப்பாக்கி இயந்திரப் பயன்பாடு மற்றும் தாபரிப்பு	01	03	16	2019/10/03 மற்றும் 04	96,000.00
34	HEC இனைப் பயன்படுத்தி நீர் இயக்கியல் மாதிரிப்படுத்தல் முறை	01	02	08	2019/10/26	5000.00
35	நிகழ்ச்சி முகாமைத்துவம்.	02	04	16	09/10/2019 மற்றும் 10	52,000.00
36	ஹுருளுவெவ வலயத்தில் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை.	02	35	18	17/10/2019 மற்றும் 18	136,105.00
37	8 ஆவது Ciob உலக கட்டுமான ஆய்வரங்கு.	03	05	24	2019/11/08 மற்றும் 09	75,000.00
38	நீரியல் கணக்காய்வு தொடர்பான ஆலோசனை	03	01	08	2019/11/29, 30 மற்றும் 31	24,500.00

தொ.இ.	பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	நாட்களின் எண்ணிக்கை	பங்குபற்றிய எண்ணிக்கை	பயிற்சி மனித்தியாலங்கள்	திகதி	முதலீடு (ரூ.)
	விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.					
39	செலவின மற்றும் கொடுப்பனவு செயல்முறை மற்றும் நிதிப் பிரமாணம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.	01	05	08	10/12/2019	30,000.00
	கூட்டுத் தொகை	**1009**	**890**	**928**	**-**	**6,821,121.78**

ii. இலங்கை மகாவலி அதிகார சபையின் உத்தியோக்தர்கள் பலருக்காக அவர்களுக்கு உரிய விடயத் துறைகளுக்கு அமைய வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் வழங்குவதும் எமது பிரிவின் மூலம் முன்னெடுக்கப்பட்ட மற்றுமொறு பணியாகும்.

வெளிநாட்டு புலமைப் பரிசில்களின் விபரம் – 2019 ஆம் ஆண்டு

இ.	திகதி	பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	நாடு	கால எல்லை	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பெயர்
1	2019.02.11	தெற்காசியாவில் மின்துறை தொழில்முறை வலையமைப்பில் முதலாவது மகளிர் பிராந்திய மாநாட்டில் இலங்கை மின்துறை நிறுவனங்களின் பங்கேற்பு	நேபாளம்	20- 21 பெப்ரவரி	திருமதி. சரோஜா உடன்கமுவ – தொ.பொ

2	2019.2.21	தொழிற்சாலை ஏற்பு சோதனைகளின் சாட்சிக்காக முன்மொழியப்பட்டவர்.	ஈரான்	8 – 11 மார்ச்	பொறி, ஆர்.எம்.எஸ். வத்ஸலா – இயந்திப் பொறியியலாளர்
3	2019.02.20	KOICA முதுமானி பட்டத் திட்டம்	கொரியா	2019-2020	பொறி, எம்.கே.எம். மல்லவஆரச்சி – குடிசார் பொறியியலாளர்
4	2019.04.02	மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவிற்கான வனவியல் சர்வதேச ஒத்துழைப்புதிறன் மேம்பாடு பற்றிய கருத்தரங்கு – சீனா	சீனா	09 – 29 ஏப்ரல் 2019	திரு. ஏ,ஜி.டீ. ஹேமந்த ஜயசிங்ஹ (பி.செ.மு - G) -
5	2019.04.24	பிரதான நீரோட்டப்படுத்தல் காலநிலை மாற்ற தழுவல்.	கொரியா	2019 ஜூன் 13 இலிருந்து ஜூலை 03 வரை	திரு. ஜி.ஏ.கே. விக்ரமசிங்ஹ - குடிசார் பொறியியலாளர்
6	2019.04.25	" நெகிழ்வான விவசாய பொதியை கட்டியெழுப்புதல்" தொடர்பான சார்க் பிராந்திய பயிற்சி	நேபாளம் - காத்மண்டு	2019 மே 27 – 30 வரை	திரு. ஏ.எம்.பி.ஜி. குணவர்தன - (பி.செ.மு – உப)
7	2019.05.13	விவசாயத் துறை ஊடான பிரதான நீரோட்டப்படுத்தல் தொடர்பான பிராந்திய ஆலோசனைக் கூட்டத்திற்கான அழைப்பு	தாய்லாந்து	17 – 19 ஜூலை 2019	திருமதி. ஆர்.ஏ.டி.கே. ராஜபக்ஷ – உ.ப (விவசாயம்)
8	2019.06.06	GEO- கிராமிய வளர்ச்சியில் தகவல் பயன்பாடு	இந்தியா	ஜூலை 09 ஆம் திகதியில் இருந்து ஆகஸ்ட் 05	திரு. எச்.கே.யூ. ஹெட்டிஆரச்சி – பௌதீக திட்டவமைப்பாளர்

				ஆம் திகதி வரை	
இ.	**திகதி**	**பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**	**நாடு**	**கால எல்லை**	**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பெயர்**
9	2019.06.06	GEO- கிராமிய வளர்ச்சியில் தகவல் பயன்பாடு	இந்தியா	ஜூலை 09 ஆம் திகதியில் இருந்து ஆகஸ்ட் 05 ஆம் திகதி வரை	பொறி. எஸ்.பி.பீ. இலங்கசிங்ஹ – பிரதிப் பணிப்பாளர் (நீர் வளம்)
10	2019.06.14	பட்டப்பின் படிப்பு டிப்ளோமா - நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம்	இந்தியா	2019 ஜூலை 12 ஆம் திகதியில் இருந்து 2020 ஜூலை 11 ஆம் திகதி வரை	திரு. ஆர்.ஏ.ஆர்.எல். ரணசிங்ஹ – பயிராக்கவியல் அறிஞர்
11	2019.05.07	வங்காளதேசம் டாக்காவில் இடம்பெற்ற ஆற்றுப் படுக்கை மாதிரியமைப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	வங்காளதேசம்	2019 மே 20 – 26 வரை	பொறி. எஸ்.எச்.ஆர். வசந்த
12	2019.06.07	வங்காளதேசம் டாக்காவில் இடம்பெற்ற ஆற்றுப் படுக்கை மாதிரியமைப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	வங்காளதேசம்	2019 மே 20 – 26 வரை	பொறி. எம்.ஜி.என்.டி. வீரசிங்க

13	2019.06.10	சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	தென் ஆபிரிக்கா	1-6 ஜூலை 2019	திரு. ஐ.ஜி. மத்தும பண்டார – பிரதிப் பணிப்பாளர் (நிதி மற்றும் சுற்றாடல்)
இ.	**திகதி**	**பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**	**நாடு**	**கால எல்லை**	**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பெயர்**
14	2019.06.12	உயிர்ப் பல்வகையைமை பற்றிய 09 வது துரொன்தைம் மாநாடு	நோர்வே	30 ஜூன் – 07 ஜூலை 2019	திரு. ஏ.எம்.கே.பி. அதிகாரி
15	2019.06.20	2019 ஆம் ஆண்டின் எரிசக்தி மேம்பாடு மற்றும் தொழில் கொள்கை குறித்த கருத்தரங்கு. – சீனா	சீனா	17 ஜூலை - 06 ஆகஸ்ட் 2019	பொறி. எஸ்.பீ.பி. ஹேமசிங்க – இயந்திரப் பொறியியலாளர்
16	2019.07.11	சார்க் பிராந்திய பயிற்சி " புவிசார் அவதானிப்பு"	பாகிஸ்தான்	29 ஜூலை - 01 ஆகஸ்ட் - 2019	திரு. ஏ.எம்.கே.பி. அத்தநாயக்க – பணிப்பாளர் (நிதி மற்றும் சுற்றாடல்)
17	2019.08.08	2019 பசுமை இல்ல வாயு வெளியேற்றக் குறைப்பு மற்றும் எரிசக்தி மாற்ற பயிற்சிப் பாடநெறி	சீனா	16-29 செப்டம்பர் 2019	திருமதி. எம்.யூ.ஆர். ரத்நாயக்க – தொகுதி முகாமையாளர், ஹுருளுவெவ
18	2019.08.09	விவசாய வறட்சி கண்காணிப்பு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவ து தொடர்பான ஆய்வுப் பயணம்	இந்தியா - ஹைதராபாத்	19-23 ஆகஸ்ட் 2019	பொறி. பி.ஜி. குணபால (பிரதிப் பணிப்பாளர் நாயகம் – தொழில்நுட்ப சேவை)

19	2019.08.15	2019 பசுமை வளர்ச்சியில் சீனாவின் செயல்முறைகள் குறித்து தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு விளக்கும் கருத்தரங்கு	சீனா	5 -25 செப்டம்பர்	திரு. எம்.சி.எல். அதுகோரல – பிரதி பி.செ.மு (அபிவிருத்தி) G
20	2019.08.21	2019 இலங்கைக்கான சுதந்திர வர்த்தக வலயத்தின் நிர்மாணம் மற்றும் முகாமைத்துவம் பற்றிய கருத்தரங்கு	சீனா	8-28 ஒக்டோபர் 2019	திரு. விபுல அபேரத்ண – உதவிப் பணிப்பாளர் (வியாபார அபிவிருத்தி)
21	2019.11.15	சூரிய சக்தி தொழில்நுட்பங்களுக்கான சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	இந்தியா	24 நவம்பர் – 14 டிசம்பர் 2019	பொறி. பி.ஜி.சி. மங்கல, குடிசார் பொறியியலாளர்

iii. இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரிகள், இளைஞர்கள் சேவை ஆணைக்குழு, இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை ஆகிய திணைக்களங்களில் கல்வி பயின்ற மாணவர்களுக்காக 06 மாத கால பயிற்சி செய்யப்பட்ட காலப் பகுதிக்காக சம்பளத்துடன் போன்றே சம்பளம் அற்ற பிரதான அலுவலகத்திற்கு மற்றும் வலயங்களுக்கு / பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்தி அவர்களுக்கு பயிற்சி பெறும் வாய்ப்புக்களை வழங்குதல்.

iv. அரச கரும மொழிகள் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மகாவலி அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிப் பாடநெறிகளை நடாத்துவதற்காக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

3.7 ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு.

நோக்கம்

நவீன தொழில்நுட்பம் மற்றும் மூலோபாய முறைகள் மூலம் மகாவலி அதிகார வலயங்களில் பல்-பிரிவுசார் அபிவிருத்தியை சான்றுப்படுத்துதல்.

குறிக்கோள்

மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்வாதாரத்தை வலுவூட்டுவதற்காக மகாவலி பெருந் திட்டத்திற்கு அமைய உள்நாட்டு வெளிநாட்டு செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

<u>பிரிவின் வகிபாகங்கள்.</u>

- மகாவலி குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக பல்-பிரிவுசார் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அரச கொள்கைகள், நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் மகாவலி பெருந்திட்டத்திற்கு அமைய மகாவலி அதிகார சபையின் பிரிவுகளுக்கான தேசிய மற்றும் வெளிநாட்டு நிதிசார் ஏற்பாடுகளின் கீழ் செயற்படுகின்ற விசேட செயற்திட்டங்களைத் தயாரித்தல், அதனை அமுலிற்குக் கொண்டு வருவதற்கான வழிமுறைகளைத் தயாரித்தல், உரிய பிரிவுகளின் மூலம் செயற்படுத்துதல், இயக்குதல், மேற்பார்வையிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வுக்கு உட்படுத்துதல் உட்பட மகாவலி அதிகார பிரதேசங்களில் சுற்றுலா வியாபார நடவடிக்கைகளை பிரபலமாக்குதல் மற்றும் மேம்பாட்டிற்கு அவசியமான மூலோபாய திட்டங்களைத் தயாரிப்பதன் மூலம் அபிவிருத்திச் செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

- மகாவலி குடியேற்றவாசிகளின் வியாபார நிலையங்களை இலக்காகக் கொண்ட விவசாய மற்றும் ஏனைய உற்பத்திகளுக்காக நவீன தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்தித் தரத்தை அதிகரிப்பதற்குரிய செயற்திட்டங்களைத் செயற்படுத்துதல் மற்றும் உள்நாட்டு/ வெளிநாட்டு ஆராய்ச்சி நிலையங்கள்/ பல்கலைக்கழகங்கள்/ உயர் கல்வி நிலையங்கள் ஆகியவற்றுடன் வளங்களின் தன்மை, பொருளாதார நிலைமாறிகள் மற்றும் நிலவுகின்ற இயல்திறன் ஆகியவை தொடர்பாக ஆய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், துறையின் மாதிரி ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் ஆய்வின் பெறுபேறுகளை மகாவலி வலயங்களுக்கு ஏற்புறுத்துவதன் ஊடாக குடியேற்றவாசிகளின் வருமான தோற்றுவிப்பை அதிகரிக்கச் செய்தல்.

பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள்.

1. காலநிலைத் தாக்கத்தை இயன்றளவு குறைப்பதற்காக மற்றும் சிறந்த விவசாய ஒழுங்குமுறைகளை பின்பற்றி உயர் தரம் மற்றும் பெறுமதி கொண்ட பயிர்ச் செய்கையை மேம்படுத்துவதற்கான முதன்மையான உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய பச்சை வீட்டுச் செயற்திட்டம். **(SMART GREEN HOUSE PROJECT)**
2. மகாவலி இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறைகளின் இளைஞர் யுவதிகள் மற்றும் விவசாயிகளுக்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் விவசாயம், தொழில் உருவாக்கத்திற்காக கொரிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிறுவனத்தின் **(KOICA)** உதவியுடன் மகாவலி சி வலயத்தின் கிராந்துரு கோட்டை அபிவிருத்தி மத்திய நிலையத்தில் நிறுவப்பட்ட தகவல் தொடர்பாடல் மத்திய நிலைய செயற்திட்டம். **(INFORMATION VILLAGE CENTER)**
3. கொரிய சர்வதேச கூட்டுறவு முகவர் நிறுவனத்தின் **(KOICA)** உதவியுடன் மகாவலி சி வலயத்தின் புதிய மெதகம பண்ணையை காலநிலை மாற்றங்களுக்கு பிரதிபலிப்பாக நவீன விவசாய தொழில்நுட்ப பூங்கா **(SMART AGRO-TECHNOLOGICAL PARK)** ஒன்றாக அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்.
4. மொரகஹகந்த புதிய அபிவிருத்தி வலயத்தின் சூழலியல் சுற்றுலா தொழிலை மேம்படுத்தும் செயற்திட்டம்.
5. வெளிநாட்டு தொழில்நுட்ப பரிமாற்றத்தின் மூலம் கொத்மலையில் நிறுவப்பட்டுள்ள இழைய வளர்ப்பு ஆய்வுகூட அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக அதிகளவு வருமானத்தை ஈட்டக் கூடிய ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பயிர்கள் மற்றும் இலங்கைக்கே உரிய தனித்தன்மையான, குறைவாக பயன்படுத்தப்படும் பழங்களை விவசாயிகளுக்கு மத்தியில் மேம்படுத்துதல்.
6. மகாவலி வலயங்களில் யானைகள்- மனிதர்களுக்கு இடையிலான மோதல்களை இயன்றளவு குறைப்பதற்கான விசேட முதன்மைச் செயற்திட்டங்கள்.
7. மகாவலி எல் வலயத்தில் பினரதென்ன மற்றும் ஹெலம்ப வாவி கிராமங்களுக்காக விசேட அபிவிருத்தி திட்டம் ஒன்றைத் தயாரித்தல் மற்றும் மின் வேலிகளை நவீன மயப்படுத்துதல்.
8. மொரகஹகந்த வலயத்தினுள் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
9. யானை வேலி செயற்திட்டத்துடன் ஒன்றியைந்ததாக பி மற்றும் எல் வலயங்களினுள் சணல் நார்களை பயிரிடும் செயற்திட்டத்திற்காக தேசிய அருங்கலைகள் பேரவையுடன் ஒப்பந்தமிட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
10. மாதுறு ஓயா வலது கரையுடன் ஒருங்கிணைந்த உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாய அபிவிருத்திச் செயற்திட்டம்.
11. மகாவலி வியாபார மத்திய நிலையத்தை **(Cool Fresh Outlet)** நவீன மயப்படுத்துதல்.
12. சூட்டிகைக் கிராமங்கள் செயற்திட்டம். **(Smart Villages)**

நான்காவது அத்தியாயம்.

4.1 மனித வள மற்றும் நிதிசார் முகாமைத்துவப் பிரிவு

4.1.1 பணியாளர் மேலாண்மை பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் மனித வள முகாமைத்துவம் தொடர்பான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டது ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவின் மூலமாகும். அது இப்பிரிவின் பிரதான வகிபாகமாகும்.

ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வகிபாகங்கள்.

ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவானது இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான பிரிவுகளுக்குள் உட்படுவதுடன் அப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வகிபாகங்கள் அளப்பரியவையாகும்.

வகிபாகங்கள் –

- ஊழியர்களின் தேவைப்பாடுகளை இனங்காணுதல்.
- ஊழியர்களின் எண்ணிக்கையைத் திட்டமிடுதல்.
- ஊழியர்களின் எண்ணிக்கையை மறுசீரமைத்தல்.
- முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஊழியர்களை நிலைப்படுத்துதல்.
- மனித வளங்களை கவர்ந்தெடுத்தல்
    - வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருதல்.
    - பரீட்சைகள்/ நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.
    - தகுதியானவர்களைத் தெரிவு செய்தல்.
- மனித வளப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி.
- கைகளைப் பழக்கப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள்
- பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- தேசிய மற்றும் சர்வதேச புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகளை வழங்குதல்.
- சேவையை நிரந்தரமாக்குதல்.
- தேசிய மற்றும் சர்வதேச புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- மனித வள உந்துதல்கள் மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்தல்.
- இடமாற்றங்கள்.
- ஓய்வு செல்லல்.
- சேவையை நிறைவு செய்தல்.
- நிர்வாக பிரிவிற்குரிய வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

- அலுவலக முறைகளைச் செயற்படுத்துதல்.
- பணிக்கொடைக் கொடுப்பனவு பிரதிபலன்களை விடுவித்தல்.
- ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் தொடர்பான நடவடிக்கைகள்.
- ஒழுக்காற்று நடவடிக்கைகள்.
- ஊக்குவிப்புக்கள்.
- செயலாற்றுகை மதிப்பீடு.
- பதவியணியைக் மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல்.
- இயக்குதல் மற்றும் ஏற்பாடு செய்தல்.
- நிர்வாகம்.
- போக்குவரத்து.
- திட்டமிடல் மற்றும் இயக்கல்.
- பாதுகாப்பு.
- காணிப் பிரிவு.
- சட்டப் பிரிவு.
- வலய அலுவலகங்கள்.
- மக்கள் தொடர்பு.
- உத்தியோகபூர்வ விழாக்கள் தொடர்பான நடவடிக்கைகள்.
- நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர்.
- பொது மனுக்கள் பற்றிய குழு.
- பாராளுமன்ற வாய்மொழி மூல கேள்விகளுக்கு விடையளிப்பதற்காக கலந்து கொள்ளுதல் மற்றும் ஏனைய பிரிவுகளை ஒருங்கிணைத்தல்.
- மதிப்பிடுதல் மற்றும் புதிய செய்முறைகளை அறிமுகப்படுத்துதல்.
- கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில் வழங்குதல்.

4.1.2 இலக்குகள் மற்றும் முன்னேற்றம் – 2019 ஆம் ஆண்டு

இலக்கு

ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவின் 2019 ஆம் ஆண்டின் பிரதான இலக்காக இருந்தது ஊழியர் வெற்றிடங்களை இனங்காணுதல் மற்றும் வெற்றிடங்களைத் துரிதமாக நிரப்புதலாகும்.

2019 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள்.

- சகல பிரிவுகளின் ஊழியர் வெற்றிடங்களை இனங்காணுதல் மற்றும் வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வருடாந்த இடமாற்றக் கொள்கையைச் செயற்படுத்துதல்.
- இணைத்துக் கொள்வதற்காக விண்ணப்பங்களைக் கோருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- பதவி உயர்வுகளுக்காக விண்ணப்பங்களைக் கோருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- மனித உரிமைகள் ஆணைக்குழு, ஊழியர் மத்தியஸ்தம், உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம், ஊழியர் நியாய சபை, ஊழல் அல்லது மோசடிக் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழுவிற்கு அவசியமான தகவல்களை வழங்குதல் மற்றும் நாளாந்த செயற்பாடுகள்.

முன்னேற்றம்

ஆளணி மற்றும் நிர்வாக பிரிவுகளுக்கு புதிய நியமனங்களை மேற்கொண்டு 2019 ஆம் ஆண்டில் அதிவிசேட முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட நியமனங்கள் தொடர்பான விபரம்

தொடர் இலக்கம்	பதவியின் பெயர்	நியமனங்களின் எண்ணிக்கை
01.	பணிப்பாளர் (வியாபார அபிவிருத்தி)	1
02.	வதிவிட வணிக முகாமையாளர்.	1
03.	நீரியல் விஞ்ஞான வல்லுனர்	1
04.	உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)	1
05.	உதவிப் பணிப்பாளர் (சட்டம்)	2
06.	உதவிப் பணிப்பாளர் (நிதி)	2
07.	உதவிப் பணிப்பாளர் (வியாபார அபிவிருத்தி)	1
08.	உதவிப் பணிப்பாளர் (கட்டிடக் கலை)	1
09.	உதவிப் பணிப்பாளர் (சுற்றாடல்)	1
10.	பிரதி வதிவிட வணிக முகாமையாளர் (அபிவிருத்தி)	2
11.	பிரதி வணிக முகாமையாளர்	1
12.	பொறியியலாளர் (சிவில்)	50
13.	பொறியியலாளர் (மின்சாரம்)	7
14.	உள்ளக கணக்காய்வாளர்	1

15.	கணக்காளர்	3
16.	நிலஅளவையாளர்	3
17.	புள்ளிவிபரவியலாளர்	1
18.	புவிச் சரிதவியலாளர்	1
19.	தொழில்நுட்ப பொறியியலாளர் (சிவில்)	8
20.	தொழில்நுட்ப பொறியியலாளர் (இயந்திவியல்)	1
21.	பண்ணை முகாமையாளர்	5
22.	பௌதீக திட்டமிடல் கலைஞர்	3
23.	கணக்கு உத்தியோகத்தர்	5
24.	காணி உத்தியோகத்தர்	5
25.	முன்னேற்ற நிர்வாக உத்தியோகத்தர்	1
26.	மொழி பெயர்ப்பாளர்	2
27.	அலகு முகாமையாளர்	40
28.	உதவிப் பண்ணை முகாமையாளர்	2
29.	அபிவிருத்தி உதவியாளர்	11
30.	பொறியியல் உதவியாளர் (சிவில்)	3
31.	பொறியியல் உதவியாளர் (இயந்திரவியல்)	6
32.	பொறியியல் உதவியாளர் (மின்சாரம்)	3
33.	நீரியல் விஞ்ஞான உதவியாளர்	2
34.	இழைய வளர்ப்புத் தொழில்நுட்பக் கலைஞர்	13
35.	கால்நடை வள அபிவிருத்தி உதவியாளர்	17
36.	விளையாட்டு உதவியாளர்	3
37.	புத்தக வைப்புனர்	10
38.	தொழில்நுட்ப உதவியாளர்	110

39.	திட்டமிடல் கலைஞர்	21
40.	சுற்றாடல் அபிவிருத்தி உதவியாளர்	2
41.	முகாமைத்துவ உதவியாளர்	58
42.	வெளிக்கள உதவியாளர்	44
43.	சாரதி	21
44.	பெரும்பாரப் பொறி இயக்குனர்	2
45.	இழுபொறி இயக்குனர்	2
46.	அலுவலக செயற்பாட்டு உதவியாளர்	58
47.	நீர்ப்பாசன ஊழியர்	57
48.	தொழில்நுட்ப கையுதவியாளர்கள்	15
49.	வாகன உதவியாளர்	7
50.	காவலாளர்கள்	48
51.	கால்நடை வளர்ப்பு ஊழியர்	1
52.	சேவையாளர்கள்	2

ஊழியர் எண்ணிக்கை தொடர்பான தகவல் 2019.12.31 ஆம் திகதிக்கு

சேவை வகுதி	**அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை**	**நிரந்தரப்படுத்தப்பட்டு உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை**	**வழிமொழியப்பட்ட/ ஒப்பந்த/ பயிற்சியற்ற**	**மொத்த ஊழியர்களின் எண்ணிக்க**
சிரேஷ்ட நிலை (HM 2-3, HM 1-3, HM 1-1)	**34**	**18**	**4**	**22**
மூன்றாம் நிலை (MM 1-1)	**441**	**365**	**5**	**370**
மூன்றாம் நிலை (JM 1-1)	**367**	**305**	**0**	**305**

இரண்டாம் நிலை (MA 3, MA 2-2, MA 1-2)	**1873**	**1692**	**0**	**1692**
ஆரம்ப நிலை (PL 3, PL 2, PL 1)	**2144**	**2154**	**0**	**2154**
கூட்டுத் தொகை	**4859**	**4534**	**9**	**4543**

4.2 சட்டப் பிரிவு

அறிமுகம் –

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க மகாவலி அதிகார சபைச் சட்டம் மற்றும் அதன் துணைச் சட்டங்கள் 23 இற்கும் உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளைத் திட்டமிடுதல், பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு இடையில் கைச்சாத்திடப்படுகின்ற சட்ட ஒப்பந்தங்களைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல், தொழில் வழங்குனர் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆற்றுப்படுத்தப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக பாராளுமன்ற ஆலோசனைக் குழு, மனுக்கள் பற்றிய குழு, நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், நியாய சபை, ஊழியர் மத்தியஸ்த சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய சட்ட நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பானது இப்பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளில் பிரதான இடத்தைப் பிடிக்கின்றது.

4.2.1 சட்டப் பிரிவின் மூலம் இயக்கப்படுகின்ற வழக்குகள்.

01. உச்ச நீதிமன்றம்.
02. மேன் முறையீட்டு நீதிமன்றம்.
03. சிவில் மேன் முறையீட்டு நீதிமன்றம்.
04. மேல் நீதிமன்றம்.
05. மாவட்ட நீதிமன்றம்.
06. நீதவான் நீதிமன்றம்.
07. கைத்தொழில் விசாரணைமன்று.
08. ஊழியர் நியாய சபை.

4.2.2 2018 ஆம் ஆண்டில் சட்ட ஆலோசனைகள் வழங்கப்படுகின்ற விடயத் துறைகள்.

01. ஊழியர் பிரச்சினைகள்.
02. வாகன விபத்துக்கள்.
03. ஒப்பந்தங்கள் தொடர்பானவை.
04. நீர்த்தேக்கங்களில் 100 மீட்டர் ஒதுக்கல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய விதம்.
05. அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவது தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதல்.
06. சிறிய அளவிலான மின் தோற்றுவிப்பு செயற்திட்டங்களுக்கு அவசியமான உரிய ஆலோசனைகளை வழங்குதல்.
07. இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான நிறுவனங்கள் தொடர்பாக செயற்படுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்.

4.2.3 வரி நிலுவை அறவிடுவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்.

01. வழக்குத் தாக்கல் செய்தல்.
02. அறிவித்தல்களை அனுப்புதல்.
03. விளக்கக் கோரிக்கைக் கடிதம் அனுப்புதல்.
04. அரச காணிகள் (உடைமையை மீளப் பெறுதல்) சட்டத்தின் கீழ் அகற்றல் அறிவிப்புக்களை அனுப்புதல்.

4.3 நிதிப் பிரிவு

நிதிப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான வகிபாகங்கள் பின்வருமாறு:

நிறுவனத்தின் கூட்டுத்தாபன மற்றும் வருடாந்த திட்டங்களின் பிரகாரம் மதிப்பீடுகளைத் தயாரித்தல், தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல், மாதாந்த நிதித் தேவைகளை முன்னறிவித்தல் மற்றும் திறைசேரியிடமிருந்து நிதிகளைப் பெறுதல், தேசிய மற்றும் வெளிநாட்டுத் திட்டங்களுக்கான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தல், ஊழியர் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், பௌதிக சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல், கணக்காய்வு வினவல்களுக்கு தகவல்களை வழங்குதல் மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவினால் அனுப்பப்பட்ட வினவல்களுக்கு பதில் அனுப்புதல்.

4.3.1 நிதிசார் ஒதுக்கீடுகள் மற்றும் செவினங்கள் தொடர்பான விபரங்கள்.

	மூலதன மூலம்	ஒதுக்கீடு (Rs.'000)	செலவினம்(Rs.'000)
மீண்டுவரும் செலவினம்		2,100,000	2,100,000
மூலதனச் செலவினம்		949,999	949,999
மகாவலி செயற்திட்டங்கள்			
MCP 'B' செயற்திட்டம்	Local	120,000	120,000
மாதுறு ஓயா வலது கரை/ அணை	Local	40,000	40,000
ரிதீமாலியத்த அபிவிருத்திச் செயற்திட்டம்	Local	53,000	53,000
ரம்பகன் ஓயா செயற்திட்டம்	Local	71,000	71,000
வெலி ஓயா ஒருங்கிணைப்புச் செயற்திட்டம்	Local	179,000	179,000
பிரதான மற்றும் மத்திய நீர்ப்பாசன முறைமையின் மறுசீரமைப்பு	Local	73,500	73,500
மகாவலி கெடம்பே செயற்திட்டம்	Local	-	-
கிவுல் ஓயா செயற்திட்டம்	Local	-	-
விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்திச் செயற்திட்டம்	Local	159,500	159,500
மொத்தம்		1,645,999	1,645,999

4.3.2 ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்

						ரூபாய். '000
விளக்கம்	01.01.2019 ஆம் திகதிக்கு செலவினம்	கொள்வனவுகள்	விற்பனைகள், அகற்றல்கள், கைமாற்றல்கள்	31.12.2019 ஆம் திகதிக்கு செலவினம்	பெறுமானத் தேய்வு	பெறுமானத் தேய்வை கழித்த பின்னர் 31.12.2019
காணிகள்	296,000	-	-	296.000	-	296,000
கட்டிடங்கள் மற்றும் அலுவலகங்கள்	2,094,617	124,157	11,410	2,207,363	555,316	1,652,047
கட்டிடங்கள் – ஏனையவை	2,814,845	133,363	53,773	2,894,434	1,524,710	1,369,725
வாகனங்கள்	1,155,774	1,005,090	992,152	1,168,712	331,325	837,387
அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரிப் பொருட்கள்	135,779	28,956	5,531	159,204	74,133	85,072
மின்பிறப்பாக்கிகள்	24,452	10,341	1,650	33,143	14,543	18,600
இயந்திராதிகளும் உபகரணங்களும் - வேலைத்தல பணிகள்	43,343	2,426	21,743	24,026	11,562	12,464
இயந்திராதிகளும் உபகரணங்களும் – கட்டுமானங்கள்	387,273	183,784	81,052	490,005	252,818	237,187
இயந்திராதிகளும் உபகரணங்களும் – பொதுவானவை	112,477	68,618	5,235	175,861	58,481	117,380
தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்	242,753	74,447	20,025	297,174	32,792	264,383
கணினிகள் மற்றும் துணைக் கருவிகள்	182,472	34,995	11,495	205,972	128,855	77,117
புத்தகங்கள் மற்றும் கையேடுகள்	3,996	1,205	-	5,201	94	5,107
மொத்தம்	**7,493,780**	**1,667,382**	**1,204,066**	**7,957,097**	**2,984,628**	**4,972,468**

4.4 மகாவலி பாதுகாப்புப் படையணி

அறிமுகம் –

மகாவலி பாதுகாப்புப் படையணியானது இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான கட்டுமானங்கள், விருத்தியிலி கட்டிடத் தொகுதி மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதைப் பிரதானமாகக் கொண்டும் மகாவலி உத்தியோகத்தர்கள் மற்றும் பதவியணி / குடியேற்றவாசிகளை பாதுகாப்பதற்காகவும் 1985 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த கால கட்டத்தில் மகாவலி பொருளாதார முகவர் நிலையம் மற்றும் மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அந்த நிறுவனத்தின் மூலம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலர் மூலமாக நிறைவேற்றப்பட்டதுடன், அவ் எண்ணிக்கை அளவில் மிகவும் சிறிய அளவாகவே காணப்பட்டது. இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பன்முகப்படுத்தும் நோக்குடன் மற்றும் உரிய முறையில் நிர்வாகம் மற்றும் இயக்கற் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மகாவலி அதிகார சபையின் ஆலோசனைக்கு அமைய மகாவலி பொருளாதார முகவர் நிலையம் மற்றும் மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவர் நிலையம் ஆகியவற்றில் சேவையாற்றிய பாதுகாப்புப் பதவிகள் 1989 ஆம் ஆண்டில் மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு உள்ளடக்கப்பட்டது.

பிரதான குறிக்கோள்கள் –

- மகாவலி அதிகார சபையின் பிரதான கட்டுமானங்கள் மற்றும் விருத்தியிலி கட்டிடத் தொகுதிகளைப் பாதுகாத்தல்.
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அலுவலக கட்டிடத் தொகுதிகள் மற்றும் பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பாதுகாத்தல்.
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பதவியணி மற்றும் குடியேற்றவாசிகளுக்கு அவசியமான பாதுகாப்பை வழங்குதல்.

4.4.1 ஏனைய கடமைகள் மற்றும் வகிபாகங்கள்.

1. கௌரவ மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்திப் பிரதி அமைச்சர்கள் உட்பட மகாவலி அபிவிருத்தி அமைச்சின், இலங்கை மகாவலி அதிகார சபையின் விசேட நபர்களுக்கான உபசாரம் மற்றும் விசேட நபர்களுக்கான பாதுகாப்புக் கடமைகளை மகாவலி விளையாட்டு மற்றும் ஏனைய விசேட விழாக்களுக்கு அவசியமான உபசாரங்கள் மற்றும் பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுதல்.
2. இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக இராணுவ வீரர்கள் மற்றும் காவல் துறையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.

3. இலங்கை மகாவலி அதிகார சபை வசமுள்ள பணம் மற்றும் பெறுமதியான சொத்துக்களுக்கு போக்குவரத்தின் போது பாதுகாப்பளித்தல்.
4. மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு அவசியமான உளவுத்துறை தகவல்களை வழங்குதல்.
5. மகாவலி அதிகார சபையின் ஏனைய நிறுவனங்களுக்கு அவசியமான உளவுத்துறை தகவல்களை வழங்குதல்.
6. மகாவலி நிறுவனங்களின் பிரதான உத்தியோகத்தர்களுக்கு மற்றும் செயற்திட்டப் பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் பணியாற்றுகின்ற நிறுவனங்களின் காவலாளிகளின் கடமைகளைக் கண்காணிப்பதன் மூலம் ஒத்துழைப்பு வழங்குதல்.
7. மகாவலி அதிகார சபையில் மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களில் திருட்டுக்கள், தவறான பயன்பாடுகள் மற்றும் மோசடிகளை தடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவ்வாறு நடந்து கொள்கின்ற நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.
8. மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் மகாவலி பிரதேசங்களில் சட்ட விரோதமாக குடியேறுதல், சட்ட விரோத கட்டுமானங்கள் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுத்தல்.
9. மகாவலி அதிகார சபையின் வசமுள்ள வெடி பொருட்கள், ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகிய பொருட்களை வைத்துக் கொள்ளுதல், பாதுகாத்தல், விநியோகித்தல் மற்றும் கணக்கிடுதல்.
10. மகாவலி அதிகார சபைக்கு மற்றும் அதற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு பாதுகாப்பு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
11. மகாவலி அதிகார சபை, பதவியணிகளுக்கு மற்றும் குடியேற்றவாசிகளுக்கு அவசியமான விதத்தில் பாதுகாப்புப் பயிற்சிகளை நடாத்துதல்.

மகாவலி பாதுகாப்புப் படையணியின் பிரதான வகிபாகங்கள் மேற்குறிப்பிட்ட விதத்தில் அமைவதுடன், அது அரசாங்கத்தின் மகாவலி விவசாய, கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையின் பொதுக் கொள்கைகளை அமுல்படுத்தும் போது மற்றும் அதனுடன் ஒன்றிய சொத்துக்கள் மற்றும் நபர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இதில் வகிபாகங்களை அமுல்படுத்தும் போது மகாவலி பாதுகாப்புப் படையணிக்கு ஆணைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்காக பணிப்பாளர் பணியகமும், இயக்கற் பிரிவும், களங்களில் அவ் ஆணைகள் மற்றும் ஆலோசனைகளை அமுல்படுத்துவதற்காக அதிகார பிரதேசத்தின் அலுவலகமும், அவசியமான விதத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் காவல் உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பாரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான அணி வகுப்புக்களும் நிறுவப்பட்டுள்ளன. அவ்வாறே, சகல பதவிகளினதும் நிர்வாகம் மற்றும் சம்பளம் வழங்குதல் ஆகிய கணக்குசார் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக சிவில் பதவியணி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளதுடன் திகனையில் அமைந்துள்ள தலைமையகம் மூலம் அதன் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. அதற்கமைய 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதமாகும்

போது எமது படையணியில் முழுமையான பாதுகாப்பு பதவியணியின் எண்ணிக்கை 676 ஆகும். சிவில் பதவியணிகளின் எண்ணிக்கை 49 ஆகும்.

அப்பாதுகாப்புக் கடமைகளை நிறைவேற்றுகின்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் காவல் உத்தியோகத்தர்/ உத்தியோகத்தர்கள் மிகவும் அடக்கமான முறையில் கடமைகளில் ஈடுபடுவதற்காக அவசியமான நிலையியற் கட்டளைகள் மற்றும் ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மகாவலி பாதுகாப்புப் படையணியானது அரசாங்கத்தின் ஏனைய சிவில் பாதுகாப்பு நிறுவனங்களை விட மிகச் சிறந்த தேர்ச்சிகளுடன், ஆயுதம் ஏந்தியதாக அமைக்கப்பட்ட நிறுவனமாகும். மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அரச சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக இந்நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன், அதற்கு மேலதிகமாக ஏனைய மீதிக் கடமைகளுக்காவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

4.4.2 2019 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட விசேட பணிகள்-

01. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2019.01.08 ஆம் திகதி மொரகஹகந்த செயற்திட்டத்தில் இடம்பெற்ற விழாவில் மற்றும் பொல்கொல்ல அணையில் இடம்பெற்ற பிரித் ஓதும் நிகழ்வின் விசேட கடமைகள் மற்றும் இப்படையணிக்கு ஒப்படைக்கப்பட்ட ஏனைய கடமைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

02. 2019.03.15 ஆம் திகதி ஹுருளுவெவ வலயத்தில் சகல பாதுகாப்புப் பதவிகளைச் சேர்ந்தவர்களுக்கும் ஒரு நாள் பயிற்சிப் பட்டறை எளகமுவ பயிற்சி மத்திய நிலையத்தில் வெற்றிகரமாக இடம்பெற்றது.

03. 2019.04.07 ஆம் திகதி ருவன்வெலிசாய வளாகத்தில் இடம்பெற்ற புதிய அரிசி மங்கல விழாவில் இப்படையணிக்கு ஒப்படைக்கப்பட்ட விசேட கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

04. 2019.04.21 ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலில் பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபையின் சகல நீர்த்தேக்கங்களினதும் பாதுகாப்பிற்காக விசேட நிகழ்ச்சித் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

05. 2019.05.25 மற்றும் 26 ஆகிய இரு தினங்களில் தெஹிஅத்தகண்டியவில் இடம்பெற்ற மகாவலி உத்தியோகத்தர்களுக்கான மென் பந்து கிரிக்கட் போட்டியின் கிண்ணமானது மகாவலி பாதுகாப்புப் படையணியினால் வெற்றி கொள்ளப்பட்டது.

06. மகாவலி பாதுகாப்புப் படையணி நிறுவப்பட்டு 34 வருட பூர்த்தியை முன்னிட்டு திகனையில் அமைந்துள்ள இப்படையணியின் தலைமையகத்தில் மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களின் தலைமையில் 2019.06.15 மற்றும் 16 ஆகிய இரு

தினங்களிலும் பிரித் ஓதும் நிகழ்வு மற்றும் கூட்டு தானம் இப்படையணியின் சக பிரிவுகளின் ஊழியர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

07. 2019.08.10 ஆம் திகதி கண்டி புனித தளதா மாளிகையில் ரந்தோலி பெரஹரா ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இப்படையணியில் பதவி வகிக்கின்ற 100 பேர் ஒன்றிணைந்து புனித தளதா மாளிகையின் வளாகத்தை முழுமையாக சுத்தம் செய்வதற்கு உழைப்பின் மூலம் பங்களிப்பு வழங்கப்பட்டது.

08. 2019.07.29 மற்றும் 30 ஆகிய இரு தினங்களில் மகாவலி விசேட ஊடக அலகின் உள்ளடக்கத்துடன் விசேட பயிற்சிப் பட்டறை ஒன்று மொரகஹகந்த செயற்திட்டத்தின் போது படையணியில் பதவி வகிக்கின்ற 50 பேரிற்காக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

09. 2019 மகாவலி விளையாட்டுப் போட்டியில் ஒலிம்பிக் தீப்பந்தமானது சகல வலயங்களின் ஊடாக மெதிரிகிரிய விளையாட்டு மைதானத்திற்கு எடுத்துச் செல்கின்ற பயணத்தின் ஆரம்ப விழாவின் பாதுகாப்புக் கடமைகள் மற்றும் வீதி ஊர்வல கடமைகள் என்பன 2019.08.28 ஆம் திகதி மகாவலி கேந்திர மையத்தில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

10. 2019 மகாவலி விளையாட்டுப் போட்டியில் இப்படையணிக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்த உபசார ஊர்வல கடமைகள், கொடி மற்றும் மரியாதை அணிவகுப்புக் கடமைகளைப் போலவே பாதுகாப்புக் கடமைகள் 2019.09.07 மற்றும் 08 ஆகிய இரு தினங்களில் பிசோபுற மகாவலி விளையாட்டு மைதானத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

11. இப்படையணிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பயிலுனர் காவல் உத்தியோகத்தர்கள் 46 பேரிற்காக தகுதிகாண் பயிற்சிப் பாடநெறி ஒன்று 2019.09.26 ஆம் திகதி முதல் 2019.11.05 ஆம் திகதி வரை கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ பயிற்சிப் பாடசாலையில் நிறைவு செய்யப்பட்டதுடன் இதன் கலைந்து செல்லும் விழாவானது 2019.11.05 ஆம் திகதி பயிற்சியளிக்கப்பட்ட வளாகத்தில் இடம்பெற்றது.

12. இப்படையணியில் கடமையில் ஈடுபட்டு இருக்கும் போது சுகயீனமுற்று எம்மை விட்டுப் பிரிந்த காவல் உத்தியோகத்தர் திரு. டப்லியூ. ஜீ. ஜீ. ஜானக பண்டார அவர்களின் இறுதிக் கிரிகைகள் இப்படையணியின் சம்பிரதாயமாக வழங்கக் கூடிய உயர்ந்தபட்ச விருதான கௌரவ விருது வழங்கப்பட்டு 2019.10.13 ஆம் திகதி பொலன்னறுவையில் இடம்பெற்றது.

மேலும் இப்படையணியில் 24 வருட காலமாக பணிப்பாளராக தலைமை வகித்த மேஜர் எல்.ஏ.பி. ஜயவர்தன அவர்கள் வயது பூர்த்தியடைந்தமையினால் 2020.04.30 ஆம் திகதி ஓய்வு பெற்றதுடன் அன்றில் இருந்து உதவிப் பணிப்பாளராக மேஜர் எம்.ஏ.எல்.என். விஜேரத்ன அவர்கள் இப்படையணிக்கு தலைமை தாங்கி கடமைகளில் ஈடுபட்டு வருகின்றார்.



32 பயிற்சிப் பாடநெறியின் ஆலோசனை மன்றம்



2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பயிற்சி நடவடிக்கைள்



புனித தளதா மாளிகையின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள்



31 ஆவது மகாவலி விளையாட்டுப் போட்டிகள்



2019 ஆம் ஆண்டின் மகாவலி விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப விழா



மகாவலி பாதுகாப்புப் படையணியின் 34 ஆவது ஆண்டு நிறைவு விழா

2019 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

2019 ஆம் ஆண்டில் நிறுவன வருமானம்

கணக்குப் பிரிவு **மில்லியன்**

2003 – கடன் வட்டி வருமானம் - ரூ. 1,696,374.03

2005 – அபராத வரி வருமானம் - ரூ. 24,000.00

2008 – மீள்செலுத்தாத டெண்டர் வைப்பு - ரூ. 1,466,605.51

2010 – பல்வேறு வருமானங்கள் - ரூ. 32,000.00

கூட்டுத் தொகை - ரூ. 3,215,629.54

2019 இல் ஒதுக்கப்பட்ட தொகை – 12.6

2019 ஆம் ஆண்டிற்கு இலக்கு - 4.8

2019 ஆம் ஆண்டின் பிரதான அலுவலகத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற தொகை - 5.3

2019 ஆம் ஆண்டில் செலவு செய்யப்பட்ட தொகை - 4.8

அதற்கமைய நிதி முன்னேற்றம் – 38.1%

நிதிசார் முன்னேற்றம்

கணக்கு இலக்கம்	**ஒதுக்கப்பட்ட தொகை மில்லியன்**	**செலவு செய்யப்பட்ட தொகை - மில்லியன்**
2385 கட்டிடங்கள்	7.9	1.67
2383 வாகன தாபரிப்பு	2.0	1.91
2705 அலுவலக உபகரணங்கள்	0.7	0.08
2822 மகாவலி விளையாட்டுக்கள்	1.4	0.95
2706 தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	0.6	0.14
2116 கலாச்சார செலவுகள்		0.01
2114 சர்க்யூட் பங்களா உபகரணங்கள்		0.08
	12.6	4.84

4.5 மகாவலி கேந்திர மையம்

வருடாந்த பணித் திட்டமிடலுக்கு அமைய மகாவலி மையத்தின் வகிபாகங்களானது பிரதான நான்கு பிரிவுகளின் ஊடாக நிறைவேற்றப்படுவதுடன், கலாச்சாரப் பிரிவின் மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் பிள்ளைகளின் அழகியல் மற்றும் கலாச்சார கலைத் திறமைகளை வெளிக் கொண்டுவந்து தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்குக் கொண்டு செல்வதற்கும், விளையாட்டுத் திறமைகளை வெளிக் கொண்டு வருவதன் ஊடாக தேசிய மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த விளையாட்டு வீர வீராங்கனைளைக் கொண்டு செல்வது விளையாட்டுப் பிரிவின் வகிபாகமாக அமைவதுடன் இப்பிரிவுகள் இரண்டின் மூலமும் மகாவலி குடியேற்றவாசிகளின் மூன்றாம் மற்றும் நான்காம் தலைமுறையைச் சேர்ந்த பிள்ளைகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார நிலைமையை வலுப்படுத்துவதற்காக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

வெளியீட்டுப் பிரிவின் மூலம் மகாவலி வலயங்களின் நிகழ்கால நடவடிக்கைகள் தொடர்பாக பிரச்சார ரீதியான வெளியீடுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் மகாவலி சுற்றாடல் படையணியை நிறுவுதல் மற்றும் வலயங்களில் தாவர அடர்த்தியை அதிகரிக்கும் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், இப்பிரிவின் மூலம் மகாவலி வலயங்களில் மூன்றாம் மற்றும் நான்காம் தலைமுறையைச் சேர்ந்த பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் நோக்கில் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளும், தேசிய பொருளாதாரத்திற்கு மற்றும் தேசிய அபிவிருத்திக்கு ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் வருடங்களில் அவற்றை செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

தேசிய நீர்ப்பாசன நூதனசாலையின் மூலம் மகாவலியின் தனித்தன்மையைப் போலவே இலங்கை நீர்ப்பாசன நாகரிகம் தொடர்பான வெளிப்படுத்தலானது தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு சேர்க்கப்பட்டது மூன்றாம் கட்ட பணிகளை நிறைவு செய்த பின்னர் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகப் போன்றே பொதுமக்களுக்காக திறக்கப்பட்டுள்ளது. தேசிய அரும்பொருட் காட்சியகத்துடன் ஒன்றிணைத்து இதன் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்காக மற்றும் இணையத்தள வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் வருடங்களுக்குள் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

காமிணி திஸாநாயக்க கேட்போர் கூடமானது பல்வேறு வெளித் தரப்புகளுக்காக வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதன் மூலம் வருமான தோற்றுவிப்பு மேற்கொள்ளப்படுவதுடன், வெளியீடுகளை சந்தைப்படுத்தல் மற்றும் நீர்ப்பாசன நூதனசாலையின் ஆய்வு நடவடிக்கைகளுக்காக உபயோகப்படுத்தி புதிய வருமான தோற்றுவிப்புச் செயன்முறைகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் இந் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக தொழில்நுட்ப மற்றும் தாபரிப்புப் பிரிவின் மூலம் மகாவலி கேந்திர மையத்துடன் தொடர்புடைய சகல கட்டுமானங்களையும் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகளைப் போன்றே நாளாந்த தாபரிப்பு நடவடிக்கைகள் இயக்கப்படுவதுடன், கணக்குப் பிரிவின் மூலம் பல்வேறு கொடுப்பனவு நடவடிக்கைகளும், நிர்வாகப் பிரிவின் மூலம் களஞ்சியப் பொருட்களை இற்றைப்படுத்துதல் மற்றும் அலுவலக நிர்வாகம் ஆகியவை மேற்கொள்ளப்படும்.

4.5.1 விளையாட்டுப் பிரிவு

மகாவலி குடியேற்றங்களைச் சேர்ந்த விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறமைகளை விருத்தி செய்து தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு வீர வீராங்கனைகளை இட்டுச் செல்வது விளையாட்டுப் பிரிவின் வகிபாகமாக உள்ளதுடன், அதன் செயற்பாடுகள் பின்வருமாறு,

- மகாவலி பிரதேசங்களில் விளையாட்டுத் துறையில் திறமை வாய்ந்த இளைஞர் யுவதிகளை இனங்காணுதல் மற்றும் தற்பொழுது விளையாட்டுத் துறையில் ஈடுபட்டு உள்ள விளையாட்டு வீரர்களின் தகவல்களைப் பெற்று நீண்ட கால மற்றும் குறுகிய கால திட்டங்களைத் தயாரித்தல்.
- விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவிக்கும் குழாம் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அதன் மூலம் விளையாட்டு வீரர்களைப் பயிற்றுவித்தல்.
- விளையாட்டுத் துறை அமைச்சின் மற்றும் மாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் நிர்ணயங்களுக்கு அமைய பல்வேறு போட்டிகளுக்காக வீரர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் ஆற்றுப்படுத்துதல்.
- மகாவலி விளையாட்டுப் போட்டியில் அணிகளுக்கான போட்டிகள் மற்றும் தடகள/ மெய் வல்லுநர் போட்டிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் அதற்குரிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.
- விளையாட்டு வீரர்களின் நலன்களை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- விளையாட்டு தொடர்பாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையே மற்றும் எமது நிறுவனத்தின் பிரிவுகளுக்கு இடையே சிறப்பான இணைப்புக்களை தக்க வைத்தல்.
- விளையாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
- அலகு ரீதியில் விளையாட்டு வீர வீராங்கனைகளை இனங்காணும் ஒழுங்குமுறை ஒன்றை உருவாக்குதல். (சகல வலயங்களிலும்)
- மகாவலி விளையாட்டுக் கழகங்களை நிறுவுவதற்காக விளையாட்டு வீர வீராங்கனைகளை சமர்ப்பித்தல்.



விசேட குறிப்பு –

ஒலிம்பிக் தீப்பந்தமானது சகல வலயங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டு இறுதிப் போட்டிகள் இடம்பெற்ற மெதிரிகிரிய மகாவலி விளையாட்டு மைதானத்திற்கு எடுத்துச் செல்லும் நிகழ்வானது அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் மெதிரிகிரிய மகாவலி விளையாட்டு மைதானத்தில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

4.5.2 கலாச்சாரப் பிரிவு

மகாவலி குடியேற்றத்தைச் சேர்ந்த பிள்ளைகளின் கலைத் திறனை மேம்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச தரத்திற்கு பிள்ளைகளை தரம் உயர்த்துவது மகாவலி கலாச்சாரப் பிரிவின் வகிபாகமாகும்.

- கலாச்சார மற்றும் அழகியல் பிரிவுகள் பலவற்றின் கீழ் போட்டிகளை நடாத்துவதன் மூலம் வலய மற்றும் தொகுதி ரீதியில் பல்வேறு திறமைகளைக் கொண்ட பிள்ளைகளை இனங்காணுதல். (பாடல் பாடுதல், இசைக்கருவி வாசித்தல், நடனம், அறிவிப்பு ஆகியவை போன்றே சிறுகதைகள், கட்டுரை, நாடக ஆக்கம், சித்திரம் போன்றவை)
- இனங்காணப்பட்ட பிள்ளைகளின் மூலமாக மகாவலி ஆக்கத்திறன் கலை விழா ஏற்பாடு செய்யப்பட்டு இடம்பெறும்.
- உயரிய திறன்களைக் கொண்ட பிள்ளைகளை தேசிய மற்றும் சர்வதேச தரம் வாய்ந்த போட்டிகளுக்காக கலந்து கொள்ளச் செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- பிள்ளைகளைப் போலவே அலுவலக உத்தியோகத்தர்களின் கலை இரசனையை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- அறிவித்தல் பயிற்றுவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் வருடந்தோறும் தேசிய ஒலிபரப்புச் சேவைக்குப் போலவே தேசிய வானொலி நிகழ்ச்சிகளுக்காகவும் பிள்ளைகளை ஆற்றுப்படுத்துவது இடம்பெறுவதுடன், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஆண்டுகளில் இந்நிகழ்ச்சிகளை ஆரம்பித்து மேம்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தொகுதிகளுக்கு இடையில் அனைத்துப் போட்டிகளும் நிகழ்த்தப்பட்டு முடிவுற்றிருந்தாலும், மகாவலி ஆக்கத்திறன் கலை விழாவானது 2019 ஆம் ஆண்டு வெகு விமர்சையாக நடாத்தப்பட்டது.



4.5.3 வெளியீட்டுப் பிரிவு

இலங்கையில் நீர்ப்பாசன நாகரிகத்தின் ஆரம்பத்தில் இருந்து நீர்ப்பாசனக் கைத்தொழிலின் விருத்தி தொடர்பான சகல தகவல்களும் உள்ளடங்கிய தேசிய நீர்ப்பாசன வரலாறு உள்ளடங்கிய நூலை வெளியிடுதல், 2019 ஆம் ஆண்டின் மகாவலி விளையாட்டின் அடையாள சின்னத்தை தயாரித்து வடிவமைத்தல், பத்திரிகை பிற்சேர்க்கை மற்றும் பத்திரிகை விளம்பரங்களைத் தயாரித்தல் உட்பட சகல பிரச்சார நடவடிக்கைகளையும் முன்னெடுத்தல்.

நூதனசாலை

இலங்கையின் பழைமையான நீர்ப்பாசனக் கைத்தொழிலின் வரலாறு மற்றும் நீர்ப்பாசன தொழில்நுட்பம் தொடர்பாக தகவல்களைப் போன்றே மகாவலி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் இணைந்த சமூக பொருளாதாரம் மற்றும் கலாச்சார நிலைமை தொடர்பாக பார்வையாளர்களின் அறிவு, கிரகித்தல் மற்றும் உத்வேகத்திற்காக காட்சிப்படுத்தல் அறைகள் வடிவமைக்கப்பட்டு உள்ளதுடன், அதனுடன் தொடர்புபட்ட அரும் பொருட்களின் மாதிரியமைப்புக்கள் மற்றும் தரவுகளைப் பாதுகாத்து ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளுக்காக கல்வி மத்திய நிலையமாக மகாவலி கேந்திர மையத்தின் தேசிய நீர்ப்பாசன நூதனசாலை நிறுவப்பட்டுள்ளது.

தேசிய நீர்ப்பாசன நூதனசாலையின் மூன்றாம் கட்ட நடவடிக்கைகள் மற்றும் நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்பு ஆய்வுகளுக்காக மக்களுக்கு கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரச நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், சிறு நூலகங்களுக்காக நீர்ப்பாசன நாகரிகத்துடன் தொடர்புடைய புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கல்வி, சமூக அபிவிருத்தி மற்றும் விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்.

மகாவலி சுற்றாடல் படையணியை நிறுவுதல் மற்றும் வலயங்களின் தாவர விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றை நடாத்துதல், கொழும்பு பிரதேசத்தின் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத் தோட்ட தாவரங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளதுடன், இப்பிரிவின் செயற்பாடுகளை மேம்படுத்தி விளைத்திறன் மிக்க வகிபாகத்தை நிறைவேற்றுவதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

4.5.4 தாபரிப்புப் பிரிவு

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வாகன தரிப்பிடங்களுக்கு இண்டர்லொக் கற்கள் மற்றும் புற் கற்றையிட்டு நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், முதலாம் மாடியில் இடம்பெறுகின்ற நீர்க் கசிவுகளை சீர்செய்தல், கேட்போர் கூடத்தின் கதவுகள் இரண்டையும் புதிதாகப் பொருத்தி நவீன மயப்படுத்துதல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அலுவலக CCTV கமராத் தொகுதியை நிறுவுதல் மற்றும் புதிய தெலைக்காட்சிப் பெட்டி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வருமானத் தோற்றுவிப்பு

மகாவலி கேந்திர மையத்தின் ஊடாக தற்பொழுது பிரதான வருமான தோற்றுவிப்பு முறைகள் இரண்டு பின்வரும் விதத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

- மகாவலி தொழில்வாண்மைச் சங்கம் ஒன்றின் மூலம் தயாரிக்கப்பட்டு மகாவலி கேந்திர மையத்தின் மூலம் அச்சிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட தேசிய நீர்ப்பாசன வரலாற்று நூல் மற்றும் திரு. போஹியர் அவர்களால் எழுதப்பட்ட புராதன நீர்ப்பாசன முறைகள் ஆகிய இரு நூல்கள் மற்றும் மகாவலி வரைபடத்தை வெளி ஆட்களுக்கு மற்றும் நிறுவனங்களுக்கு தேவைப்பாட்டின் அடிப்படையில் விற்பனை செய்தல்.
- காமிணி திஸாநாயக்க கேட்போர் கூடத்தை வெளி நிறுவனங்களின் தேவைப்பாட்டிற்கு அமைய வாடகை அடிப்படையில் வழங்குதல்.

2019 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்

தொடர் இலக்கம்	பிரிவு	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு ரூ. மில்லியன்	செலவு செய்யப்பட்ட தொகை ரூ. மில்லியன்
01	கட்டுமானங்கள் மற்றும் நவீனமயப்படுத்துதல்	5.37	3.58
02	சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பொருத்துதல்	1.26	1.07
03	விளையாட்டு	8.92	7.55
04	வெளியீட்டு நடவடிக்கைகள்	0.65	0.55
05	கலாச்சார அபிவிருத்தி மற்றும் ஊடகம்	3.50	1.12
06	நூதனசாலை	0.48	0.06
07	கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி	0.04	0.01
08	விசேட செயற்திட்டங்கள்	0.78	0.62
	கூட்டுத் தொகை	21.0	14.56

2019 ஆம் ஆண்டின் வருமான தோற்றுவிப்பு

தொடர் இலக்கம்	விபரம்	ஊகிக்கப்பட்ட வருமானம் ரூ. மில்லியன்	தோற்றுவிக்கப்பட்ட வருமானம் ரூ. மில்லியன்
01	கேட்போர் கூடம்	5.37	3.58
02	நூல் விற்பனை	1.26	1.07
	கூட்டுத் தொகை	8.92	7.55

4.6 போக்குவரத்துப் பிரிவு


இலங்கை மகாவலி அதிகார சபையின் இலக்குகளை எட்டுவதற்கு அவசியமான சேவைகளின் முதன்மை வகிபாகங்கள் போக்குவரத்துப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக நிறுவனத்தின் போக்குவரத்துச் சேவை, நிறுவனத்தினுள் நிலவுகின்ற பௌதீக மற்றும் உழைப்புசார் வளங்களை உயர்ந்தபட்ச விதத்தில் பயன்படுத்தி துரிதமான வினைத்திறனுடன் கூடிய போக்குவரத்து சேவைகளாக பொருளாதார, சமூக மற்றும் சூழலியல் தாக்கங்களை இயன்றளவு குறைத்து முறையான விதத்தில் நடாத்திச் செல்வது போக்குவரத்துப் பிரிவின் அடிப்படைப் பணியாக கருத முடியும்.

புது எண்ணக்கருக்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளுக்கு ஒருங்கிணைந்து சுற்றாடல் தோழமையுடைய சேவைகளாக நடாத்திச் செல்வது யுகத்தின் தேவையாகும். இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களின் இயக்கல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக சரியான வழிகாட்டல்கள்,, அவசியமான ஆலோசனைகளை வழங்குதல், கையிறுப்பில் உள்ள வாகனங்களை முகாமைத்துவம் செய்தல், சரியான பாதைக்கு ஆற்றுப்படுத்துவதன் ஊடாக வினைத்திறன் மிக்க சுற்றாடல் தோழமையுடைய வினைத்திறனான சேவைகளை வழங்குவது எமது நோக்கமாகும்.


பகுதியான அரச நிறுவனமாக செயற்படுகின்ற இலங்கை மகாவலி அதிகார சபையானது அரசாங்கத்திற்கு செலவுச் சுமையாக செயற்படக் கூடாது என்றும், அதில் வருமானங்களைத் தோற்றுவிக்கின்ற அல்லது இலாபம் ஈட்டும் நிறுவனமாக எதிர்வரும் காலங்களில் செயற்பட வேண்டும் எனவும் பொதுத் திறைசேரியால் (நிதி அமைச்சு) ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

அதற்கமைய எதிர்வரும் நடவடிக்கைகளைத் திட்டமிடும் போது போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டி உள்ளது. மொத்த பாதீட்டு ஏற்பாடுகளில் 7% இற்கும் அதிகமான தொகையானது இதற்காகச் செலவாகின்றது. எரிபொருள், சாரதிக் கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு, வாழ்க்கைப் படிகள், பழுதுபார்த்தல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள் மற்றும் இயக்கல் நடவடிக்கைகளுக்காக பாரியளவு தொகை செலவாகின்றதுடன், அவற்றை ஒழுங்குமுறைப்படி நிர்வகிப்பது காலத்தின் தேவையாகும்.

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கையிருப்பிலுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 666 ஆகும். அவை மோட்டார் வாகனங்கள் (கார், ஜீப், இரட்டைத் தொழிற்பாடுகள்) 488 உம், பெரும்பார வாகனங்கள் (லொறி, பேருந்து) 178 உம், இயந்திராதிகள் (லோடர், ஜே.சி.பி. ஆகியவை) 57 உம் காணப்படுகின்றன.



அதற்காக ஒழுங்குமுறையே சாரதிகள் 413 பேரும், இயந்திர இயக்குனர்கள் 71 பேரும், இழுபொறு சாரதிகள் 13 பேரும், சாரதி உதவியாளர்கள்/ கையுதவியாளர்கள் 39 பேரும் கடமையாற்றுகின்றனர்.



2019 ஆம் ஆண்டில் போக்குவரத்து முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கான மொத்த செலவு ரூ. 189,997,430.00 ஆகும்.

வருடாந்தம் மீண்டுவரும் செலவு	**ரூபாய்**
எரிபொருள் மற்றும் எண்ணெய்க்கான செலவு	57,233,728.00
வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்குரிய கொடுப்பனவு	1,529,230.00
வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகளுக்கான செலவுகள்	64,059,493.00
காப்புறுதி மற்றும் வருமான உத்தரவுப் பத்திரக் கட்டணங்களைச் செலுத்துவதற்கான செலவு	8,937,808.00
மீண்டுவரும் செலவினங்களின் கூட்டுத் தொகை	131,760,259.00
வருடாந்த மூலதன செலவினங்கள்	
வாகனங்களை மேம்படுத்துவதற்கான செலவுகள்	58,237,171.00
மொத்த செலவு	**189,997,430.00**

பிரதான அலுவலகம் உட்பட வலய அலுவலகங்கள் 10 இல் மேற்குறிப்பிட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் இயக்குனர்களின் சேவைகளானது தேவைப்பாட்டின் அடிப்படையில் பிரித்து வேறுபடுத்தப்பட்டுள்ளது. அனைத்து வலய அலுவலகங்களிலும் போக்குவரத்துப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் அதன் இயக்கல் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எச் வலயத்தில், தம்புத்தேகம இயந்திர வேலைத்தளம் மற்றும் சகல வலய அலுவலகங்களிலும் இயந்திர வேலைத்தளம் ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் வாகன தாபரிப்பு மற்றும் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுகின்றன. எனினும், இயந்திர வேலைத்தளங்களில் முதன்மையான வேலைத்தளமான தம்புத்தேகம இயந்திர வேலைத்தளத்தில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் தொழிற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு கடந்த ஆண்டு முடியாமல் போனது.


அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய புதிய வாகனங்கள் கொள்வனவு செய்வது கடந்த ஆண்டு இடம்பெறவில்லை. ஆகையால், நிலவுகின்ற கையிறுப்பிலுள்ள வாகனங்களை தாபரித்து ஓடுவதற்குப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிறுவனத்தில் காணப்படுகின்ற வாகனங்களில் 60% இற்கும் அதிகமான வாகனங்கள் 15 வருடங்களுக்கும்

அதிகமாக பயன்படுத்துகின்ற பழைய வாகனங்களாக இருப்பதுடன், அவற்றை தாபரிப்பதற்காக பாரியளவு செலவை ஏற்க வேண்டி உள்ளது.

மேலும் கடந்த ஆண்டில் வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு கையுதிர்க்கப்பட்டு இருந்த பணிப்பாளர் நாயகம், இலங்கை மகாவலி அதிகார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும், வேறு நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள எமது நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டு இருந்து வாகனங்களை உரிய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அல்லது எமக்குக் கையகப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முறையான விதத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அரச உத்தியேகத்தர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களுக்காக போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உரியதாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய அதிகார சபையின் உயர் முகாமைத்துவத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையின் கையிறுப்பில் உள்ள வாகனங்களின் முகாமைத்துவமானது சரியான பாதையில் ஆற்றுப்படுத்தப்பட்டது. அச்செயற்பாடுகள் பிரதான அலுவலகத்தில் செயற்படுத்தப்பட்டதுடன் அவ் ஒழுங்குகளை வலய அலுவலக மட்டத்தில் செயற்படுத்துவதன் ஊடாக விளைத்திறனான சேவைக்கு அளப்பரிய காரணமாக இருந்தது.


பிரதான அலுவலகத்தின் வாகன முகாமைத்துவத்தில் ஒதுக்கப்படுகின்ற வாகனங்கள் (உத்தியோகபூர்வ வாகன உரிமங்கள்) தவிர எஞ்சிய அனைத்து வாகனங்களின் போக்குவரத்தும் குழாமினால் முகாமைத்துவம் செய்யப்படும். நாளாந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக நாளாந்த வாகன கோரிக்கையானது மாதம் ஒன்றிற்கு 150 -175 வரையான அளவு முன்வைக்கப்படுவதுடன், மாதம் ஒன்றிற்கு வெளிக்களப் பயணங்கள் சுமார் 70 முன்வைக்கப்படுகின்றன. இவ் அனைத்து கோரிக்கைகளும் குழாமில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட சாரதி வளங்கள் (சாரதிகள் 28 பேர்) மூலம் முகாமைத்துவம் செய்வதற்கு போக்குவரத்துப் பிரிவிற்கு ஏற்பட்டு உள்ளது.



இவ்வாறு ஒரு குழாமின் மூலம் மாத்திரம் வாகனங்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சரியான போக்குவரத்து முகாமைத்துவத்தை நிறைவேற்ற முடியுமாக இருப்பதுடன், பெற்றுக் கொள்வதன் மூலம் போக்குவரத்து வசதிகளுக்காக அதிகார சபையினால் ஏற்கப்படுகின்ற எரிபொருள் மற்றும் ஏனைய செலவுகளை நிர்வகிப்பதற்கு முடியுமாக உள்ளது. இதற்கு மேலதிகமாக வாகனங்களின் முறையற்ற பயன்பாடு, மட்டுப்படுத்தப்பட்ட உழைப்பு மற்றும் காலத்தை சேமித்துக் கொள்ள முடியுமாக இருப்பதைப் போன்றே பொருளாதார இலாபங்களை ஈட்டிக் கொள்வதற்கு முடியுமாகி உள்ளது.

குழாமில் பணியாற்றுகின்ற அனைத்து சாரதிகளுக்கும் சமமான வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகளை உயர் மட்டத்திற்கு இட்டுச் செல்ல முடியுமாக இருந்ததுடன், கடமைகளை நிறைவேற்றுவதற்காக காண்பிக்கின்ற அர்ப்பணிப்பு மற்றம் பொருத்தமான விதத்தில் சேவைக்கு ஆற்றுப்படுவது என்பவற்றைக் காணக் கூடியதாக உள்ளது.


இவ் ஆண்டினுள் பிரிவிற்குரிய இலக்குகளில் அதிகார சபையின் சாரதிகள் மூலம் ஏற்படுகின்ற வாகன விபத்துக்களை இயன்றளவு குறைத்துக் கொள்வதற்காக முதலிடம் வழங்கப்பட்டதுடன், அந்நோக்கத்துடன் சாரதிகளுக்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தி அந்த இலக்குகளை வெற்றிகரமான முறையில் நிறைவேற்றுவதற்காக இயலுமை கிடைத்துள்ளது. அதற்கமைய 2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற விபத்துக்களின் எண்ணிக்கையை 04 ஆக குறைப்பதற்கு முடியுமானதாக இருந்தது. அவ்வாறான பயிற்சிப் பாடநெறிகளை எதிர்வரும் காலங்களில் நடாத்துவது காலத்தின் தேவையாக உள்ளதுடன் அதன் மூலம் சாரதிகளின் அறிவு மற்றும் ஆற்றல்களை மேம்படுத்த முடியும்.



2019 ஆம் ஆண்டில் அரச நிறுவனங்களின் பழுதடைந்த வாகனங்களை பயன்பாட்டில் இருந்து நீக்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன், அதற்காக அவசியமான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நிதிப் பிரமாணம் மற்றும் பெறுகை வழிகாட்டல் முறைகளுக்கு அமைய பழுதடைந்த வாகனங்களை அகற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, நிறுவனத்தினுள் அகற்றுவதற்காக வாகன மற்றும் இயந்திராதிகள் 63 உம், சிதைவுப் பொருட்கள் மற்றும் சிதைவடைந்த இரும்புகளை அவற்றின் பாரத்திற்கு ஏற்ப விற்பனை செய்வதற்கு 66 ஆக உருப்படிகள் 129 உம் இனங்காணப்பட்டுள்ளதுடன், அவற்றை கேள்வி மனு (டெண்டர்) மூலம் விற்பனை செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போக்குவரத்து முகாமைத்துவ இயக்கற் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக போக்குவரத்துப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் (போக்குவரத்து) இன் தலைமையில் தொழில்நுட்ப பொறியியலாளர் (இயந்திரம்), பொறியியல் உதவியாளர்கள் (இயந்திரம்)

இருவர், முகாமைத்துவ உதவியாளர்கள், வேலைசெய் தலையாள் உட்பட மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியின் மூலம் நிறைவேற்றப்படுவதுடன், முதன்மையாக போக்குவரத்து உத்தியோகத்தர், நிர்வாக உதவியாளர் பதவிகளுக்காக பிரிவில் நெடுங்காலமாக வெற்றிடங்கள் காணப்படுகின்றன.



அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய (சுபீட்சத்தின் நோக்கு) மோசடிகள் அற்ற வினைத்திறனான நிர்வாகத்தை மேற்கொள்வதற்கான கருப் பொருளை முதன்மையாகக் கொண்டு விளைத்திறனான மற்றும் வினைத்திறனான போக்குவரத்துக் குழாம் ஒன்றை முகாமைத்துவம் செய்வதை இலக்காகக் கொண்டுள்ள மேற்குறிப்பிட செயற்பாடுகள் பிரிவினுள் செயற்படுத்தப்பட்டதுடன், அதற்காக நவீன/ நடப்புத் தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுவது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வருகின்ற எதிர்காலத்தில் இத்தொழில்நுட்ப முறைகளுக்கு அமைய செயற்படுவது தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாண்டில் பிரதான அலுவலகத்தில் பிரிக்கப்பட்ட வாகனங்களைத் (உத்தியோகபூர்வ வாகன உரித்துள்ள) தவிர ஏனைய அனைத்து வாகனங்களும் ஒரு குழுமத்தின் மூலம் முகாமைத்துவம் செய்யப்பட்டதுடன், அதிகார சபையின் கடமைத் தேவைகளுக்காக வாகனங்கள் மற்றும் சாரதிகளைப் பிரிப்பது போக்குவரத்துப் பிரிவின் மூலம் மாத்திரம் முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாக முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முறையற்ற வாகனப் பயன்பாடு, எரிபொருட்களுக்காக செலவிடுகின்ற தொகையை இயன்றளவு குறைத்தல், நிலவுகின்ற குழாமின் மூலம் இயன்றளவு பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியுமாகி உள்ளதுடன் அரசாங்கத்தின் வழிகாட்டல்களுக்கு அமைய ஏற்றுக் கொள்ளப்பட்ட சரியான போக்குவரத்து முகாமைத்துவத்திற்கு ஆற்றுப்படுத்துவதானது காலத்தின் தேவையாக மாறியுள்ளது.

ஐந்தாவது அத்தியாயம்

பகுதி – I

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள்.

நிறுவன சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட வியாபார நடவடிக்கைகளின் ஒரு பகுதி முகாமைத்துவத்திற்காக பின்வரும் தனியார் நிறுவனங்களுக்கு கையகப்படுத்தப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.
  Mahaweli Livestock & Agro Enterprises (Pvt) Ltd

- வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம். (MCB)
  Mahaweli Consultancy Bureau (Pvt) Ltd

- இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம். (NRMS)
  Natural Resources Management Services (Pvt) Ltd

2019 ஆம் ஆண்டில் நிறுவனங்களின் செயலாற்றுகை

தொடர் இலக்கம்	நிறுவனம்	வருடத்தினுள் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்/ நிலைமை
01	வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.	❖ மாகாணத்தின் பால் விவசாயிகளிடம் இருந்து பால் சேகரித்தல் மற்றும் அவர்களுக்கு அதன் மூலம் சேவைகளை வழங்குதல். ❖ பால் சார்ந்த உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவ் உற்பத்திகளை மகாவலி வலயங்கள் மற்றும் அண்டிய பிரதேசங்களுக்கு சந்தைப்படுத்துதல்.

		❖ நாட்டுக் கோழிச் செயற்திட்டத்தின் ஊடாக விவசாயிகளுக்குக் கோழிக் குஞ்சுகளை வழங்குதல். ❖ ஆண் மாடுகளாக பயன்படுத்துவதற்காக நீர் எருமைகளின் உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வழங்குதல். ❖ தரத்தில் உயர்ந்த பிராய்லர் இறைச்சிகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துதல்.
02	வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம்.	இயலுமை ஆய்வுகள் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகளின் மூலம் 2018 ஆம் ஆண்டில் செயற்பாடுகளில் இருந்தான வருமானங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.
03	இயற்கை வள முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) நிறுவனம்.	பின்வரும் நடவடிக்கைகள் மூலம் 2014 ஆம் ஆண்டில் செயற்பாடுகளில் இருந்தான வருமானங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. • விக்டோரியா மற்றும் கொத்மலை வலயங்களின் காணிகளை அளவிடுதல் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல். • மண் ஆராய்ச்சிச் செயற்திட்டம் – ரூ. 1,018,479.01 • நானு ஓயா மற்றும் கொலதெனிய அளவிடு தானங்களின் H-Q அளவீடு – ரூ. 437,472.00 • மாத்தளை மாவட்டத்தின் புவக்பிடிய மற்றும் இலுக்கும்புர சேதன பண்ணைச் செயற்திட்டம் – ரூ. 200,000.00 • ஹபுதலை பெருந்தோட்டச் செயற்திட்டம் – ரூ. 160,000.00 • அமர லெஷர் ஹோட்டலின் அடிப்படை சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் – ரூ. 300,000.00

வருடாந்த கணக்குகள்

பகுதி II

இலங்கை மகாவலி அதிகார சபை						
இல. 500, டீ.பி. ஜாயா மாவத்தை						
கொழும்பு 10						
31.12.2019 ஆம் திகதிக்கான நிதிக் கூற்றுக்கள்						
		குழுமம்			**அதிகார சபை**	
		ரூ.'000	**ரூ.'000**		**ரூ.'000**	**ரூ.'000**
		2019	**2018**		**2019**	**2018**
	குறிப்பு					
சொத்துக்கள்						
நடைமுறை அல்லாத சொத்துக்கள்						
ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள்	**(1)**	4,972,468	4,218,620		4,910,040	4,157,600
முதலீடுகள் (LT)	**(2)**	166,299	173,760		527,118	532,323
மூலதன பணிச் செயல்முறை		47,482	84,947		47,482	84,947
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்		5,186,249	4,477,328		5,484,640	4,774,870
உயிரியல் சொத்துக்கள் – மூலதனம்	**(3)**	219,777	167,027		210,567	156,572
நடைமுறை சொத்துக்கள்						
சரக்கு இருப்புகள்/ இருப்புகள்	**(4)**	170,983	180,461		166,964	175,874

உயிரியல் சொத்துக்கள் – வணிகம்	**(3)**	47,178	26,312		47,004	24,852
வணிகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள்	**(5)**	2,997,661	2,646,243		2,929,670	2,569,245
முற்கொடுப்பனவுகள்		-	4,767		-	4,767
வங்கி உத்தரவாதங்கள்		374	6,292		-	-
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	**(6)**	258,877	312,702		249,399	304,528
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		3,475,073	3,176,777		3,393,037	3,079,266
மொத்த சொத்துக்கள்		**8,881,100**	**7,821,131**		**9,088,243**	**8,010,708**
பொறுப்புகள்						
நடைமுறை பொறுப்புகள்						
கொடுப்பனவுகள்	**(7)**	968,185	644,059		935,272	602,272
குத்தகை – ஏலியன்ஸ் பினான்ஸ்		-	-		-	-
பெருகிய செலவுகள்	**(8)**	211,909	102,067		187,511	68,075
முகவர்களுக்கு இடையிலான நடைமுறை கணக்கு மீதிகள்		-	-		-	-
மொத்த நடைமுறை பொறுப்புகள்		1,180,094	746,126		1,122,783	670,347
நடைமுறை அல்லாத பொறுப்புகள்						

பணிக்கொடைக்கான ஏற்பாடு	**(9)**	1,371,814	1,379,494		1,359,652	1,367,485
வங்கிக் கடன்		-	-		-	-
குத்தகைக் கட்டணங்கள்		-	219		-	-
பிற்போடப்பட்ட வரி		612	612		-	-
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்		1,372,426	1,380,325		1,359,652	1,367,485
மொத்த பொறுப்புகள்		2,552,520	2,126,451		2,482,435	2,037,833
மொத்த தேறிய சொத்துக்கள்		6,328,579	5,694,680		6,605,808	5,972,875
<u>தேறிய சொத்துக்கள் / உரிமையான்மை</u>						
நிதிக் கூட்டுத்தொகை	**(10)**	1,837,751	1,606,957		1,834,747	1,603,953
ஒதுக்குகள் – வருமான மற்றும் செலவுக் கணக்கின் ஆரம்ப மீதி		(657,528)	(364,355)		(321,585)	(32,290)
வருமான ஒதுக்குகள் - நிறுவனங்கள்		48,288	50,865		-	-
மீள் மதிப்பீட்டு ஒதுக்குகள் –		5,100,069	4,401,212		5,092,646	4,401,212
<u>மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமையான்மை</u>		6,328,580	5,694,680		6,605,808	5,972,875

இலங்கை மகாவலி அதிகார சபை						
இல. 500, டீ.பி. ஜாயா மாவத்தை						
கொழும்பு 10						
31.12.2019 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்றுக்கள்.						
		குழுமம்	**அதிகார சபை**		**குழுமம்**	**அதிகார சபை**
		ரூ.'000	**ரூ.'000**		**ரூ.'000**	**ரூ.'000**
		2019	**2019**		**2018**	**2018**
	அட்ட.					
வருமானம்	**(01)**					
வாடகை		370,610	370,610		257,680	257,680
ஆதாய உரிமை		1,399,617	1,399,617		365,938	365,938
கட்டுமானப் பணிகள்		17,275	-		33,822	-
பண்ணை விளைபொருள் விற்பனை		5,282	-		6,655	915
முதலீட்டு வருமானம் (நிறுவனங்கள்)		9,588	2,935		16,829	10,103
ஏனைய வருமானங்கள்		119,240	119,162		53,335	51,264
தோற்றுவிக்கப்பட்ட வருமானம்		1,921,613	1,892,324		734,258	685,898
கருவூல மானியம் - மீண்டுவரும்	**(02)**	2,100,000	2,100,000		2,694,384	2,694,384
மூலதனம்		1,159,436	1,159,436		1,976,359	1,976,359
- விவசாயம்		159,500	159,500			

- வெள்ளம்		73,500	73,500			
		5,414,049	5,384,760		5,405,001	5,356,641
<u>குறைந்த :</u> **<u>செலவுகள்</u>**	**(03)**					
தனிப்பட்ட ஊதியம்		2,822,035	2,803,412		2,619,433	2,591,043
போக்குவரத்து /வாழ்க்கைப்படி		106,633	106,529		64,448	64,189
வழங்கல்கள் /போக்குவரத்து		137,686	136,598		134,324	128,924
தாபரிப்பு செலவினங்கள்		43,659	43,597		51,374	51,158
ஒப்பந்தவியல் பணிகள்		129,211	127,659		127,387	125,010
காப்புறுதி		237	237		323	323
ஏனைய செலவுகள்		90,301	81,326		78,533	69,018
பெறுமானத் தேய்வு		547,475	544,714		525,827	522,620
மறுசீரமைப்பு, மேம்பாடு மற்றும் ஏனைய தாபரிப்புக்கள்	**(04)**	1,831,043	1,831,043		2,182,666	2,182,666
சமூக விருத்தி மற்றும் குடியேறியோருக்கான சேவைகள்						
சுற்றுப்பயண மாளிகையின் நட்டம்	**(05)**	14,085	14,085		12,296	12,296
அபிவிருத்தி மத்திய நிலையத்தின் இலாபம்		(976)	(976)		7,002	7,002
நீர் செயற்திட்ட முகாமைத்துவ நட்டம்		3,739	3,739		3,124	3,124

பயிற்சிப் பட்டறையின் நட்டம்/ இலாபம்		(10,474)	(10,474)		366	366
நாற்றுமேடையின் நட்டம்	**(06)**	19,313	19,313		6,371	6,371
பண்ணை நட்டம்/ இலாபம்	**(07)**	(52,049)	(52,049)		361	361
ஹெல போஜுன்ஹலவின் நட்டம்/ இலாபம்		(82)	(82)		3,924	3,924
மொத்த செயற்பாட்டுச் செலவுகள்		5,681,837	5,648,669		5,817,759	5,768,394
செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான மிகை/ (பற்றாக்குறை)		(267,788)	(263,909)		(412,758)	(411,753)
நிலையான ஆதனங்களை அகற்றியமை – மேல. இலாபம் / நஷ்டம்	**(08)**	(25,960)	(25,960)		(10,191)	(10,191)
குறைந்த. வரி விதிப்பிற்கான ஏற்பாடு		-	-		79	-
பங்குலாபம்		573	573		573	
வரியின் பின்னரான வருமானம்		(293,175)	(289,295)		(423,600)	(421,944)
			-			-
2019.01.01 ஆம் திகதிக்கு கொண்டு வரப்பட்ட மீதி		(364,354)	(32,290)		(23,511,422)	(23,181,813)
தேறிய மிகை (பற்றாக்குறை) முன் கொண்டுவரப்பட்ட		**(657,528)**	**(321,585)**		**(23,935,022)**	**(23,603,757)**

இலங்கை மகாவலி அதிகார சபை
இல. 500, டீ.பி. ஜாயா மாவத்தை
கொழும்பு 10

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

	குழுமம்		**அதிகார சபை**	
	ரூ.'000		**ரூ.'000**	
	(267,788)		(263,909)	
பங்கிலாபம்	573		573	
பெறுமானத் தேய்வு	557,360		553,924	
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	(7,680)		(7,834)	
உயிரியல் ஆதனங்களின் ஆதாய அதிகரிப்பு	(52,750)		(53,995)	
ஆதனங்களின் உரிமை மாற்றங்கள்	(394,521)		(394,521)	
கையளிக்கப்பட்ட ஆதனங்கள்	3,298		3,298	
இருப்புக்களின் அதிகரிப்பு/ குறைவு	9,478		8,910	
உயிரியல் ஆதனங்களின் அதிகரிப்பு/ குறைவு – வணிகம்	(20,867)		(22,152)	
ஏனைய பெறுகைகளின் அதிகரிப்பு/ குறைவு	(351,418)		(360,425)	
முற்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/ குறைவு	4,767		4,767	

வங்கி உத்தரவாதங்களின் அதிகரிப்பு/ குறைவு	5,918		-	
கொடுப்பனவுகளின் அதிகரிப்பு/ குறைவு	324,126		333,000	
அட்டுறுச் செலவுகளின் அதிகரிப்பு/ குறைவு	109,842		119,436	
	(79,661)		**(78,927)**	
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு	(253,568)		(253,563)	
சொத்து விற்பனைகளின் மூலமான உருவாக்கங்கள்	3,896		3,896	
முதலீடுகளின் அதிகரிப்பு/ குறைவு	7,462		5,205	
பணி முன்னேற்றங்களின் அதிகரிப்பு/ குறைவு	37,465		37,465	
	(204,745)		**(206,996)**	
நிதிசார் கட்டணங்களின் அதிகரிப்பு/ குறைவு	(219)		-	
நிதிக் கூட்டுத் தொகை மற்றும் ஒதுக்குகளின் அதிகரிப்பு/ குறைவு	228,217		230,794	
மீள் மதிப்பீட்டு ஒதுக்குகளின் அதிகரிப்பு/ குறைவு	2,583			
	230,581		**230,794**	
	(53,825)		**(55,130)**	
	312,702		304,528	

	258,877		**249,399**	

இலங்கை மகாவலி அதிகார சபை				
இல. 500, டீ.பி. ஜாயா மாவத்தை				
கொழும்பு 10				
<u>உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள் – குழுமம்</u>				
	ரூ.'000	**ரூ.'000**	**ரூ.'000**	**ரூ.'000**
விபரம்	**ஒருங்கிணைக்கப்பட்ட நிதி**	**ஒதுக்குகள்**	**வருமானங்கள் மற்றும் செலவினங்கள்**	**மொத்தம்**
01.01.2018 ஆம் திகதிக்கு மீதி	24,407,260	4,056,947	(23,511,422)	4,952,785
ஆண்டின் போது	242,570	861,469	(423,600)	680,439
31.12.2018 ஆம் திகதிக்கு மீதி	**24,649,830**	**4,918,416**	**(23,935,022)**	**5,633,224**
01.01.2019 ஆம் திகதிக்கு மீதி	**1,606,957**	**4,401,212**	**(293,175)**	**5,714,995**
				-
ஆண்டின் போது	253,563	698,857	(364,354)	**588,066**
மாறுபட்ட வருமானம்	(22,769)			**(22,769)**

31.12.2019 ஆம் திகதிக்கு மீதி	**1,837,751**	**5,100,069**	**(657,528)**	**6,280,292**
<u>உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள் – மகாவலி அதிகார சபை</u>				
	ரூ.'000	**ரூ.'000**	**ரூ.'000**	**ரூ.'000**
	ஒருங்கிணைக்கப்பட்ட நிதி	**ஒதுக்குகள்**	**வருமானங்கள் மற்றும் செலவினங்கள்**	**மொத்தம்**
01.01.2018 ஆம் திகதிக்கு மீதி	24,404,255	4,006,082	(23,181,813)	5,228,524
ஆண்டின் போது	242,570	861,469	(421,943)	682,096
31.12.2018 ஆம் திகதிக்கு மீதி	**24,646,825**	**4,867,551**	**(23,603,756)**	**5,910,620**
01.01.2019 ஆம் திகதிக்கு மீதி	1,603,953	4,401,212	(289,295)	5,715,870
ஆண்டின் போது	253,563	691,434	(32,290)	912,708
மாறுபட்ட வருமானங்கள்	(22,769)	-	-	(22,769)
31.12.2019 ஆம் திகதிக்கு மீதி	**1,834,747**	**5,092,646**	**(321,585)**	**6,605,808**

நிதிக் கூற்றிற்கான பிரமாணக் குறிப்புக்கள் பகுதி

1.) அறிக்கையிடல் நிறுவனம்

இலங்கை மகாவலி அதிகார சபை (MASL) 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிகள் 12 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. (MDP.)

மகாவலி சட்டத்தின் பிரகாரம், எந்தவொரு விசேட பிரதேசத்திலும் அல்லது அது தொடர்பில் அதிகார சபையின் பணிகள் பின்வருமாறு இருக்கும்.

அ) நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல், நீர்ப்பாசன விநியோக முறைமை மற்றும் மின் சக்தி உற்பத்தி மற்றும் வழங்கல் போன்ற மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தை திட்டமிட்டு அமுல்படுத்துதல்.

ஆ) எவ்வாறாயினும், மின் சக்தி விநியோகம் தொடர்பான செயல்பாட்டை வேறு எந்த எழுத்துப்பூர்வ சட்டத்தின் கீழும் செய்யத் தகுதிவாய்ந்த எந்த அதிகாரியும் விடுவிக்கலாம்.

இ) எந்தவொரு சிறப்புப் பகுதியின் முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை வளர்த்தல் மற்றும் பாதுகாத்தல்.

ஈ) விவசாய உற்பத்தித் திறனையும் வேலைவாய்ப்பு திறனையும் மேம்படுத்துதல் மற்றும் எந்தவொரு சிறப்புப் பகுதிக்குள் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியை உருவாக்குதல் மற்றும் பாதுகாத்தல்;

உ) ஏதேனும் ஒரு சிறப்புப் பகுதிக்குள் பௌதிக சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல்.

ஊ) எந்தவொரு விசேட பிரதேசத்திலும் சமூகத்தின் பொது நலன் மற்றும் கலாச்சார முன்னேற்றத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அத்தகைய பகுதியின் விவகாரத்தை நிர்வகித்தல்.

எ) எந்தவொரு சிறப்புப் பகுதியின் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியிலும் உள்நாட்டு மற்றும் வெளி மூலதனத்தின் பங்களிப்பை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும்

எ) மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்தைத் திட்டமிடுதல் மற்றும் அமுல்படுத்துதல் மற்றும் ஏதேனும் விசேட பிரதேசத்தின் அபிவிருத்தித் திட்டத்தில் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச நியதிச் சட்ட நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நபர்களின் ஒத்துழைப்பை தனியார் அல்லது பொது மக்களின் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் அதே சட்டத்தின் 12 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இலங்கை மகாவலி அதிகாரசபையானது மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம், இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம், மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம், மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) நிறுவனம், மற்றும் மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் நிறுவனம் ஆகிய நான்கு துணை நிறுவனங்களையும் ஒரு இணை நிறுவனத்தையும் கொண்டுள்ளது.

அனைத்து துணை நிறுவனங்களும் மற்றும் இணை நிறுவனமும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவன சட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டு பின்வரும் கொள்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் பங்கு மூலதனத்தின் விளக்கங்கள் பின்வருமாறு

நிறுவனம்	**ஒரு பங்கிற்கான பெறுமதி**	**வழங்கப்பட்ட மற்றும் பூரணமாக செலுத்தப்பட்ட பங்கு மூலதனங்களிக் பங்குகளின் எண்ணிக்கை**	**மகாவலி அதிகார சபைக்கு வழங்கபட்ட பங்குகளின் எண்ணிக்கை**
1)மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம்.	ரூ. 10.00	6385	6384

2)இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம்	ரூ. 10.00	1502	1500
3) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்	ரூ. 10.00	1,039,803	1,039,800
4)மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.	ரூ. 10.00	3	-

மகாவலி நிறுவனங்களின் கொள்கை நடவடிக்கைகள்

துணைமை அலகுகள்.

அ) மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்

- மகாவலி தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்.
- நிறுவனத்திற்கான நிதியை உருவாக்க வணிக முயற்சியை மேற்கொள்ளுதல்.

ஆ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) நிறுவனம்

- இயற்கை வளங்கள் துறையில் தொழில்முறை ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்குதல்
- மேலாண்மை வடிவமைப்பு மற்றும் பயிற்சி, நீரியல் கண்காணிப்பு, நிலப் பயன்பாட்டு வரைபடம், நீர்ப் பிடிப்பு பாதுகாப்பு மற்றும் வனவியல் போன்றவை.
- தகவல் மற்றும் தரவுகளை வழங்குதல் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளை தயாரித்தல்,
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகள் (சு.தா.ம), ஆரம்ப சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள் (இ.இ.இ.ஆர்) போன்றவை.

இ) மகாவலி கால்நடை மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனம்.

- மகாவலி விவசாயிகளுக்கு உயர்தர விலங்குகளை கிடைக்கச் செய்வது.
- பால் மற்றும் இறைச்சி பொருட்களின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

ஈ) மகாவலி ஆலோசனைப் பணியகம் (தனியார்) நிறுவனம்.

- கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் மற்றும் சாலைகள் கட்டும் துறைகளில் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- கட்டிடங்கள், நீர்ப்பாசனம் மற்றும் நில வடிகால் மற்றும் சாலைகள் கட்டும் துறைகளில் கட்டுமான ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல்.

இணைக்கப்பட்ட நிறுவனங்கள்

அ) மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் (நிறுவனம்)

- பிராய்லர் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.
- மகாவலி விவசாயிகளுடன் பிராய்லர் மீள் கொள்வனவு ஏற்பாடுகள்.

எனினும், மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது 2012 ஆம் ஆண்டில் மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனத்தை கலைக்க முடிவு செய்தது. இதன் மூலம் இந்த நிறுவனத்தின் கணக்குகள் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளில் சேர்க்கப்படவில்லை. பின்னர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறிப்பு அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டன.

2) தயாரிப்பு அடிப்படை

2.1 இணக்கக் கூற்று

நிதிக் கூற்றுக்களானது நிதி நிலைமை, நிதிச் செயல்திறன் கூற்றுக்கள், உரிமையாண்மை மாற்றங்களின் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள்,மற்றும் நிதி கூற்றுக்களின் குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத் துறை கணக்கியல் தரத்திற்கு (SLPSAS) இணங்க இந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள் முந்தைய நிதியாண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் ஒத்திருக்கின்றன.

2.2 அளவீட்டு அடிப்படை

நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கும் எந்தவொரு சீராக்கலும் மேறகொள்ளப்படவில்லை.

2.3 செயல்பாட்டு மற்றும் விளக்கக்காட்சி நாணயம்

இலங்கை ரூபாயிலேயே நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ரூபாய்களில் அளிக்கப்பட்ட அனைத்து நிதித் தகவல்களும் மிக அருகில் உள்ள ஆயிரத்திற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் பயன்பாடு

இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலை (SLPSAS) உடன் இணங்கிய நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு, கணக்கியல் கொள்கைகளின் பயன்பாடு மற்றும்

அறிவிக்கப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் ஆகியவற்றை பாதிக்கும் தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை நிர்வாகம் செய்ய வேண்டும். தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகள், வரலாற்று அனுபவம் மற்றும் சூழ்நிலைகளில் நியாயமானவை என்று நம்பப்படும் எதிர்பார்ப்புகள் உட்பட பிற காரணிகளை அடிப்படையாகக் கொண்டவை. எனவே உண்மையான அனுபவமும் முடிவும் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்களைத் தொடர்ந்து அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கியல் மதிப்பீடுகளின் திருத்தமானது அந்த காலகட்டத்தையும் எதிர்கால காலங்களையும் மட்டுமே பாதிக்கும் பட்சத்தில் மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்ட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.5 கணக்கியல் கொள்கைகளின் மாற்றங்கள்

பின்பற்றப்பட்ட கணக்கியல் கொள்கைகள் பின்வருனவை தவிர முந்தைய நிதியாண்டின் கணக்குக் கொள்கைகளுடன் ஒத்திருக்கின்றன.

2.5.1 தனிப் பண்ணைகள், தாவர நாற்று மேடைகள் மற்றும் சுற்றுலா மாளிகைகள் ஆகியவை குறிப்பிட்ட மகாவலி அமைப்புகளின் கீழ் தனித்தனி வருமானம் மற்றும் செலவினக் கணக்குகளாக கணக்கிடப்பட்டு உள்ளன.

2.5.2 உயிரியல் சொத்துக்கள் நியாயமான மதிப்பில் மதிப்பிடப்படுகின்றன. விவசாய கணக்கிலிருந்து ஆதாயம் அல்லது இழப்பு அடையாளம் காணப்படுகிறது.

2.5.3 நடப்பு நிதியாண்டில் மோட்டார் வாகனங்களின் மீள் மதிப்பீடு காரணமாக மீள் மதிப்பீட்டு உபரி ரூ. 691,434 மில்லியனாக உயர்த்தப்பட்டுள்ளது.

3) குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் அந்த நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து காலத்திற்கும் தொடர்ந்து பொருந்தும்.

3.1 ஒருங்கிணைப்பு அடிப்படை

3.1.1 ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களானது ஒருங்கிணைக்கப்பட்ட நடைமுறைகளை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம்

தயாரிக்கப்படுகின்றன. இதில் பெற்றோர் மற்றும் துணை நிறுவனங்களின் நிதி அறிக்கைகளை ஒருங்கிணைப்பது அறிக்கையின் முடிவு மற்றும் பங்கு முறையின் அடிப்படையில் அடங்கும். இவ்வாறாக, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களானது M.A.S.L. பற்றிய நிதித் தகவல்களை ஒற்றைப் பொருளாதார அலகாக முன்வைக்கின்றன.

3.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

3.2.1 சொத்துக்கான செலவானது அதன் மீள் மதிப்பீட்டு விலை, கொள்முதல் விலை அல்லது கட்டுமானச் செலவு மற்றும் அதன் நோக்கமான பயன்பாட்டிற்காக சொத்தை வேலை நிலைக்குக் கொண்டு வருவதற்கு நேரடியாகக் கூறப்படும் செலவு ஆகியவற்றை உள்ளடக்கியது. 2019.01.01 ஆம் திகதி முதல் அனைத்து மோட்டார் வாகனங்களும் மீள் மதிப்பிடப்பட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

3.2.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் செலவு அல்லது மீள் மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமானத் தேய்மானத்தின் ஏற்பாடு கணக்கிடப்படுகிறது. இதனால் சொத்து வகையின் மதிப்பிடப்பட்ட வாழ்க்கைக்கு பொருத்தமான காலத்தில் சொத்துச் செலவு சீர் செய்யப்படுகிறது. சொத்துக்கள் பயன்படுத்துவதற்குக் கிடைக்கும் போது தேய்மானம் வசூலிக்கப்படுகிறது மற்றும் சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள விதத்தில் தெளிவுபடுத்தப்படும் திகதியின் தொடக்கத்தில் நிறுத்தப்படும். மோட்டார் வாகனங்களின் 10% காட்சித் திரை மதிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேய்மான விகிதங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அனுமதிக்கப்படுகிறது.

1) கட்டிடங்கள் – அலுவலகம்	2 ½ %	ஆண்டொன்றிற்கு
- மற்றவை	5%	ஆண்டொன்றிற்கு
2) மோட்டார் வாகனங்கள்	20%	ஆண்டொன்றிற்கு
3) ஆலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்		
அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரி பொருட்கள்	15%	ஆண்டொன்றிற்கு
4) ஆலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்		
- மின் பிறப்பாக்கிகள்	15%	ஆண்டொன்றிற்கு
5) ஆலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்		
- நிர்மாணம்	15%	ஆண்டொன்றிற்கு
6) ஆலை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்		
- பொது	15%	ஆண்டொன்றிற்கு
7) தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள்	10%	ஆண்டொன்றிற்கு
8) கணினி மற்றும் துணைக்கருவிகள்	20%	ஆண்டொன்றிற்கு

3.3 முதலீடுகள்

3.3.1 இணை நிறுவனங்களில் முதலீடு செய்தல்.

இணை நிறுவனத்திலான முதலீடானது செலவுக் கணக்கில் மற்றும் இருப்புநிலைக் குறிப்பில் ஒரு நீண்ட கால முதலீடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. முதலீட்டு நிறுவனத்தின் நிதி மற்றும் இயக்க கொள்கை முடிவுகளில் அதிகார சபைக்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு இல்லை, எனவே உரிமையாண்மை முறையை ஏற்றுக்கொள்வது பொருத்தமற்றது.

3.3.2 பிற முதலீடுகள்

பிற முதலீடுகள் இருப்புநிலைக் குறிப்பில் நீண்ட கால முதலீடாகக் கருதப்பட்டு, செலவில் குறிப்பிடப்படுகின்றன.

3.4 சரக்கு இருப்புகள்

சரக்கு இருப்புகளானது குறைவான செலவு மற்றும் தேறிய உணரக்கூடிய பெறுமதியாக மதிப்பிடப்படுகின்றன. மெதுவாக நகரும், குறைபாடுள்ள மற்றும் காலாவதியான பங்குகளுக்கு தேவையான இடங்களில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.5 வணிக மற்றும் பிற பெறுகைகள்

வணிகம் மற்றும் பிற பெறுகைகள் அடைய மதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.6 பணம் மற்றும் பண உரிமையாண்மை.

பணம் மற்றும் பண உரிமையாண்மை என்பன பண மீதிகள் மற்றும் வங்கி மேலதிகபற்று ஆகியவற்றிற்கு இணங்கியது ஆகும், அவை தேவைக்கேற்ப திருப்பிச் செலுத்தப்படுகின்றன மற்றும் இ.ம.அ.ச. இன் பண முகாமைத்துவத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளன. அவை பணப் பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்காக பணத்தின் ஓர் அங்கமாக சேர்க்கப்பட்டுள்ளது.

3.7 வெளிநாட்டு உதவி

2012 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நன்கொடை முகவர் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த கொடுப்பனவுகளில் அறிவிக்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்துதல். வெளிநாட்டு நாணயங்களில் செலவீனங்களானது

கொடுப்பனவு திகதிகளில் நிலவும் செலாவணி வீதங்களின் மீது ரூபாவுக்கு மாற்றப்பட்டன.

3.8 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

இருப்புநிலைக் குறிப்பில் தற்போதைய பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் பொறுப்புகள், இருப்புநிலைக் குறிப்பு திகதியில் இருந்து தேவையின் பேரில் அல்லது ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடு ஆகும். நடப்புப் பொறுப்புகள் என வகைப்படுத்தப்படும் விடயங்கள் இருப்புநிலைக் குறிப்புத் திகதியில் இருந்து ஓராண்டு காலத்திற்கு மேல் காலாவதியாகும் கடப்பாடுகள் ஆகும்.
நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

3.9 ஓய்வு பெறும் உதவித் திட்டம்

அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வுப் பணிக்கொடைகளை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் கணக்கீடு, நிதியாண்டின் இறுதியில், சேவையின் முதல் ஆண்டிலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டினதும் அரை மாத தகுதிச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டது.

3.10 வருமானக் கூற்றுக்கள்

3.10.1. இ.ம.அ.ச வருவாய் என்பது பொது கருவூலத்திலிருந்து பெறப்பட்ட மீண்டும் மீண்டும் கிடைக்கும் மூலதன மானியம் மற்றும் குத்தகை வாடகை வருவாய், அரசு நிலத்திலிருந்து குத்தகை வாடகை வருமானம், குடியிருப்புகளிலிருந்து பெறப்பட்ட வாடகைகள் மற்றும் பங்குவீத உரிமை மற்றும் முதலீடு மற்றும் வட்டியிலிருந்து பெறப்பட்ட வருமானம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

3.10.2 வருவாய் என்பது, அந்த பொருளாதார நன்மைகள் இ.ம.அ.சபைக்கு பாயும் என்றும், நம்பத்தகுந்த வகையில் அளவிடப்பட முடியும் என்றும் அறியப்படுகின்றது.
மற்ற வாடகைகள், பங்குவீத உரிமைகள், வட்டி வருமானம் ஆகியவை ஒரு திரட்டல் அடிப்படையில் அறியப்படுகின்றது.

3.10.3 அரச மானியங்களானது 'மூலதன மானியம் மற்றும் மீண்டுவரும் மானியங்கள்' என அறியப்படுகின்றது.
மானியங்களானது ஈடுசெய்ய உத்தேசித்துள்ள தொடர்புடைய செலவினங்களாக அறியப்படுவதுடன், இ.ம.அ.ச. அங்கீகரிக்கும் காலகட்டங்களில் முறையான அடிப்படை ரீதியில் மீண்டுவரும் மானிய இலாபம் அல்லது இழப்பாக அறியப்படுகின்றது.

நிதி நிலை கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான மூலதன மானியங்களானது வேறுபட்ட வருமானமாக மானியங்களாக இருந்து பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. சொத்துக்களின் பயனுள்ள வாழ்க்கை மீதுள்ள முறையான அடிப்படை மீதான நிதி செயல்திறன் அறியப்படுகின்றது.

3.11 செலவினம்

நிறுவனத்தின் அன்றாட செயல்பாடுகள் மற்றும் செயல்திறன் நிலையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களைப் பராமரிப்பதற்கான அனைத்து செலவுகளும் ஆண்டுக்கான இலாபம் / இழப்பை அடைவதில் வருமான அறிக்கைக்கு வசூலிக்கப்பட்டுள்ளன. மோசமான மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்கள், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான அனைத்து அறியப்பட்ட பொறுப்புகள் மற்றும் பெறுமானத் தேய்மானம் ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.12 இருப்புநிலைக் குறிப்புக்குப் பிந்தைய நிகழ்வுகள்

இருப்புநிலைக் குறிப்புத் திகதிக்குப் பிறகு நிகழும் அனைத்து பொருள் நிகழ்வுகளும் தேவையான இடங்களில் சீர் செய்யப்பட்டன.

3.13 தற்செயல் நிகழ்வுகள்

31.12.2019 ஆம் திகதியாகும் போது இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு வழக்குகளின் மீதான தொடர்ச்சியான தற்செயல் பொறுப்பு ரூ.34,858 (M) ஆகும்.

மகாவலி துணிகர மூலதன (தனியார்) நிறுவனம்,
2019.12.31 ஆம் திகதியின் போதான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்
(கடன்வழங்குனர் தன்னார்வ முடித்தலின் கீழ்)

	குறிப்பு	2019 ரூ.	2018 ரூ.
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்	02	3	3
முதலீடு	03	2,794,671	2,794,671
		2,794,671	2,794,671
நடைமுறை சொத்துக்கள்			
சிங்கர் இயந்திர இருப்புக்கள்		29,480	29,480
வட்டிப் பெறுகைகள்	04	380,726	380,726

அழுத்தமான கட்டுப்பாட்டு கணக்கு		28,336	28,336
வருமான வரி மீளளிப்பு	09	62,008	62,008
ஏனைய பெறுகைகள்	05	25,000	25,000
கருவூல கட்டணப் பட்டியல்கள்		9,825,719	9,455,896
வங்கியல் உள்ள தொகை	06	3,598,807	2,817,589
கையில் உள்ள தொகை		2,521	2,521
		13,910,451	12,801,556
மொத்த சொத்துக்கள்		**16,705,125**	**15,596,230**
உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்			
உரிமையாண்மை மற்றும் ஒதுக்குகள்			
குறிப்பிடப்பட்ட மூலதனம்	07	10,398,000	10,398,000
பெறப்பட்ட நிதி	08	10,150,325	10,150,325
இ.ம.த.ச. இருந்தான பங்களிப்பு		432,000	432,000
வைத்திருக்கப்படும் இலாபங்கள் (இழப்புக்கள்)		(4,656,408)	(5,765,303)
மொத்த உரிமையாண்மை		16,705,125	15,215,022
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அட்டுறுச் செலவுகள்	10	381,208	460,708
மொத்த பொறுப்புக்கள்		381,208	460,708
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		**16,705,125**	**15,596,230**

3.14 அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், வீதிகள், குளங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் காணிகளின் சொத்துக்கள்.

2019.12.31 ஆம் திகதியாகும் போது மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், வீதிகள், குளங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்கள் மற்றும் காணிகள் ஆகியவற்றின் சொத்துக்களின் சாராம்சம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

3.14.1 குளங்களின் எண்ணிக்கை

வலயம்	குளங்களின் எண்ணிக்கை	குளத்தின் கொள்ளளவு (AC,FT)	அணையின் உயரம் (M)	அணையின் நீளம் (M)	குளத்தின் பரப்பளவு (HA)
பி வலயம்	76	10,204	-	-	18,214
சி வலயம்	52	20,461	132	-	399

டி வலயம்	52	28,110	-	-	-
ஜி வலயம்	17	708	277	6,567	-
எச் வலயம்	127	23,031	253	11,682	2,888
எல் வலயம்	31	30,426	-	-	-
வலவ வலயம்	22	54,948	-	-	-
ரம்பகண் ஓயா	73	48,270	-	-	-
ஹுருளு வெவ	13	6,511	31	-	1,090
கூட்டுத் தொகை	**463**	**222,669**	**693**	**18,249**	**22,591**

3.14.2 கால்வாய்களின் எண்ணிக்கை

வலயம்	விநியோகக் கால்வாய் (km)	களக் கால்வாய் (km)	பிரதான கால்வாய் (km)	கிளைக் கால்வாய் (km)
பி வலயம்	480	1,265	53	66
சி வலயம்	560	1,326	29	125
எச் வலயம்	363	1,212	103	80
எல் வலயம்	50	100	610	(வடிகால் கால்வாய்)
வலவ வலயம்	416	1,324	90	106
ஹுருளு வெவ	100	212	34	4
கூட்டுத் தொகை	**1,969**	**5,439**	**919**	**381**

3.14.3 வீதிகள்

வீதிகள்	எல் வலயம் (km)	வலவ வலயம்	பி வலயம் (km)
பிரதான வீதிகள்	100.0	51.0	549.0

சிறு கிராமிய வீதிகள்	250.0	-	-
சந்தை வீதிகள்	12.5	-	-
விவசாய வீதிகள்	25.0	-	-
பாலங்கள்	5.0	-	-
மதகுகள்	125.0	-	-
ஆற்றிடைப் பாதை	10.0	-	-
கூட்டுத் தொகை	**527.5**	**51.0**	**549.0**

3.14.4 நீர் வழங்கல்கள் மற்றும் கிணறுகள்

வீதிகள்	**எல் வலயம் (எண்ணிக்கை)**	**ஹுருளுவெவ (எண்ணிக்கை)**
குடிநீர்க் கிணறுகள்	350.0	-
விவசாயக் கிணறுகள்	150.0	297.0
ஆழ் துளைகள்	100.0	-
மேல் நிலைத் தொட்டிகள்	100.0	-
விவசாய ஆலை	-	1.0
குழாய்க் கிணறுகள்	-	48.0
கூட்டுத் தொகை	**700.0**	**346.0**

3.14.5 அணைக்கட்டுக்களின் எண்ணிக்கை

அணைக்கட்டு	**செலவினம் (பில்லியன் ரூபாய்)**
கொத்மலை	13.0
விக்டோரியா	9.8
ரன்தெனிகல	5.8
ரண்தம்பே	3.2

பொல்கொல்லை	0.09
போவதென்ன	0.05
மினிப்பே	0.65
ரத்கிந்த	1.9
மாதுறு ஓயா	2.6
உடவலவ	0.14
சந்திரிக்கா வாவி	0.08
மொரகஹகந்த	45.3
கூட்டுத் தொகை	**82.61**

3.14.6 இலங்கை மகாவலி அதிகார சபையின் காணிகள்

வலயம்	**மொத்த காணிகள் (HA)**	**கையுதிர்க்கப்பட்ட காணிகள் (HA)**	**எஞ்சியுள்ள காணிகள் (HA)**
பி வலயம்	95,687.0	28,448.0	67,239.0
சி வலயம்	52,564.0	41,024.0	11,540.0
டி வலயம்	16,396.0	1,597.0	14,799.0
எச் வலயம்	80,803.0	33,191.0	47,612.0
ஜி வலயம்	11,940.0	9,560.0	2,350.0
எல் வலயம்	37,338.0	4,762.0	32,576.0
விக்டோரியா	311,118.0	3,384.0	307,576.0
வலவ வலயம்	57,775.0	34,506.0	23,296.0
ஹுருளு வெவ	9,704.0	6,904.0	2,800.0
ரம்பகண் ஓயா	134,002.0	6,111.0	127,891
கூட்டுத் தொகை	**807,327.0**	**169,517.0**	**637,810.0**

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

பகுதி III

මගේ අංකය எனது இல. My No. IEN/B/MASL/01/19/21 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 2020 නොවැම්බර් 25 දින

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை.
2020 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி.

இலங்கை மகாவலி அதிகார சபையின் மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கிய குழுமத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாண அவசியங்கள் குறித்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 ஆவது பிரிவிற்கு அமைவான கணக்காய்வாளர் நாயக அறிக்கை.

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கிய குழுமத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புக்கள், சாராம்சப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கியல் கொள்கைகளைக் கொண்ட 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டது. அரசியமைப்பு யாப்பின் 154 (6) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையானது பகுதியில் விளக்கப்பட்டுள்ள விடயங்கள் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்களைத் தவிர, இலங்கை மகாவலி அதிகார சபையின் மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்கள் உள்ளடங்கிய குழுமத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை மற்றும் அத் தினத்துடன் நிறைவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல்கள் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையாக மற்றும் நியாயமான நிலைமையை உறுதி செய்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) அதிகாரச சபையானது இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் அதனுடைய நிர்வாக நிறுவனங்களானது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி இருந்தாலும் நிறுவனங்களால் பின்பற்றப்பட்ட அடிப்படைகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டு இருந்த ரூ. 13,010,825 பெறுமதியான ஒதுக்குக் கணக்கு குறித்து பரிசீலனைகள் இல்லாமல் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு அந்த ஒதுக்கல் கணக்கின் மீதியானது கடன்பட்டோர் என குறிப்பிடப்பட்டு இருந்தது.

(இ) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டு உள்ள வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனம் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 150 (அ) உறுப்புரைக்கு அமைய கணக்காய்விற்காக நிதிக் கூற்றானது முன்வைக்கப்படவில்லை. இதன் காரணமாக அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களை அந்நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கும் போது கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு இருந்தன.

(ஈ) ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்த குறிப்புக்களுக்கு அமைய 82.61 பில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்ட பிரதான அணைகள் 12 மற்றும் 919 கி.மீ நீளமான பிரதான கால்வாய், 7,789 கி.மீ. நீளமான எஞ்சிய கால்வாய்கள், 463 குளங்கள் மற்றும் 1,127 கி,மீ. நீளமான வீதிகள் என்பன

மகாவலி அதிகார சபையினால் தாபரிக்கப்பட்டு வந்தாலும், அச்சொத்துக்களை விலை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே, 2018 டிசம்பர் 21 ஆம் திகதி அதிகார சபையினால் கையேற்கப்பட்டு இருந்த மொரகஹகந்த நீர்த்தேக்கச் செயற்திட்டத்தின் சொத்துக்களானது நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

(உ) 2015 – 2018 காலப் பகுதியில் ரூ. 80,000,000 செலவில் வெலிகந்த மற்றும் வெலிஓயா வலயங்களில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் 30 நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு ரூ. 499,421,968 செலவில் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டு இருந்த கொத்மலை மற்றும் பொல்கொல்ல அலுவலக கட்டிடங்கள் என்பன அதிகார சபையினால் 2019 ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்தப்பட்டு இருந்தாலும், அந்த அலுவலக கட்டிடங்கள் அதிகார சபையின் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

(எ) இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்கீட்டு நியமங்களின் இலக்கம் 03 இற்கு அமைய அளவறி முந்திய கால அத்தியாயப் பிழைகளை தேடிக் கண்டுபிடித்த பின்னர் வெளியிடுவதற்காக அங்கீகரிக்கின்ற நிதிக் கூற்றுக்களுக்கு பின்னோக்கிப் பொருத்தி ஒப்பிட்டுப் பார்க்கப்பட்ட பெறுமதிகளின் மூலவடிவைப் பேணி பிழைகளின் தன்மை மற்றும் பொருத்தப்பட்ட விதம் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும் எனினும் மொரகஹகந்த நீர் மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் முன்னைய ஆண்டுகளுக்காக கிடைக்கப் பெற்று இருந்த ரூ. 496,770,000 வருமானத்தை மீளாய்வுக்கு உட்படுத்திய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஏ) மீளாய்வுக்கு உட்படுத்திய ஆண்டில் சிறிய அளவான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கிடைக்கப்பெற வேண்டிய ரூ. 22,557,702 பெறுமதியான ஆக்கியோன் பங்கு வருமானத்தை கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

(ஐ) பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருக்காத வலவ வலயத்தின் முறவெசிஹேன தொகுதி அலுவலகத்தின் கட்டுமானங்களுக்காக மீளாய்வுக்கு உட்படுத்திய ஆண்டு இறுதியாகும் போது ஏற்கப்பட்டு இருந்த ரூ. 3,518,278 தொகையானது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணியாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக

மூலதன மறுசீராக்கம் மற்றும் மேம்படுத்துதல்கள் செலவினங்களாக பதிவழிக்கப்பட்டு இருந்தது.

(ஒ) இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்கீட்டு நியமங்களின் இலக்கம் 01 இற்கு அமைய ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டு இருந்த ரூ. 210,567,000 தொகை பெறுமதியானது விவசாய மற்றும் கால்நடை இருப்பின் பெறுமதியை விலை மதிப்பீடு செய்த விதம் மற்றும் அதற்குரிய கணக்காய்வுக் கொள்கையானது நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

(ஓ) இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்கீட்டு நியமங்களின் இலக்கம் 07 இன் 49 ஆவது பந்திக்கு அமைய ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்யும் போது உரிய ஆதனம் பொறிகள் மற்றும் உபகரண வகுப்புக்கள் அனைத்தும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும், 2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டு இருந்த அதிகார சபையின் மோட்டார் வாகன மீள் மதிப்பீட்டின் போது நியமங்களின் வரையறைகளுக்கு முரணாக தாபரிப்புப் பிரிவு மற்றும் பிரதான அலுவலகத்தில் இடம்பெற்ற ஒழுங்கு முறைகளில் செலவினமானது ரூ. 175,599,150 மற்றும் 60,648,350 என இருந்த மோட்டார் வாகனங்களின் மீள் மதிப்பீடுகளை மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

(ஔ) அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு வழங்கப்பட்டு இருந்த சொத்துக்களின் விலை மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. 14,040,500 என இருந்தாலும், அது ரூ. 26,533,300 என கணக்குகளில் குறிப்பிடப்பட்டு இருந்ததுடன், ரூ. 1,800,000 ஆக இருந்த சொத்துக்கள் ரூ. 18,000,000 என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அக்காரணங்களால் ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களானது ரூ. 28,692,800 அதிகமாக நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(க) அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு ஒப்டைக்கப்பட்டு இருந்த செலவினம் ரூ. 671,503,748 பெறுமதியான நிலையான சொத்துப் பங்கு ஒன்றானது ரூ. 478,699,000 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீட்டில் உட்படுத்தி இருந்தாலும் எஞ்சிய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீட்டில் உள்ளடக்கி இருக்கவில்லை. அவ்வாறே, இச்சொத்துக்களின் பெறுமதியானது மானியமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட வேண்டுமாயினும், கடன் வழங்குனரின் கீழ் ரூ. 398,346,892 என ரூ. 80,352,108 குறைவாக பொறுப்புக்களுக்கு சேர்க்கப்பட்டு இருந்தமையால் மானியமானது அத்தொகையை விடக் குறைவாக குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும் இச்செயற்திட்டத்தின் முகாமைத்துவ வசதிகளின் கீழ் பல்வேறு ஒப்பந்தங்களின் மூலம் அதிகார சபைக்குக்

கிடைக்கப் பெற்றிருந்த ரூ. 4,369,384 பெறுமதியான சொத்தும் கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

(ங) அதிகார சபையின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பெறுமானத் தேய்வுக் கொள்கைக்கு அமைய மோட்டார் வாகன பெறுமானத் தேய்வானது மேற்கொள்ளப்பட வேண்டியது நூற்றிற்கு 10 சிதைவுப் பெறுமதியைக் குறைத்ததன் பின்னரும், 06 வலயங்களால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு இல்லாத காரணத்தால் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டின் பெறுமானத் தேய்வுச் செலவினமானது ரூ. 6,116,990 அதிகமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

(ச) மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருந்த கணக்கு மீதிகள் 07 இற்கு உரிய மொத்தக் கூட்டுத் தொகையான ரூ. 2,199,131,679 பெறுமதி மற்றும் அதற்கு ஒத்ததாக அதிகார சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் வலயங்கள் பேணிச் சென்ற கணக்குகளுக்கு அமைவான மீதிகளின் கூட்டுத் தொகை ரூ. 2,182,422,219 ஆக இருந்தமையால் பெறுமதிகளில் ரூ. 16,709,460 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறாயினும் இவ் வித்தியாசங்களை இனங்கண்டு அவசியமான பொருத்தப்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு இருக்கவில்லை.

(ஞ) ரூ. 20,477,000 பெறுமதியான மதிப்பீடுகளுக்கு உரிய பங்கு சான்றிதழ் மற்றும் ரூ. 3,360,389 சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களுக்கு உரிய மீதிகளை உறுதி செய்தல் மற்றும் வைப்புச் சான்றிதழை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.

(ட) இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்கீட்டு நியமங்களின் இலக்கம் 07 இன் 49 ஆவது பந்திக்கு அமைய சாதாரண பெறுமதி கவனத்திற் கொள்ள வேண்டிய அளவு மாற்றம் அடைகின்ற மற்றும் விரைவான மாற்றங்களுடனான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு சாதாரண பெறுமதி கணக்கில் இடப்பட வேண்டுமெனினும், அதிகார சபையினால் 1984 – 1989 காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டு இருந்த செலவினங்கள் ரூ. 64,320,853 பெறுமதியான காணித் துண்டங்கள் 02 தொடர்பாக உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன் அவற்றின் செலவினங்களாவது கணக்கில் இடப்பட்டு இருக்கவில்லை.

(ண) மறுசீராய்வுகள் மற்றும் மேம்படுத்தல் செலவுகளின் மூலம் தோற்றுவிக்கப்படுகின்ற மூலதன இயல்புடைய சொத்துக்களை இனங்கண்டு கணக்கில் இடுவதற்குப் பொருத்தமான கணக்கியல் கொள்ளை ஒன்று அறிமுகப்படுத்தி இருக்கவில்லை.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்கியதாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் அது தொடர்பாக விவரிக்கப்பட்டு உள்ளது. எனது முனைப்பழிக்கப்பட்ட அப்பிப்பிராயத்திற்காக அடிப்படை ஒன்று வழங்குவதற்கான ஆலோசனைகள் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ள கணக்காய்வுச் சாட்சிகள் போதுமானது மற்றும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கை ஆகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் மற்றும் நிர்வாகிக்கின்ற தரப்புகளின் பொறுப்புக்கள்.

இந்நிதிக் கூற்றானது இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்காய்வு நியமங்களுக்கு இணங்கியதாக தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவைப்படுகின்ற உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையைத் தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கான இயலுமையை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதுடன், முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு எண்ணுவதாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத வேளைகளில் தொழிற்பாடுகளை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தைத் தவிர தொடர்ச்சியாக நடாத்திச் செல்லும் அடிப்படையின் கீழ் கணக்கு வைத்தல் மற்றும் அதிகார சபையை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதிகளை ஆவணமாக்கும் செயன்முறைகள் தொடர்பான பொறுப்பானது நிர்வகிக்கும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) உப பிரிவிற்கு அமைய அதிகார சபையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயன்ற வகையில் சுய வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பராமரித்து வர வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்.

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றைப் பெற்றுக் கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்பொழுதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அத்தீர்மானங்களில் தாக்கம் ஏற்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் என்பன இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்துக்களை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமையும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, பிழையான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டைத் தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று இடம்பெறுவதற்குக் காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை திட்டமிடும் பொருட்டு அதிகார சபையின் உள்ளக நிர்வாகத்தின் விளைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை வெளிப்படுத்துவதற்கு எண்ணாமை.
- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களின் பொருத்தமுடைமையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக அதிகார சபையின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் அனுமானிப்பதாயின் நிதிக் கூற்றுக்களுக்கு அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனத்தை ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லை எனில் எனது அபிப்பிராயத்தை திரிவுபடுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பானது முடிவடையக் கூடும்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கிய நீதிக் கூற்றுக்களின் முன்வைப்புக்களானது, கட்டமைப்புக்கள் மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன், அதற்கு அடிப்படையாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டு உள்ளமை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக நிர்வாகப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வாகத் தரப்பினர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

2. ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய, எனது அறிக்கையில் அபிப்பிராயத்திற்காக அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் மூலம் ஏற்படுகின்ற தாக்கங்களைத் தவிர, கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படுவதுடன், எனது பரிசோதனையின் மூலம் விளங்குகின்ற விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை அதிகார சபையானது பேணி வந்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய அதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றானது கடந்த ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட 1.2 (அ), (க), (ட) மற்றும் (ண) பந்திகளில் உள்ளடக்கப்பட்டு உள்ள பரிந்துரைகளைத் தவிர ஏனைய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு உள்ளன.

பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளுக்கு அமைய மற்றும் பொருண்மையான காரணிகளுக்கு மட்டுப்படுத்துவதன் மூலம், பின்வருவனவற்றை பிரகடனப்படுத்தும் அளவிற்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஈ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையில் எவரேனும் ஒரு உறுப்பினரிற்கு அதிகார சபை சம்பந்தப்பட்டு ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதமாக பொதுவான வியாபார நிலைமையைத் தாண்டி தொடர்பு உள்ளதாக.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர வேறு ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டம் ஒன்றிற்கோ அல்லது அதிகார சபையின் கட்டுப்பாட்டுச் சபையின் மூலம் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஆணைகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.

சட்ட திட்டங்கள்/ ஆணைக்கு ஆற்றுப்படுத்துல் ----------	**விபரம்** ----------
(அ) 2002 ஆம் ஆண்டின் 14 இலக்க சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்ப வரிச் (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் 10 (ஆ) உறுப்புரை.	12 மாத காலப்பகுதியில் பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்களின் மொத்தப் பெறுமதியானது 12 மில்லியன் ரூபாயை மீறும் பட்சத்தில் சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்ப வரிக்காக பதிவு செய்யப்பட வேண்டும் என்றாலும், அதிகார சபையால் உரிய வருமானத்

	தோற்றுவாய்களினால் கடந்த ஆண்டில் 152 மில்லியன் ரூபாய் மற்றும் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் 1,920 மில்லியன் ரூபாய் பெறுமதியான வருமானங்கள் கிடைக்கப் பெற்று இருந்தாலும் சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு ஏற்ப வரிக்காக பதிவு செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.	ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை (i) 2 ஆவது உறுப்புரை
(ஆ)	2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதிக்குரிய 01/ 2019 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைத் திணைக்கள சுற்றறிக்கையின் 2.3.3 ஆம் பந்தி.	உத்தியோகத்தர் ஒருவரை செயற்திட்டம் ஒன்றிற்கு விடுவிக்க முடியும் எப்பொழுது எனில், அரசாங்கத்தின் தேவைப்பாட்டிற்கு அமைய முழு நேர அடிப்படையில் 05 வருடங்கள் அல்லது சம்பளம் அற்ற அடிப்படையில் ஊழியரின் கோரிக்கைக்கு அமைய 05 வருடங்களுக்கு மாத்திரம் ஆகும். என்றாலும், அதிகார சபையின் 37 உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கும் அதிகமான காலமாக செயற்திட்டங்களில் பணியாற்றி உள்ளார்கள். இதன் காரணமாக அதிகார சபையின் நிரந்தர பதவிகளுக்காக நீண்ட காலமாக வெற்றிடம் நிலவி இருந்தது. மேலும், 33 உத்தியோகத்தர்கள் மொரகஹகந்த களுகங்கைச் செயற் திட்டத்தில் பணியாற்றுவதற்காக இடமாற்றத்தின் கீழ் முழு நேர சம்பளத்துடன் இணைக்கப்பட்டு இருந்தார்கள்.
(இ)	அதிகார சபையின் நிதிசார் செயல்முறை விதிக் கோவையில் 1.5.1 ஆம் பந்தி மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் 02/ 2012 மற்றும் 2012 மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்குரிய உள்ளக சுற்றறிக்கையின் 05 ஆம் உறுப்புரை.	முற்பணம் பெற்றுக் கொண்ட பணிகள் நிறைவடைந்து 07 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் எனினும் 10 வலயங்கள் மற்றும் இரண்டு பிரிவுகளுக்குரிய ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் செலுத்தப்படாத ரூ. 167,329,000 பெறுமதியான வழங்கல் முற்பணம் காணப்பட்டது.
(ஈ)	நிதி மற்றும் ஊடக அமைச்சின் 2017 டிசம்பர் 21 ஆம் திகதிக்குரிய 2/ 2017	அரசாங்கத்தின் சகல நிறுவனங்களாலும் பயன்படுத்துகின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான அனைத்து வாகனங்களும்

அந்நிறுவனத்தின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டியது கட்டாயமாயினும், அதிகார சபையால் பயன்படுத்துகின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான 56 வாகனங்கள் அதிகார சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டு இருக்கவில்லை.

அரச நிறுவனங்களுக்கு அன்பளிப்பாக கிடைக்கப் பெற்றுள்ள வாகனங்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக வரி இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களைப் பயன்படுத்தும் போது பதிவின் உரிமையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் ஆயினும், அவ்வாறு வரி இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்டு இருந்த 16 வாகனங்களின் பதிவு உரிமையானது நிர்ணயிக்கப்பட்டு இருக்கவில்லை.

(ii) 2.3 (அ) மற்றும் (ஆ) உறுப்புரை

(உ) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2018 மார்ச் 19 ஆம் திகதிக்குரிய 1/ 2019 ஆம் இலக்கத்திற்குரிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 (ஆ) ஆம் உறுப்புரை.

ஓட்ட முடியாத நிலைமையில் காணப்படுகின்ற சகல வாகனங்களையும் 2018 ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு அப்புறப்படுத்த வேண்டி இருந்தாலும், அதிகார சபையினால் அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஊ) 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரசின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் 217 (2) (iv) ஆம் உறுப்புரை.

வர்த்தக மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது சந்தை விலையானது விலை மதிப்பீடு செய்யப்பட்டு குத்தகைப் பணம் அறவிடப்பட வேண்டும், எனினும் தம்புத்தேகம வதிவிட வணிக முகாமைத்துவ அதிகார பிரதேசத்தினுள் 18 காணித் துண்டங்களானது கருங்கற்கள் உடைப்பதற்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு இருந்தாலும், 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி 27 ஆம் திகதியான கணக்காய்வு தினம் வரை அந்த எந்தவொரு

காணிகளும் அளவீடு செய்யப்பட்டு அவற்றின் அரச விலை மதிப்பீட்டுப் பெறுமதிக்கு அமைய குத்தகைப் பணம் அறவிட்டு இருக்கவில்லை.

(எ) 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதிக்குரிய LUP/ 01/ 01/ 2019 இலக்க மகாவலி அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுக்குரிய சுற்றறிக்கை

(i) அட்டவணை (i) இல் 1.6 ஆம் பிரிவு

புவிச் சரிதவியல் மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகத்திற்கு ஆக்கியோன் பங்கு செலுத்தப்படுகின்ற அகழ்வுகளின் கனவளவிற்கு ஏற்ப அடிப்படையாகக் கொண்டு காணி உபயோகக் கட்டணம் அறவிடப்பட வேண்டும், எனினும் தம்புத்தேகம வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தால் அவ்வாறு புவிச் சரிதவியல் மற்றும் சுரங்க அகழ்வுப் பணியகத்திற்கு ஆக்கியோன் பங்கு செலுத்தப்பட்ட அகழ்வுகளின் அளவு தொடர்பாக உறுதிப்படுத்தப்படாமல் உத்தரவுப் பத்திர உரிமையாளரால் கோரப்படுகின்ற கன அளவிற்காக மாத்திரம் காணி உபயோகக் கட்டணம் அறவிடப்பட்டு இருந்தது.

(ii) அட்டவணை (i) இல் 1.8 ஆம் உறுப்புரை

அகழ்வுகள் மேற்கொள்கின்ற தளங்களை தொடர்ந்து மேற்பார்வை இடுவதற்காக வலய ரீதியில் கண்காணிப்புக் குழுக்களை நியமித்தல் மற்றும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை களத்தைக் கண்காணித்து நாள் ஒன்றிற்கு பிரித்து எடுக்கப்படுகின்ற பெற்றோலியத்தின் அளவு உள்ளடங்கிய கண்காணிப்பு அறிக்கையை பணிப்பாளர் (காணி உபயோக திட்டமிடல்) இற்கு ஆற்றுப்படுத்துவது இடம்பெற வேண்டும், எனினும் தம்புத்தேகம வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தால் அவ்வாறு

உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஏ)	நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சின் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 ஆம் திகதிக்குரிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/ 2017 (1)	அரச நிறுவனங்கள் மூலம் பயன்படுத்தப்படுகின்ற கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இற்றைப்படுத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பு கணக்குத் தணிக்கைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட வேண்டும். எனினும் இலங்கை மகாவலி அதிகார சபையின் எச் வலயம், ஈ வலயம், அடிப்படைப் பணி நிர்வாக செயற்படுத்துகைகள் மற்றும் தாபரிப்புப் பிரிவு மற்றும் எல் வலயத்தின் மூலம் கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை.
(ஐ)	கணக்குத் தணிக்கைப் பணிப்பாளர் அலுவலகத்தின் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்டு இருந்த நிதிசாரா சொத்துக்களை விலை மதிப்பீடு செய்யும் வழிகாட்டல்கள் 2.1 ஆம் பந்தி	அரசாங்கத்திற்குச் சொந்தமான சகல காணிகளையும் விலை மதிப்பீடு செய்வது அத்தியாவசியமானது என்பதுடன், அதில் அரச அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள், வேலைத் தளங்கள் என்பன அமைந்துள்ள அரச காணிகளை விலை மதிப்பீடு செய்து கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். எனினும், இலங்கை மகாவலி அதிகார சபையின் அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள், வேலைத் தளங்கள் என்பன அமைந்துள்ள காணிகளை விலை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஒ) 2017 மே மாதம் 09 ஆம் திகதி டிஜி/05/2017 ஆம் இலக்க மகாவலி அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கை.

(I) ஓ – 3 மற்றும் சி – 1 உறுப்புரைகள்

தலாவ தொகுதி அலுவலகத்தின் மூலம் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் கட்டிடங்களை தொகுதிகளாக்கி நிலையான சொத்து ஆவணங்கள் தாபரிக்கப்பட்டு இருக்கவில்லை. நடாத்திச் செல்வது பொருளாதார ரீதியில் விளைத்திறன் அற்ற இல்லங்கள் அல்லது கட்டிடங்களை உரிய முறையில் இனங்கண்டு அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. காடுகள் முளைத்து கைவிடப்பட்டுள்ள இல்லங்கள் 04 ஐக் காணக் கூடியதாக இருந்தது.

(II) பி – 1 உறுப்புரை

வெளித் தரப்பினர்களுக்கு உத்தியோக பூர்வ இல்லங்களை வழங்கும் பட்சத்தில் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் முறையான விதத்தில் மற்றும் ஒப்பந்தத்திற்கு உட்பட்டு மாத்திரமே வழங்க வேண்டும். எனினும், தலாவ முகாமின் உத்தியோகபூர்வ இல்லங்கள் 06 வெளித் தரப்பினர்களுக்கு ஒப்பந்தங்கள் எதுவும் இன்றி கட்டணங்கள் இன்றி வழங்கப்பட்டு இருந்ததுடன் கணக்காய்வுப் பரிசீலனையின் போது அதில் ஒரு உத்தியோகபூர்வ இல்லத்திற்காக மகாவலி அதிகார சபையின் அனுமதி எதுவும் இன்றி பழுதுபார்த்தல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய அதிகார சபையின் அதிகாரங்கள், பணி வினைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளதாக.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர அதிகார சபையின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமானதாக கால வரையறைகளுக்குள் உரிய சட்ட திட்டங்களுக்கு இணங்கியதாக கொள்முதல் செய்து பயன்படுத்தி இல்லாமை.

- 2015 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட உத்தரவாதக் காலம் முடிவடைந்திருக்காத வளி சீராக்கி இயந்திரங்கள் 21 ஆனது கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தால் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் அவற்றை பயன்பாட்டில் இருந்து நீக்கி அந்நிறுவனத்தினாலேயே மீள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டிலேயே ரூ. 3,369,971 பெறுமதியான வளி சீராக்கி இயந்திரங்கள் 22 மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டு இருந்தது. அவ்வாறே இக்கொள்வனவுகள் குறித்து வருடாந்த பெறுகைத் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) ரம்பகண் ஓயா வலயத்தில் பொல்லேபெத்த உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூ. 4,861,105 பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், முற்பணமாக ரூ. 1,243,051 செலுத்தப்பட்டு இருந்தது. ஒப்பந்த காலமானது இரு சந்தர்ப்பங்களில் 2018 டிசம்பர் 28 வரை நீடிக்கப்பட்டு இருந்தாலும் அத்தினத்திற்கு பணிகள் நிறைவடைந்து இருக்கவில்லை. 2018 நவம்பர் 20 ஆம் திகதி செயலாற்றுகைப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் முடிவடைந்து இருந்தாலும் அதன் செல்லுபடியாகும் காலம் நடிக்கப்பட்டு இருக்கவில்லை. 2019 மார்ச் மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஒப்பந்தமானது இடைநிறுத்தப்பட்டு இருந்ததுடன் தாமதக் கட்டணம் ரூ. 486,110 அறவிடப்பட்டு இருக்கவில்லை. ஒப்பந்தக்காரருக்கு அதிகமாக செலுத்தபட்டு இருந்த ரூ. 1,402,376 பெறுமதியான தொகையானது 2020 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியாகும் போதும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. ஒப்பந்தக்காரரை கரும்பட்டியலில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) ரம்பகண் ஓயா வலயத்தில் மகஓயா உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூ. 4,843,185 பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், முற்பணமாக ரூ. 1,414,555 செலுத்தப்பட்டு இருந்தது. ஒப்பந்த பிரகாரம் செயற்படாமையினால் 2019 மார்ச் மார்ச் மாதம் 14 ஆம் திகதி ஒப்பந்தமானது இடைநிறுத்தப்பட்டு இருந்தது. செயலாற்றுகை பிணை முறி மற்றும் முற்பண பிணை முறியின் காலமானது 2018 செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி முடிவடைந்து இருந்தாலும் அவற்றின் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. ஒப்பந்தக்காரரிடம் இருந்து கிடைக்கப் பெறவேண்டிய ரூ. 1,242,997 பெறுமதியான தொகையானது 2020 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியாகும் போதும் அறவிடப்பட்டு இருக்காததுடன், ஒப்பந்தக்காரரை கரும்பட்டியலில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(இ) ரம்பகண் ஓயா வலயத்தில் 10 அறைகளுடன் கூடிய விழா இல்லத்தை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூ. 13,837,634 பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், செயலாற்றுகை பிணை முறி மற்றும் முற்பண பிணை முறியின் காலமானது 2019 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி முடிவடைந்து இருந்தாலும் அவற்றின் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. வழங்கப்பட்டு இருந்த பணிகளை ஆரம்பிக்கும் முற்பணத்தில் ரூ. 1,311,158 தொகையானது மேலும் அறவிடப்பட வேண்டி இருந்தது. நிர்மாணத்துறை அபிவிருத்தி அதிகார சபையின் இலக்க கூற்றின் 59.2 ஆவது உறுப்புறைக்கு அமைய பொறியியலாளரின் அனுமதி இன்றி 28 நாட்கள் பூராக பணிகள் நிறுத்தப்பட்டுள்ள கட்டுமானம் ஒன்றிற்குரிய ஒப்பந்தக்காரரின் சேவையை நிறைவு செய்ய வேண்டுமெனிலும் அதிகார சபையினால் 2020 ஆம் ஆண்டாகும் போதும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஈ) வலவ வலயத்தில் முரவெசிஹேன தொகுதி அலுவலகத்தை நிர்மாணித்தமைக்காக 2018 ஆம் ஆண்டு 14,757,550 பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், முற்பணமாக ரூ. 4,323,015 செலுத்தப்பட்டு இருந்தது. ஒப்பந்த பிரகாரம் செயற்படாமையினால் 2020 ஜனவரி மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஒப்பந்தமானது இடைநிறுத்தப்பட்டு இருந்தது. என்றாலும், ஒப்பந்தக்காரரின் வேண்டுகோளிற்கு அமைய மீண்டும் 06 வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதியாகும் போதும் பணிகள் நிறைவடைந்து இருக்கவில்லை என்பதுடன், ஒப்பந்தக்காரரிடம் இருந்து ர. 3,150,256 பணி ஆரம்பிப்பதற்கான முற்பணம் அறிவிடப்பட வேண்டி இருந்தது.

(உ) 2017 ஆம் ஆண்டில் ரூ. 8,550,788 செலவு செய்து பழுதுபார்க்கப்பட்டு இருந்த கொத்மலை விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகத்திற்குச் சொந்தமான

பாரந்தூக்கி இயந்திரத்தை சரியான முறையில் பழுதுபார்க்காமையால் 2018 ஆம் ஆண்டில் இருந்து 2020 ஆம் ஆண்டு வரை இயங்காமல் இருந்தது.

(ஊ) கொத்மலை விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகத்தின் பழைய அணை மாதிரியமைப்பு நீக்கப்பட்டுக் காணப்பட்டதுடன் புதிய அணை மாதிரியமைப்பு ஒன்றை அமைத்தல் மற்றும் தற்பொழுது காணப்படுகின்ற பார்வைத் தளத்தை புணரமைப்பதற்காக 2017 ஆம் அண்டில் ரூ. 6,990,000 இற்கு ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டு இருந்தாலும் ரூ. 2.060,000 செலவு செய்து நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு இருந்த அணை மாதிரியமைப்பானது 2020 ஆம் ஆண்டு மே மாதமாகும் போதும் முடிவடைந்து இருக்கவில்லை.

(எ) 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி அதிகார சபையில் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தின் பதவிகள் 35 இல் 16 இற்கு வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அதில் 12 பேர்கள் பதில் கடமை புரிதல், ஒப்பந்தப் பணி ஒப்படைப்பு மற்றும் இரட்டை அடிப்படையில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு பணி புரிந்து வந்துள்ளார்கள். அதிகார சபையினால் அடிக்கடி சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருந்தாலும், இணைத்துக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால், நீண்ட காலமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாமல் போயுள்ளது. நடுத்தர முகாமைத்துவ மட்டத்தின் வெற்றிடங்கள் 148 மற்றும் இயக்க முகாமைத்து மட்டத்திலான வெற்றிடங்கள் 349 உம் நிலவியது.

(ஏ) அதிகார சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தது. 2016 ஆம் ஆண்டின் பின்னர் வாகனங்களை வெளியேற்றல் இல்லாமல் இருந்ததுடன், வெளியேற்ற வேண்டிய வாகனங்களை உரிய சந்தர்ப்பத்தில் வெளியேற்றாமையினால் 64 வாகனங்கள் ரூ. 1,577,100 பெறுமதியான விலை மதிப்பீட்டுத் தொகைக்கு சிதைவுகளாக வெளியேற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டு இருந்தது.

(ஐ) அதிகார சபை பண்ணைகளில் நிலவுகின்ற அபிவிருத்தி செய்யப்படாத மேட்டு நிலங்களை தனியார் பிரிவின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யும் நோக்குடன் நீண்ட கால குத்தகை அடிப்படையில் ஏலம் இடுவதற்கு இலங்கை மகாவலி அதிகார சபை பணிப்பாளர் சபையின் அங்கீகாரமானது 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் திகதி வழங்கப்பட்டு இருந்தது. அதற்கமைய, அப் பண்ணைகளுக்குச் சொந்தமான அபிவிருத்தி செய்யப்படாத மேட்டு நிலங்களை எதிர்வருகின்ற பெரும் போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் ஏலம் இடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய

வதிவிட வணிக முகாமையாளர்களுக்கு அறிவித்து இருந்தாலும் நிராவிய, நொச்சியாகம மற்றும் கலங்குட்டிய பண்ணைகளுக்குச் சொந்தமான கூட்டுத் தொகை 53.4 ஹெக்டயரான மேட்டு நிலங்கள் 2020 பெப்ரவரியாகும் போதும் ஏலம் இடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

(ஓ) அதிகார சபையினால் ஜி.எஸ்.எம்.பி. தொழில்நுட்ப சேவைகள் (தனி) நிறுவனத்துடன் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 06 மாத காலத்துக்கு ஒப்பந்தம் இட்டு கந்தளை சூரியவெவ தும்மோதர மணல் படிவின் மூலம் 103,128 கியூப் மணல் அகற்றப்பட்டு ரூ. 61,876,800 பெறுமதியான வருமானம் ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டு இருந்தாலும் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது ரூ. 12,969,960 வருமானம் மாத்திரமே ஈட்டப்பட்டு இருந்தது. ஒப்பந்தத்தின் 04 ஆவது உறுப்புரைக்கு அமைய பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்த ரூ. 30,000,000 பெறுமதியான வங்கிப் பிணை முறி 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் காலாவதியாகி இருந்தாலும் 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி கணக்காய்வு தினமாகும் போதும் பிணை முறியின் காலத்தை நீடித்துக் கொள்ளாமல் அதற்குப் பதிலாக எதிர்வரும் மாதத்தில் மணல் அகழ்வுகள் 24,000 கியூப் இற்காக ரூ. 14,400,000 தொகையைப் பெற்றுக் கொண்டு ஒப்பந்தம் மீள புதுப்பிக்கப்பட்டு உள்ளது.

(ஓ) 2018 ஆம் ஆண்டின் மே மாதத்தில் இருந்து மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு இருந்த மொரகஹகந்த நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மூன்றினதும் வருமானங்கள் 2019 ஆம் ஆண்டின் அதிகார சபையின் வருமான மதிப்பீடுகளுக்கு உள்ளடக்கப்பட்டு இல்லாமல் இருந்ததுடன் மீள் மதிப்பீட்டு வருடத்தில் அவ் மின் உற்பத்தி நிலையங்களால் 647 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டு உள்ளது. மின் உற்பத்தி நிலையங்களின் தாபரிப்புச் செலவுகளுக்காக நிதியம் ஒன்றை உருவாக்கி இருக்கப்படவில்லை என்பதுடன் வருமானத்தின் மூலம் எவ்வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. அதில் 200 மில்லியன் ரூபாயானது 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு அதிகார சபையின் கைவசம் உள்ள கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதற்காக மீளப் பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் அரச வருமானத்திற்கு வரவு செய்யப்பட்டு இருந்தாலும், எஞ்சிய தொகையானது அங்கீகாரம் இன்றி செலவு செய்யப்பட்டு இருந்தது.

(ஔ) தலாவ முகாம் காணியில் இருந்து 40 பேரைக் கொண்ட தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலிற்காக காணிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு இருந்தாலும் 43 பேரிற்காக நில அளவீடு மேற்கொள்ளப்பட்டு இருந்தது. முதலில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டு இருக்காத ஐந்து பேரிற்காக காணிகள் அளவிடப்பட்டு இருந்ததுடன் முதலில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த இரண்டு பேரிற்காக நில அளவீடு மேற்கொள்ளப்பட்டு

இருக்கவில்லை. தலாவ முகாம் காணியில் மகாவலி அதிகார சபையில் பணியாற்றுகின்ற 44 பேரிற்காக காணித் துண்டங்கள் வழங்கப்பட்டு இருந்ததுடன், கணக்காய்வுத் தினமான 2020 ஜூலை மாதம் 07 ஆம் திகதி வரையில் அக்காணிகள் முறையான விதத்தில் உரிய தேர்வாளர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கவில்லை. அதில் 15 காணித் துண்டங்கள் முறையற்ற விதத்தில் உரிமை மாற்றப்பட்டு இருந்தாலும் சட்ட விரோதமான உடைமைகளை அகற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. காணிகளைத் தேர்வு செய்து 12 வருடத்திற்கும் அதிகமான காலம் சென்றிருந்தாலும் ஒரு காணியைத் தவிர எஞ்சியவை வதிவிட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் காணிகளில் காடு முளைத்து இருந்தது.

(க) தம்புத்தேகம வதிவிட வணிக முகாமைத்துவ அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கருங்கற்கள் அகழ்வதற்கான உத்தரவுப் பத்திரங்கள் 08 இற்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு கருங்கற்கள் 75,973.8 கியூப் இற்காக ஆக்கியோன் பங்கு செலுத்தி இருந்தாலும் மகாவலி அதிகார சபையின் தம்புத்தேகம வதிவிட வணிக முகாமைத்துவ அலுவலகத்தால் கட்டணம் அறவிடப்பட்டு இருந்தது கருங்கற்கள் 8,369.5 கியூப் இற்கு மாத்திரமாகும். அதற்கமைய ஈட்டிக் கொள்ள முடியுமாக இருந்த ரூ. 66,127,150 வருமானம் இழக்கப்பட்டு இருந்தது.

(ங) 2017 ஆம் அண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு வருமானச் சட்டத்தின் 06 மற்றும் 07 ஆம் உறுப்புரைகளுக்கு அமைய அதிகார சபையினால் வருமான வரி செலுத்தப்பட வேண்டி இருந்தாலும் வருமான வரி செலுத்தப்பட்டு இருக்கவில்லை. வருமான வரியில் இருந்து விடுவிப்புச் செய்யப்பட்டதை உறுதி செய்யும் வகையில் அவசியமான ஆவணங்கள் கணக்காய்வாளரிற்கு முன்வைக்கப்படவில்லை. மேலும் சிறிய அளவிலான மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் சம்பாதிக்கப்படுகின்ற ஆக்கியோன் பங்கு வருமானங்களுக்காக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூ. 36,823,372 தக்கவைத்துக் கொள்ளும் வரி செலுத்தப்பட்டு இருந்தாலும் அதற்கான வரியைக் குறைக்கும் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டு இருக்காமையினால் எதிர்வரும் காலத்தில் வருமான வரிக்கு கீழ்ப்பட்டால் வரிச் சலுகை பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போன நிலைமை காணப்பட்டது.

(ச) மகாவலி குடியேற்றவாசிகளுக்கு கடன்களை வழங்குவதற்காக சுழற்சி நிதியம் ஒன்றை உருவாக்குவதற்காக 2002 ஆம் ஆண்டில் 48 மில்லியன் ரூபாயும், 2009 ஆம் ஆண்டில் 50 மில்லியன் ரூபாயும் பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்து இருந்தாலும் 2020 ஆம் ஆண்டு வரை கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. மீளாய்வு வருட இறுதியில் வைப்புப் பெறுமதி 160.4 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன் வழமையான

சேமிப்பு வட்டியை விடவும் குறைவான நூற்றிற்கு 4 வீத வட்டியின் கீழ் இந்நிதியானது நீண்ட காலமாக வங்கியில் தக்க வைத்திருப்பது பொருளாதாரம் சாராத செயற்பாடாக இருந்தது.

(ஞ) ஜாவத்தை வளாகத்தில் அமைந்துள்ள வெளித் தரப்பினர்களால் பயன்படுத்தப்படுகின்ற 13 கட்டிடங்களுக்காக விலை மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு அமைய அறவிடப்பட வேண்டிய வாடகைகளை அறவிடுமாறு அறிவித்து இருந்தாலும், ரூ. 70,224,000 பெறுமதியான தொகை 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டு இருக்கவில்லை. அதிகார சபையினால் அக்கட்டிடங்களுக்காக மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களாக செலுத்தப்பட்டு இருந்த ரூ. 27,027,871 உரிய தரப்பினர்களிடம் இருந்து மீள்நிரப்பப்பட்டு இருக்கவில்லை.

(ட) அதிகார சபைக்குச் சொந்தமான 43 களஞ்சியங்கள் 2009 ஆம் ஆண்டில் இருந்து நெற் சந்தைப்படுத்தல் சபையினால் பயன்படுத்தப்பட்டாலும், அக்களஞ்சியங்களுக்காக எவ்வித வாடகைத் தொகைகளும் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. அக்களஞ்சியங்கள் நெற் களஞ்சியப்படுத்துவதற்கு தர நிர்ணயங்களுக்கு அமைய பழுதுபார்ப்பதற்கான தேவைப்பாடு நிலவுகின்மையால், அக்களஞ்சியங்களின் உரிமையை நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு கையகப்படுத்தித் தருமாறு நெற் சந்தைப்படுத்தல் சபையின் தவிசாளர் அவர்களால் மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், அக்காணிகளை கையகப்படுத்திக் கொடுப்பதற்கோ அல்லது குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போதும் முடியாமல் இருந்தது.



டப்லியூ. பி. சி. விக்ரமரத்ன,

கணக்காய்வாளர் நாயகம்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் வாதுரை.

பகுதி IV

ශ්‍රී ලංකා මහවැලි අධිකාරිය
අංක: 500, ටී.බී. ජයා මාවත, කොළඹ 10.
இலங்கை மகாவலி அதிகாரசபை
இல : 500, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10.
Mahaweli Authority of Sri Lanka
No: 500, T.B. Jayah Mawatha, Colombo 10, Sri Lanka.

දුරකථනය தொலைபேசி Telephone 011-2687491-5
ෆැක්ස් අංකය பெக்ஸ் இல. Fax No. 011-2687391 011-2687240
විද්‍යුත් තැපෑල් மின்னஞ்சல் E-mail dgmasl@sltnet.lk dg@mahaweli.gov.lk
වෙබ් අඩවිය இணையத்தலம் Website www.mahaweli.gov.lk

IEN/B/MASL/01/19/21

2021.09. 14

கணக்காய்வாளர் நாயகம்,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இலக்கம் 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை

இலங்கை மகாவலி அதிகார சபையின் மற்றும் அதன் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது உறுப்புரைக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கை.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக உங்களால் எனக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட _IEN/ B/ MASL/ 01/ 19/ 21 மற்றும் 2020.11.25 ஆம் திகதிக்குரிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆவது உறுப்புரைக்கு அமைய கணக்காய்வாளர் அறிக்கை தொடர்பான எனது பதில்கள் பின்வருமாறு அமையும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஏற்றுக் கொள்கின்றேன். 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுடன் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) இந்த நிச்சயமற்ற கணக்கு மீதியானது 2004 ஆம் ஆண்டில் இருந்தே நிலவி வருகின்ற மீதியாக உள்ளதுடன் தற்பொழுது சுமார் 33 மில்லியன் மீதியானது 13 மில்லியன் வரை சரி செய்வதற்கு முடியுமானதாக உள்ளது. தற்பொழுது நிதிசார் நடவடிக்கைகளைப் போன்றே இயக்கல் மற்றும் நிர்வாகம் ஆகிய சகல செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு இந் நிறுவனங்களில் உள்ள ஒரே உத்தியோகத்தரான

"கணக்காளர்" மாத்திரமாக உள்ளமையால், வேறு எந்தவொரு உத்தியோகத்தர் அல்லது உதவப் பதவியணி எவரும் தற்பொழுது சேவையில் ஈடுபட்டு இல்லை. ஏனைய அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் போது இம் மீதியை சரி செய்யும் செயற்பாடுகளும் அவரால் முன்னெடுக்கப்படும்.

இந்த ஆண்டில் சுமார் 01 மில்லியன் ரூபாய் மீதியைச் சீர் செய்வதற்கு முடியுமானதாக உள்ளது. எதிர்வரும் காலத்தில் இம் மீதியை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(இ) இந் நிறுவனத்திற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதி வரை புதிய பணிப்பாளர் சபை ஒன்று நியமிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதுடன் நேர் நேரியல் அமைச்சின் செயலாளரால் நிறுவனத்தின் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்காக "தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர்" நியமிக்கப்பட்டு உள்ளார். என்றாலும், மகாவலி ஆலோசனைச் சேவைப் பணியகம் (தனியார்) நிறுவனமானது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் 150 (அ) உறுப்புரைக்கு அமைய 2020 ஜூன் மாதம் 24 ஆம் திகதி "தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின்" அங்கீகாரத்தின் கீழ் கணக்காய்விற்கு நிதி அறிக்கை முன்வைக்கப்பட்டாலும் அந்த நிதிக் கூற்றுக்கள "தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின்" அங்கீகாரத்துடன் பெற்றுக் கொள்வதை கணக்காய்வின் மூலம் நிராகரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுச் செய்ய முடியுமாக இருப்பது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மாத்திரம் என 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந் நிறுவனத்திற்காக 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் புதிய பணிப்பாளர் சபை ஒன்றை நியமித்து நிறுவனத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) பிரதான கால்வாய் அணை, கால்வாய்கள், ஏனைய கால்வாய்கள் மற்றும் குளங்களின் செலவினங்கள் 82.61 பில்லியன் ரூபாயாக 2019 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டுள்ள குறிப்புக்களில் (Notes) குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நிலையான சொத்துக்களை விலை மதிப்பீடு செய்து எதிர்வரும் காலங்களின் நிதிக் கூற்றுகளுடன் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

மொரகஹகந்த களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டு இருந்த ரூ. 49,106,673,124 பெறுமதியான மொரகஹகந்த நீர்த்தேக்க செயற்திட்டத்தின் சொத்துக்கள் மற்றும் அதற்குரிய பொருத்தப்பட வேண்டிய மீதியுடன் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டு உள்ளது.

(உ) இலங்கை மகாவலி அதிகார சபையின் "எல் வலயம்" மற்றும் "பி வலயம்" ஆகியவற்றில் நிர்மாணிக்கப்பட்ட 80 மில்லியன் ரூபாய் பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் 30, பணிப்பாளர் நாயகம் – தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால்

பணிப்பாளர் நாயகம் – இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், 2020 ஆம் ஆண்டில் நிலையான சொத்தாக கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்களுக்கு பொருத்தப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) அணைப் பாதுகாப்பு மற்றும் நீரியல் வள திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் பொல்கொல்ல மற்றும் கொத்மலை விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகங்களில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதியானது 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் பொருத்தப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(எ) முன்னைய வருடத்திற்கான பொருத்தப்பாடுகளுக்கு அமைய இலாபத்திற்கு ஏற்படுகின்ற தாக்கமானது 2020 ஆம் ஆண்டின் நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் வேறாக காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(ஏ) மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தில் சிறிய அளவிலான மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானமானது 65,017,306.02 ரூபாயாக குறிப்பிடப்பட்டதுடன் இலங்கை மின்சார சபையினால் பணம் செலுத்தும் போது 81,836,484.32 தொகை கிடைக்கப் பெற்றுள்ளது. அவ்வித்தியாசமானது 2020 ஆம் ஆண்டின் நாட்குறிப்புப் பதிவின் மூலம் தற்பொழுது சீரமைக்கப்பட்டுள்ளது.

(ஐ) முரவெசிஹேன தொகுதி அலுவலகமானது அது வரையிலும் நிர்மாணித்து முடிக்கப்படாமையினால் அதன் செலவுகள் "மூலதன பூர்த்தியற்ற பணி" என உரிய கணக்கீட்டுக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டின் கணக்குகளுடன் சீரமைக்கப்பட்டுள்ளது.

(ஒ) இலங்கைப் பொதுத் துறைகளின் கணக்கியல் நியமங்களின் இலக்கம் 01 இற்கு அமைய விவசாய மற்றும் கால்நடை வள இருப்பின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்ட விதமானது "கணக்கீட்டுப் பதிவு" ஒன்றின் மூலம் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(ஓ) இலங்கை மகாவலி அதிகார சபையின் ஏனைய அலுவலகங்களுடன் ஒப்பிடும் போது பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவின் விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகமானது பல மாகாணங்களுக்கு பரவிக் காணப்படுவதுடன், மோட்டார் வாகன மீள் மதிப்பீட்டிற்காக அம் மாவட்டங்களின் மோட்டார் வாகன பரிசோதனையார்களைக் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். அவர்களைக் கலந்து கொள்ளச் செய்வதற்காக அவர்களுடைய வேலைப் பழு காரணமாக முடியாமல் போனது. எவ்வாறாயினும், தற்பொழுதாகும் போது சகல விடயப் பொறுப்பு பொறியியல் அலுவலகங்களினதும் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளன. அதற்கமைய 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(ஔ) 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(க) அணைப் பாதுகாப்பு மற்றும் நீரியல் வள திட்டமிடல் செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களின் "கடன்வழங்குநர்" என குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ரூ. 398,346,892 பெறுமதி மற்றும் மீள் மதிப்பீட்டு வருமானமான ரூ. 478,699,000 இடையிலான வேறுபாடான ரூ. 80,352,108 பெறுமதிக்கு உரிய வலயங்களுக்கு அறிவிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு பொருத்தப்பாடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இச் செயற்திட்டத்தின் மூலம் பல்வேறு ஒப்பந்தங்களின் ஊடாக இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள ரூ. 4,369,384 சொத்தானது இலங்கை மகாவலி அதிகார சபைக்கு முறையான விதத்தில் அணைப் பாதுகாப்பு மற்றும் நீரியல் வள திட்டமிடல் செயற்திட்டம் மூலம் ஒப்படைக்கப்படவில்லை என அறிவித்துக் கொள்கின்றேன்.

(ங) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சி வலயம், எச் வலயம், தம்புத்தேகம இயந்திர வேலைத்தளம், வலவ வலயம், விக்டோரியா வலயம், சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்புப் பிரிவு ஆகிய வலயங்கள் மற்றும் 06 பிரிவுகளுக்கு மோட்டார் வாகன மீள் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அப் பெறுமதியில் இருந்து பெறுமானத் தேய்வைக் குறைக்காமல் பெறுமதியானது கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் அப்பிழையைத் திருத்தி 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(ச) <u>மகாவலி கால்நடை வள நிறுவனத்தின் முதலீடுகள்</u>

ஏற்றுக் கொள்கின்றேன். 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(ஞ) இது தொடர்பாக தேடிப் பார்த்து எதிர்வரும் காலங்களில் முன்வைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(ட) இலங்கை மகாவலி அதிகார சபையினால் ரூ. 64,320,853 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட கொழும்பு 10, டி.பி. ஜாயா மாவத்தை இலக்கம், 500 மற்றும் இலக்கம் 493 இற்குரிய காணித் துண்டங்கள் 02 இன் விலை மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளதுடன், அவ் விலை மதிப்பீட்டுப் பெறுமதிகள் கிடைக்கப் பெற்ற பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(ண) 2019.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களின் கணக்கியல் கொள்கைகளின் கீழ் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அவ்வாறு கணக்கீடு செய்வதற்கு வலயங்கள்/ பிரிவுகளுக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

<u>ஏனைய சட்ட மற்றும் பிரமாணத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை.</u>

(அ) சேர்க்கப்பட்ட பெறுமதிக்கு அமைய வரிக்காக பதிவு செய்வதற்காக அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) மொரகஹகந்த – களு கங்கை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப கால கட்டத்தில் அச் செயற்திட்டமானது இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டம் என்பதால் அதிகார சபையின் உத்தியோகத்தர்களை விடுவிக்கும் போது அது அதிகார சபையின் கீழ் செயற்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களாக கருத்திற் கொண்டு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். என்றாலும், பிற்காலத்தில் மேற்குறிப்பிட்ட செயற்திட்டமானது நேரியல் அமைச்சின் கீழ் நேரடியாக செயற்படுத்தப்பட்ட செயற்திட்டம் என்பதால் செயற்திட்டத்திற்கு உத்தியோகத்தர்களை விடுவிக்கும் போது முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை 01/ 2019 இன் விதிமுறைகளுக்கு அமைய உரிய உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களை விடுவிப்பது மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே தற்பொழுது இறுதிக் கட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற மொரகஹகந்த – களு கங்கை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடையும் தன்மையைப் பொருத்து சேவைத் தேவைப்பாடுகளை மீறி நிலவுகின்ற மிகையான பதிவியணியை மீண்டும் அவர்களை உரிய சேவைத் தளமான இலங்கை மகாவலி அதிகார சபைக்கு இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

அவ்வாறே, 05 வருடங்களைத் தாண்டியுள்ள ஏனைய செயற்திட்ட பதவியணியானது தற்பொழுது மீண்டும் மகாவலி அதிகார சபைக்கு சேவைக்கு அழைத்தல் இடம்பெற்றுள்ளதுடன் அதற்கமைய ஒருங்கிணைந்த நீராதார மற்றும் நீரியல் வள முகாமைத்துவ புதிய செயற்திட்டத்தின் தொடக்க நடவடிக்கைகளுக்காக காத்துக் கொண்டிருந்த பதவியணியும் மீண்டும் அதிகார சபையில் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, காலநிலைத் தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டத்தில் ஈடுபட்டிருந்த 05 வருடங்களைத் தாண்டியுள்ள பதவியணியும் தற்பொழுது மீண்டும் அதிகார சபையில் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது.

(இ) இம்மீதிகள் தொடர்பாக வலய/ பிரிவுகள் மூலம் அட்டவணைகள் பெறப்பட்டு கணக்கியல் தவறுகள் காணப்பட்ட பெறுமதிகளை திருத்துவதற்கும் கிடைக்க வேண்டிய மீதிகள் தொடர்பாக உரிய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்து அறவிடுவதற்கு/ அடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(ஈ) (i) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினுள் மகாவலி வலயங்களினுள் அப்பொழுது பணியாற்றிய வெளிநாட்டு நிறுவனம் மூலம் செயற்திட்டத்திற்காக கொண்டு வரப்பட்ட தீர்வை வரியில் இருந்து விடுவிக்கப்பட்ட வாகனங்களை அச் செயற்திட்டம் முடிவடைந்ததும் மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த தீர்வை வரியில் இருந்து விடுவிக்கப்பட்ட வாகனஙடகளை அதிகார சபைக்கு கையகப்படுத்தும் போது இலங்கை சுங்கத்திற்கு தீர்வை வரி செலுத்தப்பட வேண்டும்.

அவ்வரியைச் செலுத்தி இவ் வாகனங்களைக் கையகப்படுத்திக் கொள்வது பொருளாதார ரீதியில் விளைத்திறன் அற்றது என அவதானிக்கின்றேன்.

(ii) இவ் வாகனங்களை அதிகார சபைக்குக் கையகப்படுத்திக் கொள்ளும் போது பாரிய தீர்வை வரித் தொகை செலுத்த வேண்டி உள்ளதால் இது தொடர்பாக இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(ஊ) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சகல வலயங்கள்/ பிரிவுகளுக்குச் சொந்தமான ஓட்ட முடியாத நிலைமையில் உள்ள வாகனங்கள் தற்பொழுது வெளியேற்றுவதற்காக முறையான குழு ஒன்றின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவ் வெளியேற்றல் செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(எ) மகாவலி எச் வலயத்தில் செயல்படுகின்ற கருங்கற்கள் அகழும் செயற்திட்ட தளங்களானது பல வருடங்களுக்கு முன்பில் இருந்து இலங்கை மகாவலி அதிகார சபையின் முறையான அங்கீகாரத்துடன் குத்தகை அடிப்படையில் போன்றே முறையான அங்கீகாரம் அற்றதாக செயற்திட்டக்காரர்களுக்கு செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்காக வெளியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆகையால் அச் செயற்திட்ட தளங்கள் உரிய செயற்திட்டக்காரர்களின் தனிப்பட்ட செலவில் சுவட்டு வரைவுகளைத் தயாரித்து முன்வைக்குமாறு செயற்திட்டக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டு உள்ளது. உரிய சுவட்டு வரைவுகள் கிடைக்கப் பெற்ற பின்னர் உரிய செயற்திட்ட தளத்திற்காக அரச விலை மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக இலக்கம் RMP/T/L/ பொது 44/ (45,05,16 கருங்கற்கள்) மற்றும் 2020.03.10 ஆம் திகதிக்குரிய கடிதத்தின் மூலம் விலை மதிப்பீட்டத் திணைக்களமானது அநுராதபுரத்திற்கு ஆற்றுப்படுத்தி உள்ளது. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் உரிய தகவல்கள் இது வரை கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் உரிய விலை மதிப்பீட்டுப் பெறுமதி கிடைக்கப் பெற்ற பின்னர் செயற்திட்டங்களுக்குரிய வரித் தொகை கணக்கிடப்பட்டு நிலுவை வரி இருப்பின் அவற்றை அறவிடுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(ஏ) (i) எச் வலயத்தினுள் செயற்படுகின்ற அகழ்வுச் செயற்திட்டங்களுக்கு உரிய அகழ்வுகளின் பருமன் தொடர்பாக தகவல்களை வழங்குமாறு புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் இலக்கம் RMP/T/L/ பொது 01-01- மற்றும் 02 – 2019.02.14, 2020.07.02, 2020.08.17, 02 மற்றும் 2020.09.21 திகதிக்குரிய கடிதம் மூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அத்தகவல்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் அந் நிலுவை வரியைக் கணக்கிட்டு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(ii) உள்ளக சுற்றறிக்கை இலக்கம் LUP/01/01/2019 – (i) – 1.8 உறுப்புரைக்கு அமைய செயற்திட்ட தளம் தொடர்பாக தொகுதி அடிப்படையில் கண்காணிப்பு அறிக்கை

எனக்கு வழங்குமாறு உரிய தொகுதிகளின் முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக விஞ்ஞான ரீதியான மற்றும் விசேட அறிவானது புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திற்குச் சொந்தமாகின்றதுடன் எச் வலயத்தினுள் செயற்படுகின்ற அகழ்வுச் செயற்திட்டங்களுக்கு உரிய அகழ்வுகளின் பருமன் தொடர்பான தகவல்கள் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தினால் மேற்குறிப்பிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளதுடன் உரிய தகவல்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் பிரித்தெடுக்கப்படுகின்ற பெற்றொலியத்தின் அளவானது பணிப்பாளர் (காணி உபயோகம் மற்றும் திட்டமிடல்) இற்கு ஆற்றுப்படுத்துவதாக எச் வலய வதிவிட வணிக முகாமையாளர் எனக்கு அறிக்கையிட்டுள்ளார்.

(ஏ) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான மகாவலி ஈ வலயம் மற்றும் பிரதான அணைகள் மற்றும் நீர்த்தேக்க இயக்கற் பிரிவிற்கு உரிய தகவல்களை கணக்குத் தணிக்கையாளர் நாயக அலுவலகத்திற்கு தற்பொழுது ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது. ஏனைய 02 வலயங்களான எச் வலயம் மற்றும் எல் வலயங்களில் இருந்து இத்தகவல்கள் துரிதமாக பெற்றுக் கொண்டு கணக்குத் தணிக்கையாளர் நாயக அலுவலகத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஐ) காணிகள், அரச காணிகளாக இருப்பதுடன் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்திற்காக மாத்திரம் மகாவலி அதிகார சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய மகாவலி அதிகார அதிகார சபைக்காக வர்த்தமானி பத்திரிகை ஒன்றின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள காணிகளில் மகாவலி அதிகார சபையின் அலுவலக வளாகங்களை நடாத்திச் செல்லுதல், சேவைகளை வழங்குவதற்கு அவசியமான கட்டிட நிர்மாணங்கள் மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணி உபயோக உரிமை நிலவுகின்றதுடன் அக்காணிகளில் முழுமையான உரிமைய மகாவலி அதிகார சபைக்கு இல்லை.

அவ்வாறே, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற காணிகள், மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கு கையுதிர்க்கப்படும். இதில் விவசாய வகுப்பைச் சேர்ந்த நபர்களுக்கு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கரை, நீர்ப்பாசன, விவசாய மற்றும் மழை வளம் மிக்க காணிகள் இலவசமாக வழங்கப்படுவதுடன் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் அதிக வருமான தொகுதியைச் சேர்ந்த நபர்களுக்கு அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வர்த்தக மற்றும் முதலீட்டுக் காணிகளாக அரச விலை மதிப்பீட்டிற்கு அமைய வரி அறவிட்டு மற்றும் வீட்டுக் காணிகளாக அரச விலை மதிப்பீட்டை அறவிட்டு கையுதிர்ப்பு இடம்பெறும்.

குத்தகை அடிப்படையில் கையுதிர்க்கப்படுகின்ற காணிகளை விலை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கோரிக்கை ஆற்றுப்படுத்திய பின்னர் ஒரு காணிப் பகுதியை விலை மதிப்பீடு செய்வதற்காக நீண்ட காலம் செலவிடப்பட்டுள்ளது.

(ஒ) தலாவ தொகுதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்காக வெவ்வேறாக கோப்புக்கள் நடாத்திச் செல்லப்படும். நிலவுகின்ற மானிய மட்டுப்படுத்தல்கள் காரணமாக பல ஆண்டு காலமாக உத்தியோகபூர்வ பழுதுபார்த்தலுக்காக போதியளவு மானியம் வழங்குவதற்கு முடியாமல் போனமையால் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாமல் போயுள்ளது. ஆகையால் சில உத்தியோகபூர்வ இல்லங்கள் சீர்குலைந்த நிலைமையில் காணப்படுவதாக ஏற்றுக் கொள்கின்றேன். திரைசேறியால் அதிகார சபைக்கு போதியளவு மானியங்கள் வழங்கப்படுமாயின் இவ் உத்தியோகபூர்வ இல்லங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்க முடியும் என அறிவித்துக் கொள்கின்றேன்.

(ii) உத்தியோகபூர்வ இல்லங்கள் 05 தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக சொத்துக்கள் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முறையான அங்கீகாரம் இன்றி தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு இருந்த பழுதுபார்த்தல்கள் இடம் பெற்று வந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக தலாவ காவல் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அப்பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகபூர்வ இல்லங்கள் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமாகின்றதுடன் அது காவல் நியைப் பொறுப்பதிகாரி (தலாவ) இனால் பயன்படுத்தினாலும் இதற்காக பணம் அறவிடப்படுவதில்லை என்றும் அறிவித்துக் கொள்கின்றேன். மேலும் வெளித் தரப்பினர்களுக்கு இல்லங்களை வழங்கும் போது முறையான ஒப்பந்தங்கள் இல்லாத கட்டிடங்கள் காணப்பட்டதாக ஏற்றுக் கொள்வதுடன் தற்பொழுது முறையாக ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

<u>அதிகார சபையின் வளங்களைச் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக கால வரையறைக்குள் உரிய சட்ட திட்டங்களுக்கு இணங்கியதாக கொள்முதல் செய்து பயன்படுத்தாமை</u>

(அ) உரிய ஒப்பந்தமானது 2017.12.23 ஆம் திகதி "இன்டிபெண்டன்ட் கன்ஸ்ரக்ஷன் என்ட் டிவலொப்மண்ட் ஒப்பந்த நிறுவனம்" இற்கு ரூ. 4,861,105.50 தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒப்பந்தக் காலம் 150 நாட்களாக இருந்ததுடன் இவ் ஒப்பந்தத்தின் பணிகள் மேற்குறிப்பிட்ட பெயருடைய ஒப்பந்த நிறுவனத்தால் 2017.12.05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உரிய ஒப்பந்த நிறுவனமானது பணிகளை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக ரூ. 1,458,331.65 தொகை கோரப்பட்டு இருந்தாலும் அதில் ரூ. 243,051.56 முற்பணம் மாத்திரம் 2017.12.27 ஆம் திகதி செலுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் பணிகள் தாமதமடைவது தொடர்பாக 2018.03.29 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் உரிய ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் பணிகள் 2018.05.06 ஆம் திகதி நிறைவடைவதற்கு உள்ளமையால் ஒப்பந்தத்திற்கு "செயலாற்றுகைப் பிணை முறி" மற்றும் "பணிகளை ஆரம்பிப்பதற்கான முற்பண பிணை முறியின்" காலத்தை நீடிப்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஒப்பந்தக்காரர்களால் முற்பண பிணை முறியின் செல்லுபடிக் காலத்தை 2018.09.15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு உள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் பணிகள் உரிய தினத்திற்கு முடிப்பதற்கு முடியாமல் போனமையால் 2018.10.10 ஆம் திகதி வரை ஒப்பந்தக் காலத்தை நீடித்துத் தருமாறு 2018.07.09 ஆம் திகதி கடிதம் மூலம் கோரிக்கை முன்வைத்து இருந்தாலும் 2018.09.20 ஆம் திகதி வரை மாத்திரம் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு உள்ளது. 2018.07.23 ஆம் திகதி இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வு ஒன்றுகூடலின் போது இவ் ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 18% ஆக இருந்ததால் ஒப்பந்தக்காரருக்கு இயன்றளவு அவசரமாக இப்பணிகளை நிறைவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் முன்னேற்றம் தொடர்பாக திருப்தியடைய முடியாமையால் 2018.12.14 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் ஒப்பந்தக்காரருக்கு இரண்டு வாரங்களுக்குள் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. என்றாலும், ஒப்பந்தக்காரர் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் 2019.03.14 ஆம் திகதிக்குரிய கடிதத்தின் மூலம் இவ் ஒப்பந்தத்தின் பணிகளை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இவ் ஒப்பந்தமானது 2017.11.14 ஆம் திகதி "ஸ்பய்ரல் கன்ஸ்ரக்ஷன் நிறுவனம்" இற்கு ரூ. 4,843,185.50 தொகைக்கு வழங்கப்பட்டு இருந்தது. இதன் ஒப்பந்த காலம் 150 நாட்களாக இருந்ததுடன் ஒப்பந்தத்தின் பணிகள் 2017.12.06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. 2017.12.17 ஆம் திகதிக்குரிய கடிதத்தின் மூலம் முற்பணமாக ரூ. 1,417,556.00 தொகை கோரப்பட்டு இருந்தாலும் அதில் 1,414,555.65 தொகை மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தம் 2018.04.27 ஆம் திகதியுடன் நிறைவடைவதற்கு இருந்ததுடன் அத்தினத்திற்கு ஒப்பந்தத்தை முடிப்பதற்கு முடியாமல் போனமையால் 50 நாட்களுக்கு ஒப்பந்தக் காலத்தை நீடித்துத் தருமாறு 2018.04.22 ஆம் திகதி கடிதம் மூலம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய 2018.08.01 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் ஒப்பந்த காலம் 2018.09.20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு உள்ளது. இவ் ஒப்பந்தத்திற்கு உரியதாக 2018.07.23 ஆம் திகதி ஆம் திகதி இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வு ஒன்றுகூடலின் போது இவ் ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 17% ஆக இருந்ததால் ஒப்பந்தக்காரருக்கு இயன்றளவு அவசரமாக இப்பணிகளை நிறைவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் பணிகள் மேலும் தாமதமடைகின்றமையால் 2018.12.11 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் ஒப்பந்தக்காரருக்கு இரண்டு வாரங்களுக்குள் பணிகளை மீள ஆரம்பிப்பிக்குமாறும், அவ்வாறு ஆரம்பிப்பதற்கு முடியாமல் போனால் இவ் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டி ஏற்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்தக்காரர் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் 2019.03.14 ஆம் திகதிக்குரிய கடிதத்தின் மூலம் இவ் ஒப்பந்தத்தின் பணிகள் இரத்துச் செய்யப்பட்டதாக உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இவ் ஒப்பந்தத்தின் ஒப்பந்தக் காலம் 05 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டுள்ளதுடன் 2019.01.31 ஆம் திகதி வரை செல்லுபடியாகி இருந்தது.

மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்திற்கு உரியதாக முற்பண பிணை முறி மற்றும் செயலாற்றுகை பிணை முறி ஆகியவற்றின் செல்லுபடிக் காலமும் 2018.12.28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்திற்காக நான்கு கட்டங்களின் கீழ் கட்டணப் பட்டியல்கள் செலுத்தப்பட்டுள்ளதுடன் அப்பெறுமதி ரூ. 8,179,315.00 ஆகும். அக்கொடுப்பனவுகளில் பணித் தொடக்க முற்பணமாக ரூ. 2,788,842.00 அடையப் பெறப்பட்டுள்ளதுடன், மேலும் ரூ. 1,311,158.00 அறவிடப்பட வேண்டி உள்ளது. இந்நிர்மாணம் தொடர்பான கட்டங்களைப் பரிசீலிக்கும் போது வழங்கப்பட்டுள்ள முற்பணத்திற்கு உரிய அடையப் பெறுவதற்கு இயன்ற வகையில் பணிகள் அவர்களால் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) இவ் ஒப்பந்தத்தின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடுவதற்காக 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் 2019.04.25 ஆம் திகதி ஒப்பந்தக்காரருக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டு இருந்தாலும் அந்நிறுவனத்தில் இருந்து அதற்காக கலந்து கொள்ளவில்லை என்பதுடன் அதன் பலவீனமான முன்னேற்றம் குறித்து ஒப்பந்தக்காரருக்கு இலக்கம் DDG/ TS/ CON/ W/ B/ 07/ 2019.05.22 மற்றும் 2019.06.06 ஆம் திகதிக்குரிய கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

03 சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட நியாயமான காரணங்களைக் கருத்திற் கொண்டு 2019.11.30 ஆம் திகதி வரை இவ் ஒப்பந்தத்தின் காலம் நீடிக்கப்பட்டு உள்ளது. 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் திகதி நிர்மாண பாதுகாப்பு நிதியத்தின் மூலம் செயலாற்றுகை பிணை முறியானது 2019.12.31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு உள்ளது.

2020.02.19 ஆம் திகதி கொழும்பு பிரதான அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவை) தலைமையில் இடம்பெற்ற முன்னேற்ற மீளாய்வு ஒன்றுகூடலில் நிர்மாண பாதுகாப்பு நிதியம் மற்றும் ஒப்பந்தக்காரருடன் கலந்துரையாடிய விதமாக 06 வார காலங்களுக்குள் பணிகளை நிறைவு செய்வதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

என்றாலும், 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பாதியில் உலகம் முழுவதும் பரவிய கொரோனா தொற்றுக் (கொவிட் 19) காரணமாக அனைத்துச் செயற்திட்டங்களினதும் பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாமல் போனதுடன் அது வழமைக்கு வருவதற்கு 03 மாதங்களுக்கும் அதிகமான காலம் சென்றமையினால் செயற்திட்டத்தின் பணிகளை உரிய தினத்தில் நிறைவு செய்வதற்கு முடியாமல் போனதுடன் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி செயலாற்றுகை பிணை முறி மற்றும் முறபண பிணை முறி ஆகியவற்றை புதுப்பிப்பதற்காக ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றின் பின்னர் மீண்டும் செயற்திட்ட பணிகள் ஆரம்பித்ததுடன் இச் செயற்திட்டத்திற்குரிய முற்பண பிணை முறி மற்றும் செயலாற்றுகை பிணை முறி என்பன 2020.12.31 ஆம் திகதி வரை நீடித்து அதற்குரிய ஆவணங்கள் நிர்மாணப் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் தற்பொழுது வழங்கப்பட்டு உள்ளது.

(உ) உரிய நீரியல் முறைமையை பழுதுபார்ப்பதற்காக எதிர்பார்த்து உரிய அறிக்கையை மதிப்பீடு செய்யப்பட்ட பணித் திட்டத்திற்கு உள்ளடக்கினாலும் மானியங்களை ஒதுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட தன்மை காரணமாக மானியங்கள் கிடைக்கப் பெறாமையினால் அச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியாமல் போயுள்ளது.

(ஊ) உரிய நிர்மாணங்கள் எதிர்பார்த்த மட்டத்திற்கு இல்லாமையினால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது.

(எ) 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி அதிகார சபையின் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தின் 35 பதவிகளில் 16 இற்கு வெற்றிடங்கள் நிலவினாலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு இருந்தாலும் தேர்தல் காலங்களில் இணைத்திக்கொள்ளும் செயல்முறைகளை மேற்கொள்ள முடியாமையினால் அதில் 12 பதவிகளுக்காக பதில் கடமை புரிதல், ஒப்பந்த முறை, பணி ஒப்படைப்பு முறை மற்றும் இரட்டை அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிப்பதன் மூலம் வெற்றிடமாக உள்ள பதவிகளின் கடமைகளைத் தொடர்ச்சியாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

2020.09.11 ஆம் திகதி மீண்டும் இலங்கை மகாவலி அதிகார சபையின் சிரேஷ்ட முகாமையாளர் மட்டத்தின் நடுத்தர முகாமைத்துவ மட்டத்தின் மற்றும் இயக்கல் முகாமைத்துவ மட்டத்தில் நிலவுகின்ற 54 வெற்றிடங்களுக்காக உள்ளகத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. உரிய நியமனங்கள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

(ஏ) இவ் வாகனங்கள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

அதிகார சபைக்குச் சொந்தமான வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருந்த வாகனங்கள்.

வாகன இலக்கம்	வலயம்	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை
65 – 2514 32 – 3261	பிரதான அலுவலகம்	இவ் வாகனங்களை மீண்டும் வழங்குமாறு விவசாய அமைச்சிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட் உள்ளது.
65 – 1604	பகமூண	வதிவிட வணிக முகாமையாளர் – மொரகஹகந்த வலயத்திற்கு ஒப்படைக்கப்பட்டு உள்ளது.
32 – 3297	மொரகஹகந்த செயற்திட்டம்	நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கையகப்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளது.
251 – 1388 PD – 4482 PD – 4483 32 – 3271 32 – 3341	மொரகஹகந்த செயற்திட்டம்	செயற்திட்ட ஆரம்பத்திலேயே உரிய நிறுவனத்திற்கு கையகப்படுத்திக் கொடுக்கப்பட்டு உள்ளது. ஆவணக் கோப்புக்கள் ஆவணக் காப்பகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
JF - 3105	வலவ வலயம்	இவ் வாகனம் 2010 ஆம் ஆண்டில் மகாவலி அமைச்சிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டு உள்ளதுடன் தற்பொழுது அது காணாமல் போயுள்ளது.

(ஐ) நொச்சியாகம பண்ணை பூமியில் 43 ஏக்கர் பகுதியானது பணிப்பாளர் சபையின் முறையான அங்கீகாரத்திற்கு அமைய வதிவிட முகாமையாளர் (எச் வலயம்) இன் இலக்கம் RPM /T /L/ NOG/ CLO/ நீ. கா 95/ மற்றும் 2020.08.26 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் எஸ். டப்லியூ கயான் தவுலகல என்பவருக்கு உடைமை வழங்கப்பட்டுள்ளது. கையுதிர்க்கப்பட்ட காணிப் பகுதியை அளவீடு செய்வதற்கு சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகர் அநுராதபுரம் இற்கு இலக்கம் RPM /T /L/ NOG/ CLO/ நீ. கா 95/ மற்றும் 2020.09.16 ஆம் திகதிக்குரிய கடிதம் மூலம் ஆற்றுப்படுத்தப்பட்டு உள்ளது.

கலங்குட்டிய பண்ணை பூமியின் 25 ஏக்கர் நிலப்பரப்பானது "சன்மிக் பூட் தனியார் நிறுவனம்" இற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

நிராவிய பண்ணை பூமியில் அபிவிருத்தி செய்யப்படாத காணிப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் மூலம் தற்பொழுது அவர்களுடைய பயிர்ச் செய்கை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

(ஒ) இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் ஜி. எஸ். எம். பி. தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்திற்கு மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய 2019.12.31 ஆம் திகதியாகும் போது ஒப்பந்த பிரகாரம் நீக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மணல் கியூப் அளவானது 103,128 கியூப் ஆக இருந்ததுடன் அதற்காக ரூ. 61,876,800.00 வருமானம் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், இச் செயற்திட்டத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட எதிர்ப்புக்கள் காரணமாக மணல் அகற்றும் நடவடிக்கைகளுக்கு முன்பு வெள்ளத் தடுப்பு அணைகளின் புணரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிப்பது மேற்கொள்ளப்பட்டு உள்ளது. அவ்வாறே, பிராந்திய மணல் வியாபாரிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் மற்றும் விவசாய அமைப்புக்கள் மூலம் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புக்கள் காரணமாக 2019.07.08 ஆம் திகதியாகும் போதும் மணல் அகழ்வுகளை ஆரம்பிப்பதற்கு முடியாமல் போயுள்ளது.

அதற்மைய, வதிவிட வணிக முகாமையாளரின் DDG/ TS/ GEN/ 04 – 2019 ஆம் இலக்க தொழில்நுட்ப சேவைப் பிரிவின் அறிக்கைக்கு அமைய மொத்த செயற்திட்ட காலத்தினுள் அகற்றப்பட்ட மணல் கியூப் 39,206.04 அளவான மணல் கியூப் அகற்றப்பட்டுள்ளதுடன் அதற்காக ரூ. 23,523,624.00 தொகை அறவிடப்பட்டு உள்ளது.

ஒப்பந்தத்தின் இலக்கம் 04 இற்கு அமைய மணற் படிவுகளின் அகழ்வுகளை ஆரம்பிப்பதற்கு முன்பு எதிர்வரும் காலத்தில் அகழ்வு முன்னெடுக்கப்படுகின்ற மணல் அகழ்வுகளுக்காக காணி உபயோக கட்டணமாக செலுத்த வேண்டிய கட்டணத்திற்கு காப்புறுதியாக 300 மில்லியன் ரூபாய் தொகை 04/2019 ஆம் இலக்க வங்கிப் பிணை முறியானது இலங்கை மகாவலி அதிகார சபையில் வைப்புச் செய்யப்பட்டதுடன், நீக்கப்பட்டுள்ள மணல் கியூபின் அளவிற்கான கட்டணத்தை திருத்தமாக செலுத்தியதாக வதிவிட வணிக முகாமையாளரின் RPM /D /L/ CLO/ 91 ஆம் இலக்க கடிதத்தின் சான்றிற்கு அமைய மற்றும் வங்கிப் பிணை முறி விடுவிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

நிலத்தின் மறுசீரமைப்பிற்காக பிணை முறி வைத்துக் கொள்வது தொடர்பாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை என்பதுடன், நிலத்தின் மறுசீரமைப்புச் செயற்திட்ட இறுதியில் ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஒப்பந்த இலக்கம் 14 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஓ) 2018 ஆம் ஆண்டின் மே மாதத்தில் இருந்து மின் உற்பத்தி செய்யப்பட்டாலும் 2019 ஆம் ஆண்டிற்குரிய 2018 டிசம்பர் மாதத்தில் மதிப்பீடு தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது இது தொடர்பான உரிய விபரங்கள் எமக்கு அறிக்கையிடப்படாமையினால் அவ் வருமான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு முடியுமால் போனது.

மின் உற்பத்தி நிலையங்களின் தாபரிப்பிற்காக இந்நிதியத்தில் இருந்து ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்தமை குறித்து கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்று முன்னெடுக்கப்படாமையினால் எதிர்வரும் காலத்தில் உரிய பிரிவுகளுக்கு அறிவித்து கொள்கை ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன். பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய மறுசீரமைப்பு மற்றும் முன்னேற்றச் செலவுகளுக்காக அதிகார சபையின் வருமானத்தைப் பயன்படுத்த முடியும் என்பதால் அதற்கமைய உரிய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

(ஒள) தலாவ தொகுதியின் 420/ 421 அலகின் தலாவ மகாவலி முகாம் வளாகத்தினுள் மகாவலி அதிகார சபையில் பணியாற்றிய 44 உத்தியோகத்தர்கள் H/ EX/ 33 மற்றும் H/ 171 ஆகிய சுவடு வரைவுக்கு மற்றும் H/ EX/ 45 ஆகிய சுவடு வரைவிற்கு அமைய 44 பேரிற்காக 2009 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதல் தேர்வு ஆவணத்தில் பெயர் குறிப்பிடப்படாத 05 பேரிற்காக காணிகள் ஒப்படைக்கப்பட்டு உள்ளதாக கடிதத்தின் குறிப்பிற்கு அமைய அவ் 05 பேரையும் 2003 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ள தேர்வு ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. து. இ. 110135 பத்திர இலக்கம் 26 இன் அடிப்படை வரைபடத்திற்கு அமைய நிலத் துண்டுகள் 51 பிரிக்கப்பட்டு உள்ளதுடன், அந்த 44 பேரிற்கும் அத்துண்டுகள் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. மேலும், இக்காணிகள் அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு உள்ளமையால் முழுமையான விலை மதிப்பீட்டுத் தொகை செலுத்தி முடியும் வரை அவர்களுக்கு இறையிலி கொடைப் பத்திரம் வழங்குவதற்கு முடியாது என அறிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பிற்கு அமைய காணித் துண்டங்களில் 1571, 1582, 1588, 1598, 1600, 1572, 1591, 1573, 1606, 1554, 1549, 1548, 1578 மற்றும் 1545 ஆகிய காணித் துண்டங்கள் முறையாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், அக்காணிகளின் ஆரம்ப காணி உரிமையாளரிடம் இருந்து இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அறிவித்துக் கொள்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட கடிதத்தின் குறிப்பிற்கு அமைய இக்காணி உரிமையாளர்கள் வேறு வலயங்களில் கடமையாற்றுகின்றமையாலும் மேலும் இக்காணி உரிமையாளர்கள் வேறு பிரதேசங்களில் வசிக்கின்றமையாலும் அவர்கள் இக்காணிகளை அபிவிருத்தி செய்யாமையினாலும் அக்காணிகளை அபிவிருத்தி செய்யுமாறு மற்றும் வரியைச் செலுத்துமாறும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு உள்ளது.

(க) தம்புத்தேகம வதிவிட வணிக முகாமையாளர் அதிகார பிரதேசத்தினுள் அமைந்துள்ள கருங்கற்கள் அகழும் செயற்திட்டத்திற்காக கையுதிர்க்கப்பட்டுள்ள காணிகளில் அகழ்வு உத்தரவுப் பத்திரங்கள் 08 இற்குரிய செயற்திட்டங்களில் காணி உபயோக கட்டணம் அறவிடப்பட்டுள்ள கியூப் அளவு 8369.5 என குறிப்பிடப்பட்டு உள்ளது. உரிய மாதிரிகள் கணக்கிடுவது இடம்பெற்றிருப்பது அச் செயற்திட்ட நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் முறையான அங்கிகாரம் கிடைக்கப் பெற்ற வருடங்களில் இருந்தாகும். என்றாலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம்

காணி உபயோக கட்டணம் அறவிடப்படுவது புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்குச் செலுத்தப்படுகின்ற அகழ்வுப் பருமனை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என LUP/ 01/ 01/ 2019 சுற்றறிக்கை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கு முன்பு பயன்படுத்தப்பட்ட சுற்றறிக்கைகளில் இவ் விடயம் தொடர்பாக குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. அதற்கமைய அடிக்கடி வெளியிடப்பட்ட உள்ளக சுற்றறிக்கைகளுக்கு அமைய மற்றும் அந்த கியூப் பருமன்கள் அளவிடப்பட்டு இருப்பது 4/ cs/ 3/ 10/ பொது எனப்படுகின்ற சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டாகும் என்பதுடன், அதற்கமைய வோடர் ஜெல் 01 கிலோ கிராமினால் 2.5 கியூப் கருங்கற்கள் பிரித்தெடுக்கப்படுவதாக அனுமானிக்கப்படுகின்றது.

LUP/ 01/ 01/ 2019 சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் மகாவலி எச் வலயத்தில் கருங்கற்கள் அகழும் உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள காணிகளின் மூலம் காணி உபயோக கட்டணம் அறவிடப்பட வேண்டிய கியூப் பருமன்கள் தொடர்பான தகவல்கள் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் மூலம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கமைய இச் செயற்திட்டம் தொடர்பாக அடிக்கடி எழுந்த பிரச்சினைகள் காரணமாக மற்றும் LUP/ 01/ 01/ 2019 சுற்றறிக்கைக்கு அமைய உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக சுற்றறிக்கை வெளியிடப்பட முன்பு மற்றும் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்னரும் RPM/ T/ L/ பொது, 2019.02.14, 2019.02.08 – 1, 2 – 44/ , 2020.07.02, 2020.08.17, 2020.09.21 கடிதங்கள் மூலம் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் உரிய கியூப் பருமன்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டு உள்ளன.

இது வரையில் புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் உரிய தகவல்கள் எனக்கு கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் தகவல்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் அந் நிலுவை கியூப் பருமன்களுக்கு உரியதாக செயற்திட்டதாரிகளிடம் இருந்து நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ங) சிறிய அளவிலான மின் உற்பத்தி நிலையங்களுக்குரிய ஆக்கியோன் பங்கு வருமானம் தொடர்பான பிடித்து வைத்தல் வரியானது (Withholding Tax) இலங்கை மின்சார சபையின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

(ச) இந்நிதியமானது பி மற்றும் சி வலயங்களின் குடியேற்றவாசிகளிடம் இருந்து வேறாக்கப்பட்ட நிதியம் என்பதால் அவ் வலயங்களில் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்காக சலுகை வட்டி வீதத்தின் கீழ் கடன் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அமுல்படுத்த முன்பு தீர்மானிப்பட்டு இருந்தாலும் பின்னர் அந்நிதியானது மகாவலி வலயங்களில் காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக இந்நிதியைப் பயன்படுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(ஞ) உரிய நிறுவனத்திற்கு மீள் நிரப்புவதற்கு அடிக்கடி அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பெறுமதியில் 3,472,883.18 ரூபாவானது 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

(ட) இலங்கை மகாவலி அதிகார சபையினால் வலயங்களில் குடியமர்த்தப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உணவுகளைக் களஞ்சியப்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட களஞ்சியமானது, அந்நிகழ்ச்சித் திட்டம் நிறைவடைந்த பின்னர் அக் களஞ்சியமானது, நெற் களஞ்சியப்படுத்துவதற்காக நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய நெற் சந்தைப்படுத்தல் சபையினால் அவர்கள் பயன்படுத்துகின்ற இக் களஞ்சியத்தை முறையான விதத்தில் அவர்களுக்கு கையகப்படுத்திக் கொடுக்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நெற் சந்தைப்படுத்தல் சபையின் மூலம் கோரப்படுகின்ற நெற் களஞ்சியம் தொடர்பான தகவல்களை உரிய வலயங்களில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அத் தகவல்களை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்துவிலை மதிப்பீட்டை மேற்கொண்டு அவ் விலை மதிப்பீட்டுப் பெறுமதியை அறவிடும் அடிப்படையில் நெற் சந்தைப்படுத்தல் சபைக்கு ஒழுங்கு முறைப்படி கையகப்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



கீர்த்தி பி. கொடகம,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை

பிரதிகள் – செயலாளர் – நீர்ப்பாசன அமைச்சு – அ. அ. கொ.
செயலாளர் – மகாவலி வலயங்களை அண்டிய கால்வாய் அணைகள் மற்றும் குடியேற்ற பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு – அ. அ. கொ.

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2019

பகுதி V

2019 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்.

5.1 நிதிசார் முன்னேற்றம்

உள்நாட்டு நிதிகள் கிடைக்கப் பெற்ற செயற்திட்ட விபரங்கள்.

செயற்திட்டதின் பெயர்	பங்களிப்பு வழங்கிய பிரதிநிதித்துவ நிறுவனம்	மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் – மில்.ரூ	செயற்திட்ட கால வரையறை
மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம்	உள்நாட்டு நிதி	4910.00	2007-2020
ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்	உள்நாட்டு நிதி	1,100.00	2012-2021
வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் – எல் வலயம்	உள்நாட்டு நிதி	3,957.10	2012-2021
ரம்பகண் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்	உள்நாட்டு நிதி	1,086.00	2012-2021
விவசாய மற்றும் கால்நடை வள அபிவிருத்திச் செயற்திட்டம்	உள்நாட்டு நிதி	225.00	வருடாந்த (2019.01.01-2019.12.31)
பி வலயத்தில் மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திடமை (மல்வென்ன மற்றும் மகவலிதென்ன)	உள்நாட்டு நிதி	935.49	2014-2020

அவசர உட்கட்டமைப்பு வசதிகளின் புணரமைப்பு உட்பட பாரிய மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன செயற்திட்டங்களை புணரமைத்தல்.	உள்நாட்டு நிதி	825.00	2015- 2020

5.2 மகாவலி செயற்திட்டம்

5.2.2 மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம்

நிதி ஏற்பாடு :- உள்நாட்டு நிதி
மதிப்பீட்டுச் செலவினம் :- 4,910 மில்லியன் ரூபாய்
செயற்திட்ட கால வரையறை :- 2007 – 2020

மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டமானது நீர்ப்பாசன நீர் விநியோகத்தை பாதுகாத்து விவசாயப் பொருளாதாரத்தை விருத்தி செய்வதன் ஊடாக மாதுறு ஓயா இடது கரைப் பிரதேசத்தில் வசிக்கின்ற கிராமிய மக்களின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செயற்திட்ட செயற்பாடுகளின் கீழ் 1982 – 1986 காலப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன முறைமைகளை புணரமைத்தல் உள்ளடக்குகின்றது.

(அ) மாதுறு ஓயா வலது கரை நீர்ப்பாசனத்தை புணரமைப்பதன் கீழ் 52 கி.மீ. பிரதான கால்வாய், 65 கி.மீ. நீளமான கிளைக் கால்வாய்கள், 459 கி.மீ. நீளமான விநியோகிப்புக் கால்வாய்கள், 1,138 கி.மீ. நீளமான களக் கால்வாய்கள், 54 கி.மீ. நீளமான காவுகைக் கால்வாய்கள், 80 கி.மீ. நீளமான கிராமிய வீதிகள் இயக்கல் மற்றும் தாபரிப்பு நடவடிக்கைகள், மற்றும் சிறிய குளங்களைப் புணரமைக்கும் நடவடிக்கைகள் உட்பட நீர் முகாமைத்துவத்திற்காக மாதுறு ஓயா இடது கரையின் 1981 – 1986 காலப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன வலையமைப்பை புணரமைத்தல்.

(ஆ) கிராமிய சுய ஆதார செயற்திட்டங்களின் கீழ் கட்டியெழுப்பப்பட்ட தெரிவு செய்யப்பட்ட நீர் விநியோக சேவையை ஒழுங்கு முறைப்படுத்தி மேம்படுத்துதல்.

(இ) விவசாய அபிவிருத்திக்காக ஒத்துழைப்பு வழங்குவதைப் போன்றே விவசாய அமைப்புக்களை பலப்படுத்துதல் மற்றும்,

(ஈ) பொருத்தமான சூழலியல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல் என்பன உள்ளடங்கும்.

2019 ஆம் ஆண்டிற்கான நிதிசார் மானியம் 230 மில்லியன் ரூபாய் (திருத்தியமைக்கப்பட்ட) ஆகும். வருடம் முடிவடையும் போது 120 மில்லியன் ரூபாய் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இலக்கம்	**விபரம்**	**பௌதீக முன்னேற்றம்** **31.12.2019**
01	விநியோகிப்புக் கால்வாய்களை நிர்மாணித்தல் / புணரமைத்தல்	8.5 கி.மீ.
02	களக் கால்வாய்களை நிர்மாணித்தல் / புணரமைத்தல்	68.20 கி.மீ.
03	இணைவுக் களக் கால்வாய்களை புணரமைத்தல்	4 கி.மீ
04	கட்டிட பழுதுபார்ப்புக்கள்.	4








5.2.3 பி வலயத்தின் மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டம் (மல்தென்ன மற்றும் மகவெலிதென்ன)

நிதி ஏற்பாடு :- உள்நாட்டு நிதி
மதிப்பீட்டுச் செலவினம் :- 935.49 மில்லியன் ரூபாய்
செயற்திட்ட கால வரையறை :- 2014 – 2020

பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களின் மகாவலி பி வலயத்தை உள்ளடக்குகின்ற சிங்ஹபுற மேல் பகுதியின் மகவலிதென்ன மற்றும் மல்வென்ன மகாவலி வலயங்கள் அமைந்துள்ளதுடன் செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும். இப் பிரதேசங்களில் கடந்த பல தசாப்தங்களாக நிலவிய உள்ளக நெருக்கடியான நிலைமை காரணமாக மீள் குடியேற்றவாசிகள் பலர் உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்தனர். அதன் பெறுபேறாக பருமட்டாக மீள் குடியமர்த்தப்பட்ட சுமார் 1200 குடும்பங்கள் மீண்டும் அவர்களுடைய ஆரம்ப கிராமத்திற்குச் சென்றார்கள்.

நெருக்கடியான சூழ்நிலை தணிந்த பின்னர் 2014 ஆம் ஆண்டில் இவ் விசேட செயற்திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றுதல் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதில் சிங்ஹபுற தொகுதியின் மல்வென்ன மற்றும் மகவெலிதென்ன அலகுகளில் வீட்டுத் தோட்ட இடங்கள் 859 மற்றும் நீர்ப்பாசனக் காணிகள் 859 அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டு இருந்தன. செயற்திட்டத்தின் பிரதான பணிகளாக,

(அ) இடம்பெயர்ந்த குடும்பங்கள் 859 ஐ சிங்ஹபுற பகுதியில் மீள் குடியமர்த்துதல் மற்றும் குடியேற்றத்தை மீள நிறுவுதல்.

(ஆ) தற்பொழுது நிலவுகின்ற நீர்ப்பாசன அடிப்படையிலான 521 ஹெக்டயர் நிலத்தை விவசாயத்திற்காக அபிவிருத்தி செய்தல் மற்றும் 174 ஹெக்டயர் வீட்டுத் தோட்ட காணிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும்,

(இ) மகவெலிதென்ன வாவி மற்றும் ஏனைய நீர்ப்பாசன முறைமையை நிர்மாணித்தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டிற்கான நிதிசார் மானியம் 45 மில்லியன் ரூபாய் (திருத்தியமைக்கப்பட்ட) ஆகும். வருடம் முடிவடையும் போது 40 மில்லியன் ரூபாய் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இலக்கம்	**விபரம்**	**பௌதீக முன்னேற்றம் 31.12.2019**
01	களக் கால்வாய்களை நிர்மாணித்தல்	1.8 கி.மீ.
02	விநியோகிப்புக் கால்வாய்களை நிர்மாணித்தல்	1.3 கி.மீ.
03	சப்பாத்துப் பாலங்களை நிர்மாணித்தல்	1





5.2.4 ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்

நிதி ஏற்பாடு :- உள்நாட்டு நிதி
மதிப்பீட்டுச் செலவினம் :- 1,100 மில்லியன் ரூபாய்
செயற்திட்ட கால வரையறை :- 2012 – 2021

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட இல்ல வருமானம் மற்றும் செலவுக் கணிப்பீட்டிற்கு அமைய பதுளை நிர்வாக மாவட்டத்தின் ரிதிமாலியத்த பிரதேச செயலாளர் தொகுதியானது மிகவும் தொலைவில் அமைந்துள்ளதுடன், மிகவும் வறிய பிரதேச செயலாளர் தொகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. ஆகையால், மேற்குறிப்பிட்ட பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இலங்கை மகாவலி அதிகார சபையினால் ஐந்தாண்டு முதலீட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளது. இப் பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்புதல் மற்றும் இப் பிரதேசத்தில் வசிக்கின்ற குடும்பங்களுக்கு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட விளைத்திறனைப் போலவே நிலைபெறுதகு பொருளாதார அணுகல்களை திறந்து கொடுப்பது இச் செயற்திட்டதின் அடிப்படை நோக்கமாகும். இதன் கீழ்,

(அ) வர்த்தக பயிர் உற்பத்தியை விருத்தி செய்தல்.
(ஆ) கால்நடை வள அபிவிருத்தி.
(இ) தொழில் முயற்சிகள் தொடர்பாக அடிப்படைக் கவனத்தைச் செலுத்துதல்.

2019 ஆம் ஆண்டிற்கான நிதிசார் மானியம் 76 மில்லியன் ரூபாய் (திருத்தியமைக்கப்பட்ட) ஆகும். 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடையும் போது 53 மில்லியன் ரூபாய் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இலக்கம்	விபரம்	பௌதீக முன்னேற்றம் 31.12.2019
01	நீர்ப்பாசன முறைமையை புணரமைத்தல்	3.74 கி.மீ. நீர்ப்பாசன கால்வாய் வீதி

02	வீதிகளைப் புணரமைத்தல்	09 வீதிகள் நிறைவடைந்துள்ளன, 01 வீதி அமைக்கப்பட்டு வருகின்றது 300 மீட்டர் கொங்கிரீட் வீதிகள் 04 மதகுகள் பூரணப்படுத்தப்பட்டு உள்ளன.
03	பொதுக் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் புணரமைத்தல்	7 கட்டிடங்கள்
04	நிறுவன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	39 நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.
05	விவசாய மற்றும் கால்நடை வள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	2500 குடும்பங்களுக்காக விவசாய மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்





5.2.5 ரம்பகண் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்

நிதி ஏற்பாடு :- உள்நாட்டு நிதி
மதிப்பீட்டுச் செலவினம் :- 1,086 மில்லியன் ரூபாய்
செயற்திட்ட கால வரையறை :- 2012 – 2021

ரம்பகண் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் அம்பாறை மாவட்டத்தின் மக ஓயா மற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் தொகுதிகளின் நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பாக அடிப்படைக் கவனம் செலுத்தப்படுகின்றது. இச் செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருப்பது,

(அ) கிராமிய வீதிகள் 70 கிலோ மீட்டரை புணரமைத்தல்.
(ஆ) விவசாய உற்பத்திகளை 50% இனால் அதிகரித்தல்.
(இ) குடிநீர் கிணறுகளை நிர்மாணிப்பதன் மூலம் நீர் விநியோகித்தல்.

(ஈ) கிணறுகள் மற்றும் துப்புறவுச் சுகாதார செயல்முறைகள் (மலசலகூடங்களை நிர்மாணித்தல்.

2019 ஆம் ஆண்டிற்கான நிதிசார் மானியம் 90 மில்லியன் ரூபாய் (திருத்தியமைக்கப்பட்ட) ஆகும். 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிவடையும் போது 71 மில்லியன் ரூபாய் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இலக்கம்	விபரம்	பௌதீக முன்னேற்றம் 31.12.2019
01	வீதிகளைப் புணரமைத்தல்	05 வீதிகளைப் புணரமைத்தல்
02	கட்டிடங்களை நிர்மாணித்தல்	11
03	காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி (நஷ்டயீடு செலுத்துதல்)	• 30 பருமட்டான துண்டங்கள் • 924 அளவீடுகள் • கையகப்படுத்துதல் 08 துண்டங்கள்
04	விவசாய மற்றும் மிருக வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்	3550 குடும்பங்களுக்கான மேம்பாடுகள்
05	நிறுவன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	70 நிகழ்ச்சித் திட்டங்கள்
06	வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	08 நிகழ்ச்சித் திட்டங்கள்
07	சுற்றாடல்	28 நிகழ்ச்சித் திட்டங்கள்

5.2.6 வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்

நிதி ஏற்பாடு :- உள்நாட்டு நிதி
மதிப்பீட்டுச் செலவினம் :- 3,957 மில்லியன் ரூபாய்
செயற்திட்ட கால வரையறை :- 2012 – 2021

அநுராதபுரம், வவுனியா, முல்லைதீவு மற்றும் திருகோணமலை ஆகிய நிர்வாக மாவட்டங்கள் உள்ளடங்கும் விதமாக மகாவலி வலயத்தின் அபிவிருத்திக்காக இச் செயற்திட்டம் செயற்படும். இடம்பெயர்ந்த குடும்பங்கள் 6,788 இற்காக வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை, நீர்ப்பாசன காணிகள் மற்றும் அவசியமான பௌதீக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிளை வழங்குதல் இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் கீழ்,

(அ) 11 கிராமங்களுக்குள் 6,788 விவசாய குடும்பங்களை மீள் குடியமர்த்துதல்.

(ஆ) 4,187 ஹெக்டயர் விவசாய காணிகளை அபிவிருத்தி செய்தல்.

(இ) சந்தைகள் மற்றும் கிராம வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும்

(ஈ) சமூக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என்பன இடம்பெறும்.

2019 ஆம் ஆண்டிற்கான நிதிசார் மானியம் 220 மில்லியன் ரூபாய் (திருத்தியமைக்கப்பட்ட) ஆகும். 2019 ஆம் ஆண்டு முடிவடையும் போது 179 மில்லியன் ரூபாய் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இலக்கம்	**விபரம்**	**பௌதீக முன்னேற்றம்** **31.12.2019**
01	காணிகளை புள்ளியிடுதல் மற்றும் அளத்தல்	1413 துண்டங்கள்
02	நீர்ப்பாசனக் கால்வாய்களை புணரமைத்தல்	46 கட்டமைப்புக்கள் மற்றும் மதகுகள்
03	கட்டிடங்களை நிர்மாணித்தல்	09 கட்டிடங்கள்
04	விவசாய மற்றும் மிருக வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்	3000 குடும்பங்களுக்காக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்



5.2.7 அவசர உட்கட்டமைப்பு வசதிகளின் புனர்நிர்மாணம் உட்பட பாரிய மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன செயற்திட்டங்களை புனரமைத்தல்.

நிதி ஏற்பாடு :- உள்நாட்டு நிதி

மதிப்பீட்டுச் செலவினம் :- 825 மில்லியன் ரூபாய்
செயற்திட்ட கால வரையறை :- வருடாந்தம்

(அ) ஆரம்பகட்ட பணிகள் மற்றும் நீர்த்தேக்கங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் தாபரித்தல்.

(ஆ) நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைத்தல் மற்றும்

(இ) இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் உள்ள ஹுருளுவெவ, உடவலவ, மகாவலி வலயங்கள் பி, சி, எச், எல் மற்றும் அடிப்படைப் பணி நிர்வாக செயற்பாட்டுத் தாபரிப்பு மற்றும் இயக்கற் பிரவின் கீழ் உள்ள விடயப் பொறுப்பு பொறியியல் பிரிவுகளின் நீர்ப்பாசனப் பிரிப்பு கால்வாய்களுக்கு மத்தியில் வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் என்பன இச் செயற்திட்டத்தின் மூலம் நோக்கமாக கொள்ளப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டிற்கான நிதிசார் மானியம் 100 மில்லியன் ரூபாய் (திருத்தியமைக்கப்பட்ட) ஆகும். 2019 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் முடிவடையும் போது 82.46 மில்லியன் ரூபாய் தொகை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டு உள்ளது.

இலக்கம்	**விபரம்**	**பௌதீக முன்னேற்றம்** **31.12.2019**
01	ஆரம்ப கட்டப் பணிகள் மற்றும் நீர்த்தேக்கங்களை பழுதுபார்த்தல் மற்றும் தாபரித்தல்.	90% பிரதான கால்வாய்கள் 08

5.2.8 விவசாய மற்றும் கால்நடை வள அபிவிருத்திச் செயற்திட்டம்

நிதி ஏற்பாடு :- உள்நாட்டு நிதி
மதிப்பீட்டுச் செலவினம் :- 180 மில்லியன் ரூபாய்
செயற்திட்ட கால வரையறை :- வருடாந்தம் (01.01.2019 – 31.12.2019)

தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்கியதாக நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேசிய விவசாய இறக்குமதியைக் குறைப்பதற்கு காரணமாக உள்ள தேசிய உணவுப் பயிர்களின் பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வள உற்பத்திகளை முழுமையாக விருத்தி செய்வதற்காக இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது.

2019 ஆம் ஆண்டிற்காக விவசாயம் முன்னுரிமையாகும் விதமாக தேசிய நெல் உற்பத்திக்கு நூற்றுக்கு 20 – 23 இடைப்பட்ட பங்களிப்பை உறுதி செய்தல், நீர்ப்பாசன காணிகளின் பயிர்ச் செறிவை நூற்றுக்கு 190 வரை அதிகரித்தல், தோட்டச் செய்கை மற்றும் ஏனைய களப் பயிகைளுடன் கூடிய நீர்ப்பாசனக் காணிகளில் நூற்றுக்கு 25

வீதிமான பயிர் பல்வகைமையைப் பெற்றுக் கொள்ளுதல், மகாவலி பண்ணைகளை அதி நவீன தொழில்நுட்பங்களுடன் மற்றும் சுற்றுலா கவர்ச்சி மிக்க இடங்களாக நடாத்திச் செல்லுதல், சேதனப் பசளை உற்பத்தியை மேம்படுத்துதல், இரசாயனப் பசளைகளின் வினைத்திறனை அதிகரித்தல். விவசாயிகளுக்கு மிகவும் சிறந்த வித்துக்கள் மற்றும் நாற்றுப் பொருட்களை வழங்குவதற்கு உறுதிப்படுத்தல், மேம்படுத்தப்பட்ட கால்நடை வள அபிவிருத்தி ஒழுங்குமுறைகள், திரவப் பால் உற்பத்தி, கோழி உற்பத்தி, நன்னீர் மற்றும் அலங்கார மீன் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தம் செயலமர்வுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

2019 ஆம் ஆண்டிற்கான நிதிசார் மானியங்கள் 180 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன் அதில் 163.45 மில்லியன் ரூபாய் இக்காலமாகும் போது பயன்படுத்தப்பட்டு உள்ளது.

விவசாயப் பயிர்கள் வளர்ப்பு

2018/ 2019 பெரும் போகத்தின் போது மகாவலி பிரதேசங்களில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள காணிகளின் நிலப்பரப்பு 93,336 ஹெக்டயராக இருந்ததுடன் மகாவலி வலயங்களில் நெல் உற்பத்தியானது பருமட்டாக 537,533 மெட்ரிக் தொன் ஆக இருந்தது. 2019 ஆம் ஆண்டின் சிறு போகத்தில் நெற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு உள்ள காணிகளின் நிலப்பரப்பு 63,358 ஹெக்டயராக இருந்ததுடன் பதிவாகியுள்ள நெல் உற்பத்தி 352,240 மெட்ரிக் தொன் ஆகும். 2018/ 2019 பெரும் போகம் மற்றும் 2019 சிறு போகம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த நெல் உற்பத்தி 889,773 மெட்ரிக் தொன் ஆகும்.
ஏனைய பயிர்களை பயிர்ச் செய்கை செய்தல் (ஏனைய துறைகளைச் சேர்ந்த பயிர்கள், பழங்கள், மரக்கறிகள் மற்றும் நிலையான பயிர்கள்) ஏனைய துறைகளைச் சேர்ந்த பயிர்கள் 14,142 ஹெக்டயர், பழங்கள் 13,641 ஹெக்டயர் மற்றும் ஏனைய நிலையான பயிர்கள் 5,157 ஹெக்டயர் நிலப்பரப்புகளில் பயிரிடப்பட்டுள்ளன.

கால்நடை வள அபிவிருத்தி

2019 ஆம் ஆண்டில் கால்நடை வள முதன்மையாக இருந்தது,

- வருடாந்த பால் உற்பத்தியை 25 மில்லியன் லீட்டர் வரை அதிகரித்தல் மற்றும் நிறைவேற்றுவதற்கான பங்களிப்பை அதிகரித்தல் - தேசிய பால் தேவைப்பாடு (தேசிய பங்களிப்பு 5%)
- வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தியை 8000 மெட்ரிக் தொன் வரை அதிகரித்தல் மற்றும் பருமட்டான தேசிய உற்பத்தியின் பங்களிப்பை 27% இல் இருந்து அதிகர்த்தல்.
- வருடாந்த முட்டை உற்பத்தியை 35 மில்லியன் முட்டைகள் வரை அதிகரித்தல்.
- வருடாந்த அலங்கார மீன் உற்பத்தியை 29 மில்லியன் ஜோடிகள் வரை அதிகரித்தல்.
- பாடசாலை மாணவர்கள் மற்றும் சமூகங்களுக்கிடையில் தூய பால் உற்பத்தியை மேம்படுத்துதல்.
- மிருக பிறப்புரிமை வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் விளைத்திறனை அதிகரித்தல்.

- வினைத்திறன் மற்றும் விளைத்திறனான தொழில்நுட்ப பரம்பல் மற்றும் பிரயோகத்தை உறுதிப்படுத்துதல்.

அதற்கமைய 2019 ஆம் ஆண்டில்,

உற்பத்தி	இலக்குகள்	முன்னேற்றம் 31.12.2019
திரவப் பால்	32 மில்லியன் லீட்டர்	25.51 மில்லியன் லீட்டர்
கோழி இறைச்சி	20 மெட்ரிக் தொன் ' 000	12.31 மெட்ரிக் தொன் ' 000
நன்னீர் மீன்கள்	17 மெட்ரிக் தொன் ' 000	36 மெட்ரிக் தொன் ' 000
அலங்கார மீன்கள்	17 மில்லியன் ஜோடிகள்	29.83 மில்லியன் ஜோடிகள்

5.3 விசேட, வெற்றிகள் மற்றும் முன்னேற்றம் 2019

5.3.1 மொரகஹகந்த மற்றும் களு கங்கை அபிவிருத்திச்



செயற்திட்டத்தை மகாவலி அதிகார சபையின் நிர்வாகத்திற்குக் கீழ் ஒப்படைத்தல்.

இந்நாட்டின் புதிய நீர்ப்பாசன நாகரிகத்தை பின்புலமாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட மகாவலி பெரும் அபிவிருத்தித் திட்டத்தின் இறுதிக் கட்டமாக நிர்மாணிக்கப்பட்ட பாரிய பல்நோக்க அபிவிருத்திச் செயற்திட்டமான மொரகஹகந்த நீர்த்தேக்கச் செயற்திட்டமானது பராக்கிரம சமுத்திரத்தை விட ஆறு மடங்கு விசாலமானதாக உள்ளதுடன் 666,000 அடி ஏக்கர் கொள்ளளவைக் கொண்ட 02 நீர்த்தேக்கங்களை உள்ளடக்கிய மொரகஹகந்த – களு கங்கை

பல்நோக்க செயற்திட்டத்தின் கீழ் வடக்கு பெரிய கால்வாய், வடமேல் கால்வாய், மினிப்பே கால்வாய் செயற்திட்டங்கள் உட்பட நீர்ப்பாசனச் செயற்திட்டங்கள் பல செயற்படுத்தப்படுகின்றதுடன், வட மேல், வட மத்திய, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகளவான விவசாய மக்களுக்கு அதன் மூலம் பிரதிபலன்கள் கிட்டுவதைப் போன்றே, குடிநீர்த் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மொரகஹகந்த – களு கங்கை செயற்திட்டத்தின் மூலம் 25 மெகா வொட் ஆற்றல் மின்சாரம் தேசிய மின்சாரத் தொகுதிக்கு சேர்க்கப்படுகின்றதுடன் நன்னீர் மீன் உற்பத்தியை விருத்தி செய்தல், சுற்றுலா வியாபாரத்தை மேம்படுத்துதலைப் போன்றே, நேரடி மற்றும் மறைமுகமான தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்வதும் இச்செயற்திட்டத்தின் அதி விசேட பிரதிபலன் ஆகும்.

இந்நீர்த்தேக்கங்கள் 02, நீர் மின் உற்பத்தி நிலையம், லக்கல பசுமை நகரம் மற்றும் அம்பன் நகரம் உட்பட குடியேற்ற பிரதேசங்களில் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் இவ் ஆண்டில் இருந்து மகாவலி அதிகார சபையின் கீழ் நடாத்திச் செல்வதற்காக ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

5.3.2 விவசாயத் தொழில் துறைக்கான மகாவலியின் பங்களிப்பு.




கமநலத் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய, உள்நாட்டு விவசாயத்திற்காக மகாவலி வலயமானது செயலாற்றுகைப் பாத்திரத்தை வகிக்கின்றது. 2019 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தியில் 23% உம், சோயா அவரை உற்பத்தியில் 96% உம், நிலக்கடலை உற்பத்தியில் 5% மற்றும் மிளகாய்க்காக 7% உம், சோளத்திற்காக 6% மற்றும் பெரிய வெங்காய உற்பத்தியில் 40% அடிப்படையில் தேசிய உணவுப் பாதுகாப்பிற்காக மகாவலி வலயங்கள் மூலம் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

5.3.3 2019 ஆண்டிற்குரிய மகாவலி விளையாட்டுப் போட்டிகள் மகாவலி டி வலயத்தில் நடாத்துதல் மற்றும் அதற்கு இணங்க டி வலயத்தில் மகாவலி விளையாட்டு மைதானத்தைத் திறந்து வைத்தல்.









தேசிய மற்றும் சர்வதேச தரத்திலான வீர வீராங்கனைகள் பலர் கடந்த 03 தசாப்த காலங்களுக்கும் அதிகமான காலப் பகுதியில் இந்நாட்டில் உருவாக்குவதற்கு உதவியாக இருந்த விளையாட்டுப் போட்டியான மகாவலி விளையாட்டுப் போட்டிகள் 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அதிகார பிரதேசத்தில் வசிக்கின்ற விவசாயிகளின் பிள்ளைகளுக்கு மத்தியில் விளையாட்டை கட்டியெழுப்புவதற்கு அவசியமான மகாவலி விளையாட்டுப் போட்டிகள் 31 ஆவது தடவையாகவும் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் திகதி மகாவலி டி (மெதிரிகிரிய) வலயத்தில் மகாவலி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

தேசிய விளையாட்டு விழாவின் பின்னர் இந்நாட்டில் இடம்பெறுகின்ற பாரிய விளையாட்டு விழாவாக மகாவலி விளையாட்டு விழாவை அறிமுகப்படுத்த முடியும் என்பதுடன் இத்தடவை இவ்விளையாட்டுப் போட்டிகளுக்காக 10 வலயங்களின் வீர வீராங்கனைகள் கலந்து கொள்வதுடன் 41 போட்டிகளின் கீழ் 3000 இற்கும் அதிகமான வீர வீராங்கனைகள் இதில் போட்டியிட்டனர்.

சர்வதேச மெய்வல்லுனர் விளையாட்டு மைதானத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி விசேட திறமைகளை வெளிப்படுத்திய வீர வீராங்கனைகள் பலர் உருவாக்கப்பட்டதும் மகாவலி விளையாட்டுப் போட்டிகளின் மூலமாகும். அந்நபர்களில் ஸ்ரீயானி குலவங்ஷ, சுமேத

ரணசிங்ஹ, சியாமலி லக்மிணி, கசுன் கல்ஹார, தினுஷா செனவிரத்ன, கயான் சமீர, செனாலி வீரசேகர, இசுறு சந்தருவன், பிரேமசிறி ரத்நாயக்க, சமன் குமார, டி.ஏ. இனோகா, தினிது சதுரங்க மற்றும் கயன்திகா துஷாரி என்பவர்கள் அடங்குகின்றனர்.





இதற்கு மேலதிகமாக ஏனைய விளையாட்டுக்கள் மூலம் சர்வதேச ரீதியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய வீர வீராங்கனைகள் பலரும் மகாவலி விளையாட்டுப் போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்தி உள்ளார்கள். தில்ருக்ஷி ரூபசிங்ஹ (மெய்வல்லுனர் போட்டிகள்/ கபடி), இந்திராணி சமரரத்ன (வலைப்பந்தாட்டம்), ஜயந்தி மல்காந்தி (கரப்பந்தாட்டம்), யூ.டி. ஸ்ரீயாலதா (துவிச்சக்கர வண்டி), ரேணுகா அபேவர்தண யாபா (கரப்பந்தாட்டம்), லலனி பிரியங்கா ((வலைப்பந்தாட்டம்), தரங்கா செவ்வந்தி (கரப்பந்தாட்டம்), ஜனக பிரசன்ன, அசேன் தில்ஷான், டி.பி.என். சந்தரேணு, எஸ். எம். அத்தநாயக்க (கபடி), டி.கே. இந்திக, ஸ்ரீயந்த குணவர்தன (கோ.கோ), பி.ஜி. லக்ஷ்மி, விமல் ரோஹண, பிரபாத் நிசாந்த, ஏ.டி.பி. சரித், வாசனா தில்ருக்ஷி, கோகிலா திஸாநாயக்க, நதீகா குமாரி, எம்.கே. பண்டார, இனோகா வீரசிங்ஹ மற்றும் எஸ். லூபா தில்ஹானி (கபடி).

5.3.4 மகாவலி தொழில் முயற்சி விருது விழா வெற்றிகரமான முறையில் இடம்பெற்றமை.

மகாவலி திட்டத்தின் கீழ் மகாவலி அபிவிருத்தி அதிகார பிரதேசத்தில் செயற்படுகின்ற கைத்தொழில்கள் மூலம் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்டு உள்ள அதி விசேட பங்களிப்பைப் பாராட்டுவதற்காக "மகாவலி தொழில் முயற்சி ஜனாதிபதி விருது விழா 2019" ஆனது 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி BMICH இல் இடம்பெற்றது. அதில் 09 பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, மகாவலி அதிகார பிரதேசத்தில் தமது முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற வியாபாரிகளில் தலைசிறந்த வியாபாரிகள் மூவர் தங்க, வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட்டதுடன் மேலும் 34 வியாபாரிகளுக்காக விருதுகள் வழங்கப்பட்டன.

5.3.5 மகாவலி ஹெல போஜுன் (உள்நாட்டு உணவுகள்) விற்பனை நிலையங்களை மகாவலி பி வலயத்தில் ஆரம்பித்தல்.

மொரகஹகந்த, வெலிகந்த மற்றும் தெஹியத்தகண்டிய வியாபாரப் பொருட்கள் விற்பனை நிலையத்துடன் "மகாவலி ஹெல போஜுன் விற்பனை நிலையங்கள்" 03 நிறுவப்பட்டுள்ளது. புதிய விற்பனை நிலையங்கள் இரண்டின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு உள்ளதுடன் இன்னும் முன்மொழியப்பட்ட விற்பனை நிலையங்கள் மூன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

5.3.6 சி வலய "மங்சல" மற்றும் டி வலயத்தின் பிசோபுற ஆகிய சுற்றுலா மாளிகைகளைத் திறத்தல்.

சுற்றுலா மாளிகைகளை பழுதுபார்ப்பதன் கீழ் மகாவலி சி வலயத்தின் "மங்சல" மற்றும் டி வலய பிசோபுற ஆகிய சுற்றுலா மாளிகைகளை இவ் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. அதற்கமைய நவீன வீட்டு உபகரணங்களுடன் சுற்றுலா மாளிகைகள் 09 இன் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தற்பொழுது நிறைவு செய்யப்பட்டு உள்ளதுடன் மேலும் 03 சுற்றுலா மாளிகைகள் புணரமைக்கப்பட்டு வருகின்றதுடன், 05 சுற்றுலா மாளிகைகள் பழுதுபார்த்தல்கள் இல்லாமல் நிறைவு செய்யப்பட்டு உள்ளன. இணையத்தின் மூலம் முற்பதிவுகளை மேற்கொள்வதற்காக 08 மாளிகைகளைத் தற்பொழுது பெற்றுக் கொள்ள முடியுமானதாக உள்ளது.

5.3.7 மகாவலி குடியேற்றவாசிகளுக்காக காணி உரிமைப் பத்திரங்களை வழங்குதல்.





வலயம்	இலக்கு	ஆலோசனைப் பத்திரம்	கொடைப் பத்திரம்	நீண்ட கால குத்தகை	விகாரைகள்	ஏனையவை(வீட்டுக் கொடைப் பத்திரங்கள்/ அரச தாபனங்கள்)	கூட்டுத் தொகை
பி	7500	6130	683	6	8	2	**6829**
சி	9500	5433	3851	-	13	22	**9319**
டி	1600	965	621	-	2	-	**1588**
எச்	6500	627	890	2	3	204	**1726**
எல்	3600	303	1841	-	-	-	**2144**
மொரகஹகந்த	1500	490	581	2	2	1	**1076**
விக்டோரியா	600	-	35	1	1	3	**40**
ஹுருளுவெவ	1000	306	350	90	3	47	**796**
வலவ	6500	1394	3500	8	-	3	**4905**
ரம்பண்ஓயா	1700	1489	-	-	2	7	**1498**
கூட்டுத்தொகை	**40,000**	**17,137**	**12,352**	**109**	**34**	**289**	**29,921**

5.4 சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

5.4.1 எதிர்வரும் காலங்களில் செயற்படுத்துவதற்கு எண்ணியுள்ள செயற்திட்டங்கள்.

1. மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டம்.
2. கிம்புல் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம்.
3. வலவ வலது கரை அபிவிருத்திச் செயற்திட்டம்.
4. களனி கங்கையை மகாவலி கங்கைக்கு திசை திருப்பும் செயற்திட்டம்.

5. கொத்மலை நீர்த்தேக அணையை உயர்த்தும் செயற்திட்டம்.

5.4.2 சாவல்கள்.

1. வெளிச் சூழல்

பூகோள மயமாக்கல் பால நாடுகளில் மாற்றத்தின் பிரதான ஊக்கியாக மாறியுள்ளது. அதன் மூலம் புதிய வாய்ப்புக்கள், புதுச் சந்தைகள் மற்றும் புதிய ஆதனங்களும் பெற்றுக் கொள்ள முடியும். அதில் விசேடமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது தொடர்பாக அரசாங்கத்தின் கவனம் ஆற்றுப்படுத்தப்பட்டது மிக முக்கியமான விடயமாகும். கிராமப் பிரிவுகளில் வசிக்கின்ற பெரும்பாண்மையினர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் நீரானது பிரதான மூல காரணியாக இருந்து வருவதுடன் துரிதமான நகர மயமாக்கல் மூலம் அதிகளவான நீர் விநியோகத்திற்காக அனுமதி கோரப்படுகின்றது.

பூகோளத்தின் கவனமானது பாதுகாப்பான நீர் தொடர்பாக கவனத்தை ஆற்றுப்படுத்தி உள்ளதுடன் நீரியல் பாதுகாப்பு தொடர்பாக சர்வதேச சம்மேளனத்தில், மானியங்களை ஒதுக்குதல் மற்றும் முகாமைத்துவத்துவமானது பெருமைக்குரிய விடயமாக உள்ளதுடன் அது முக்கியமான முன்னுரிமையாக தீர்மானிப்படுகின்றது. பல ஆசிய நாடுகள் தற்பொழுது நீர் முகாமைத்துவம் மற்றும் மானியங்கள் தொடர்பாக புது விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இலங்கையும் அவ்வாறான சட்டங்களை அறிமுகப்படுத்தும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளதுடன் அதில் மகாவலி அதிகார சபையானது பிரதான பங்குதாரர் ஆவர்.

2. நவீன தொழில்நுட்பம்.

சமீபத்திய ஆண்டுகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் துரிதமான அபிவிருத்தி ஏற்பட்டாலும் இலங்கையின் இயற்கை வள முகாமைத்துவத்திற்காக விசேடமாக நீர் முகாமைத்துவம், வெள்ளநீர்க் கட்டுப்பாடு மற்றும் வரட்சி முகாமைத்துவத்திற்காக அவை இதுவரையில் உகந்த முறையில் பயன்படுத்தப்பட்டு இல்லை. இற்றைப்படுத்தல் மற்றும் உயர் தரத்தில் உள்ள தரவுகளைத் தயாரிப்பது இயற்கை வள முகாமைத்துவத்திற்கு நேரடியாக பங்களிப்பு வழங்குவதுடன், உதாரணமாக தயார் நிலையில் உள்ள தொடர்பாடல் மற்றும் அவ்வாறான தரவுகளுகளை அடையவதன் மூலம் சந்தையை அடிப்படையாகக் கொண்ட பயிர்களை வளர்த்தல், மேம்படுத்துகின்ற உகந்த காணி உபயோக முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு உதவுகின்றதுடன் அதன் மூலம் நீர் சேமிக்கப்படும்.

3. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.

நீரியல் வள முகாமைத்துவத்தில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறையானது சமீபத்திய கடந்த காலங்களில் பல திருப்பு முனைகளை நோக்கி அண்மித்துள்ளது.

அதிகார சபையின் நிகழ்கால குறிக்கோள்கள் நிர்மாணப் பிரிவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளதுடன் இயற்கை வள முகாமைத்துவத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படாததுடன், ஆகையால் வரவு செலவு முட்டுக் கட்டைகள் அதிகமாகின்ற சூழ்நிலைகளில் இயற்கை வள முகாமைத்துவத் துறையில் புது அபிவிருத்திக் கருவிகளைப் பயன்படுத்தும் நோக்கெல்லையானது மகாவலி அதிகார சபையில் வரையறுக்கப்பட்டது ஆகும்.

4. மக்கள் தொகை மாற்றங்கள்.

தற்கால போக்குகளுக்கு அமைய நகர பிரதேசங்களுக்கு மற்றும் வலய ரீதியான விருத்தி மத்திய நிலையங்களுக்கு இடம்பெயர்ந்ததுடன் சனத்தொகை புள்ளிவிபரவியல் பரம்பலும் மாற்றமடைந்து வருகின்றது. இதற்கமைய சனத் தொகையில் பாரிய தொகையினர் நகர பிரதேசங்களில் இருப்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

சனத் தொகையில் இன்னுமொரு பிரிவினர் பாரிய அளவில் குறைந்த வருமானத்தைப் பெறக் கூடியவர்களாக இருப்பதுடன் அதன் மூலம் இயற்கைப் பாதுகாப்பிற்காக பிரதானமாக ஒதுக்கப்பட்டு உள்ள அரசாங்கத்தின் ஒதுக்கீடுகளைப் பயன்படுத்துதல் மற்றும் நீரின் தரத்தைப் பேணுதல் என்பன பாரிய பிரச்சினையாக கருதப்படுவது அதற்காக அவர்கள் காண்பிக்கின்ற நேரடித் தாக்கங்களைக் கருத்திற் கொண்டாகும். அதன் பெறுபேறாக, நாட்டின் நீர் விநியோகத்திற்காக அதிகரித்து வருகின்ற பல் - பயனர் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக போதியளவு நீர், ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மையுடன் கூடிய அடைகையை உறுதி செய்வதற்காக இயற்கை வள முகாமைத்துவ அத்தியாவசியங்கள் முற் தவையாக உள்ளது.

5. காலநிலை மாற்றங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம்.

காலநிலை மாற்றமானது நடுத்தரத்திலான அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு பாரிய சவாலாகும், விசேடமாக 70% ஐயும் விட அதிகமான கிராமிய சமூகம் வாழ்கின்ற விவசாயச் செயற்பாடுகளைக் கொண்ட சிறிய தீவானது காலநிலை மாற்றத் தாக்கங்களுக்கு அதிகளவில் உட்படுகின்றது. சமீபத்திய அனுபங்களுடன் அதிகளவான வெள்ள நீர் காரணமாக பல நீர் மார்க்கங்கள், நீர் இருப்புக்கள் மற்றும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளுக்கு சேதங்கள் ஏற்பட்டன. இதில் வரட்சியானது அதிகளவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், அதன் மூலம் பல பிரதேசங்களின் பயிர்ச் செய்கைகளுக்கு சேதங்கள் ஏற்பட்டன. இதற்கமைய, காலநிலை மாற்றத்தின் தாக்கத்துடன் செயற்படுவது எவ்வாறு என விவசாயப் பிரிவிவானது பாரிய சவாலிற்கு முகங் கொடுத்தது.

6. பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்.

முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகளை தர்க்க ரீதியில் மாற்றியமைக்கும் செயன்முறை ஒன்று 1980 ஆம் தசாப்தங்களில் இருந்து தேசிய மட்டத்தில் இடம் பெற்று வருகின்றது. அரசியமைப்பு யாப்பின் 13 ஆவது திருத்தத்துடன்

பொதுத் துறைகளின் புனரமைப்பை நடைமுறைப்படுத்துவதுடன் அபிவிருத்தி முகாமைத்துவ தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பன்முனப்படுத்தும் பொறிமுறையாக பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைகளை நிறுவுதல் மற்றும் வலுவூட்டுவதுடன் நாட்டில் மாற்றங்கள் தொடர்ச்சியாக விருத்தியடைந்து வருகின்றன. மகாவலி அதிகார சபையானது தற்பொழுது நேரியல் நிறுவனமான விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கமநலச் சேவைகள் திணைக்களம், காணிகள் ஆணையாளர் திணைக்களம், பிரதேச செயலகம்/ பிரதேச சபை போன்ற விசேடமான நேரியல் நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளுக்குச் சமனான சேவைகள? வழங்கும் நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது. என்றாலும், ஒருங்கிணைப்புக் குறைபாடுகள், முகாமைத்துவம் தொடர்பாக விரிவான அனுபவங்கள் இல்லாமை என்பன காரணமாக சேவை மட்டமானது திருப்தியடையக் கூடிய நிலைமையில் இல்லாமை காணக்கூடியதாக உள்ளது.

2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதிசார் செயலாற்றுகை.

நிதிசார் செயலாற்றுகைக் கூற்று.

விபரம்	வரவு செலவு மானியங்கள் 2019	செலவுகள் (2019.12.31)	பௌதீக முன்னேற்றம்
மகாவலி செயற்திட்டம்	**940.00**	**708.92**	
மகாவலி ஒருங்கிணைந்த செயற்திட்டம் (ஒ.பி.)	230.00	120.00	95%
பி வலயத்தின் மாதுறு ஓயா வலது கரையின் அபிவிருத்திச் செயற்திட்டம் (ஒ.பி.)	45.00	40.00	80%
ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் (ஒ.பி.)	75.00	53.00	75%
ரம்பகண் ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் (ஒ.பி.)	90.00	71.00	91%

வெலி ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திச் செயற்திட்டம் (ஒ.பி.)	220.00	179.00	75%
அவசர உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு உட்பட பாரிய மற்றும் நடுத்தர அளவிலான நீர்ப்பாசன செயற்திட்டங்களை புனரமைத்தல். (ஒ.பி.)	100.00	82.46	90%
விவசாய மற்றும் கால்நடை வள அபிவிருத்திச் செயற்திட்டம் (ஒ.பி.)	180.00	163.45	90%
நிர்வாகம் மற்றும் தாபரிப்பு (ஒ.பி.)	**1,370.00**	**1,277.84**	
கூட்டுத் தொகை	**2,310.00**	**1,986.76**	